# இந்திய பொருளாதாரம் மற்றும் அதன் இயல்புகள்

## பொருளாதாரம்

- பொருளாதாரம் (Economics) என்ற சொல் ஒய்கோஸ் (OIKOS) என்ற கிரேக்க சொல்லில் இருந்து பெறப்பட்டது.
- இதன் பொருள் - வீட்டு நிர்வாகம் (House Management)
- பொருளியல் - சமூக அறிவியலின் ஒரு கிளைத்துறை
- மனிதனின் விருப்பங்களையும் அது நிறைவு செய்யப்படுதலையும் குறிப்பது.
- பொருளியலின் தந்தை - ஆடம்ஸ்மித் (பிரான்ஸ்)
- இவர் 1776-ல் நாடுகளின் செல்வம் (Wealth of Nations) என்ற நூலை வெளியிட்டார்.
- இந்நூல் பொருளியல் துறையின் முதல்நூல்
- இந்நூலில் "அரசியல் கட்டுப்பாடற்ற வணிகக்கொள்கை" பற்றி (Laissez Faire Policy) கூறுகிறார்.

## இந்திய பொருளாதாரத்தின் தன்மைகள்

- இந்தியா ஒரு "வளர்ச்சி குன்றிய" "குறை வளர்ச்சி அடைந்த", "பின் தங்கிய, "ஏழ்மையான மற்றும் ஒரு வளர்ந்து வரும் நாடு". அதாவது இந்தியா ஒரு குறைவான வருமானம் ஈட்டும் நாடு.
- எந்த நாட்டில் தலா வருமானம் குறைவதனால் வாழ்க்கைத் தரம் குறைவாக இருக்கிறதோ அந்த நாடு வளர்ச்சி குறைந்த நாடு எனப்படும்.

## பின் தங்கிய நாடுகளின் சிறப்பியல்புகள் (Characteristics of Under Developed Nations)

- தலா வருமானத்தின் அடிப்படையில் ஒரு நாடு வளர்ந்த நாடு என்றும் வளரும் நாடு என்றும் வகைப்படுத்தப்படுகின்றது. அதிக தலா வருமானம் கொண்ட ஐக்கிய நாடுகள், கனடா, மேற்கு ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் பணக்கார நாடுகளாகும். குறைந்த தலா வருமானம் கொண்ட ஆசியா, ஆப்பிரிக்கா, தென் கிழக்கு ஐரோப்பா மற்றும் இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகள் ஏழை நாடுகள். நடுத்தர வருமானம் ஈட்டும் அர்ஜென்டினா, தெற்கு ஆப்பிரிக்கா, இஸ்ரேல் மற்றும் முந்தைய சோவியத் ரஷ்யா போன்றவை நடுத்தர நாடுகள்.

- மேயர் (Meier) மற்றும் பால்டுவின் (Baldwin) அவர்களின் கருத்துப்படி வளர்ச்சி குன்றிய நாடுகளில் கீழ்காணும் 6 வகையான அடிப்படை பண்புகள் காணப்படுகின்றன.

1. முதன்மைத் துறை உற்பத்தி
2. மக்கள் தொகை அடர்த்தி/ அழுத்தம்
3. இயற்கை வளங்களை சரியாகப் பயன்படுத்தாமை
4. பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் தொகை
5. மூலதன திரட்சிக் குறைவு
6. அயல்நாட்டு வாணிபத்தைச் சார்ந்த நிலை.

**I. முதன்மை துறை உற்பத்தி**

**(Primary Production)**

- வளர்ச்சி குறைந்த நாடுகளில், கச்சாப் பொருள்களும், உணவுப் பொருள்களும் உற்பத்தி செய்கின்றனர். பெரும்பான்மையான மக்கள் வேளாண்மையை முக்கியக் தொழிலாகக் கொண்டுள்ளனர்.
- சில ஏழை நாடுகள் விவசாயம் சாராத முதன்மைத் துறையையே சார்ந்துள்ளது. (எ.கா. தாதுப் பொருள்களாகிய டின், செம்பு, அலுமினியம் மற்றும் பெட்ரோலியம்).
- மேலும் விவசாய உற்பத்தி திறனும் குறைவாக உள்ளதால் கிராமப்புற வருமானமும் குறைவாக உள்ளது.

**2. மக்கள் தொகை அழுத்தம் / அடர்த்தி**

**(Population Pressures / Density)**

- பொதுவாக ஏழை நாடுகளில் மக்கள் தொகை அழுத்தம் அதிகமாக உள்ளது. ஆனால் வேலைவாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.
- எனவே தேவைக்கு அதிகமான மக்கள் வேலைகளில் அமர்த்தப்படுவதினால் இறுதி நிலை உற்பத்தி திறன் பூஜ்ஜியமாக அமைகிறது.
- மேலும் அதிக பிறப்பு வீதம் மற்றும் குறைந்த இறப்பு வீதத்தினாலும் மக்கள் தொகை அழுத்தம் அதிகரிக்கின்றது.

**3. இயற்கை வளங்களை சரியாகப் பயன்படுத்தாமை**

**(Underemployment of Natural Resources)**

- ஏழை நாடுகளில் போதிய விழிப்புணர்ச்சி இல்லாமையால் இயற்கை வளங்கள் சரியாகப் பயன்படுத்தபடாமலோ, தவறாகவோ அல்லது குறைவாகவோ பயன்படுத்தப்படுகிறது.

**4. பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள்தொகை**

**(Economic Backwardness)**


- ஏழை நாடுகளில் வாழும் மக்களின் பின் தங்கிய பொருளாதார நிலையானது உழைப்பு குறைந்த நிலை, உற்பத்தி காரணிகளின் இடம்பெயராமை, தொழில் முனைவோர் அற்ற நிலை, பொருளாதார அறியாமை போன்ற பிறவற்றில் பிரதிபலிக்கும். அம்மக்கள் பாரம்பரிய பழக்க வழக்கத்தினால் அரசாளப் படுகிறார்கள். இவர்களுக்கு போதிய ஊக்கம் அளிக்கப்படுவதில்லை.

வரி விதிப்பு முறையில், வரி வசூலிப்பதில் திறனற்ற நிலையும் மற்றும் வரி ஏய்ப்புகளும் காணப்படுகிறது.

**5. மூலதன திரட்சிக் குறைவு**

**(Capital Deficiency)**

- ஏழை நாடுகளின் உற்பத்தி திறன் குறைவாக உள்ளது. குறைந்த உற்பத்தி குறைந்த வருமானத்திற்கும், குறைந்த வருமானம் குறைந்த சேமிப்பிற்கும், குறைந்த சேமிப்பு குறைந்த மூலதன ஆக்கத்திற்க்கும் வழிவகுக்கிறது. இந்நிகழ்வு மூலம் வறுமைக் கேடு சுழல் (Vicious cycle of Poverty) ஏற்படுகிறது.




**6.அயல்நாட்டு வாணிபத்தை சார்ந்த நிலை**

**(Foreign Trade Orientation)**

- சில ஏழை நாடுகள் அயல்நாட்டு வாணிபத்தை பெருமளவு சார்ந்துள்ளன. அத்தகைய சூழலில் இறக்குமதி செய்யும் நாடுகளில் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டால் ஏற்றுமதி செய்யும் ஏழை நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும்.

## இந்தியா ஒரு வளர்ச்சி குறைந்த நாடு (India is an Underdeveloped Country)

- வளர்ச்சி குறைந்த நாடுகளில் காணப்படும் அனைத்து பண்புகளும் இந்தியாவில் காணப்படுகின்றன. அவையாவன:-

1. குறைந்த தலா வருமானம்
2. வருமான பகிர்வில் ஏற்றத் தாழ்வு
3. அதிக மக்கள் தொகை
4. அதிக மக்கள் (65-70) வேளாண்துறையை சார்ந்துள்ளனர். அதன் காரணமாக வேளாண்மைத் துறையில் மக்கள் தொகை அழுத்தம் அதிகமாக உள்ளது.
5. சீரற்ற பொருளாதார வளர்ச்சி
6. மூலதன திரட்சிக் குறைவு
7. குறைபாடுகளைக் கொண்ட சந்தை முறை
8. குறைந்த போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வசதிகள்.
9. பழமையான சமூக வழக்கங்கள்
10. குறைவான தொழில்துறை மயமாதல் முதலியன.

## ரோஸ்டோவின் ஐந்து கட்ட நிலைகள் (Rostow's 5 Stages)

- W.W. ரோஸ்டோவ் என்பவர் அமெரிக்காவை சேர்ந்த ஒரு பொருளியல் மற்றும் வரலாற்று அறிஞர் ஆவார். ஒவ்வொரு நாடும் பொருளாதார முன்னேற்றம் குறைந்த நிலையில் இருந்து பொருளாதார வளர்ச்சி நிலைக்கு முன்னேற 5 வகையான கட்டங்களை விளக்கி யுள்ளார். அனைத்து நாடுகளும் இந்த கட்டங்களை கடந்தாக வேண்டும். அவையாவன

1. பழமையான சமுதாய அமைப்பு முறை
2. மாறும் நிலையில் உள்ள சமுதாயம்
3. பொருளாதார மேலெழு நிலை
4. பொருளாதார முதிர்ச்சிக்கான செயலூக்கம்
5. பொதுமக்களின் பேரளவு நுகர்ச்சிக் காலம்

- பழமையான சமுதாய அமைப்பு முறையில் பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான காரணிகள் காணப்படாமல் இருக்கும். ஏழ்மையான நாடுகள் இதற்கு உதாரணம்.
- மாறும் நிலையில் உள்ள சமுதாய அமைப்பில் பொருளாதார மேலெழு நிலை உருவாக்கப்படும். இந்நிலையில் பாரம்பரிய பழக்க வழக்கங்களின் சக்திகள் குறைந்து செல்லும் அதனால் பொருளாதார ஊக்குவிப்பு இருக்கும்.
- பொருளாதார மேலெழு நிலை என்பது ஒரு சமுதாயம் முக்கிய தொழிலாக வேளாண்மையைக் கொண்டிருப்பதை விட்டுவிட்டுதொழிற்சாலைகளில்வேலை வாய்ப்பினை மாற்றிக் கொள்வதாகும். இந்த நிலையை அடைந்ததும் நிலையான சுயவளர்ச்சி சமுதாயத்தில் ஏற்படும்.
- ஒரு பொருளாதாரமானது இத்தகைய மேலெழு நிலையை அடைய தனது சுய சேமிப்பிலிருந்து 20 முதல் 25% வரை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இணையான முதலீட்டை செய்ய வேண்டும். இந்த மேலெழு நிலைக்கு பிறகு பொருளாதாரமானது தன்னிறைவு அடைந்து முழு வளர்ச்சி நிலையை எட்டுகிறது.
- கடைசி நிலையானது பேரளவு நுகர்ச்சி நிலை எனப்படும். இதில் பொதுமக்கள் அனைத்து வகையான பொருள்களையும் ஆடம்பர பண்டங்களையும் பேரளவில் நுகரத் தொடங்குவர்.

# இந்திய பொருளாதாரம் மற்றும் அதன் இயல்புகள்

## பொருளாதாரம்

- பொருளாதாரம் (Economics) என்ற சொல் ஓய்கோஸ் (OIKOS) என்ற கிரேக்க சொல்லில் இருந்து பெறப்பட்டது.
- இதன் பொருள் - வீட்டு நிர்வாகம் (House Management)
- பொருளியல் - சமூக அறிவியலின் ஒரு கிளைத்துறை
- மனிதனின் விருப்பங்களையும் அது நிறைவு செய்யப்படுதலையும் குறிப்பது.
- பொருளியலின் தந்தை - ஆடம்ஸ்மித் (பிரான்ஸ்)
- இவர் 1776-ல் நாடுகளின் செல்வம் (Wealth of Nations) என்ற நூலை வெளியிட்டார்.
- இந்நூல் பொருளியல் துறையின் முதல்நூல்
- இந்நூலில் "அரசியல் கட்டுப்பாடற்ற வணிகக்கொள்கை" பற்றி (Laissez Faire Policy) கூறுகிறார்.

## இந்திய பொருளாதாரத்தின் தன்மைகள்

- இந்தியா ஒரு "வளர்ச்சி குன்றிய" "குறை வளர்ச்சி அடைந்த", "பின் தங்கிய, "ஏழ்மையான மற்றும் ஒரு வளர்ந்து வரும் நாடு". அதாவது இந்தியா ஒரு குறைவான வருமானம் ஈட்டும் நாடு.
- எந்த நாட்டில் தலா வருமானம் குறைவதனால் வாழ்க்கைத் தரம் குறைவாக இருக்கிறதோ அந்த நாடு வளர்ச்சி குறைந்த நாடு எனப்படும்.

## பின் தங்கிய நாடுகளின் சிறப்பியல்புகள் (Characteristics of Under Developed Nations)

- தலா வருமானத்தின் அடிப்படையில் ஒரு நாடு வளர்ந்த நாடு என்றும் வளரும் நாடு என்றும் வகைப்படுத்தப்படுகின்றது. அதிக தலா வருமானம் கொண்ட ஐக்கிய நாடுகள், கனடா, மேற்கு ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் பணக்கார நாடுகளாகும். குறைந்த தலா வருமானம் கொண்ட ஆசியா, ஆப்பிரிக்கா, தென் கிழக்கு ஐரோப்பா மற்றும் இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகள் ஏழை நாடுகள். நடுத்தர வருமானம் ஈட்டும் அர்ஜென்டினா, தெற்கு ஆப்பிரிக்கா, இஸ்ரேல் மற்றும் முந்தைய சோவியத் ரஷ்யா போன்றவை நடுத்தர நாடுகள்.

- மேயர் (Meier) மற்றும் பால்டுவின் (Baldwin) அவர்களின் கருத்துப்படி வளர்ச்சி குன்றிய நாடுகளில் கீழ்காணும் 6 வகையான அடிப்படை பண்புகள் காணப்படுகின்றன.

1. முதன்மைத் துறை உற்பத்தி
2. மக்கள் தொகை அடர்த்தி/ அழுத்தம்
3. இயற்கை வளங்களை சரியாகப் பயன்படுத்தாமை
4. பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் தொகை
5. மூலதன திரட்சிக் குறைவு
6. அயல்நாட்டு வாணிபத்தைச் சார்ந்த நிலை.

**I. முதன்மை துறை உற்பத்தி**

**(Primary Production)**

- வளர்ச்சி குறைந்த நாடுகளில், கச்சாப் பொருள்களும், உணவுப் பொருள்களும் உற்பத்தி செய்கின்றனர். பெரும்பான்மையான மக்கள் வேளாண்மையை முக்கியக் தொழிலாகக் கொண்டுள்ளனர்.
- சில ஏழை நாடுகள் விவசாயம் சாராத முதன்மைத் துறையையே சார்ந்துள்ளது. (எ.கா. தாதுப் பொருள்களாகிய டின், செம்பு, அலுமினியம் மற்றும் பெட்ரோலியம்).
- மேலும் விவசாய உற்பத்தி திறனும் குறைவாக உள்ளதால் கிராமப்புற வருமானமும் குறைவாக உள்ளது.

**2. மக்கள் தொகை அழுத்தம் / அடர்த்தி**

**(Population Pressures / Density)**

- பொதுவாக ஏழை நாடுகளில் மக்கள் தொகை அழுத்தம் அதிகமாக உள்ளது. ஆனால் வேலைவாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.
- எனவே தேவைக்கு அதிகமான மக்கள் வேலைகளில் அமர்த்தப்படுவதினால் இறுதி நிலை உற்பத்தி திறன் பூஜ்ஜியமாக அமைகிறது.
- மேலும் அதிக பிறப்பு வீதம் மற்றும் குறைந்த இறப்பு வீதத்தினாலும் மக்கள் தொகை அழுத்தம் அதிகரிக்கின்றது.

**3. இயற்கை வளங்களை சரியாகப் பயன்படுத்தாமை**

**(Underemployment of Natural Resources)**

- ஏழை நாடுகளில் போதிய விழிப்புணர்ச்சி இல்லாமையால் இயற்கை வளங்கள் சரியாகப் பயன்படுத்தபடாமலோ, தவறாகவோ அல்லது குறைவாகவோ பயன்படுத்தப்படுகிறது.

**4. பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள்தொகை**

**(Economic Backwardness)**


- ஏழை நாடுகளில் வாழும் மக்களின் பின் தங்கிய பொருளாதார நிலையானது உழைப்பு குறைந்த நிலை, உற்பத்தி காரணிகளின் இடம்பெயராமை, தொழில் முனைவோர் அற்ற நிலை, பொருளாதார அறியாமை போன்ற பிறவற்றில் பிரதிபலிக்கும். அம்மக்கள் பாரம்பரிய பழக்க வழக்கத்தினால் அரசாளப் படுகிறார்கள். இவர்களுக்கு போதிய ஊக்கம் அளிக்கப்படுவதில்லை.

வரி விதிப்பு முறையில், வரி வசூலிப்பதில் திறனற்ற நிலையும் மற்றும் வரி ஏய்ப்புகளும் காணப்படுகிறது.

**5. மூலதன திரட்சிக் குறைவு**

**(Capital Deficiency)**

- ஏழை நாடுகளின் உற்பத்தி திறன் குறைவாக உள்ளது. குறைந்த உற்பத்தி குறைந்த வருமானத்திற்கும், குறைந்த வருமானம் குறைந்த சேமிப்பிற்கும், குறைந்த சேமிப்பு குறைந்த மூலதன ஆக்கத்திற்க்கும் வழிவகுக்கிறது. இந்நிகழ்வு மூலம் வறுமைக் கேடு சுழல் (Vicious cycle of Poverty) ஏற்படுகிறது.




**6.அயல்நாட்டு வாணிபத்தை சார்ந்த நிலை**

**(Foreign Trade Orientation)**

- சில ஏழை நாடுகள் அயல்நாட்டு வாணிபத்தை பெருமளவு சார்ந்துள்ளன. அத்தகைய சூழலில் இறக்குமதி செய்யும் நாடுகளில் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டால் ஏற்றுமதி செய்யும் ஏழை நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும்.

## இந்தியா ஒரு வளர்ச்சி குறைந்த நாடு (India is an Underdeveloped Country)

- வளர்ச்சி குறைந்த நாடுகளில் காணப்படும் அனைத்து பண்புகளும் இந்தியாவில் காணப்படுகின்றன. அவையாவன:-

1. குறைந்த தலா வருமானம்
2. வருமான பகிர்வில் ஏற்றத் தாழ்வு
3. அதிக மக்கள் தொகை
4. அதிக மக்கள் (65-70) வேளாண்துறையை சார்ந்துள்ளனர். அதன் காரணமாக வேளாண்மைத் துறையில் மக்கள் தொகை அழுத்தம் அதிகமாக உள்ளது.
5. சீரற்ற பொருளாதார வளர்ச்சி
6. மூலதன திரட்சிக் குறைவு
7. குறைபாடுகளைக் கொண்ட சந்தை முறை
8. குறைந்த போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வசதிகள்.
9. பழமையான சமூக வழக்கங்கள்
10. குறைவான தொழில்துறை மயமாதல் முதலியன.

## ரோஸ்டோவின் ஐந்து கட்ட நிலைகள் (Rostow's 5 Stages)

- W.W. ரோஸ்டோவ் என்பவர் அமெரிக்காவை சேர்ந்த ஒரு பொருளியல் மற்றும் வரலாற்று அறிஞர் ஆவார். ஒவ்வொரு நாடும் பொருளாதார முன்னேற்றம் குறைந்த நிலையில் இருந்து பொருளாதார வளர்ச்சி நிலைக்கு முன்னேற 5 வகையான கட்டங்களை விளக்கி யுள்ளார். அனைத்து நாடுகளும் இந்த கட்டங்களை கடந்தாக வேண்டும். அவையாவன

1. பழமையான சமுதாய அமைப்பு முறை
2. மாறும் நிலையில் உள்ள சமுதாயம்
3. பொருளாதார மேலெழு நிலை
4. பொருளாதார முதிர்ச்சிக்கான செயலூக்கம்
5. பொதுமக்களின் பேரளவு நுகர்ச்சிக் காலம்

- பழமையான சமுதாய அமைப்பு முறையில் பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான காரணிகள் காணப்படாமல் இருக்கும். ஏழ்மையான நாடுகள் இதற்கு உதாரணம்.
- மாறும் நிலையில் உள்ள சமுதாய அமைப்பில் பொருளாதார மேலெழு நிலை உருவாக்கப்படும். இந்நிலையில் பாரம்பரிய பழக்க வழக்கங்களின் சக்திகள் குறைந்து செல்லும் அதனால் பொருளாதார ஊக்குவிப்பு இருக்கும்.
- பொருளாதார மேலெழு நிலை என்பது ஒரு சமுதாயம் முக்கிய தொழிலாக வேளாண்மையைக் கொண்டிருப்பதை விட்டுவிட்டுதொழிற்சாலைகளில்வேலை வாய்ப்பினை மாற்றிக் கொள்வதாகும். இந்த நிலையை அடைந்ததும் நிலையான சுயவளர்ச்சி சமுதாயத்தில் ஏற்படும்.
- ஒரு பொருளாதாரமானது இத்தகைய மேலெழு நிலையை அடைய தனது சுய சேமிப்பிலிருந்து 20 முதல் 25% வரை மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இணையான முதலீட்டை செய்ய வேண்டும். இந்த மேலெழு நிலைக்கு பிறகு பொருளாதாரமானது தன்னிறைவு அடைந்து முழு வளர்ச்சி நிலையை எட்டுகிறது.
- கடைசி நிலையானது பேரளவு நுகர்ச்சி நிலை எனப்படும். இதில் பொதுமக்கள் அனைத்து வகையான பொருள்களையும் ஆடம்பர பண்டங்களையும் பேரளவில் நுகரத் தொடங்குவர்.

# ஐந்தாண்டு திட்டங்களும் அதன் மதிப்பீடும்

## பொருளாதாரத் திட்டமிடல் (Economic Planning)

- பொருளாதாரத் திட்டமிடல் என்பது இன்றைய வளரும் நாடுகளுக்கு இன்றியமையாததாகும். வளர்ந்த நாடுகள் பொருளாதார நிலை பாட்டிற்காகவும், வளரும் நாடுகள் பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காகவும் திட்டமிடு கின்றன.

## திட்டமிடுதலின் வரலாறு

- சோவியத் ரஷ்யாவில் 1917 ம் ஆண்டில் ரஷ்ய புரட்சிக்கு பின்பு 1918 முதல் 1921 ஆம் ஆண்டு வரை கம்யூனிசப் போர் நடந்தது. அதன் பின்பு 1921 முதல் 1924 வரைபுதியபொருளாதாரக்கொள்கைகள் நடப்பில் இருந்தன. 1924 முதல் அரசு கிடைக்கக் கூடிய வளங்களைப் பற்றி விரிவான ஆய்வு மேற்கொண்டு 1928 ஆம் ஆண்டு தனது முதலாவது ஐந்தாண்டு திட்டத்தினை செயல்படுத்தி அதில் வெற்றியும் கண்டது. 1920ம் ஆண்டு ஜோசப் சோவியத் ரஷ்யாவில் குடியானவர்கள் சமுகத்திலிருந்து சக்தி வாய்ந்த தொழிற்துறையாக மாற்ற ஐந்தாண்டு திட்டத்தை நோக்கமாக கொண்டு அறிமுகப்படுத்தினர்.
- 1930ம் ஆண்டு ஸ்டாலின் பல தீவிரமான பொருளாதார கொள்கைகளை நடைமுறைக்கு கொண்டு வந்தார். இது சோவியத் ரஷ்யாவை வேளாண்துறை மற்றும் தொழில் துறையில் பல மாற்றங்களை செய்தது. முதலாலித்துவ பொருளாதார கொள்கையிலிருந்து கட்டளை பொருளாதாரத்திற்கு மாற்றியது.

## திட்டமிடுதலின் பிரச்சனைகள்

- திட்டமிடுதலுக்கு ஒரு வலிமை மிக்க, தகுதிவாய்ந்த மற்றும் ஊழலற்ற ஆட்சி செய்தல் அவசியமானது என்று ஆர்தர் லூயிஸ் குறிப்பிடுகிறார். ஆனால் பெரும்பாலான வளர்ச்சி குறைந்த நாடுகளில் அத்தகைய நல்லரசுகள் இல்லை. எனவே திட்டமிடுதலில் வளர்ந்த நாடுகளை விட வளரும் நாடுகள் அதிக சிக்கல்களை சந்தித்தன. மேலும் வளரும் நாடுகளில் வேளாண்மையை சார்ந்த

நிலையும், அதிக மக்கள் தொகை அழுத்தமும் திட்டமிடுதலில் வேறு முக்கிய பிரச்சனைகளாக இருந்தன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் (எ.கா. இங்கிலாந்து) பகுதி சார்ந்த திட்டமிடல் (Partial Planning) காணப்படும். சமத்துவப் பொருளாதாரத்தில் (எ.கா. ரஷ்யா) முழுமையானத் திட்டமிடப்பட்ட பொருளாதார அமைப்பு இருக்கும். கலப்புப் பொருளாதாரத்தில் (எ.கா. இந்தியா) தனியார்துறை மற்றும் பொதுத்துறை இரண்டுமே திட்டமிடுதலில் மிக முக்கியப் பங்கினை வகிக்கும்.

## திட்டங்களின் வகைகள்: (Types of Planning)

1. மையத் திட்டம் (Centralised Planning)
2. தூண்டும் திட்டம் (Planning by Inducement)
3. சுட்டிக்காட்டும் திட்டம் (Indicative Planning)
4. சுழல் திட்டம் (Rolling Plan)

### I. மையத் திட்டம் (Centralised Planning)

- இது ரஷ்யா போன்ற சமத்துவத் திட்டமிடல் கொண்ட நாடுகளில் காணப்படும். இது ஆணைத்திட்டம் (அ) கட்டளைத் திட்டம் எனப்படும். அதாவது அடிப்படைத் தீர்மானங்களால் தொழில் துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதா? அல்லது வேளாண்துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதா? தொழில்துறை என்றால் கனரக தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதா? இல்லை நுகர்வுப் பொருள் தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதா? என்பது போன்ற முடிவுகளை அரசே முடிவு செய்யும். இதன் நன்மை யாதெனில் திட்டங்களை மிக வேகமாக நடைமுறைப்படுத்தி அதன் நோக்கங்களை அடைய முடியும். இதன் தீமை யாதெனில் அரசு ஒரு குறிப்பிட்ட ரீதியான முன்னுரிமையை அனுபவித்து போட்டியின்மையால் அரசுக்கு சொந்தமான உற்பத்தி அலகின் உற்பத்தித் திறனை பரிசோதிக்க கடினமான நிலையை உருவாக்குகிறது.

### 2. தூண்டும் திட்டம் (Planning by Inducement)

- இது கலப்புப் பொருளாதாரம் கொண்ட குடியரசு நாடுகளில் (இந்தியா) காணப்படுகிறது. இதில் அரசு தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தனியார் துறைகளுக்கு வரிச் சலுகைகள் மற்றும் பிற ஊக்கங்களை அளித்து தனியார் துறையை தூண்டி விட வேண்டும். எனினும் மக்களாட்சி திட்டமிடுதலில் பொது மக்களுக்கு தங்கள் கருத்தை வெளியிட வாய்ப்பு கிடைத்தாலும் அரசு பின்பற்றும் மக்களாட்சி நிர்வாக முறையில் ஏற்படும் கால தாமதங்களால் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் நோக்கங்களை அடைவதிலும் மிகவும் வேகமற்ற நிலை காணப்படுகிறது.

### 3. சுட்டிக்காட்டும் திட்டம் (Indicative Planning)

- இத்தகைய திட்டத்தில் அரசு தொழில் முனைவோருடன் முன்னதாகவே கலந்தாலோசிக்க வரவேற்று தனது திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் குறித்து அவர்களுடன் ஆலோசித்து முடிவெடுக்கும். இதற்கு சிறந்த உதாரணம் பிரான்சு அரசின் சுட்டிக் காட்டும் திட்டமாகும். 1991 ஆம்

ஆண்டிற்கு பிறகு தாராளமயமாதல் மற்றும் தனியார் மயமாதல் கொள்கைகள் பின்பற்ற பின்பு இந்திய திட்டமிடுதலும் கூட ஒரு வகையில் சுட்டிக் காட்டும் திட்டமாகவே மாறியது.

**4. சுழல் திட்டம்**

- ஒவ்வொரு வருடமும் திட்டத்தின் நடைமுறை மதிப்பீடு செய்யப்படுகிறது.
- இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அடுத்த வருட திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- இந்த திட்டத்தின் மாதிரி 1978-80களில் ஜனதா அரசால் (மொரார்ஜி தேசாய்) கொண்டுவரப்பட்டது.
- இதன் மூலமாக விவசாய மற்றும் அதன் தொடர்பான துறைகளின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும், குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழிற்சாலைகளை பெருக்கவும் குறைந்த வருமானம் பெறும் வகுப்பினரை குறைந்தபட்ச தேவையை அடைய வைக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

## பொருளாதார திட்டமிடுதலை மூன்று விதமாக பிரிக்கலாம் அவையாவன:

1. குறுகிய காலத் திட்டம் - ஓராண்டு திட்டங்கள் - 1 ஆண்டு (Short Term Plan)
2. நடுப்பருவத் திட்டம் - 5 year plan - 5 ஆண்டுகள் (Midterm Plan)
3. தொலைநோக்குத் திட்டம் - 20 முதல் 25 ஆண்டுகள் (Perspective Plan)

- ஒவ்வொரு ஓராண்டுத் திட்டமும் ஐந்தாண்டு திட்டங்களின் நோக்கங்களை நினைவில் கொண்டு தயாரிக்கப்படும்.
- ஒவ்வொரு 5 ஆண்டுத் திட்டமும் தொலைநோக்கு திட்டங்களின் நோக்கங்களை நினைவில் கொண்டு தயாரிக்கப்படும்.

## இந்தியாவில் திட்டமிடுதலின் வரலாறு: (History of Planning in India)

- 1934 ஆம் ஆண்டு மைசூரின் திவான் விஸ்வேஸ்வரய்யாவின் "திட்டமிட்டப் பொருளாதாரம்" 'The planned economy' வெளியிடப்பட்டது. (நூல்)
- 1938 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸால் நேருவின் தலைமையில் "இந்திய திட்ட ஆணையம்" (தேசியத் திட்ட ஆணையம்) அமைக்கப்பட்டது.
- 1944 ஆம் ஆண்டு "பாம்பே திட்டம்" வெளியிடப்பட்டது. (பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டம்)
- 1945-ல் M.N. ராயின் "மக்கள் திட்டம்" வெளியானது. விவசாயம் மற்றும் தொழில்துறைக்கு முக்கியத்துவம் அளித்தார்.
- 1946-ல் S.N.அகர்வால் நாராயணன் அவர்களால் "காந்தியத் திட்டம்" வெளியிடப்பட்டது. இதன் நோக்கம் ஒட்டுமொத்த இந்தியாவின் மூலம் மற்றும் கலாச்சார நிலையினை உயர்த்துதல், கிராமப்புறத் தொழில் மற்றும் குடிசைத் தொழில், கதர் தொழிலுக்கு முக்கியத்துவம்.
- 1950-ல் சர்வோதயத் திட்டத்தை J.P நாராயணன் வெளியிட்டார்.

## இந்தியாவில்திட்டமிடுதலின்தோற்றம் மற்றும் நோக்கம் (Eradication and objectives of Planning in India)

- 1950 ஆம் ஆண்டு தேசியத் திட்டக்குழு நிறுவப்பட்டது. இதன் முக்கிய பணியாதெனில் "நாட்டு வளங்களை

சீரிய, பயனுள்ள மற்றும் சமமாக பயன்படுத்த திட்டங்களை தீட்டுதலே ஆகும்." திட்டக்குழுவை தொடங்கியவர் ஜவஹர்லால் நேரு.

- ஆனால் தற்போது திட்டக்குழு அகற்றப்பட்டு நிதி ஆயோக் என்ற குழுவினை பா.ஜ.க அரசு அமைத் துள்ளது. எனவே ஐந்தாண்டுத் திட்டமும் முடிவுற்று ஒத்தி வைக்கப்பட்டது.

## இந்திய திட்டமிடுதலின் நோக்கங்கள் (Objectives of Planning in India)

1. நாட்டு வருமானத்தை உயர்த்துதல்
2. குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட நிலையில் முதலீட்டை உயர்த்துதல்.
3. வருமான மற்றும் செல்வப் பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதோடு பொருளாதாரசக்தி வளங்களின் மீது குவிதலைக் கட்டுப்படுத்துதல்.
4. வேலைவாய்ப்புகளை விரிவாக்குதல்
5. வேளாண்மை, உற்பத்தித் தொழிற்சாலை (குறிப்பாக மூலதனப் பொருட்கள்) மற்றும் வாணிப செலுத்து சமனிலை ஆகியவற்றின் வளர்ச்சித் தடைகளை அகற்றுதல்.
6. வேளாண் உற்பத்தி திறனை அதிகரித்தல் மற்றும் தானிய உற்பத்தியில் தன்னிறைவை அடைதல், அடிப்படை மற்றும் கனரக தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்தல், அயல் நாட்டு வாணிப சந்தையில் சாதகமான அயல்நாட்டு செலுத்து சமநிலைக்கும் முன்னுரிமை அளித்தல் ஆகியன இந்தியத் திட்டமிடலின் முக்கிய நோக்கங்களாக இருந்தது.

## திட்டக்குழு ஒரு பார்வை

- இது மத்திய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தொடங்கப்பட்ட அரசியல் சட்டம் சாரா அமைப்பு.
- பிரதமர் திட்டக்குழுவின் தலைவராவார்.
- திட்டக்குழுவின் துணைத் தலைவர் கேபினட் அமைச்சர் அந்தஸ்து உடையவர்.
- திட்டக்குழு திட்ட வரைவை உருவாக்குகிறது. அதை தேசிய வளர்ச்சி கவுன்சில் அங்கீகரிக்கிறது.
- தேசிய வளர்ச்சி கவுன்சில் 1952 ஆம் ஆண்டு ஆகஸ்டு 6ம் நாள் ஏற்படுத்தப்பட்டது.
- பிரதமர் தேசிய வளர்ச்சி கவுன்சிலின் அலுவல் சாரா தலைவராவார்.
- மத்திய கேபினட் அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், நிதியமைச்சர்கள், துணை நிலை ஆளுநர்கள், குடியரசு தலைவர் ஆட்சி நடக்கும் மாநிலங்களின் ஆளுநர்கள் ஆகியோர் தேசிய வளர்ச்சி கவுன்சிலின் உறுப்பினர்கள்.
- நாட்டின் வளங்களை மதிப்பீடு செய்தல், திட்டங்களை உருவாக்குதல், திட்டங்களின் முன்னுரிமைக்கு ஏற்ப வளங்களை பகிர்ந்தளிக்க தீர்மானித்தல் ஆகியன திட்டக் குழுவின் முக்கிய பணிகள்.
- ஒவ்வொரு மாநிலமும் ஒரு மாநிலத் திட்டக்குழுவை கொண்டிருக்கும்.
- மாநில முதலமைச்சர் மாநிலத் திட்டக்குழுவின் தலைவராவார்.

| 5 ஆண்டு திட்டம் | காலம் மற்றும் மாதிரி | நோக்கம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| 1 | 1951-1956 (ஹரார்டு - டோமர் மாதிரி) | வேளாண் வளர்ச்சி (சமூக மேம்பாட்டு திட்டம்) | முதலாம் ஐந்தாண்டு திட்டத்தை பாதித்த முக்கிய காரணிகள்: அகதிகள் வருகை, பணவீக்கம், உணவுப் பற்றாக்குறை<br>1. உணவு உற்பத்திக்கும் அளவு.<br>2. விவசாயம் மற்றும் சமுதாய மேம்பாடு,<br>3. பாசனம் மற்றும் மின்னுற்பத்தி,<br>4. போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புத்துறை,<br>5. சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு ஆகியவற்றில் அதிக முக்கியத்துவம் கொடுத்தது<br>**அனணகள்**<br>1. பக்ராநங்கள் அனண<br>2. ஹிராகுட் அனண<br>3. மேட்டுர் அனண |
| 2 | 1956-1961 (மகலநோபிஸ் மாதிரி) | துரிதமான தொழில் மயமாதல் குறிப்பாக அடிப்படை மற்றும் கனரக தொழில் வளர்ச்சியில் நாட்டம் காட்டியது. | இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின்போது (1956) தொழில் கொள்கை வெளியிடப்பட்டது. இது தொழில் துறையில் பொது ஒழுங்கையும் சமதர்ம சமுதாயத்தையும் வலியுறுத்தியது. மகலநோபிஸ் மாதிரி சோவியத் பெஸ்டுமென் மாதிரியை (1928) அடிப்படையாகக் கொண்டது.<br>1. கிராமப் புற இந்தியாவை சீரமைத்தல்,<br>2. தொழில்துறை வளர்ச்சிக்கான அடிக்கலை நாட்டுதல்,<br>3. பின்தங்கிய மக்களின் வளர்ச்சிக்காக அதிக பட்ச வாய்ப்புகளை உருவாக்குதல்<br>4. நாட்டின் அனைத்துப் பகுதிகளும் ஒரே சீராக வளர்ச்சி அடைவதை உறுதி செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாக இருந்தன.<br>**இரும்பு மற்றும் எஃகு தொழில்சாலைகள்**<br>1. ரூர்கேலா 2.பிலாய் 3. துர்காபூர் |

| | | | |
|---|---|---|---|
| 3 | 1961-1966 (ஜான் சாண்டி மற்றும் சக்கர வர்த்தி) | வேளாண் மற்றும் தொழில்களுக்கு சம முக்கியத்துவம் | இதன் தோல்விக்கு சீனா ஆக்கிரமிப்பு (1962), இந்தோ-பாகிஸ்தான் போர் (1965), கடும் வறட்சி (1965 - 66) ஆகிய மூன்றும் முக்கிய காரணங்கள்.<br>**இரும்பு மற்றும் எஃகு தொழில்சாலைகள்**<br>பொக்காரோ |
| 4 | 1969-1974 (ஆலன் மனோ மற்றும் அசோக் ருத்ரா) | நிலையான வளர்ச்சி மற்றும் தற்சார்பு | இந்த கால கட்டத்தில் விலைவாசி 61% உயர்ந்தது. பங்களாதேஷ் அகதிகள் வருகையும் (1971) பருவமழை பொய்த்ததும் இந்த திட்டத்தை பாதித்த முக்கிய காரணிகளாகும்.<br>1. மக்களின் வாழ்க்கைத் தரத்தை - குறிப்பாக பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம்.<br>2. உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமின்றி ஈட்டப்பட்ட செல்வத்தை மக்கள் அனைவருக்கும் சமமாகப் பிரித்து வழங்குவதும் முதலிடத்தைப் பெற்றன.<br>3. நாட்டின் செல்வமும் பொருளாதார சக்தியும் சில இடங்களில் மட்டுமே குவிந்திருக்காமல் அவற்றைப் பரவலாக்குவதது தலையாயப் பணி ஆயிற்று.<br>4. குடும்ப கட்டுபாடுத் திட்டம் |
| 5 | 1974-1979 (D.D. தார்) | வறுமை ஒழிப்பு (கரிபி ஹட்டவோ) இதன் தாரக மந்திரமாக இருந்தது. வளர்ச்சி, சமுதாய நீதியில் கவனம் செலுத்துதல் மற்றும் தற்சார்பு அடைதலில் கவனம் செலுத்தியது. | இந்த காலகட்டத்தில் குறைந்தபட்ச தேவைக்கான தேசியத் திட்டம் கொண்டு வரப்பட்டது. "வறுமையே வெளியேறு-கர்பி ஹட்டவோ" என்னும் கோஷம் முன்வைக்கப்பட்டது. இந்த கால கட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான (4.4%) வளர்ச்சியை தாண்டி 4.8% வளர்ச்சியை பொருளாதாரம் அடைந்தது.<br>1. உலக அளவில், உணவுப்பொருட்கள், உரம் போன்ற விவசாய இடுப்பொருட்கள் மற்றும் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் பெரிதும் உயர்ந்தன.<br>2. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது அவசரத் தேவையாக இருந்தது.<br>3. 1974-78இன் மத்தியில் இந்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் பிற நாடுகளின் கவனத்தை ஈர்த்தது. |

| | | | |
|---|---|---|---|
| 6 | 1980-1985 | பொருளாதாரத்தை விரிவாக்கும் நிலைகளை உருவாக்கி அதன் மூலம் வறுமையை ஒழிப்பதை நோக்கமாக கொண்டது | இந்த திட்டத்தில் பொருளாதார வளர்ச்சி நிர்ணயிக்கப்பட்ட 5.2% தாண்டி 6% அடைந்தது. இது ஒரு வெற்றிகரமான திட்டமாகும்.<br>வறுமை, வேலை இல்லாத் திண்டாட்டம் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றைக் களைதல் ஆகியவை இந்தத் திட்டத்தில் முதலிடம் பெற்றன. |
| 7 | 1985-1990 | உணவு, தானிய உற்பத்தியை வேகப் படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பினை அதிகரித்து அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித் திறனை உயர்த்த முக்கியத்துவம் அளித்தது. | ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் போதும் பொருளாதார வளர்ச்சி நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 5% தாண்டி 6% ஆக இருந்தது.<br>1. உணவு தானிய உற்பத்தி, வேலைவாய்ப்பைப் பெருக்குதல் மற்றும் மக்களின் உற்பத்தித் திறனைப் பெருக்குதல் போன்றவை முக்கியத்துவம் பெற்றன.<br>2. மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்ப முதலீடுகள் செய்யப்பட்டன. |
| 8 | 1992-1997 (ஜான் மில்லர் மாதிரி) | மனிதவள மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளித்தது. (சுட்டிக்காட்டும் திட்டம்) | எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் இறுதி பதிப்பு உருவாக்கப்படும் போது நாட்டின் பொருளாதாரக் கொள்கையில் பெருத்த மாற்றங்களாகிய தாராளமயமாதல், தனியார் மயமாதல், மற்றும் உலக மயமாதல் போன்ற மாற்றங்கள் ஏற்பட்டன<br>1. அதிகமான அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்குவதன் மூலம் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் முழு அளவு வேலைவாய்ப்பினை எட்டுதல்.<br>2. மக்களின் ஒத்துழைப்பின் மூலமும் ஊக்கத் திட்டங்கள் மற்றும் ஊக்கத் தொகைகளை விளக்கிக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலமும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துதல்.<br>3. அனைவருக்கும் ஆரம்பக் கல்வி அளித்தல் மற்றும் 15 முதல் 35 வயது வரை உள்ள மக்களிடத்து காணப்படும் எழுத்தறிவின்மையைப் போக்குதல். |

| | | | |
|---|---|---|---|
| | | | 4. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், அடிப்படை மருத்துவ வசதிகளை அளித்தல், நோய் தடுப்பு முறைகளை அளித்தல் மற்றும் தோட்டிப் பணிகளை அறவே ஒழித்தல்.<br>5. விவசாய வளர்ச்சி, பல்வகைப் பயிர்களைப் பயிரிடல் மற்றும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு தானிய உற்பத்தியைப் பெருக்குதல்.<br>6. மின்னாற்றல், போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் பாசனம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கி வளர்ச்சிப் பணிகளைத் தடையின்றி நீடிக்கச் செய்தல். |
| 9 | 1997-2002 | வளர்ச்சியுடன் கூடிய சமுதாயநீதி, சமத்துவம், மக்களின் தரமான வாழ்க்கை, குறைந்தபட்ச அடிப்படை தேவை, உற்பத்தி நிறைந்த வேலை வாய்ப்பு, வட்டாரச் சமநிலை மற்றும் தற்சார்புடைமையை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. | இத்திட்டம்நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சியை அடையவில்லை. இக்காலகட்டத்தில் பொதுத்துறை யின் அளவு 18% ஆக குறைக்கப் பட்டது. இக்காலத்தில் மத்திய, மாநில அரசுகளின் நிதியாக்கப் பற்றாக்குறை அதிகரித்தது. இத்திட்டத்தால் 50 மில்லியன் மக்களுக்கு வேலைவாய்பை உருவாக்க இயலவில்லை.<br>1. வேலைவாய்ப்பைப் பெருக்குதல் மற்றும் வறுமையை ஒழிப்பு ஆகியவற்றுக்காக விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளித்தல்.<br>2. விவலைவாசிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதே நேரத்தில் வளர்ச்சி வேகத்தை அதிகரித்தல்.<br>3. அனைவருக்கும் குறிப்பாக பின்தங்கிய சமூகத்தினருக்கு உணவு மற்றும் சத்துணவை உறுதி செய்தல்.<br>4. அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், அடிப்படை சுகாதார வசதிகள், அடிப்படைக் கல்வி, தங்குமிடம் ஆகியவற்றை குறித்த கால வரையறைக்குள் உறுதி செய்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | | 5. மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்.<br>6. அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பின் மூலம் வளர்ச்சிப் பணிகளின் காரணமாக சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் காத்தல்.<br>7. பெண்கள் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய அட்டவணை இன மக்கள், பிற பின் தங்கிய இனத்தவர்கள் மற்றும் சிறுபான்மை இனத்தவர் ஆகியோருக்கு அதிகாரம் வழங்குதல்.<br>8. பஞ்சாயத்து ராஜ், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சுய உதவிக்குழுக்கள் ஆகியவற்றில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்க ஊக்கப்படுத்துதல்.<br>9. சுய சார்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை வலுப்படுத்துதல்.<br>10. மக்களின் வாழ்க்கைத்தரம், வேலை வாய்ப்பு, அனைத்துப் பூகோளப் பகுதிகளும் சீராக வளர்ச்சி பெறுவதை உறுதி செய்தல். |
| 10 | 2002-2007 | வேலைவாய்ப்பை உரு வாக்குதல் சமத்துவம் மற்றும் சமூகநீதியைப் பற்றிய பிரச்சனைகளை வெளிப்படையாக அணுகுவதை நோக்க மாகக் கொண்டது. | வறுமையை 2007க்குள் 5% குறைக்கப்பட வேண்டும் 2012க்குள் 15% குறைக்கப்பட வேண்டும். 2007க்குள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி, 2007 க்குள் கல்வி அறிவு பெற்றவர்கள் எண்ணிக்கையை 75% ஆக உயர்த்துதல், சிறுதொழில் நிறுவனங்களுக்கு 50 கோடி கடன் 2007 ல் காடு மற்றும் மரங்களின் 25% பாதுகாப்பும், 2012ல் 33% பாதுகாப்பும் அதிகரித்தல், அனைத்து ஊரகங்களிலும் குடிநீர் வசதியை 2012க்குள் ஏற்படுத்துதல் முதலியவற்றை குறிக்கோளாக கொண்டது.<br>1. வறுமையைக் குறைப்பது<br>2. வேலைவாய்ப்பைப் பெருக்குவது<br>3. 2002ம் ஆண்டு சர்வ சிக்ஷ அபியான் |

| | | | |
|---|---|---|---|
| | | | 4. 2007ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் அடிப்படைக் கல்வியை எட்டச் செய்வது.<br>5. மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தை 16.2 விழுக்காடாகக் குறைப்பது.<br>6. 2007ம் ஆண்டுக்குள் கல்வி ஏற்றோர் எண்ணிக்கையை எழுபத்தைந்து விழுக்காடாக உயர்த்துவது.<br>7. குழந்தை இறப்பு விகிதத்தை குறைப்பது.<br>8. பேறு காலத்தில் பெண்கள் இறக்கும் விகிதத்தைக் குறைப்பது.<br>9. வனப்பரப்பை அதிகரிப்பது.<br>10. 2012ம் ஆண்டுக்குள் அனைத்துகிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழி செய்தல்.<br>11. மாசுபட்ட அனைத்து ஆறுகளையும் 2007-ம் ஆண்டுக்குள் தூய்மைப்படுத்துவது |
| 11 | 2007-2012 வேகமான (ம) அதிக உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி இதனை அங்கீகரித்தது. தேசிய வளர்ச்சிக் குழு | வேலைவாய்ப்பைபெருக்குதல், மனிதவள மேம்பாடு மற்றும் நிலைத்தன்மையுடைய வளர்ச்சி ஆகியன வற்றை நோக்கமாக கொண்டது. | பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் நாட்டின் எழுத்தறிவு விகிதத்தை 85% ஆக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதன் மொத்த செலவீடு 36,44,718 கோடி<br>1. மொத்த உள்நாட்டு உற்பத்தியை பத்து விழுக்காடு அளவுக்கு உயர்த்துதல்<br>2. எழு நூறு இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், ஆரம்பப் பள்ளிகளில் வசதிகளை மேம்படுத்துதல்.<br>3. குழந்தை இறப்பு விகிதத்தை 28ஆகக் குறைத்தல், அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்குதல், வனப்பரப்பளவை ஐந்து விழுக்காடு புள்ளி அளவுக்கு உயர்த்துதல். |
| 12 | 2012-2017 துரித, நீடித்த நிலைத்த (ம) அதிக உள்ளடக்கிய வளர்ச்சி | தற்போது உள்ள அளவை விட கூடுதலாக 94, 215 மெகா வாட் மின்சாரத்தை அனல் மின் நிலையங்கள், புனல் மின் நிலையங்கள், அணு மற்றும் புதுப்பிக்கத் தக்க வளங்கள் மூலம் தயாரித்தல். | நிர்ணயிக்கப்பட்ட 94, 215 மெகாவாட் மின் உற்பத்தியை எட்ட அனல்மின்நிலையங்கள் மூலம் 63,781 மெகாவாட்டும், புனல் மின் திட்டங்கள் மூலம் 9200 மெகாவாட்டும், அணு மின் திட்டங்கள் மூலம் 2800 மெகாவாட்டும், புதுப்பிக்கத் தக்க வளங்கள் மூலம் 18000 மெகாவாட்டும் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

- ஒரு ஐந்தாண்டு திட்டத்தில் அனைத்து 6 ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட இலக்குகள் இல்லாமல் நடப்பு ஆண்டில் திட்டத்தின் செயல் திறனைக் கொண்டு அடுத்த ஆண்டுகளுக்கான இலக்குகள் தீர்மானிக்கப்படும்.
- 1966-1969 ஆகிய ஆண்டுகளில் திட்ட விடுமுறை விடப்பட்டது. அந்த காலங்களின் மூன்று ஆண்டுத் திட்டங்கள் (66-67, 67-68, 68-69) செயல்படுத்தப்பட்டது. 1967-ல் பசுமைப் புரட்சி ஏற்படுத்தியது.

**சுழல் திட்டம்**

- ஜனதா கட்சி ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட 6வது 5 ஆண்டு திட்டம் (1978-83) காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பிறகு கைவிடப்பட்டு புதியதொரு ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தை (1980-85) உருவாக்கியது. 1978 மற்றும் 1979ல் சுழல் திட்டம் கொண்டுவரப்பட்டது.
- 1990-92 க்கு இடைப்பட்ட காலங்களில் நாட்டின் கொள்கையில் பெருத்த மாற்றங்களாகிய திறமைமயமாதல், தனியார் மயமாதல் மற்றும் உலக மயமாதல் போன்ற பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டன.
- ஐந்தாண்டுத் திட்டங்கள் செயல்படுத்தப் படாத காலங்கள் 1966-69, மற்றும் 1990-92 ஆகியன. 1978-80 வரை நடைமுறையில் இருந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் இடையில் கைவிடப்பட்டது.

**ஐந்தாண்டு திட்டங்களின் வளர்ச்சி விகிதங்கள் (விழுக்காட்டில்)**

| திட்டம் | இலக்கு | அடைப்பட்டது |
|---|---|---|
| முதல் | 2.9% | 2.9% |
| இரண்டு | 4.5% | 4.3% |
| மூன்று | 5.6% | 2.8% |
| நான்கு | 5.7% | 3.3% |
| ஐந்து | 4.4% | 4.4% |
| ஆறு | 5.2% | 6% |
| ஏழு | 5% | 6% |
| எட்டு | 5.6% | 6.8% |
| ஒன்பது | 6.5% | 5.5% |
| பத்து | 8% | 8% |
| பதினொன்று | 9% | 8.2% |
| பனிரெண்டு | 8% | |

- இந்தியா விஷன் - 2020

- திட்டக்குழு ஜனவரி 23, 2003ம் அன்று இந்தியா விஷன் 2020 என்ற இந்திய பொருளாதாரம் குறித்த முன் மதிப்பீட்டினை வெளியிட்டது.
- இவ்வறிக்கை சியாம் பிரசாத் குப்தா என்ற திட்டக்குழு உறுப்பினரால் உருவாக்கப்பட்டது.

**இந்த திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

- 2020 ம் ஆண்டிற்குள் ஆண்டுதோறும் வளர்ச்சி வீதம் 9% வேலையின்மை, எழுத்தறிவின்மை, வறுமை நீக்கப்பட வேண்டும்.

- தனிநபர் வருமானம் இருமடங்காக்கப்பட வேண்டும்
- 6-14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் அனைவரையும் பள்ளிக் கூடத்தில் சேர்க்க வேண்டும்.
- 1.35 பில்லியன் (135 கோடி) மக்களுக்கு நல்ல வாழ்க்கை தரத்தை ஏற்படுத்தி தரவேண்டும்.
- வருடந்தோறும் 2% வேலைவாய்ப்பு வளர்ச்சி, 20 கோடி புதிய வேலைவாய்ப்பை உருவாக்குதல்.

# நிலச் சீர்திருத்தம் மற்றும் வேளாண்மை

## வேளாண்மை (Agriculture)

- இந்திய பொருளாதார அமைப்பிற்கு வேளாண்மையே முதுகெலும்பாக விளங்குகிறது. நம் நாடு தொன்று தொட்டு விவசாய நாடாகவே விளங்கி வருகிறது. இன்றும் நாட்டின் எதிர் காலம் வேளாண் உற்பத்திப் போக்கை பொறுத்தே அமையும். நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மையின் பங்கினை கீழ்க்காணுமாறு விளக்கலாம்.

**I. நாட்டு வருமானத்தில் வேளாண்மையின் பங்களிப்பு**

- 1950-ம் ஆண்டுகளில் நாட்டின் வருமானத்தில் பாதிப் பகுதி வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த செயல்பாடுகள் மூலம் கிடைத்தது. 2002-2003 ஆம் ஆண்டில் இது 25%ஆக சரிந்தது. இன்றைய நாட்களிளும்கூட நாட்டின் வருமானத்தில் வேளாண்மை பெரும் பங்கு வகிக்கிறது.

**2. வாழ்க்கைக்கு ஒரு அடிப்படை ஆதாரம்**

- வாழ்க்கைக்கு பிழைப்பூட்டும் ஆதாரமாக வேளாண்மை திகழ்கிறது. பத்து நபர்களில் ஒவ்வொரு 6 ம் நபரும் வேளாண்மையை சார்ந்தே வாழ்கின்றனர். வளர்ந்த நாடுகளுடன் இந்தியாவை ஒப்பிடும்போது வேளாண்மையை சார்ந்த மக்களின் எண்ணிக்கை மிக குறைவாகவே உள்ளது.

**3. வேலைவாய்ப்பளித்தல்**

- கிராமப்புறங்களில் 70% மக்கள் வேளாண்மையையும் அதனைச் சார்ந்த தொழில்களையும் சார்ந்தே உள்ளனர். 1995 ல் 97 மில்லியனாக இருந்த நிலம் சார்ந்த தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை இன்று 235 மில்லியனாக அதிகரித்துள்ளது.

**4. தொழில்துறை முன்னேற்றம்**

- பருத்தி மற்றும் சணல் தொழிற் சாலைகள், சர்க்கரை ஆலைகள், கைத்தறி, நெசவாலைகள், நெல் உமி நீக்கும் ஆலைகள், நார் மற்றும் காதி தொழில்கள் முதலியன வேளாண்மை சார்ந்த தொழில்களாகும்.

**5. பன்னாட்டு வாணிபம்**

- தேயிலை, எண்ணெய் பிண்ணாக்கு, கனி, காய்கறிவகைகள், வாசனைப் பொருட்கள், புகையிலை, பருத்தி, காபி, சர்க்கரை, பதப்படாத கம்பளி

மற்றும் தாவர எண்ணெய் முதலியன ஏற்றுமதியின் மூலம் நல்லதொரு பங்கை பெற்றுத் தருவதோடு இறக்குமதியின் முக்கியப் பிரிவாகவும் உள்ளது.

**6. முதலீட்டு ஆக்கமும் முதலீடும்**

- நாட்டின் வருமானத்தில் 25% ஈட்டித் தருவதால் சேமிப்பிற்கும், பொருளாதார முதலாக்கத்திற்கும் வேளாண்மையே அடிப்படை மூலதனமாக விளங்குகிறது.
- மேலும் பலகோடி கால்நடைகளை பராமரிக்க வேளாண்மை, வைக்கோல் மற்றும் தீவனங்களை வழங்குகிறது. வேளாண் வளர்ச்சி, வறுமை ஒழிப்பு திட்டங்களில் நேரிடை பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. நிலக்கடலை உற்பத்தியில் உலகில் முதலிடத்தையும், அரிசி உற்பத்தியில் இரண்டாம் இடத்தையும் இந்திய வேளாண்மை பெற்றுள்ளது.

## பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மையின் பங்கு

- ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மை அளிக்கும் நான்கு வகையான பங்குகளை "சைமன் குஸ்நெட்" கீழ்க்காணுமாறு விளக்குகிறார்.

1. பொருட்களின் பங்களிப்பு (உணவு, கச்சாப் பொருட்கள்)
2. அங்காடியின் பங்களிப்பு (விவசாயம் சாரா உற்பத்திதுறையில் உற்பத்தி யாகும் பொருள்களுக்கும், நுகர்வு பொருள்களுக்கும் அங்காடியை ஏற்படுத்திக் கொடுத்தல்)
3. உற்பத்தி காரணிகளில் பங்களிப்பு (வேளாண் சாராதுறைக்கு உழைப் பையும் முதலையும் கிடைக்கச் செய்தல்)
4. அயல்நாட்டு வாணிபத்திற்கு பங்களிப்பு

## வேளாண் சார்ந்த, வேளாண் சாரா துறைகளுக்கிடையே உள்ள தொடர்பு

- உற்பத்தி தொடர்ச்சி (தொழிற்சாலை களுக்கு வேளாண் பொருள்களை இடுபொருள்களாக தருவது)
- தேவைத் தொடர்ச்சி (இந்த இரண்டு துறைகளும் வெகுவான தேவைத் தொடர்ச்சி உள்ளது)
- சேமிப்பு மற்றும் முதலீட்டில் தொடர்ச்சி

## வேளாண் வளர்ச்சி கூறுகள்

- வேளாண் உற்பத்தியின் பெருக்கமானது இரண்டு விதங்களில் அதிகரிப்பு ஏற்படக்கூடும்.
    - விவசாயம் செய்யக்கூடிய நிலப் பரப்பில் அதிகரிப்பு (கிடைமட்ட நீள்ச்சி / விரிவாக்கம்)
    - வேளாண்மை உற்பத்தி திறனில் அதிகரிப்பு (செங்குத்து நீள்ச்சி / விரிவாக்கம்)

## இந்திய வேளாண்மையின் உற்பத்தி திறன்

- இந்திய வேளாண்மையின் உற்பத்தி திறன் மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது குறைவாகவே உள்ளது. இந்த நிலைக்கான காரணங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. மக்கட்தொகைப் பற்றிய காரணங்கள் (அதிக மக்கட்தொகை அழுத்தம், குறைந்த வேலைவாய்ப்பு, விளை நிலங்களின் குறைந்த பரப்பளவு)
2. பொதுவான காரணங்கள் (வேளாண்மையில் அதிகப்படியான தொழிலாளர்கள், ஊக்கமற்ற கிராமப்புற சூழ்நிலை, வேளாண் துறை சார்பற்ற பணிகள் குறைவு)

3. தொழில்நுட்ப காரணங்கள் (ஏழ்மையான இடுபொருள்கள், பழமையான முறைகள், பற்றாக் குறையான பாசன வசதிகள், உழவர்கள் கடனில் மூழ்கிய நிலை, போதுமான ஆராய்ச்சியின்மை)

## இந்தியாவில் வேளாண் பயிர்களும், பயிர் வகைகளும்

- இந்தியாவின் முதன்மையான உணவுப் பயிர்கள் அரிசி, கோதுமை, சோளம், தானியங்கள் மற்றும் பருப்பு முதலியன வாகும்.
- பணப்பயிர்கள் கரும்பு, சணல், பருத்தி, தேயிலை, காப்பி, நிலக்கடலை மற்றும் எண்ணெய் வித்துக்கள் முதலியன வாகும். வேர்க்கடலை உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- 1949-1965 வரை உணவு தானியங்கள் உற்பத்தி 55 மில்லியன் டன்னிலிருந்து 89 மில்லியன் டன்னாக அதிகரித்தது. இது ஆண்டு வளர்ச்சியில் 3.2% ஆகும்.
- பசுமைப் புரட்சிக்குப் பின் அதாவது 1965-2001 வரை உணவு தானியங்களை உற்பத்தி 89 லிருந்து 195.9 மில்லியன் டன்னாக உயர்ந்தது. ஆனால் ஆண்டு வளர்ச்சி வீதத்தில் இது 2.2% மட்டுமே ஆகும்.
- பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பில் பலவகையான பயிர்களின் பங்கை மேலே உள்ள அட்டவணை காட்டுகிறது.

### பயிர் வகைகளின் பகிர்வு அட்டவணை (1951-2001)

| பயிர் வகைகள் | 1950-51 | 1980-81 | 1980-2001 |
|---|---|---|---|
| அனைத்து வகை பயிர்கள் | 100 | 100 | 100 |
| உணவு தானியங்கள் | 74 | 80 | 75 |
| பணப் பயிர்கள் | 26 | 20 | 25 |

**தேசிய உணவு பாதுகாப்புக் கழகம்** (NFSM)

- இந்த கழகம் ஆனது எந்தெந்த மாநிலத்தில் சராசரி அளவிற்கும் குறைவாக உற்பத்தித் திறன் உள்ள மாவட்டங்களை இலக்காகக் கொண்டு, அவற்றிலுள்ள ஆதாரங்களின் மூலம் அரிசி, கோதுமை மற்றும் பருப்பு வகையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்த திட்டமிட்டது.
- தொழில்நுட்ப உட்பொருளான, மேம் படுத்தப்பட்ட விதைகள், மண்ணைச் சரிப்படுத்தும் இரசாயனங்கள், தாவர சத்துக்கள், பண்ணை எந்திரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள்.
- மேலும், வேகப்படுத்தப்பட்ட பருப்புகள் உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பருப்பு வகைகளின் உற்பத்தி மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மூலம் பெருக்கப்பட வழி செய்யப் பட்டது.
- இந்த முறையின் மூலமாக 2011-12 ஆம் முடிவில் கூடுதல் உற்பத்தியாக 10 மில்லியன் டன் அரிசி, 8 மில்லியன் டன்

கோதுமை மற்றும் 2 மில்லியன் டன் பருப்பு வகைகள் உற்பத்தி செய்யப்பட்டது.

**2. ராஷ்டிரிய க்ரிஷி விகாஸ் யோஜனா (RKVY)**

- வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பிரிவுகளில் அளவிடக்கூடிய மாற்றங்களை, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றில் வேளாண்மையின் வேறுபட்ட பிரிவு களிலும் ஏற்படுத்துதல் மற்றும் மாநிலங்கள் தங்கள் விருப்பப்படி திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றிக் கொள்ள வழி செய்யப்பட்டது, மேலும் பொது முதலீட்டைப் பெருக்கும் நோக்குடன் மாநிலங்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது.
- உபதிட்டங்களாக, கிழக்கு பிராந்தியத்திலும் பசுமைப் புரட்சியை மேற்கொள்ளல், வானம் பார்த்த பூமி பகுதிகளில் 60,000 கிராமங்களின் ஒருங்கிணைந்த பருப்புகள் வளர்ச்சித் திட்டம், தேசிய புரதக்கூட்டல்மிஷன், துரிதப்படுத்தப்பட்ட தீவன வளர்ச்சித்திட்டம், மானாவாரி பகுதி வளர்ச்சித் திட்டம் ஆகியவை செயல் படுத்தப்பட்டன.

**3. தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)**

- தோட்டக்கலைத் துறையின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- உரிய நாற்றங்கல் மற்றும் திசு சாகுபடி அலகுகள் மூலம் தரமான செடிக் கன்றுகளை வழங்கல்.
- பயிரிடும் பரப்பைக் கூட்டியும் மறுமலர்ச்சி மூலமும் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் பெருக்கல்,
- தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் பரப்புதல்.
- அறுவடைக்கு பிந்தைய மேலாண்மையைப் பெருக்கிட கட்டமைப்பை உருவாக்கல், சந்தையை மேம்படுத்துதல் மாறுபட்ட வேளாண் சுழலுக்கு ஏற்றவாறு மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களில் ஒப்பிட்டு உயர்ந்து நிற்கும் ஆதாரங்களை உரிய முறையில் பயன்படுத்துதல் ஆகியனவாகும்.

**4. இ-சௌபல் (e-Choupal)**

கிராமப்புற விவசாயிகளுக்கு இணைய வசதியை ஏற்படுத்தி கொடுக்கும் இந்தியா சார்ந்த வணிக முறை. இதன் குறிக்கோளானது விவசாயிகளுக்கு வேளாண் தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொடுத்து, வேளாண் பொருட்களின் தரத்தினையும், விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துவதாகும். இந்த இ-சௌபல் மூலம் நாடு முழுவதும் 6500 கணிணி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சராசரியாக 600 விவசாயிகளுக்கு ஒரு மையம் என்ற அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது இடைத்தரகர்களை ஒழிக்கும் ஒரு நல்ல திட்டமாகும். அதனால் விவசாயிகள் நேரடியாக பயனடைவர் விவசாயி தங்கள் பொருட்களுக்கு தாங்களே விலையை நிர்ணயிக்க முடியும். இதனால் உண்மையான இலாபம் விவசாயிகளைச் சென்றடையும்.

**5. தேசிய வேளாண்பொருட்களின் கூட்டுறவு சந்தை (NAFED)**

1958ம் ஆண்டு அக்டோபர் 2ம் தேதி துவங்கப்பட்டது. மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றது. இதன் நோக்கம் கூட்டுறவு சந்தையை ஊக்குவித்தலால், விவசாயிகள் முக்கிய பலன்களை பெறுவதாகும்.

இதன் பணிகளானது சந்தையை ஒருங்கிணைத்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல், வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வனப் பொருட்களை சேமித்தல் மற்றும் பாதுகாத்தல், வேளாண் இயந்திரங்களை விநியோகித்தல், மொத்த மற்றும் சில்லரை விலையில் பொருட்களை சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்தல் போன்றவைகள் ஆகும். தொழில் நுட்ப ஆலோசனை தருதல், உறுப்பினர் நலனுக்கு உதவுதல், கூட்டுறவு முறை அங்காடி செயல்களை மேற்கொள்ளுதல் போன்றவை ஆகும்.

**தேசிய வேளாண் கொள்கை : 2000**

1. வேளாண்மை உற்பத்தியை 4 சதவீதத்திற்கும் மேலாக அடுத்த 20 ஆண்டுகளுக்கு வளர்ச்சியினை கொண்டு செல்லுதல்.
2. ஒப்பந்த விவசாயத்தின் மூலம் தனியார் துறையின் பங்களிப்பினை ஊக்குவித்தல்.
3. விவசாயிகளுக்கு விலை பாதுகாப்பினை அளித்தல்.
4. தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டம் (NAIS)
5. நாடு முழுவதும் வேளாண்மைப் பொருட்களை கொண்டு செல்ல இருக்கும் தடைகளை களைதல்
6. நாட்டின் நீர் வளத்தினை முறையாக பயன்படுத்துதல், நீர்ப்பாசனத்தின் உச்ச பயன்பாட்டை மேற்கொள்ளுதல்.
7. கால்நடை பராமரிப்பு, பால் உற்பத்தி போன்றவற்றின் மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளித்தல்.
8. மூலதன உள்ளீடு மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு சந்தை வாய்ப்பளித்தல்.
9. பொருட்களின் விலையில் உள்ள ஏற்ற இறக்கங்களை குறைத்தல்.
10. உலகச் சந்தை விலையினை தொடர்ந்து கண்காணித்தல்.
11. போதிய மற்றும் தரமான உள்ளீடு பொருட்களை காலதாமதமின்றி பொருட்களை விவசாயிகளுக்கு அளித்தல்.
12. கிராம மின்மயமாக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல்

### 6. வேளாண் காப்பீடு (Agricultlural Insurance)

- இந்திய அரசு 2002-03ம் ஆண்டு பட்ஜெட்டில் இந்திய வேளாண் காப்பீடு நிறுவனம் (AIC) அமைக்கப்படுவதை அறிவித்தது. இது விவசாயிகளின் தேவைக்கும் நீடித்த வேளாண்மை வளர்ச்சிக்கும் வித்திட்டது. மேலும் இவ்வமைப்பு வேளாண்மை காப்பீடு திட்டத்தை அமைக்க வலியுறுத்தியது.
- AIC - யானது தேசிய வேளாண்மை காப்பீட்டு திட்டம் NAISயை நடைமுறைப் படுத்த ஆரம்பித்தது. 2002-03 ஆண்டு NAIS யானது பொது காப்பீட்டு நிறுவனம் நடைமுறைப் படுத்தியது.

### 7. தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் (National Agricultlural Insurance Scheme (NAIS))

**நோக்கம்**

- ஏதேனும் இயற்கைச் சீற்றம், பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் சேதம் அடைந்த பயிர்களுக்கு சேதத்திற்கு ஏற்ற அளவு காப்பீடு மற்றும் நிதி உதவியை விவசாயிகளுக்கு அளித்தல்.

- விவசாயிகளை உயர்நிலை உள்ளீடுகள் மற்றும் உயர் தொழில்நுட்பங்களை வேளாண்மையில் பயன்படுத்த ஊக்குவித்தல்.
- விவசாயிகளின் வருமானத்தை குறிப்பாக பேரிடர் காலங்களில் சமன்படுத்துதல் போன்றவை ஆகும்.

**கீழ்க்காணும் பயிர்களுக்கு இந்த திட்டம் பொருந்தும்**

- உணவு பயிர்கள் (தானிய வகைகள், பயிர் வகைகள்), நெல், கோதுமை, கம்பு, சோளம், கேழ்வரகு, பாசிப்பயிறு, உளுந்து, துவரம் பருப்பு, கொள்ளு, பயிறு போன்றவை.
- எண்ணெய் வித்துக்கள், தேங்காய் எண்ணெய், சூரியகாந்தி, சோயா பீன்ஸ் போன்றவைகள்.
- வருடாந்திர வணிக மற்றும் தோட்டக் கலை பயிர்கள், கரும்பு, பருத்தி, உருளை கிழங்கு, வெங்காயம், இஞ்சி, மஞ்சள், வாழைப்பழம், அன்னாசிப்பழம், சணல் போன்றவை.
- தற்போது 35 பல்வேறு பயிர்கள் (காரிப் பருவத்தில் விளைவது) மற்றும் 30 வெவ்வேறு பயிர்கள் ராபி பருவத்தில் விளைவது) இத்திட்டத்தில் கீழ் வருகிறது.

**8. மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டம் (MNAIS)**

- பயிர்களுக்கு முனைமம் செலுத்தப் படுகிறது. அதனால் இதை உரிமை கோரும் உரிமை காப்பீட்டுதாரர்களுக்கு உண்டு.
- முக்கிய பயிர்களுக்கான காப்பீட்டு அளவு கிராம பஞ்சாயத்து ஆகும்.
- சூறாவளியால் பாதிக்கப்பட்ட பயிர் களுக்கு நஷ்டஈடு அறுவடைக் காலத்திற்கு பிறகே வழங்கப்படும்.
- விவசாயிகள் பாதிக்கப்படுவதை தவிர்க்க நஷ்ட ஈடுகளில் 25 சதவீதம் உடனடியாக வழங்கப்படும்.
- நஷ்டஈடு அளவு 60 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.
- MNAIS - மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்தை தனியார் துறையும் நடைமுறைப்படுத்தலாம். ஆனால் அவர்களிடம் போதிய உள்கட்டமைப்பும், போதிய அளவு அனுபவமும் இருக்க வேண்டும்.

**9. நீடித்த வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (National Mission for sustainable Agriculture (NMSA))**

நீடித்த வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA) ஆனது வேளாண்மையில் இந்தியாவை மாற்றி காலநிலைக்கு ஏற்ப உற்பத்தி முறையினை கொண்டு வருவது ஆகும். இது பயிர்களுக்கும், கால்நடைகளுக்கும் சேர்ந்த திட்டமாகும். NMSA ஆனது திட்டம் சார்ந்த நடைமுறைகளில் கவனம் செலுத்தி பகுதி சார்ந்த வேளாண்முறையை ஊக்குவித்தல், வளங்களை மாற்றும் தொழில்நுட்பம், மண் வள மேலாண்மை, திறன்மிகு நீர் ஆதார மேலாண்மை ஆகியவற்றை திறம்பட செய்வதாகும்.

NMSA ஆனது கீழ்காணும் 10 முக்கிய அம்சங்களில் செயல்படக் கூடியது. விதை மற்றும் நீர், பூச்சி, சத்துக்கள், வேளாண்முறை, கடன், காப்பீடு, சந்தை, தகவல் மற்றும் வாழ்வாதார மாற்றம் போன்றவைகளை தேர்ந்தெடுத்து அவற்றில் உள்ள குறைகளை

களைய 4 முக்கிய பகுதியில் முக்கியத்துவம் செலுத்துதல். அதாவது ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தொழில் நுட்பம், உற்பத்தி மற்றும் நடைமுறை மற்றும் உள்கட்டமைப்பு மற்றும் திறன் வளர்ப்பு.

இவை அனைத்தும் 12வது ஐந்தாண்டு திட்டத்தில் சீராக்கப்பட வேண்டும். நீடித்த வேளாண்மைக்கான தேசிய இயக்கம் NMSA உட்பட விவசாய அமைச்சரக திட்டங்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்த வேண்டும். 11வது ஐந்தாண்டு திட்டத்தில் உள்ள திட்டங்களில் மத்திய மாநில அரசுகளில் நடைமுறைகளில் உள்ள திட்டத்தில் இதை இணைத்து விட வேண்டும்.

### ராஷ்டிரிய க்ரிஷி விகாஸ் யோஜனா (Rashriya Krishi Vikas Yojana (RKVY))

வேளாண்மையின் மிகக் குறைந்த வளர்ச்சியை கணக்கில் கொண்டு தேசிய வளர்ச்சிக் குழு 2007-ம் ஆண்டு வேளாண்மை மற்றும் அதன் துணைத் துறைகளில் உள்ள பிரச்சனைகளைக் களைய ராஷ்டிரிய க்ரிஷி விகாஸ் யோஜனா - (RKVY) என்ற திட்டத்தை செயல்படுத்தியது. சராசரி வருடாந்திர வளர்ச்சியாக 4 சதவீதத்தை எட்ட வேண்டும் என்ற 11வது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கத்தை தேசிய வளர்ச்சி குழுமம் மீண்டும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

மேலும் மத்தியக் கூடுதல் உதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு மாநில அரசுகள் தாங்களே தனது திட்டத்தினை நடைமுறைப்படுத்தவும், கொள்கை வகுத்துக் கொள்ளவும் வழிவகை செய்தது. இந்த மத்திய கூடுதல் உதவித் திட்டத்தினை மத்திய வேளாண் அமைச்சகம் கண்காணிக்கும். இத்திட்டம் வேளாண் காலநிலை, இயற்கை வளம் மற்றும் தொழில் நுட்பம் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளும்.

மாநிலங்களில் மழை குறைவு உள்ள பகுதியில் திட்டங்களை வகுத்து மாநிலங்களுக்கு உதவுவதற்காக தேசிய மழை குறைவு பகுதி ஆணையம் செயல்படுகிறது.

**10. மானாவாரி மேம்பாட்டு திட்டம்**

விவசாய வளர்ச்சியை ஊக்குவிக்க ராஷ்டிரிய க்ரிஷி விகாஸ் யோஜனாவின் கீழ் துணைத் திட்டமாக இத்திட்டம் 2011-12ல் தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் குறிப்பாக சிறிய மற்றும் விளிம்புநிலை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது.

### இந்தியாவில் பசுமைப் புரட்சி

- 1966-1967 ஆம் ஆண்டு இந்தியாவில் பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் வேளாண்மைத் துறையில் புதிய தொழில்நுட்பங்களும் இரசாயன உரங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. அதிக மகசூலைத் தரும் விதைகள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் வேளாண் உற்பத்தி அதிகரித்தது. பசுமைப் புரட்சியின் முக்கிய நோக்கம் உற்பத்தியை பெருக்குவதாகவே அமைந்தது.
- பதினோராவது ஐந்தாண்டு திட்டத்தின் போது இரண்டாவது பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் முக்கிய நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் ஆவன.
    - ஆண்டு வளர்ச்சியை 4% உயர்த்துதல்.
    - பாசன வசதி பெற்ற பகுதிகளில் உற்பத்தியை இரண்டு மடங்காக உயர்த்துதல்.

- நீர் மேலாண்மையை அதிகரித்தல்.
- மழை நீர் சேகரிப்பு.
- மண் வளத்தில் கவனம் செலுத்துதல்.
- பலவிதமான பயிர்களை விளைவித்தல்.
- கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித் தொழில்களை ஊக்குவித்தல்.
- விவசாயிகளுக்கு எளிதில் கடன் கிடைக்கச் செய்தல்.
- அங்காடி செயல்பாடுகளை அதிகரித்தல்.
- நில சீர்திருத்தத்தில் கவனம் செலுத்துதல் முதலியன.

**4. பசுமைப் புரட்சி**

- ▶ இப்பசுமை புரட்சியால் உயிரின வாழ்க்கையில் வளர்ந்து வரும் சமனற்ற நிலை, சுற்றுச்சூழல் பாதிப்பு, உணவுச் சங்கிலியில் நச்சுநிலை அதிகரிப்பு, முதலாளித்துவ பண்ணை முறை வளர்ச்சி, வருமானத்தில் ஏற்றத்தாழ்வு அதிகரித்தல் என அனைத்து பாதிப்புகளும் ஏற்பட்டன.
- ▶ ஆனால் வேளாண்மையில் உற்பத்தி மேம்பாடு மற்றும் முரட்டு தானியப் பயிர்ப்பரப்பை அதிகரித்தது, உணவிற்கான எண்ணெய்களின் உற்பத்தியை உயர்த்தியது, மற்றும் நீர்பாசன மற்றும் நீர் மேலாண்மையில் புதிய உத்திகளைப் புகுத்தியது.

## இரண்டாம் பசுமைப்புரட்சி (SGF)

- ▶ முதலாம் பசுமைப் புரட்சியில் இருந்து இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு மாற்றம் கொண்டு வர இரண்டு காரணங்களை அறிவுறுத்தினர்.
- ▶ 12வது ஐந்தாண்டுத் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டது.
- ▶ முதல் காரணம் - உலர்நில சாகுபடி பயனடையவில்லை.
- ▶ இரண்டாவது காரணம் - அது நடுநிலை அளவுள்ளதாக இல்லை, பெரும் பண்ணைகளுக்கும், பெரும் பண்ணையாளர்களுக்கும் மட்டுமே பயன்தரத்தக்கதாக அமைந்தது. ஆகையால்
  - கரிம விவசாயம்
  - பசுமை விவசாயம்
  - உயிர்வள ஆய்வு விவசாயம்
  - நுண்ணிய விவசாயம்
  - வெள்ளை விவசாயம்
  - ஒரு வைக்கோல் புரட்சி என அமைந்தது.
- ▶ கரிம விவசாயம்: தாது உரங்கள் மற்றும் இரசாயன பூச்சி மருந்துகள் ஆகியவை அல்லாத சாகுபடி.
- ▶ பசுமை விவசாயம்: ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்ட அளிப்பு மற்றும் ஒருங்கிணைந்த இயற்கை வள மேலாண்மை முறைகள்
- ▶ உயிர்வள ஆய்வு விவசாயம்: மண்பாதுகாப்பு, நீர் மற்றும் உயிர் வேற்றுமை மற்றும் சம்பிரதாய அறிவு மற்றும் உயிர்வள ஆய்வின் அடிப்படையில் விவசாயம்.
- ▶ நுண்ணிய விவசாயம்: பயனுள்ள நுண்ணிய உயிரினங்களை உபயோகிக்கும் முறை
- ▶ வெள்ளை விவசாயம்: நுண்ணிய உயிரினங்களைத் தாராளமாகப் பயன்படுத்தி குறிப்பாக பூஞ்சையைப் பயன்படுத்தி விவசாயத்தை மேற் கொள்ளும் முறை

▶ ஒரு வைக்கோல் புரட்சி: இயற்கை விவசாயம் - உழவு செய்யாமல், வயல் களில் அதிகத் தண்ணீர் இல்லாமல், களையெடுக்காமல், இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் மூலிகை மருந்து இன்றி செய்யப்படும் சாகுபடி.

**5. தேசிய விவசாயக் கொள்கை 2000**

▶ ஒப்பந்த பண்ணைமுறை மற்றும் நிலக் குத்தகை ஆகியன ஏற்பாடுகள் மூலம் கொள்கை ஆவணங்கள், தனியார் பிரிவு பங்கேற்பினை உயர்த்துவது குறித்து ஆலோசிக்கப்படுகின்றன.

▶ இது விலைப்பாதுகாப்பு அளிப்பதிலும் முக்கியப்பங்கு வகிக்கிறது. விவசாயிகள் அப்பொழுது உற்பத்தி செய்ய ஊக்கம் பெறுவார்கள். ஆனால் இறக்குமதி செய்யப்படும் அளவில் இருந்த சில தடைகளையும் நீக்கியுள்ளது.

▶ புதிய வேளாண்மை "வானவில் புரட்சி" என்றும் அழைக்கப்படுகிறது. அது கீழ்கண்ட புரட்சிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. வேளாண்மை உற்பத்தி திறனை நிலம் மற்றும் உழைப்பின் உற்பத்தித் திறனை கொண்டு அளவிடலாம்.

- பச்சை - வேளாண்மையின் ஒட்டுமொத்த வளர்ச்சி
- நீலம் - மீன் உற்பத்தி
- பழுப்பு - தோல் / கோகோ உற்பத்தி
- தங்கநிறம் - தோட்டத்துறை வளர்ச்சி / தேன் உற்பத்தி
- பச்சை - உணவு தானிய உற்பத்தி
- புகைவண்ணம் - உரப்புரட்சி
- ஊதா - வெங்காய உற்பத்தி / இறால் உற்பத்தி
- சிவப்பு - மாமிசம் / தக்காளி உற்பத்தி
- வட்டம் - உருளைக்கிழங்கு
- வெள்ளி - முட்டை / கோழி உற்பத்தி
- நூல் - பருத்திப் புரட்சி
- கருப்பு - பெட்ரோலிய உற்பத்தி
- வெள்ளை - எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி
- தங்கநூல் - சணல் உற்பத்தி

**6. உணவுப் பாதுகாப்பு (Food Security)**

▶ உலக வங்கி அறிக்கை (1986) உணவுப் பாதுகாப்பை இவ்வாறு வரையறை செய்கிறது. எல்லா மக்களும் எல்லா நேரத்திலும், போதுமான உணவைப் பெற்று ஆரோக்கியமாக வாழ்வது.

▶ உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, (1983) இவ்வாறு உணவு பாதுகாப்பை வரையறை செய்கிறது. அனைத்து மக்களும் அனைத்து நேரங்களிலும் அவர்களின் தேவைக்கேற்ற உணவுப் பொருளைப் பெறவும், அதற்குப் போதுமான பொருளாதாரத்தைப் பெறவும் உறுதி அளிப்பது.

▶ ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு நாடு உணவுத் தன்னிறைவை அடையலாம். ஆனால் உணவுப் பாதுகாப்புக் கருத்து, நீண்ட பருவ அடிப்படையில் நேரத்திற்கு, நம்பத்தகுந்த முறையில், போதுமான சத்துள்ள உணவை அனைவருக்கும் உரித்தாக்குவது.

## நிலச் சீர்திருத்தம் (Land Reforms)

▶ நிலச் சீர்திருத்தம் என்பது நில உரிமையாளர், குத்தகைதாரர், மற்றும் நில மேலாண்மை ஆகியவற்றில் ஏற்படும் கொள்கை மாற்றத்தை குறிக்கும்.

1. சமதர்ம சமுதாய அமைப்பை அடைய வேளாண் அமைப்பை மாற்றி அமைத்தல்.
2. நில உடைமையில் சுரண்டுதலைத் தடுத்தல்.
3. உழவனுக்கே நிலம் சொந்தம் என்ற கொள்கையை உறுதிபடுத்துதல்.
4. அடிப்படை நில அளவை விரிவு படுத்துதல் மூலம் கிராமப்புற ஏழை விவசாயிகளின் நிலையை உயர்த்துதல்.
5. வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க செய்தல்.
6. நில அமைப்பை கிராமப்புற ஏழைகளுக்கு ஏதுவாக செய்தல்.
7. உள்ளூர் நிறுவனங்களின் மேம்பாட்டை சமப்படுத்துதல் முதலியன.

### இந்தியாவில் நிலச் சீர்திருத்த முறைகள்

1. அரசு சலுகைகளான, கூட்டுறவுப் பண்ணை மற்றும் நிலங்களை ஒருங்கிணைத்தல் மூலம் தானாக முன்வந்து ஏற்றுக்கொள்ளுதல்.
2. நிலங்களை ஒருங்கிணைத்தல் போல சட்ட திருத்தங்கள் மூலம் தாமே முன்வந்து நிலச் சீர்திருத்த முறைகளை ஏற்றுக் கொள்ளுதல்.
3. இடைத்தரகர்களை ஒழித்தல், குத்தகைதாரர்கள் சீர்திருத்தம், நில உச்சவரம்பு ஆகிய பல வகையான சட்டங்கள் மூலம் கட்டாயப்படுத்துதல்.

### வேளாண் அங்காடி

- வேளாண் பொருட்களை பரிமாற்றம் செய்யப்படும், பொருளாதார செயல் பாட்டிற்க்கு வேளாண் அங்காடி என்று பொருள். இது வேளாண் பொருட்களின் மதிப்பைபணத்தால்தீர்மானிக்கிறது.இது பண்டங்களை கடைசி நுகர்வோருக்கு வழங்குகிறது.
- இது விற்பனைக்குரிய உபரியை விற்பனைக்காக சந்தைக்கு கொண்டு வருகிறது. விற்பனைக்குரிய உபரியில் ஏற்படும் அதிகரிப்பு பொருளாதார முன்னேற்றத்தில் உயர்வினை ஏற்படுத்தும்.

### விற்பனைக்குரிய உபரி

- பண்ணைத் தேவைகளுக்கும், சொந்த நுகர்வுக்கும் போக இயல்பாக எஞ்சியிருக்கும் உபரியே விற்பனை உபரியாகும். இதை கீழ்கண்டவாறு கணக்கிடலாம்.
- (பழைய இருப்பு + உற்பத்தி) - (நுகர்வு + சேதாரம் + அடுத்த பருவத்திற்கான விதைகள்)
- விற்பனைக்குரிய உபரி என்பது வேளாண்மையின் மொத்த உபரியாகும். விற்பனை செய்யப்பட்ட உபரி என்பது வேளாண்மையின் நிகர உபரியாகும்.

#### விற்பனைக்குரிய உபரியை தீர்மானிக்கும் காரணிகள்

1. நில உடைமையின் அளவு
2. பயிர் உற்பத்தி
3. குடும்ப அளவு
4. பிற துறைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் முதலியன.

### இந்தியாவில் உணவுப் பிரச்சினை

- இந்தியா இரண்டாவது பெரிய மக்கள் தொகையை கொண்ட நாடு. அதனால் உணவுப் பொருட்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் உணவு உற்பத்தி பற்றிய

பிரச்சினை கீழ்காணும் 4 கூறுகளை கொண்டுள்ளது.

1. அளவு சார்ந்தவை
2. தரம் சார்ந்தவை
3. பகிர்வு சார்ந்தவை
4. பொருளாதாரம் சார்ந்தவை

**உணவு பிரச்சினைக்கான காரணங்கள்**

1. வேகமான மக்கள்தொகை வளர்ச்சி
2. குறைவான வேளாண் உற்பத்தி திறன்
3. இயற்கைச் சீற்றங்கள்
4. பணப் பயிர்கள் வளர்ச்சி
5. நுகர்வுத் தன்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்
6. உணவுக்கான வருமானத் தேவையில் ஏற்பட்டுள்ள உயர்வு
7. பொருளாதார முன்னேற்றமும், நகரமயமாதலும்
8. பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தை

**இந்திய அரசின் உணவுக் கொள்கை**

- நாட்டு விடுதலைக்குப் பிறகு, உணவு தானிய பற்றாக்குறை பிரச்சனையை அரசு தீவிரமாக ஆராய்ந்து இப்பிரச் சனையை தீர்க்க பல விதிமுறைகளை மேற்கொண்டது.

**அவைகள் பின்வருமாறு**

1. உணவு தானிய உற்பத்தியை அதிகரிப்பது.
2. உணவு தானியங்களை, தேவைக் கேற்ப இறக்குமதி செய்வது.
3. உணவு தானியங்களை அங்காடி யிலிருந்து குறைந்த அளவு ஆதரவு விலை அல்லது கொள்முதல் விலையை நிர்ணயித்து நேரடியாக கொள்முதல் செய்வது.
4. உணவுப் பண்டங்களின் பொது பங்கீட்டு முறையை நடைமுறைப் படுத்துதல்.
5. ஆண்டு முழுவதும் உணவு தானியங்களின் அளிப்பு சீராக இருக்க தாங்கியிருப்பு திட்டத்தை செயல்படுத்துதல்.
6. வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை உயர்த்துவதற்க்கும் முறையான அளிப்பை உறுதி செய்யவும் பல நிறுவனங்களை ஏற்படுத்தியது. (தேசிய விதை கழகம், வேளாண் தொழிற்கழகம், வேளாண் விதைக்குழு, இந்திய உணவுக்கழகம், இந்திய உரக் கழகம் முதலியன குறிப்பிடத்தக்கவை)
7. வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்தை ஊக்கப் படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டது. பல வேளாண் பல்கலைக்கழகங்கள், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி வாரியம் (ICAR) ஆகியவற்றை ஏற்படுத்தியது.

**தாங்கியிருப்புத் திட்டம் (Buffer Stock Scheme)**

- ஆண்டு முழுவதும் முக்கியமான உணவு தானியங்களின் அளிப்பை சீராக இருப்பதை உறுதி செய்ய அரசு ஒரு திட்டத்தை தொடங்கியது. அதன்படி எப்பொழுதெல்லாம் தானியங்களின் விலை உயர்கிறதோ அப்பொழுதெல்லாம் அரசு விலையை நிலைநிறுத்த தானியங்களை தாங்கியிருப்பிலிருந்து வெளியிடுகிறது.

**கட்டுப்படுத்தப்பட்ட மலிவு விலை துணிக்கடைகள் (Shops selling cloth of controlled prices)**

- நாடு முழுவதும் 66,000 மேற்பட்ட கடைகள் கட்டுப்படுத்தப்பட்ட மலிவு விலையில் துணிகளை விற்பனை செய்கின்றன.

## சிறப்பு அங்காடிகள் (Super Bazars)

- இது நுகர்வோருக்கு தேவையான அனைத்து பொருட்களையும் குறைந்த விலையில் ஒரே இடத்தில் வழங்குகிறது. நாட்டின் முக்கிய நகரங்களில் இவ்வகை அங்காடிகள் செயல்படுகின்றன.

## மண்ணெண்ணெய் சில்லறை விற்பனையாளர்கள் (Kerosene Retailers)

- நியாய விலைக்கடைகள் மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்படாத மாநிலங்களில் இவ்வகை சில்லறை விற்பனையாளர்கள் இதற்காக உரிமம் பெற்றுள்ளனர்.

## பண்டங்களை வழங்குவதில் பொறுப்பு

1. கோதுமை, அரிசி, உணவு தானியங்கள் (இந்திய உணவுக் கழகம்)
2. மண்ணெண்ணெய் (இந்திய எண்ணெய்கழகம் & மத்திய பெட்ரோல் அமைச்சகம்)
3. மென்மைக்கரி (இந்திய நிலக்கரி லிமிடெட்)
4. நெசவுப் பொருட்கள் (இந்திய நெசவுக் கழகம்)
5. சமையல் எண்ணெய் (மாநில வாணிபக் கழகம்)

## வேளாண்மை நிதி வழிமுறைகள்

## வேளாண்மை கடன் மூலங்கள்

- விவசாயிகளின் குறுகியகால, இடைக் கால, நீண்டகால நிதித் தேவையும், அளவும் வளர்ந்து வருகின்றன. இச்சமயத்தில் விவசாயிகளுக்கு கடன் மூலங்களாக திகழ்வன நிறுவனங்கள் மற்றும் தனியார் மூலங்கள் ஆகியன.
- நிறுவனங்கள் - அரசுக் கூட்டுறவு சங்கங்கள், வணிக வங்கிகள் முதலியன.
- தனியார் மூலங்கள் - வணிகர்கள், உறவினர்கள், நிலக்கிழார்கள், நண்பர்கள் முதலியோர்.
- 1951-52-ல் விவசாயிகள் நிறுவனமற்ற நிதி மூலங்களிடமிருந்து 92.7% அளவு கடன் பெற்றனர். 1981-ல் இந்த அளவு 36.8% ஆக குறைந்தது. மேலும் விவசாயிகள் நிதி நிறுவனங்களின் மூலம் கடன் பெறுவது 7.3%-ல் இருந்து 63.2% ஆக அதிகரித்துள்ளது. மேலும் 2007 இது 74.75% உயர்ந்தது.
- நிறுவனக் கடன் மூலங்களே குறைந்த வட்டியில் விவசாயிகளுக்கு கடன் கொடுத்து தடங்கல் இன்றி உற்பத்தியை தொடர உதவுகின்றன.

## கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

- இவை விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் குறுகிய கால, நடுத்தர கால கடன்களைத் தருகின்றன. கிராம நிலையில் பணி செய்கின்ற ஆரம்ப வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் விரைவாக வளர்ச்சியடைந்துள்ளன.
- இப்பொழுது 86% கிராமங்களும், 36% கிராம மக்களும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் பெறுகின்றனர். 1951-52ல் விவசாயிகளின் கடன் தேவையில் 3.3% கடனளித்த கூட்டுறவு சங்கங்கள் 1981 ல் 28.9% கடனளித்துள்ளன. இப்பொழுது கூட்டுறவு சங்கங்களால் வசூலிக்க முடியாமல் வெளியில் நிற்கும் நிலுவைக் கடன் ரூ.3000 கோடி.

## நிலவள வங்கிகள் (Land Development Banks)

- நமது நாட்டில் நில அடமான வங்கியின் வரலாறு 1929 ல் சென்னையில் கூட்டுறவு முறையில் அமைக்கப்பெற்ற மைய நில அடமான வங்கியோடு தொடங்குகின்றன. இது கடன் பத்திரங்கள் மூலம் தனது மூலதனத்தை திரட்டியது. சென்னை மாநிலத்திலும் நில அடமான முறை வளர்ந்தது. இன்றைய நிலையில் தமிழ்நாடு, கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் மட்டும் 65% வங்கிகள் காணப்படுகின்றன.

## வணிக வங்கிகள் (Commercial Banks)

- விவசாயிகளின் குறுகிய காலக் கடன்களை தீர்ப்பதில் வணிக வங்கிகள் முக்கிய பங்காற்றுகின்றன. விவசாயிகளுக்கு டிராக்டர் போன்ற வாகனங்கள் வாங்கவும், நீர்பாசனத்துக்கு மின் விசைக்குழாய் அமைக்கவும் கடன் தருகின்றன. வணிக வங்கிகள் கடந்த காலத்தை ஒப்பிடும்போது அரசின் தூண்டுதலால் மிகுதியான அளவு தற்போது வேளாண்மைக் கடனில் கவனம் செலுத்துகின்றன. அவை இத்துறையில் முழுமனதோடு இறங்கி பணியாற்றினால் வேளாண்மை விரைந்து முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

## வட்டார கிராம வங்கிகள் (Regional Rural Banks)

- சிறிய, இறுதிநிலை விவசாயிகளுக்கும், வேளாண்மைக் கூலிகளுக்கும், கைவினை -ஞர்களுக்கும், சிறிய தொழில் முனைவோர்களுக்கும், வேளாண்மை, வாணிபம், தொழில் ஆகியவற்றை கிராமப்புறங்களில் வளர்ப்பதற்காக வட்டார கிராம வங்கிகளை அமைத்தனர்.
- 1975 ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள் முதன் முதலில் 5 வட்டார கிராம வங்கிகளை நிறுவினர். ஒவ்வொரு வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ஒரு கோடி ரூபாய். மூலதனத்தில் 50% மத்திய அரசும், 15% மாநில அரசும், 35% இதனை செயல்படுத்தும் வணிக வங்கிகளும் கொடுக்கும்.
- மத்திய அரசு மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி ஆகியவற்றின் வழிகாட்டுதலின்படி இவ்வங்கி செயல்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியிடம் பல சலுகைகள் பெற்று இவ்வங்கிகள் செயல்படுகின்றன.

## வேளாண்மை மற்றும் கிராம வளர்ச்சிக்கான தேசிய வங்கி (National Bank for Agriculture & Rural Development)

- 1982 ம் ஆண்டு, ஜீலை பாராளுமன்ற சட்டத்தின்படி வேளாண்மை, கிராம வளர்ச்சிக்கான தேசிய வங்கியை நிறுவினர். இந்திய ரிசர்வ் வங்கியின் வேளாண்மை கடன் பணிகளையும், வேளாண்மை மறுநிதி வளர்ச்சி கழகத்தின் பணிகளையும் செய்யும் நோக்கத்தோடு இதனை அமைத்தனர். இதனுடைய மூலதனத்தில் பாதியை மத்திய அரசும், பாதியை ரிசர்வ் வங்கியும் வழங்குகின்றன.
- தேசிய வங்கி நிறுவனங்களின் மேல் இணைமன்றம் என்ற நிலையிலும், மறுநிதிநிறுவனமாகவும் செயல்படுகிறது. வேளாண்மைக் கடன் தொடர்பாக ரிசர்வ் வங்கி செய்த பணிகளை எல்லாம்

இப்பொழுது தேசிய வங்கி கவனிக்கிறது. வேளாண்மை கிராம வளர்ச்சிக்கான தேசிய வங்கி, ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் வேளாண்மை, சிறுதொழில்கள், கைவினைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் உற்பத்தி முதலீட்டிற்கு தேவையான எல்லா வகையான சேவைகளையும் மறுநிதி நிறுவனம் என்ற முறையில் செய்கிறது.

- இது மாநில கூட்டுறவு வங்கிகளுக்கும், வட்டார கிராம வங்கிகளுக்கும், பிற நிதிநிறுவனங்களுக்கும், குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது.

**விவசாயப் பயிர்களும் முன்னணி உற்பத்தி மாநிலங்களும்**

- மேற்கு வங்காளம் - நெல், சணல்
- உத்திர பிரதேசம் - கோதுமை, கரும்பு
- கேரளா - ரப்பர், தேங்காய் & நறுமணப் பொருள்கள்
- கர்நாடகா - கேழ்வரகு, காபி
- மகாராஷ்டிரா- கம்பு, சோளம்
- ஆந்திரா - புகையிலை, மிளகாய்
- குஜராத் - பருத்தி, நிலக்கடலை
- அஸ்ஸாம் - தேயிலை
- மத்திய பிரதேசம் - பருப்பு வகைகள்

# தொழில் வளர்ச்சி

## தொழில்துறை வளர்ச்சி (Industrial Growth)

- தொழில்துறையின் தேவை மற்றும் பணி உலகம் முழுவதும் வளர்ச்சி சிந்தனையுடைய அனைத்து நாடுகளாலும் உணரப்பட்டுள்ளது. நவீன வளர்ச்சி நிலைகளில் விரைவான வளர்ச்சியையும் பொருளாதார மேம்பாட்டையும் பெறுவதற்கு தொழில்துறையின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகிறது. பின் வருபவை தொழில் துறையின் அவசியத்தை உணர்த்துகிறது.
- தொழில்மயமாதல் மூலம் நாட்டு வருமானம் உயர்வதால் பொருளாதாரம் சீரடைகிறது. தொழில்துறையில் முன்னேறிய நாடுகளில் நாட்டு வருமானத்தின் பெரும்பங்கு தொழில் துறையிடமிருந்து வருகிறது.
- தொழில் மயமாதல் மூலம் வேலை வாய்ப்புகள் பெருகி மக்களின் வருமானம் உயர்ந்து வாழ்க்கைத் தரமும் மேம்படுகிறது.
- ஏற்றுமதி அதிகமாவதன் மூலம் போதிய அந்நியச் செலாவாணியை ஈட்டமுடிகிறது. அதிகரிக்கும் வருமானம் அதிக சேமிப்பிற்கும் அதிக மூலதன உருவாக்கத்திற்கும் வழிவகுக்கின்றது. தொழிலக அமைவிடமானது வெபர் கோட்பாட்டின் அடிப்படையில் அமையும்.

## தொழில் வளர்ச்சியின் வகைகள் (Patterns of Industrial Growth)

- தொழில்கள் நான்கு மிக முக்கியப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன

1. அடிப்படைப் பண்டங்கள் (சிமெண்ட், இரசாயன பொருட்கள், உரம்)
2. மூலதனத் தளவாடங்கள் (இயந்திரங்கள், இயந்திர தளவாடங்கள், பொறியியல் பண்டங்கள்)
3. நுகர்வுப் பண்டங்கள் (மிதிவண்டி, தொலைக்காட்சி பெட்டி, மகிழுந்து, குளிர்சாதனப் பெட்டி, இருசக்கர வாகனம், குளிர் பானங்கள்)
4. இடைவினைப் பண்டங்கள் (பெயிண்ட், பிளைவுட், பைப் மற்றும் குழாய்கள், துணைப் பொருட்கள் போன்றவை)

## இரும்பு எஃகுத் தொழில் (Steel Industry)

- இரும்பு எஃகுத் தொழில்கள் உற்பத்தி, சுரங்கத் தொழில், கட்டுமானம், மின்சாரம், போக்குவரத்து போன்ற பல தொழில்களுக்கு உள்ளீடு பொருட்களை வழங்குவதன் மூலம் எல்லாத் தொழில்களுக்கும் திறவு கோலாகவும் தாய்த் தொழிலாகவும் விளங்குகிறது. பொதுத்துறை நிர்வாகங்களில் காணப்படும் திறமையற்ற மேலாண்மை மற்றும் தொழில் நுட்பவாதிகளைவிட அதிகாரிகளின் ஆதிக்கம் ஆகியவை இத்தொழிலின் நிலவும் மிகப்பெரிய பிரச்சனைகள் ஆகும்.
- இந்திய இரும்பு எஃகுத் தொழில் நிறுவனம் (Steel Authority of India – SAIL) நிறுவப்பெற்றது. இதன் முக்கியப் பணிகள் மூலப்பொருட்களைப் பெற உதவி செய்வதும் மற்றும் இரும்பு எஃகு தொழில்களின் வளர்ச்சிக்கு ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவதும் ஆகும். 1992 ஆம் ஆண்டு விலை மற்றும் பகிர்மானக் கட்டுப்பாட்டை இந்நிறுவனம் விலக்கியது ஒரு மிகப்பெரிய கொள்கை சீர்திருத்தம் எனலாம்.
- 1951 ஆம் ஆண்டு 7 மில்லியன் டன்னாக இருந்த இரும்பு எஃகு தொழில் உற்பத்தி ஏறத்தாழ 57 மடங்கு உயர்ந்து 2004-05 ஆம் ஆண்டுகளில் 40 மில்லியன் டன்னாக உயர்ந்தது.

## நெசவுத் தொழில் (Textiles)

- மொத்தத் தொழில்துறை உற்பத்தியில் 20% நெசவுத்தொழில் மூலம் கிடைக்கிறது. 20 மில்லியன் மக்கள் இதன் மூலம் வேலை பெறுகின்றனர். முதல் 5 ஆண்டுத் திட்டத்தின் போது 4755 மில்லியன் சதுர மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டது. அது முதல் இத்தொழிலில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டது. 2004-05 ஆண்டுகளில் 45378 மில்லியன் சதுர மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டது. இந்த உற்பத்தி சுதந்திரம் பெற்றது முதல் ஏறத்தாழ 10 மடங்கு உயர்ந்துள்ளது.
- மூலப்பொருள் கிடைக்காமை, உள்ளீடு பொருள்களின் விலையேற்றம், சிறு ஆலைகளின் குறைவான லாபம், நவீனமயமாக்கல் ஆகும். அதிக செலவு ஆகியன நெசவுத் தொழில் சந்திக்கும் மிக முக்கியப் பிரச்சனைகள்.

## சிமெண்ட் ஆலைத்தொழில் (Cement)

- அதிக வளர்ச்சி வாய்ப்புள்ள ஒரு மிகப்பெரிய தொழில் சிமெண்ட் ஆலைத் தொழில் ஆகும். இத்தொழில் கச்சாப் பொருள், இயந்திரங்கள், தொழில்நுட்பம் மற்றும் பெருகிவரும் தேவை ஆகியவற்றில் தன்னிறைவைப் பெற்றுள்ளது.
- உலக சிமெண்ட் உற்பத்தியில் 6 விழுக்காட்டை இந்தியா பெற்றுள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் ஆண்டுக்கு 8.4% என்ற வீதத்தில் இத்தொழில் வளர்ச்சி கண்டுள்ளது. 140.53 மில்லியன் மெட்ரிக் டன் நிறுவன திறனைப் பெற்றுள்ள நமது நாட்டில் 365 சிறு தொழிற்சாலைகளும் 120 பெரிய தொழிற்சாலைகளும் அடங்கும். தற்காலக் கொள்கைச் சீர்திருத்தங்கள் தொழிற்சாலைகளின் திறன் பயன் பாட்டினை மேலும் உயர்த்துவதாக

உள்ளது. அதிக உள்ளீட்டு செலவுகள் மற்றும் ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்பு இன்மை ஆகியன இத்தொழிலில் உள்ள பிரச்சனைகள் ஆகும்.

### சர்க்கரை ஆலைத்தொழில் (Sugar Industries)

- சர்க்கரைத் தொழில் வேளாண்மையைச் சேர்ந்த ஒரு முக்கியத் தொழிலாகும். அது பல தொழிற்சாலைகளுக்கு உள்ளீடுகளை அளிக்கிறது. உலகிலேயே அதிக அளவு சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடாக (15%) இந்தியா திகழ்கிறது. பன்னாட்டு வாணிபத்தில் இதன் பங்கு மிகவும் குறைவே ( 0.05%)
- ஆலைகளின் திறனை முழுமையாகப் பயன்படுத்தாமை, கரும்பு உற்பத்தி யாளர்களுக்கு குறைவான விலை நிர்ணயம் செய்தல், தொழில் நலிவு, தொழிற்சாலைகளை மூடுதல் ஆகியன இத்தொழில் சந்திக்கும் பிரச்சனைகள்.

### தொழிற் கொள்கைகள் (Industrial Policies)

- விடுதலைக்கு முன்னர் தொழிற்துறை மிகவும் சிறியதாக இருந்தது. விடுதலைக்குப்பின் 1948 ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்ட தொழிற் கொள்கை முதன் முதலில் தொழில் மயமாக்கலுக்கு அடிப்படை எனலாம். தொழில் மயமாக்குதலில் 1951 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட வளர்ச்சி மற்றும் ஒழுங்குபடுத்துதல் சட்டத்தினை ஒரு மிகப்பெரிய மாற்றம் எனலாம். இதன் மூலம் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களான மின்சாரம், கப்பல் கட்டுதல், தொலைத் தொடர்பு, இரும்பு எஃகு தொழில், நிலக்கரி, கனிம வளங்கள் அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டன.
- இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், தொழில் கொள்கை மற்றும் நாட்டின் வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்தியது. 1950 ஆம் ஆண்டு அரசியலமைப்பையொட்டி 1956ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தீர்மானத்தின்படி விரைவான தொழில் மயமாதலின் அடிப்படை திட்டமிடுதலும், நெறிப்படுத்தலும் உருவாக்கப்பட்டது. இதன்படி அனைத்து தொழில்களும் (அடிப்படை மற்றும் போர் தொழில்கள்) அல்லது சமூக பயன்பாடு உடைய தொழில்கள் பொதுத் துறையின் பொறுப்பிலிருந்து நல்லமுறையில் திட்டமிட்டு விரைவான வளர்ச்சியடைய செய்ய வேண்டும். அடிப்படை மற்றும் கனரகத் தொழில்கள், மூலதனப் பொருட்களை உருவாக்கும் தொழில்கள் தற்சார்பு பெறும் வகையில் முக்கியத் துறைகளில் பங்கேற்க செய்ய வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

### சுதந்திரத்திற்கு பின் தொழிற் கொள்கைகள்

தொழிற்கொள்கைத் தீர்மானங்கள் - 1948 (நோக்கம் - இறக்குமதி குறைத்தல் (Industrial Policy Resolution, 1948)

முதல் முக்கியத் தீர்மானம் 1948 இந்திய அரசால் வெளியிடப்பட்டது. இது தொழிற்சாலைகளை '4' பிரிவுகளாக பிரிக்கிறது. சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது. அதேபோல் இது தனியார் பங்களிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

**I. அரசின் முற்றுரிமை (அரசின் ஏகபோக உரிமை) (State Monopoly)**

இது மைய அரசின் ஒட்டு மொத்த உரிமையை கொண்டுள்ளது. ஆயுதங்கள், இராணுவ தளவாடங்கள் உற்பத்தி, இரயில்வே, அணுசக்தி உற்பத்தியின் கட்டுபாடுகள் இதில் உள்ளன.

**2. அடிப்படைத் தொழிற்சாலைகள்**

இது 6 துறைகளை கொண்டது அவையாவன, நிலக்கரி, இரும்பு மற்றும் உருக்கு தொழிற்சாலைகள், கப்பல் கட்டுதல், விமானங்கள் உற்பத்தி தொலைபேசி, தந்தி (Radio) நீங்கலாக மற்றும் கனிம எண்ணெய், இவை 10 ஆண்டுகள் மட்டுமே நீடிக்கும். இவைகள் தனியாருக்கு நிவாரணம் அளித்த பின் அரசுடைமையாக்கப்படும்.

**3. ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிற்சாலைகள்**

பெரும்பான்மையான மக்களுக்கு முக்கியமானதாக உள்ளதால் இவை இந்திய அரசால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அவையாவன தானியங்கிகள், கனரக இயந்திரங்கள் (Auto Mobile), இரசாயனங்கள், உரங்கள், சர்க்கரை, தாள் (Paper), சிமெண்ட், பருத்தி, கம்பளி.

**4. தனியார் தொழிற்சாலைகள்**

இது கடைசி பிரிவு, மற்ற தொழிற்சாலைகள் (மேல் குறிப்பிடப்படாதவைகள்) இதில் அடங்கும்.

## தொழில் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் 1951 (industries (Development and Regulation) Act, 1651)

இது 1948 - தொழிற்கொள்கைத் தீர்மானங்களுக்காக இயற்றப்பட்டது. இது தொழிற்சாலைகள் மேம்பாடு மற்றும் ஒழுங்குபடுத்துவதற்காக இந்திய அரசால் இயற்றப்பட்டது.

**இதன் முக்கிய நோக்கங்கள்:**

1. தொழிற்சாலை மேம்பாட்டிற்கான முக்கிய படிகளை எடுக்க வேண்டும்.
2. தொழிற்சாலை மேம்பாட்டின் நோக்கம் மற்றும் முறைகளை ஒழுங்குபடுத்த வேண்டும்.
3. பொதுமக்கள் நன்மைக்காக கையகப் படுத்தப்பட்ட தொழிற்காலைகளின் செயல்பாடு முன்னேற்றம் மற்றும் முடிவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.
4. இச்சட்டம் முதல் அட்டவணையில் உள்ள அட்டவணையிடப்பட்ட தொழிற் சாலைகளுக்கு மட்டுமே பொருந்தும்.
5. அதேபோல் அரசுடைமையான சிறு தொழிற்சாலைகள் அவற்றின் துணை அலகுகளுக்கு இச்சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்தத் தொழிற்கொள்கை தீர்மானம் 1956 (இந்திய தொழிற் சாலைகளின் மாக்னா கார்டா) (Comprehensive industrial Policy Resolution, 1956)

இந்த தொழிற் கொள்கையானது மகலனோபிஸின் வளர்ச்சி மாதிரியை அடிப்படையாக கொண்டது (Mahalanobis model of growth) இந்தியப் பொருளாதாரம் நீண்ட கால அதிக வளர்ச்சியில் அமைய கனரக தொழிற்சாலைகளின் முக்கியத்துவத்தை இந்த மாதிரி வலியுறுத்துகிறது.

1. பொதுத்துறைகள் விரிவாக்கப்பட வேண்டும்.
2. சோசியலிஸ்ட் அடிப்படையான சமூகம் வளர்ச்சியே அரசின் நோக்கம் என்று வலியுறுத்துகிறது.
3. முதன் முறையாக இந்தியத் தொழிற்சாலைகள் வகைப்படுத்துதலில் தெளிவான முடிவு எடுக்கப்பட்டது.

4. மக்களின் பயன்பாட்டு சேவைக்கான அடிப்படை மற்றும் முக்கிய தொழிற் சாலைகளில் அதிக முதலீட்டை கொண்டிருக்கும் தொழிற்சாலைகள் அரசுடமையாக்கப்பட்டது.
5. கட்டாய உரிமை வழங்கும் முறை மேலும் உறுதியாக்கப்பட்டுள்ளது. இக்கொள்கையானது பொதுத்துறை மேம்பாட்டிற்கு பாதை அமைத்தது.

தொழிற்சாலைகள் மூன்று பிரிவாக்கப்பட்டது. அவையாவன அட்டவணை A, அட்டவணை B, அட்டவணை C

- அட்டவணை A - இவை மைய அரசின் ஏகபோக உரிமையை கொண்டது.
- அட்டவணை B - இவை மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளவை.
- அட்டவணை C - தனியார் துறை (மத்திய, மாநில அரசின் உரிமை இல்லாதவை)

**அட்டவணை A (Schedule-A)**

மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள 17 தொழிற்சாலைகள் இதில் அடங்கும். இவை CPSU-Central Public Sector Undertakings (மத்திய பொதுத்துறை நிறுவனம்) என்றழைக்கப்பட்டது. பின்னர் இவை பரவலாக பொதுத்துறை நிறுவனங்கள் என்றழைக்கப்பட்டன.

அவையாவன:

- ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளவாடங்கள், அதைச்சார்ந்த பிற சாதனங்கள்
- அணுசக்தி
- இரும்பு மற்றும் உருக்கு
- கனரக இரும்பு மற்றும் உருக்கு வார்ப்புகள் (Forgings)
- கனரக தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கம் ஆகியவற்றிற்கு தேவையான இரும்பு மற்றும் உருக்கு இயந்திரங்கள், மத்திய அரசு வலியுறுத்தும் பிற அடிப்படைத் தொழிற்சாலைகளுக்கு தேவையான உற்பத்திக் கருவி.
- திரவத்தின் அழுத்த விசை (Hydraulic) மற்றும் நீராவி விசையாழிப் பொறி (Steam Turbines) போன்ற பெரிய மின் உற்பத்தி கூடம்.
- நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி
- கனிம எண்ணெய்
- இரும்புத் தாது, மாங்கனீசுத் தாது, ஜிப்சம், சல்பர் மற்றும் வைரம் உற்பத்தி.
- தாமிரம், காரீயம், துத்தநாகம் உற்பத்தி.
- அணுசக்திக்குப் பட்டியலிடப்பட்ட தாதுக்கள் (உற்பத்தி மற்றும் பயன்பாட்டின் கட்டுப்பாடுகள்)

**அட்டவணை B (Schedule-B)**

இதில் 12 தொழிற்சாலைகள் அடங்கும். இவை மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. மாநில அரசு நடவடிக்கையை எடுக்கவும் தொடர்ந்து கவனிக்கவும் செய்கிறது. மாநில அரசின் கட்டாய உரிமம் பெற்ற தனியார் துறைகளும் உள்ளன. மத்திய அரசுக்கு அட்டவணையில் வழங்கப்பட்டது போல் ஏகபோக உரிமை மாநில அரசுகளுக்கு வழங்கப்படவில்லை.

இவை மாநில அரசின் உரிமையானவை. மாநில அரசு இந்தத் தொழிற்சாலைகளின் மேம்பாட்டில் தனியாரின் பங்களிப்பை ஐந்தாண்டு திட்டங்களுக்கு உட்பட்டு திட்டம் இயற்ற ஊக்கமளித்து தேவையான வசதிகளைச் செய்து தர வேண்டும்.

**அட்டவணை B ல் உள்ளவை**

- தாதுக்கள் சலுகை விதியின் 3ம் பிரிவில் கூறப்பட்ட சிறு தாதுக்கள் தவிர்த்து அனைத்து தாதுக்களும் (Minerals Concession Rules1949)

- அலுமினியம் மற்றும் பிற (Non-ferrous) (செறிவு செய்யப்பட்ட உலோகங்கள் மற்றும் ஸ்டீல் உபகரணங்கள்)
- இயந்திர கருவிகள் (Machine tools), இரும்பு உலோகக் கலவைகள் (Ferrous alloys) மற்றும் உருக்கு கருவிகள்
- மருந்துகள் (Drugs), சாயம் (Dye-Stuff), நெகிழிகள் (Plastics) போன்றவை உற்பத்தி செய்யும் வேதியியல் தொழிற்சாலைகளுக்கு தேவையான அடிப்படை மற்றும் இடைப்பொருட்கள்.
- நோய் எதிர்ப்பு மருந்துகள் (Antibiotics) மற்றும் பிற முக்கிய மருந்துகள்

**அட்டவணை C**

உரிமம் மற்றும் தொழில் வளர்ச்சிக் கட்டுப்பாடுச் சட்டத்திற்குட்பட்டு பட்டியல் A மற்றும் Bல் விடுபட்ட தொழில் பகுதிகள் தனியார் துறைக்கு விடப்பட்டுள்ளன.

**தொழிற்கொள்கை தீர்மானத்தின் (1996) மற்ற சிறப்பியல்புகள்**

- அனைத்துப் பட்டியல் B மற்றும் Cயில் உள்ள தொழிற்சாலை பெரும்பாலும் கட்டாயஉரிமம்பெறும்தொழிற்காலைகள் ஆயின. இதனால் இந்தியாவில் உரிம அரசு (licence Raj) தொழிற்கொள்கை உருவானது.
- தொழில் வளர்ச்சிக்குப் பொதுத் துறை கனரகத் தொழிற்சாலைகள் காரணமாயின.
- பிராந்திய ஏற்றத் தாழ்வுகளைப் போக்க பின் தங்கிய பகுதிகளில் பொதுத்துறை நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
- வளர்ச்சியில் சிறு தொழிற்சாலைகள் மற்றும் வோளாண்மைத் துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

**ஹசாரி குழு (1967): ஏக போக உரிமை விசாரணை ஆணையம் (Hazari Committee)**

இவ்வாணையம் தொழில் உரிமம் பெறுதல் மற்றும் உரிமம் அளிக்கும் அமைப்புகளை ஆராய்ந்து முறையாக உரிமம் வழங்கும். பெரிய தொழில் நிறுவனங்கள் மட்டும் அதிகப்படியான உரிமங்களைப் பெற்று இவை அவைகளின் தகுதிக்கு மீறி கடனால் பாதிக்கப்படுகின்ற நிறுவனங்களை அடையாளம் காண்கின்றன. அவைகளின் சொத்துக்கள், வங்கி மற்றும் அரசினால் பறிமுதல் செய்யப்படுகின்றன.

Dr.R.மு.ஹசாரி (Hazeri), திட்ட குழுவினால் உரிமம் வழங்கும் முறையை மறு ஆய்வு செய்து ஆலோசனை வழங்க அமர்த்தப்பட்டார். இவர் தனது அறிக்கையை 1967ல் சமர்பித்தார்.

**தத் குழு (1969) (Dutt Committee)**

திரு.சுபிமால் தத் (Subimal Dutt) தலைமையில் தொழிற்சாலைகளின் உரிமக் கொள்கையின் மற்றுமொரு விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இது தத் குழு என்று அழைக்கப்பட்டது.

**தத் குழுவின் பரிந்துரைகள்:**

- பெரும் தொழிற்குழுமங்களுக்கு, முதன்மை மற்றும் பெரும் முதலீட்டு நிறுவனங்கள் அமைப்பதற்கு மட்டும் உரிமம் வழங்க வேண்டும்.
- தொழிற் உரிமம் கொள்கையை மறு ஒருங்கிணைப்பு செய்ய வேண்டும்.
- பெரும் நிறுவனம் மற்றும் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் ஏகபோக உரிமையை கையாள, ஏகபோக உரிமை ஆணையம் அமைக்கப்பட வேண்டும்.
- தொழிற்சாலைகளை முதன்மை துறைகள், பிற முதன்மை துறைகள்,

ஒதுக்கீடு துறைகள் என்று வகைப்படுத்த வேண்டும்.

- வர்த்தகத்தில் ஏகபோக உரிமையைத் தடுக்கும் சட்டம் (MRTP) 1969 ஆண்டு ll; குழுவின் பரிந்துரையால் உருவாக்கப்பட்டது.

**MRTP - சட்டம் 1969:**

வர்த்தகத்தில் ஏகபோக உரிமையை தடுக்கும் சட்டம் (Monopolistic and Restrictive Trade Practices Act 1969)

- பொருளாதார அமைப்பில் ஒரு சிலரிடம் மட்டும் பொருளாதார வலிமை குழுமி இருப்பதை தடுப்பதை உறுதி செய்யவும்.
- வர்த்தகத்தில் ஏகபோக உரிமையை தடுக்கும் சட்டமானது பொருளாதார சக்திகள், வர்த்தகம். நுகர்வோரின் விருப்பம் ஆகியவற்றில் ஏகபோக உரிமை கொள்வதை தடை செய்கிறது.

**வர்த்தகத்தில் ஏகபோக உரிமைமுறை**

**(Monopolies trade practices)**

வர்த்தகத்தில் ஏகபோக உரிமை என்பது பொருட்கள் மற்றும் சேவையில் உற்பத்தி மற்றும் சந்தை படுத்துதலில் பிற போட்டியாளர்களை வெளியேற்றிவிட்டு, சந்தையின் மீது ஒட்டுமொத்த கட்டுப்பாட்டைச் செலுத்துவதாகும். காரணம் இன்றி விலை ஏற்றம், சந்தையில் போட்டிகளை குறைத்தல் அல்லது தடுத்தல், தொழில்நுட்ப வளர்ச்சியை எடுத்தல்,பொருட்களின் தரத்தைநிர்ணயித்தல், முறையற்ற வியாபாரம் இவையே வர்த்தகத்தில் ஏகபோக உரிமைமுறை எனப்படும்.

**அந்நியச் செலவாணி ஒழுங்குமுறை சட்டம் 1973**

**(FERA-Foreign Exchange Regulation Act 1973)**

முன்னர் இயற்றப்பட்ட சட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தவும், தடைகளை நீக்கவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. FERA பொருளாதார வீழ்ச்சியில் இருந்து காக்கவும், ஒழுங்குபடுத்தவும் இயற்றப்பட்டது. இதில் மிகவும் கடுமையான விதிகள் உள்ளன. இதை மீறும் போது (அ) குற்றம் விளைவிக்கும் போது FERA மூலம் சிறை தண்டனை விதிக்கப்படும்.

**தொழில்துறைக் கொள்கை அறிக்கை 1977 (Industrial Policy Statement)**

- ஜனதா அரசு இதனை அறிவித்தது. இந்தக் கொள்கையானது கிராம தொழில்கள், சிறு மற்றும் குடிசைத் தொழில்களை மறுவரையறை செய்தது. சிறு தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை 180இல் இருந்து 500 ஆக ஒதுக்கீடு செய்தது (விரிவடையச் செய்தது)
- முதல் முறையாக சிறிய அலகு (Tiny unit) விவரிக்கப்பட்டது. 50,000 (1971 சென்செஸ்)க்கும் குறைவான மக்கள் தொகை உள்ள கிராமம் மற்றும் நகரங்களில், ரூ.1 லட்சத்துக்கும் குறைவான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் முதலீடு கொண்டது.
- இக்கொள்கையானது (Industrial Policy Statement) வேளாண்மைத்துறை மற்றும் தொழிற்துறைக்கு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியது. மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

**மகாரத்னா:**

1. பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
2. கோல் இந்தியா லிமிடெட்
3. கெயில் இந்தியா லிமிடெட்
4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்
5. என்.டி.பி.சி லிமிடெட்
6. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கார்ப்பரேஷன் லிமிடெட்
7. ஸ்டீல் அதாரிடி ஆப் இந்தியா லிட்

**நவரத்னா**

1. பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்
2. பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்
3. இந்தியா லிமிடெட் கொள்கலன் கார்ப்பரேஷன்
4. பொறியாளர்கள் இந்தியா லிமிடெட்
5. இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷ ன் லிமிடெட்
6. மகாநகர் டெலிகாம் நிகம் லிமிடெட்
7. தேசிய அலுமினிய கம்பெனி லிமிடெட்
8. தேசிய கட்டிடங்கள் கார்ப்பரேஷன் லிமிடெட்
9. என்.எம்.டி.சி லிமிடெட்
10. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன்
11. இந்திய எண்ணெய் நிறுவனம்
12. பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
13. இந்திய லிமிடெட் பவர் கிரிட் கார்ப்பரேஷ ன்
14. ராஷ்டிரிய இஷ்பத் நிகாம் லிமிடெட்
15. இந்தியா லிமிடெட் கப்பல் கூட்டுதாபனம்

**மினிரத்னா தரம் - I**

1. இந்திய விமான ஆணையம்
2. ஆன்ட்ரிக்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
3. பாமடர் லாவ்ரி மற்றும் கோ லிமிடெட்
4. பாரத் சமையல் நிலக்கரி லிமிடெட்
5. பாரத் டைனமிக்ஸ் லிமிடெட்
6. BEML லிமிடெட்
7. பாரத் சஞ்சதர் நிகாம் லிமிடெட்
8. பாலம் மற்றம் கூரை நிறுவனம் (இந்தியா) லிமிடெட்
9. மத்திய கிடங்கு கழகம்
10. மத்திய நிலக்கரி சுரங்க லிமிடெட்
11. சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன்
12. காமராஜர் போர்ட் லிமிடெட்
13. கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் லிமிடெட்
14. கோவா ஷிப்யார்ட் லிமிடெட்
15. ஹிந்துஸ்தான் காப்பர் லிமிடெட்
16. எச்.எல்.எல் லைப் கோ லிமிடெட்
17. இந்துஸ்தான் செய்தித்தாள் லிமிடெட்
18. இந்துஸ்தான் பேப்பர் கார்ப்பரேஷன் லிமிடெட்
19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் லிமிடெட்
20. இந்தியா சுற்றுலா வளர்ச்சி கழகம்
21. இந்திய அரிய பூமிகள் லிமிடெட்
22. இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம்
23. இந்தியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாடு முகமை லிமிடெட்
24. இந்தியா வர்த்தக மேம்பாட்டு அமைப்பு
25. IRCON சர்வதேச லிமிடெட்
26. KIOCL லிமிடெட்
27. மஜ்தூர் கப்பல்துறை லிமிடெட்
28. மகாநதி நிலக்கரி சுரங்க லிமிடெட்
29. தாது (இந்தியா லிமிடெட்) மாங்கனீசு
30. மங்களூர் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் மற்றும் பெட்ரோலிய லிமிடெட்
31. மிஸ்ரா தத்த நிகாம் லிமிடெட்
32. எம்எம்டிசி லிமிடெட்
33. MSTC லிமிடெட்
34. தேசிய பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
35. தேசிய விதை கழகம்
36. என்.எச். பி.சி லிமிடெட்
37. வடக்கு நிலக்கரி சுரங்க லிமிடெட்
38. வடகிழக்கு எலக்ட்ரிக் பவர் கார்ப்பரேஷன் லிமிடெட்
39. நுமாலிகார் சுத்திகரிப்பு லிமிடெட்

40. ONGC விஷ் லிமிடெட்
41. பவன் ஹன்ஸ் ஹெலிகாப்டர்கள் லிமிடெட்
42. திட்டங்கள் மற்றும் மேம்பாட்டு இந்தியா லிமிடெட்
43. ரயில் விகாஸ் ரெயிடெல் கார்ப்பரேஷன்
44. ரயில் விகாஸ் நிகாம் லிமிடெட்
45. ராஷ்ட்ரிய கெமிக்கல்ஸ் மற்றும் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
46. ரைட்ஸ் லிமிடெட்
47. SJVN லிமிடெட்
48. தென் கிழக்கு நிலக்கரி சுரங்க் லிமிடெட்
49. இந்தியா லிமிடெட் அரச வர்த்தகம்
50. இந்தியா தொலைத்தொடர்பு ஆலோசர்கள் லிமிடெட்
51. THDC இந்தியா லிமிடெட்
52. மேற்கத்திய நிலக்கரி சுரங்க லிமிடெட்
53. WAPCOS லிமிடெட்
54. மினிரத்னா தரம் - II
55. பாரத் பம்ப்ஸ் மற்றும் அமுக்கிகள் லிமிடெட்
56. ஒளிபரப்புப் பொறியியல் ஆலோசகர்கள் லிமிடெட்
57. மத்திய சுரங்க திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு நிறுவனம்
58. மத்திய ரயில் கிடங்கு கம்பெனி லிமிடெட்
59. Ed.CIL. இந்தியா லிமிடெட்
60. பொறியியல் திட்டங்கள் (இந்தியா) லிமிடெட்
61. ஆரவல்லி ஜிப்சம் மற்றும் மினரல்ஸ் இந்தியா லிமிடெட்
62. ஃபெரோ ஸ்க்ரேப் நிகாம் லிமிடெட்
63. HMT சர்வதேச லிமிடெட்
64. HSCC இந்தியா லிமிடெட்
65. இந்திய மருந்துகள் மற்றும் மருந்துகள் கார்ப்ரேஷன் லிமிடெட்
66. மேகோன் லிமிடெட்
67. மினரல் எக்ஸ்ப்லரேஷன் கார்ப்பரேஷன் லிமிடெட்
68. தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம்
69. தேசிய சிறு தொழில் கழகம் லிமிடெட்
70. பி.இ.சி. லிமிடெட்
71. ராஜஸ்தான் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கருவிகள் லிமிடெட்

அவை ரூ.5,000 கோடி வரை இயக்குநர் குழுவால் முதலீடு முடிவு செய்ய வேண்டும். முன்னர் இது ரூ.1,000 கோடியாக இருந்தது. இதற்கு அரசின் அனுமதி தேவையில்லை. மேலும் தற்போது அவை முதலீட்டு திட்டத்தில் 15 சதவிகிதம் வரை அரசின் அனுமதியின்றி முதலீடு செய்யலாம். ஆனால் அது 5,000 கோடி என்ற அளவை தாண்டக்கூடாது.

குறு, சிறு மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்கள் மற்றும் குடிசைத் தொழில்கள்.

மைய முகமையாக சிறு மற்றும் நடுத்தர அமைப்புகளை அரசு உருவாக்க வேண்டும் என்பது உலகம் முழுவதும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாக உள்ளது. அரசு ஒருங்கிணைந்து மேற்பார்வையிட்டு இத்துறையை வளர்க்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு பல நாடுகளில் உள்ளது.

- ▶ இந்தியப் பொருளாதாரத்தில் மொத்தத் தொழிற்சாலைகள் பங்கில் 40 சதவிகிதம் பங்கு வகிக்கின்றன. இவை வருடாவருடம் வேகமாக வளர்ச்சி அடைகின்றன. ஒவ்வொரு திட்டக் காலங்களிலும் வெளிநாட்டு நிறுவனங்கள் 40% வரை அந்நிய முதலீட்டை குறைக்க வேண்டும். 1973

FERA இந்நிறுவனங்களை இந்திய நிறுவனங்களுக்கு சமமாக கருத வேண்டும் என வலியுறுத்தியது.

- கோகோ கோலா, IBM ஆகிய பன்னாட்டு நிறுவனங்களை இந்தியாவில் இருந்து ஜார்ஜ் பெர்ணான்டஸ் (தொழிற்துறை அமைச்சர்) வெளியேற்றினார்.

### தொழிற்கொள்கை தீர்மானங்கள்

**(Industrial Policy Resolution 1980)**

ஜுலை 1980 ஆம் ஆண்டு மீண்டும் காங்கிரஸ் ஆட்சிக்குப்பின் புதிய தொழிற்கொள்கை அறிவிக்கப்பட்டது. பொருளாதார உள்கட்டுமானங்களை வலிமைப்படுத்த பொதுத்துறை மீது நம்பிக்கை வைக்கப்பட்டது. இதற்கு காரணம் அதன் நம்பிக்கையும், அதிக முதலீடும் மேலும் கூடுதலான கால அளவுமே காரணம்.

### தொழிற்கொள்கை (1988) (இராஜீவ் காந்தி அரசின் கொள்கை)

**(Industrial Policy)**

வளர்ச்சி மையங்கள் பின்தங்கிய மாவட்டங்களில் வளர்ச்சிக்குத் தேவையான கட்டுமானங்களை அளிக்க வேண்டும் (தொலைத்தொடர்பு, மின்சாரம், தண்ணீர்)

உற்பத்தியாளர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. பரவலான காப்பு (Broad Banding) தொடர்ந்து மாறி கொண்டிருக்கும் தேவைக்கு ஏற்ப உற்பத்தியாளர்கள், உப பொருட்கள் உற்பத்தியை உச்ச நிலைக்கு அதிகரிக்க தனியாக உரிமம் பெற தேவையில்லை. தங்களது தகுதிகளை உயர்த்திக்கொள்ள சுதந்திரம் வழங்கப்பட்டது.

### புதிய தொழிற்கொள்கை 1991

**(New Industrial Policy - 1991)**

நேரு காலங்களில் இருந்து வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் தொழிற்சாலைகளின் குறைகளை நீக்குவதற்கும் குறைபாடுகளை களைவதற்கும் இது ஏற்படுத்தப்பட்டது. இது 5 பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது.

1. தொழில் உரிமக் கொள்கை
2. வெளிநாட்டு முதலீடு
3. வெளிநாட்டு தொழில்நுட்ப உடன்படிக்கை
4. பொதுத்துறை
5. MRTP ACT (வர்த்தகத்தில் ஏகபோக உரிமையை தடுக்கும் சட்டம்

### தொழில் உரிமக் கொள்கை

தொழில் உரிமம் முறையை இது முற்றிலும் தடைசெய்கிறது. ஆயினும் அவை பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவம் சமூகக் காரணங்கள், தீங்கு விளைவிக்கும் வேதிப்பொருட்கள், சுற்றுச்சூழல் காரணங்கள், பெரும் பணக்காரர்கள் பயன்படுத்தும் பொருட்கள் ஆகியவை விலக்கு அளிக்கப்பட்டவை ஆகும்.

1. ஆயுதங்கள், ஆயுத தளவாடங்கள், பாதுகாப்பு உபகரணங்கள், இராணுவ விமானங்கள் மற்றும் கப்பல்கள்
2. அணுசக்தி
3. நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி
4. கனிம எண்ணெய்
5. இரும்பு மாங்கனீசு, குரோமியம், ஜிப்சம், சல்பர், தங்கம், வைரம் ஆகிய தாதுக்களை வெட்டி எடுத்தல்
6. தாமிரம், காரீயம், துத்தநாகம், டின், மாலிப்டினம், வோல்ஃரேம் தாதுக்கள் வெட்டி எடுத்தல்
7. அணுசக்திப் பட்டியல் இடப்பட்ட தாதுக்கள் (உற்பத்தி மற்றும் பயன்பாட்டு கட்டுப்பாடுகள் ஆணை 1959)
8. புகைவண்டிப் போக்குவரத்து

**முதலீடுகள்**

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அனுமதிக்க இரண்டு சிறப்பு அதிகாரங்களை கொண்ட அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

1. வெளிநாட்டு முதலீடுகள் வளர்ச்சிக் குழு (Foreign investment Promotion Board)
2. வெளிநாட்டு முதலீடுகளைச் செயல்படுத்தும் அமைப்பு (Foreign Investment Implementation Authority)

**வெளிநாட்டு முதலீடுகளை மேம்படுத்தும் அமைப்பு (Foreign Investment Promotion Board)**

- இது ஒரு அரசு அமைப்பு, இந்தியாவில் ஒற்றைச் சாரள முறையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அனுமதிக்கிறது. நேரடியாக அனுமதிக்கப்படாத துறைகளுக்கு அனுமதி வழங்குகிறது.
- பல்வேறு அமைச்சகங்களின் செயலாளர்கள் இடம்பெறுவர். தலைமைச் செயலாளர், நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரத்துறையில் இருந்து இடம் பெறுவார். அனைத்து அமைச்சகங்களாலும் ஆலோசித்து முடிவெடுக்கப்படும். மேலும் நேரடி வெளிநாட்டு முதலீட்டின் உச்சவரம்பை அதிகரிப்பது அல்லது குறைப்பது பற்றி முடிவெடுக்கும் அந்நிய நேரடி முதலீட்டின் அளவு, நிதி ஆதாரம் மற்றும் இதரத் தேவையான அனுமதிகளை தொடர்ச்சியாகப் பரிசீலித்து அனுமதி வழங்கும்.
- இவ்வமைப்பிற்கு ரூ.1200 கோடி வரையிலான முதலீட்டில் மட்டுமே முடிவு எடுக்கும் அதிகாரம் நிதி அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது. ரூ.1200 கோடிக்கு மேல் உள்ள முதலீடுகள் குறித்து பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழுவே முடிவு எடுக்கும்.
- அரசின் நேரடி முதலீட்டு கொள்கையில் வெளிநாட்டு முதலீட்டு வளர்ச்சி குழு (FIPB), ஒரு முக்கியமான நிர்வாக மற்றும் செயல்படுத்தும் அமைப்பாகும். இவ்வமைப்பு இந்தியாவில் வேகமாக மற்றும் ஒளிவுமறைவற்ற முறையில் அந்நிய நேரடி முதலீட்டு விண்ணப்பங்கள் பற்றிய விளக்கங்களையும் அனுமதியையும் வழங்குகின்றது. சந்தேகங்கள், குழப்பங்கள் மற்றும் தடைகளைத் தீர்த்து முதலீட்டாளர்களுக்கு சாதகமான நடவடிக்கையில் ஈடுபடுகின்றது.

**வெளிநாட்டு முதலீடு செயல்படுத்தும் அமைப்பு: (Foreign Investment Implementation Agency FIIA)**

இது 1999 ஆண்டு அமைக்கப்பட்டது. நேரடி முதலீடுகள் தொடர்பான அனுமதிகளை ஒரே இடத்தில் விரைவாகச் செயல்படுத்த முனைகிறது. இது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அனுமதி மற்றும் நடைமுறைப்படுத்துவதில் உள்ள பல்வேறு பாதகங்களை களைவதற்கு உதவுகிறது. பிரச்சனைகளுக்கு தீர்வு தரும் அரசு முகவராக செயல்படுகிறது.

**MRTP Act 1969:**

MRTP சட்டம், திருத்தப்பட்டு அதில் நிறுவனங்கள் நிர்வகிக்கும் சொத்தின் உச்சவரம்பு நீக்கப்பட்டது. நிறுவனங்கள் இணைப்பு, விஸ்த்தரிப்பு, இயக்குனர்களை நியமித்தல் ஆகியவற்றில் மத்திய

அரசிடம் அனுமதி வாங்க வேண்டும் என்ற சட்டம் நீக்கப்பட்டது. MRTP நிறுவனங்களுக்கு உச்சவரம்பு 100 கோடி என நிர்ணயிக்கப்பட்டது.

### இந்தியப் பொதுத்துறை நிறுவனங்கள்

நிறுவனங்களில் 51%க்கும் மேல் உரிமை அல்லது அதற்கு மேல் அரசு பங்கு வகிக்கும் நிறுவனங்களே பொதுத்துறை நிறுவனங்கள் எனப்பட்டன. பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகம் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும். இது மத்திய அரசோ அல்லது மாநில அரசாகவோ இருக்கலாம். 1947க்கு முன்னர் பொதுத்துறை நிறுவனங்கள் என்பன இந்தியப் பொருளாதாரத்தில் இல்லவே இல்லை. ஒரு சில அரசு நிர்வகித்த நிறுவனங்களே இருந்தன. அவை இரயில்வே, தபால் மற்றும் தந்தி துறைமுகப் பொறுப்புக் கழகம், வளமான உற்பத்தி மற்றும் உப்பு உற்பத்தி நிறுவனங்கள் ஆகும். 1956 ஆம் ஆண்டு தொழிற் கொள்கை தீர்மானம் மற்றும் சமத்துவ பொருளாதார முறையை ஏற்றுக் கொண்டது.

பாதுகாப்பு, உயர் தொழில் நுட்பம் தேவையான உள்கட்டமைப்பு, அரசுத்துறை முதலீடு, அட்டவணைக்கு மறுபார்வை போன்ற காரணங்களால் பொதுத் துறைக்கு பெரும் விரிவாக்கம் ஏற்பட்டது. மறுபரிசீலனையில் பொது துறைக்கு அதிக முதலீடு தேவைப்படுகிறது என்பது உணரப்பட்டது. தொடர்ந்து நொடிந்த நிலையில் உள்ள பொதுத் துறை நிறுவனங்களை, தொழில் மற்றும் நிதி மறு சீரமைப்பு குழு (Board for industrial and Financial Reconstruction) முடிவுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன. அரசுத் துறை நிறுவனக் குழுவுக்கு அதிக அதிகாரங்கள் மற்றும் நிபுணத்துவ மேலாண்மை அளிக்க அரசு வாக்களித்துள்ளது.

### மகாரத்னா, நவரத்னா மற்றும் மினி ரத்னா பொதுத்துறை நிறுவனங்கள்

மகாரத்னா, நவரத்னா மற்றும் மினிரத்னா தகுதி நிலையானது பொதுத்துறை நிறுவனங்களின் அரசுத் துறையால் (Department of Public Enterprises) அளிக்கிறது. இந்த மதிப்பு மிக்க பட்டமானது அந்நிறுவனங்களுக்கு அதிகப் பட்ச தன்னாட்சியையும், உலகச் சந்தையில் போட்டியிடவும் உதவுகின்றது.

**மகாரத்னா:**

ஒரு நிறுவனம் மகாரத்னா நிலையைப் பெற செபியின் (SEBI) முறைப்படுத்தல்களுக்கு உட்பட்டு இந்தியப் பங்கு மாற்று சந்தையில் பட்டியலிடப்பட்டு இருக்க வேண்டும். கடந்த மூன்றாண்டுகளில் சராசரி வருட வருமானம் ரூ.25,000 கோடிக்கு மேல் இருக்க வேண்டும். கடந்த மூன்றாண்டுகளில் வரிக்குப் பின்பான சராசரி இலாபம் ரூ.5,000 கோடிக்கு அதிகமாக இருக்க வேண்டும்.

நிறுவனத்தின் சராசரி நிகர மதிப்பு ரூ.15,000 கோடியாக இருக்க வேண்டும். மகாரத்னா நிலையானது அந்நிறுவனங்கள் உலக சந்தையில் பெருநிறுவனமாக உயர உதவுகிறது. சிறப்பான வளர்ச்சி விகிதம் பெற்றுள்ளன.

- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சி சட்டம் (2006) (MSMED சட்டம் 2006) இதனை இரண்டாவது வகைப்படுத்துகிறது.

### உற்பத்தி நிறுவனங்கள்

**(Manufacturing enterprises)**

தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1951ன் கீழ் முதல் பட்டியலில் உள்ள பொருட்களை

தயாரிப்பு அல்லது உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் உற்பத்தி நிறுவனங்கள் எனப்படும். இவை தொழிற்கூடங்கள் மற்றும் இயந்திரங்களுக்கான முதலீட்டின் அளவைப் பொறுத்து வரையறுக்கப்படுகின்றன.

**சேவை நிறுவனங்கள் (Service enterprises)**

சேவை அளிக்கும் நிறுவனங்கள் சேவை நிறுவனங்கள் எனப்படும். இவை இயந்திரங்களுக்கான முதலீட்டின் படியே வரையறுக்கப்படுகின்றன.

**அரசுடைமை நிறுவனங்களின் வகைப்பாடு**

1. அரசுப் பொதுத்துறை நிறுவனங்கள் (Public sector Enterprises)
2. மத்திய அரசுப் பொதுத்துறை நிறுவனங்கள் (Central Public Sector Enterprises, CPSE)
3. பொதுத்துறை வங்கிகள் (Public Sector Bank (PSB))
4. மத்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் (CPSE), முக்கியத்துவம் மற்றும் முக்கியம் குறைவான நிறுவனங்களாக இருவகைப்படுத்துகிறது.

**முக்கிய நிறுவனங்கள்**

- இராணுவ ஆயுதங்கள், தளவாடங்கள், உப கருவிகள், போர் விமானங்கள் மற்றும் போர்க் கப்பல்கள்.
- அணுசக்தி (அணுசக்தி நிலையங்கள் நிர்வகிப்பது), கதிர்வீச்சின் பயன்பாடுகள், விவசாயம் மற்றும் மருத்துவத்தில் பயன்படும் ரேடியோ ஐசோடோப்புகள் ஆகியவை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- இரயில் போக்குவரத்து
- நிறுவனங்கள் சட்டம் 1956, பிரிவு 25யின் கீழ் பொதுத்துறை நிறுவனங்களில் வணிகம், கலை, அறிவியல், மதம், சேவை மற்றும் பிற பயனுள்ள வழிகளில் லாபம் நோக்கம் இன்றி செயல்படும் நிறுவனங்கள் லாபம் நோக்கம் அற்ற நிறுவனங்கள் (Non Profit Companies) என்று அழைக்கப்படுகிறது.

**மத்தியப் பொதுத்துறை நிறுவனங்களின் நோக்கம்**

**(Objectives of central public sector enterprises)**

இந்தியா போன்ற வளர்ச்சி அடையும் நாடுகளில், பொருளாதார மேம்பாட்டு திட்டங்களில் பொதுத்துறை நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவையாவன

1. உள்கட்டமைப்பை உருவாக்க மற்றும் மேம்படுத்த
2. வலிமையானத் தொழிற்சாலை கட்டமைப்பை ஏற்படுத்த (Industrial Base)
3. பொருளாதார மேம்பாட்டிற்கு தேவையான வளங்களை ஏற்படுத்துதல், அளவு ஒதுக்கீடு செய்தல்
4. நடுநிலையான பிராந்திய வளர்ச்சியை உறுதிப்படுத்துதல்
5. வருமான ஏற்றத்தாழ்வைக் குறைத்தல்

**நலிவடைந்த நிறுவனங்கள் சட்டம் 1985**

**(Sick Industries Act 1985)**

- நலிவடைந்த நிறுவனங்கள் எனப்படுபவை (குறைந்தது 5 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் நிறுவனங்கள்) ஏதாவது ஒரு நிதி ஆண்டின் இறுதியில் மொத்தம் அல்லது நிகர நஷ்டம் அந்நிறுவனத்தின் மொத்த முதலீடு மதிப்பை விட அதிகமாக இருக்கும் நிறுவனங்கள் ஆகும்.
- மேலும், இவை ஏதாவது ஒரு நிதி ஆண்டின் இறுதியில் மொத்த நஷ்டம்,

அவற்றின் மொத்த மதிப்பில் 50 சதவிகிதம் அல்லது அதற்கு மேல் இருக்கும் போது, அடுத்தடுத்த 4 நிதி ஆண்டுகளின் கடன் பெற்றவர்களிடம் திருப்பி கடன் செலுத்தாத நிலையில் உள்ள நிறுவனங்கள் ஆகும்.

**SICA வின் நோக்கம்**

1. நலிவடைந்த நிறுவனங்களை காலத்தே கண்டறிய வேண்டும்.
2. சிறந்த நிர்வாக குழுவை அமைத்து நலிவடைந்த நிறுவனங்களை விரைவாகக் காத்தல், மறுசீரமைப்புச் செய்தல் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப முடிவு செய்தல்.
3. தொழிற்சாலைகள் மற்றும் நிதி மறுசீரமைப்பு அமைப்பு (BIFR) இச்சட்டப்படி நிதி அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.
4. தொழிற்சாலைகள் மற்றும் நிதி மறுசீரமைப்பு மேல்முறையீட்டு அமைப்பு (AAIFR)

தொழிற்சாலை மற்றும் நிதி மறுசீரமைப்புக் குழு (Board for industrial and Financial Reconstruction - BIFR) - உயர்மட்டக் குழுவை ஏற்படுத்தி தொழிற்சாலையில் நலிவை சரி செய்கிறது.

தொழிற்சாலை மற்றும் நிதி மறுசீரமைப்பு மேல்முறையீடு ஆணையம் (Appellate Authority for industrial and Financial Reconstruction AAIFR) - BIFR ன் நடவடிக்கைகளை மேல்முறையீடு செய்யும் அமைப்பு ஆகும்.

தொழிற்சாலை மற்றும் நிதி மறுசீரமைப்புக் குழுவின் தீர்ப்பை தெரிவித்து வரும் மேல்முறையீடுகளை தொழிற்சாலை மற்றும் சீரமைப்பு ஆணையம் விசாரிக்கும்.

**திரு. பாலகிருஷ்ணா இராடி குழு 2001**
(Sri Balakrishna Erdi Panel)

1999ல் உயர்மட்ட குழு வி.பாலகிருஷ்ணா இராடி தலைமையில் உருவாக்கப்பட்டது. நலிவடைந்த நிறுவனங்களை மூடுவதற்கான தற்போதைய சட்டங்களை இக்குழு ஆய்வு செய்யும். நிறும சட்டம் மற்றும் நிர்வாகத்தில் வளர்ச்சி மற்றும் புத்தாக்க செய்ய வேண்டும். நலிவடைந்த நிறுவனம் குறித்து பின்பற்றப்பட்டு பல்வேறு சட்ட சீர்திருத்தம் சீரமைக்க ஆலோசனை தர வேண்டும்.

**முக்கிய பரிந்துரைகள்**

- SICA வை திரும்பப் பெற வேண்டும்.
- தேசிய நிறுவனங்களுக்கான சட்டத் தீர்ப்பாயம் அமைக்கப்பட வேண்டும். இது நலிவடைந்த நிறுவனங்களின் சீரமைப்பு அமைப்பின் பணிகளையும் செய்ய வேண்டும். நிறுவனங்களைக் கலைப்பதற்கு, நிறுவனங்களின் சட்டக் குழு (Company Law Board) உயர்நீதிமன்றங்களாக செயல்பட வேண்டும்.

## பொதுத்துறை நிறுவனங்களின் விற்பனைக் கொள்கை (Disinvestment Policy)

தேசிய வளங்களை முறையான வழிகளில் பயன்படுத்தவும், பொதுத்துறை நிறுவனங்களின் உற்பத்தியை பெருக்கிடவும் பொதுத்துறை அரசின் முதலீடு குறைப்பு உதவுகிறது.

**Disinvestment சிறப்பியல்புகள்:**

1. பொதுத்துறை நிறுவனங்களை நவீனப் படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
2. புதிய சொத்துக்களை உருவாக்குதல்

3. வேலை வாய்ப்பை உருவாக்குதல்
4. பொதுமக்களின் கடன்களை பெருக்காமல் இருத்தல்

**பொதுத்துறை நிறுவனங்களில் அரசின் பங்களிப்பைகுறைப்பதுதொடர்பானகுழுவின் அறிக்கை (ரெங்கராஜன் குழு அறிக்கை 1993)**

- ▶ அறிக்கையானது அதிக அளவில் அரசின் பங்களிப்பை குறைக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. 49 சதவிகிதம் வரை மட்டுமே அரசின் பங்களிப்பு இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.
- ▶ சில நிலைகளில் இது பொதுத்துறை நிறுவனங்களின் சந்தையில் உள்ள தனிப்பட்ட அடையாளம் அல்லது அதிகபட்ச பங்களிப்பு ஆகிய முக்கிய காரணங்களால் 26 சதவிகிதம் வரை குறைக்கப்பட வேண்டும். சிலநேரங்களில் 74 சதவிகிதம் வரையும் சில நிலைகளில் 100 சதவிகிதம் வரையும் அரசின் பங்களிப்பை குறைக்க வேண்டும்.

**6 அட்டவணை நிறுவனங்களில் மட்டுமே 51 சதவிகிதம் அல்லது அதற்கு மேல் அரசின் பங்களிப்பு இருக்க வேண்டும்.**

**அவையாவன:**

1. நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி
2. கனிம எண்ணெய்
3. ராணுவ ஆயுதங்கள் மற்றும் தளவாடங்கள்
4. அணுசக்தி
5. கதிர் இயக்க கனிமங்கள்
6. இரயில்வே

**பொதுத்துறை நிறுவனங்களின் விற்பனை ஆணையம் (Disinvestment commission)**

1996-ம் ஆண்டு அமைக்கப்பட்டது. 1999 ஆண்டு 58 பொதுத்துறை நிறுவனங்களில் அரசின் பங்களிப்பை இக்குழுபரிந்துரைத்தது.

இப்பரிந்துரையானது, பொது விற்பனை யிலிருந்து வணிக விற்பனையாக, நிர்வாகத்தை மாற்றம் செய்யவும் பரிந்துரைத்தது.

**பாதுகாப்பு முக்கியத்துவம் / பாதுகாப்பு முக்கியத்துவம் அல்லாத வகைப்பாடுகள்**

- ▶ இராணுவ ஆயுதங்கள், தளவாடங்கள், உப பொருட்கள், போர் விமானங்கள், போர்க்கப்பல்கள்
- ▶ அணுசக்தி மின் உற்பத்தி, கதிர்வீச்சு பயன்பாடு, விவசாயம், மருத்துவத்தில் ரேடியோ ஐசோடோப் பயன்பாடு, முக்கியம் அல்லாத தொழிற்சாலைகள் நீங்கலாக
- ▶ இரயில் போக்குவரத்து

இவை நீங்கலாக பிற பொதுத்துறை நிறுவனங்களில் முக்கிய மற்ற வகைகள்

**முக்கியமற்ற பொதுத்துறை நிறுவனங்கள்**

இவற்றில் அரசின் பங்களிப்பை 26 சதவிகிதம் வரை குறைக்க வழி செய்தது. மேலும் காலத்திற்கேற்ப குறைக்க வழிவகை செய்தது.

**தேசிய முதலீட்டு நிதி**

**(National Investment Fund)**

2005ஆண்டு உருவாக்கப்பட்டது. பொதுத்துறை நிறுவனங்களில் இருந்து பெறப்படும் அரசின் முதலீடானது தொழில் நுட்ப வல்லுநர்களால் நிர்வகிக்கப்படும். இது நிதியினை அழித்து விடாமல் பாதுகாக்கும்.

இது ஒருங்கிணைக்கப்பட்ட இந்திய நிதிக்கு (Consolidated Fund of India) வெளியில் வைத்து நிர்வகிக்கப்படும்.

**தேசிய உற்பத்தி கொள்கை (2011)**

**(National Manufacturing Policy - 2011)**

**நோக்கங்கள் (Objectives)**

- ▶ உற்பத்தி துறையின் பங்களிப்பை 2022-ம் ஆண்டு 25 சதவிகிதமாக உயர்த்துவது
- ▶ 2022-ம் ஆண்டுக்குள் 100 மில்லியன் வேலை வாய்ப்பை உருவாக்குவது
- ▶ உலக அளவில் போட்டியை சமாளிப்பது, உள்நாட்டில் மதிப்பு கூட்டுதல்
- ▶ தொழில்நுட்பம் வளர்த்தல், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத வளர்ச்சியை அடைதல்

## புதிய தொழிற்சாலை உற்பத்திக் குறியீடு:

2011-ம் ஆண்டு மத்திய புள்ளியியல், மற்றும் திட்டம் செயல்படுத்தும் அமைச்சகம் புதிய தொழிற்சாலை உற்பத்திக் குறியீடுகளை வெளியிட்டது. இது 2004-05 அடிப்படை ஆண்டாக வைத்து கணக்கிடப்படுகிறது. இந்த அடிப்படை ஆண்டானது புள்ளியியல் துறையின் நிலைக்குழுவின் பரிந்துரையின் பேரில் மாற்றி அமைக்கப்படும்.

# மூலதன உருவாக்கம்

## மூலதன உருவாக்கம்

ஒரு நாட்டில் குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் அனைத்தையும் நுகர்விற்கு பயன்படுத்தாமல் நீர்பாசனங்கள், போக்குவரத்து, தொழிற்சாலை உள்ளிட்ட முதலீடு உருவாக்கும் துறைகளில் நெறிப்படுத்துதல் மூலதன உருவாக்கம் எனப்படும்.

## மூலதனம் உருவாக்கும் மூலங்கள்

**I. நிறுவனங்கள்:**

**I. வங்கிகள்**

1. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா
2. ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி
3. ஐ.டி.பி.ஐ. வங்கி

**II. சீட்டு நிறுவனங்கள்**

1. ஸ்ரீராம் சிட்பண்ட் லிமிடெட்

**III. காப்பீடு நிறுவனங்கள்**

1. ஆயுள் காப்பீட்டு கழகம் (LIC)
2. பொது காப்பீட்டு கழகம் (GIC)

**IV. கூட்டுறவு வங்கிகள்**

1. மாநில தலைமை கூட்டுறவு வங்கி
2. மத்திய கூட்டுறவு வங்கி

**2. தனிநபர் சேமிப்பு**

சமூகத்தில் நிலக்கிழார், மருத்துவர்கள், வழக்கறிஞர் போன்றோர் சேமிக்கும் பழக்கம் உடையவர்களாக உள்ளனர்.

**3. அரசுத்துறை (ம) பொதுத்துறை நிறுவனங்கள்**

1. தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT)
2. தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் ( TIDCO)

**4. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தின் இரண்டு கூறுகள்.**

1. மொத்த உள்நாட்டு சேமிப்புகள், மூலதன உள்வரவுகள், மொத்த உள்நாட்டு நிலையான மூலதன அமைப்பு, இருப்பு மாற்றுதல்.

**மூலதனத்தைப் பெருக்கும் வழிகள்**

1. சேமிப்பை உயர்த்துதல்
2. கிராம சேமிப்பை ஊக்கப்படுத்துதல்
3. தங்க சேமிப்பை மாற்றுதல்
4. சேமிப்பு நிறுவனங்களை ஏற்படுத்துதல்
5. பாதக வணிகச் சமநிலை அளித்தல்
6. ஏற்றுமதியை அதிகப்படுத்துதல்
7. முதலீடுகளை திரட்டுதல்
8. தொழில்முனைவோருக்கு தக்க பயிற்சி

**குறைவான மூலதன உருவாக்கக் காரணங்கள்**

1. வறுமை நச்சு சூழல்
2. வெளிக்காட்டும் இயல்பு
3. குறைவான உற்பத்தித்திறன்
4. வறுமை
5. வேலையின்மை

6. வளங்கள் சரியாகப் பயன்படுத்தாமை
7. அடிப்படைக் கட்டமைப்பு குறைவு
8. மக்கள் தொகைப் பெருக்கம்
9. வரிச்சுமை
10. தலாவருமானம் / நாட்டு வருமானம் குறைவு
11. சேமிப்புக் குறைவு
12. சேமிப்பு நிறுவனங்களின் பற்றாக்குறை
13. எழுத்தறிவின்மை
14. தொழில் முனைவோர் இன்மை
15. தொழில்நுட்ப அறிவின்மை

# பொதுத்துறைகளின் பங்கு மற்றும் பங்கு விலக்கல்

- 1991 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பேரியல் பொருளாதார சீர்திருத்தங்கள், பொதுத்துறை நிறுவனங்களைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு சீரமைத்தது. இது தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் ஆகியவற்றை உள்ளடக்கியது. 1991 புதிய தொழில் கொள்கை, பங்கு விலக்கல் (Disinvestment), தனியார் மற்றும் அயல்நாட்டு மூலதனத்தை ஊக்குவித்தல் போன்றவையாகும். பொதுத்துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்பை பெருக்குதல் மற்றும் வருமானப் பகிர்வு செய்தல் என்ற நிலையிலிருந்து மாறி உச்ச இலாபத்தை நோக்கமாகக் கொண்டு செயல்படத் தொடங்கியது.

## 1991 ஆம் ஆண்டின் புதிய தொழில் கொள்கை

- ஜீலை 1991 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்ட புதிய தொழில் கொள்கையின் முக்கிய நோக்கம் தொழில் துறையில் போட்டியை ஊக்குவித்தலின் மூலம் தனியார் நிறுவனங்களை அதிக அளவு உற்பத்தியில் ஈடுபடச் செய்தலே ஆகும்.

## பொதுத்துறை நிறுவனங்களை மறுசீரமைத்தலின் சிறப்புச் சீர்திருத்தங்கள் பின்வருமாறு

1. பொதுத் துறைக்கென தொழில்துறையில் ஒதுக்கப்பட்ட பகுதிகள் 17ல் இருந்து 8 ஆக குறைக்கப்பட்டது. குறிப்பாக தொலைத் தொடர்பு, மின்சாரம், விமானப் போக்குவரத்து, பெட்ரோலியம் போன்ற துறைகள் தனியாருக்கு திறந்து விடப்பட்டன.
2. பங்கு விலக்கல் மூலம் பொதுத்துறை வளங்களைப் பெருக்குவதுடன், பொதுத் துறை நிறுவனங்களில் தனியார் பங்கேற்பையும் ஊக்குவித்தல்.
3. நலிந்த தொழில் நிறுவனங்களுக்கு மறுவாழ்வு கொடுக்கவும், மறுசீரமைக்கவும் தொழில் மற்றும் நிதி மறு கட்டமைப்புக் குழுவிற்கு (Board of Industrial Financial Reconstruction) (BIFR) பரிந்துரை செய்தல்.
4. திறன் பெற்ற பொதுத்துறை நிறுவனங்களை மட்டும் புதுப்பித்து புதிய சட்டதிட்டங்கள் மூலம் அதன் செயல்பாடுகளை மதிப்பீடு செய்தல்.

5. பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து அரசு முதலீடுகளை திரும்பப் பெறுவதன் காரணம், அரசின் நிதிச்சுமையைக் குறைப்பதே ஆகும்.
6. "ஆண்டு நிதிநிலை அறிக்கை" மூலம் நலிவடைந்த பொதுத்துறை நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் ஆதரவை படிப்படியாக விலக்கிக் கொள்ளுதல்.
7. நன்றாக செயல்படக்கூடிய பொதுத்துறை நிறுவனங்களைத் தவிர மற்றவைகளை மூடிவிடுவது.
8. 1998-99 ஆம் ஆண்டு மேலும் **இரண்டு** பொதுத்துறை நிறுவனங்கள் அகற்றப் பட்டன. மூன்று துறைகள் மட்டுமே பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்டு மற்ற அனைத்தும் தனியார் மற்றும் வெளிநாட்டு முதலீட்டிற்கு ஒதுக்கப்பட்டது.

**முதலீடு கலைப்புத்துறை (Disinvestment)**

பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதே ஆகும்.

## பொது நிறுவனங்களின் பங்கு விலக்கல் (Disinvestment of Public Enterprises)

- 1991-ம் ஆண்டு தொழில் கொள்கைக்குப் பிறகு அரசு பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு விலக்கலில் மூன்று மாதிரிகளை கையாண்டது. அவையாவன பொது வெளியீடு (Public Offer), யுக்தி அளவு (Strategic Scale) மற்றும் குறுக்கு உடைமை (Cross holding) ஆகும். 1991 ஆம் ஆண்டு அரசு 51% மேல் "யுக்தி அளவு" விற்பதற்கு முடிவு செய்தது. புதிதாக 74% முதல் 100% நிர்ணயித்துள்ளது.
- பங்கு விலக்கலின் மூலம் திரட்டப்படும் நிதியானது விருப்ப ஓய்வு பெற்றவர்களுக்கு (VRS) தொகை வழங்குதல், தொழிலாளர் பணி நீக்கத்திற்கு பயன்படுத்துதல், தொழிற் சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டோர் போன்றவர்களுக்கும் பயன்படுத்தப்படும். 1991-92 ஆம் ஆண்டு 30 பில்லியனுக்கும் மேலும், 1992-93 ஆம் ஆண்டு 35 பில்லியன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 18.6 பில்லியனும், 2002-03 ஆம் ஆண்டு வரை 300 பில்லியன் வரை பங்கு விலக்களின் மூலம் பெறப்பட்டது.

# பொருளாதார வளர்ச்சி (ம) மேம்பாடு

## பொருளாதார முன்னேற்றம்

- தேசத்தின் உண்மை நிலையிலான பொருளாதார உற்பத்தியில் ஆதாரங்களின் உயர்வின் காரணமாகவும், கல்வி மூலமாகவும், மற்றும் ஆதாரங்களின் அளவு மற்றும் நுட்ப உயர்வு காரணமாகவும் உயர்வைக் காண்பதே பொருளாதார முன்னேற்றமாகும். வேறு விதத்தில் பொருளாதாரத்தின் ஒவ்வொரு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் புள்ளிகளின் மதிப்பு கூடுவதாகும். பொருளாதார முன்னேற்றத்தை ஒரு நாட்டின் வளரும் மொத்த உள்நாட்டு உற்பத்திலிருந்தும் அறியலாம்.

## பொருளாதார வளர்ச்சி

- 1950 வரை பொருளியலாளர்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டத் தவறி விட்டனர். இருப்பினும் உள்ள வேறுபாடுகள் அவர்களுக்குத் தெரியும். 1960களில் அதற்கு பின்னும் வந்த பத்தாண்டுகளிலும் பல்வேறு நாட்டைச் சேர்ந்த பொருளியலாளர்கள் பொருளாதார முன்னேற்றம் இருப்பினும் அவர்களின் வாழ்க்கைத்தரம் அதற்கிணையாக உயர்வதைக் கண்டனர். பொருளாதார வளர்ச்சிக்கு மாற்று இலக்கணம் கூற வேண்டிய காலம் வந்தது. பொருளியாலாளர்களுக்கு வளர்ச்சி என்பது வாழ்க்கைத் தரத்தின் உயர்வேயாகும். அது கீழ்கண்ட மாற்றுக் காரணிகளைக் கொண்டே அமையும்.

1. சத்துணவின் நிலை
2. விரிவாக்கப்பட்ட மக்களைச் சென்றடையும் ஆரோக்கிய வசதிகள் - மருத்துவமனைகள், மருந்துகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர், தடுப்பு முறைகள், துப்புரவு மற்றும் பிற.
3. மக்கள் மத்தியில் கல்வியின் நிலை
4. இன்னும் பிற காரணிகளையும் வாழ்க்கைத்தரம் சார்ந்துள்ளது.

- அதிகமான பொருளாதார வளர்ச்சிக்கு அதிகமான பொருளாதார முன்னேற்றம் தேவை. அதற்காக அதிகமான பொருளாதார முன்னேற்றம் தானாகவே பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு வந்து விடும் என்று பொருளாகாது.
- நாம் மாறுபட்ட சில முன்னேற்ற வளர்ச்சி நிலையினைக் காணலாம்.

1. அதிக முன்னேற்றம் மற்றும் அதிக வளர்ச்சி
2. அதிக முன்னேற்றம் ஆனால் குறைந்த வளர்ச்சி

3. குறைந்த முன்னேற்றம் ஆனால் அதிக வளர்ச்சி

▶ பொருளாதார வளர்ச்சி என்பது அளவிலும் தரத்திலும் பொருளாதார முன்னேற்றம் பெறுவது ஆகும். பொருளாதார முன்னேற்றத்தை உரிய விதத்தில் பயன்படுத்தி வளர்ச்சி கண்டால் அது மேற்கொண்டும் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தி மேலும் பெருகும். மக்கட்தொகைக்கு வளர்ச்சியை அளிக்கும். அதைப் போலவே அதிக முன்னேற்றம் ஆனது குறைந்த வளர்ச்சி மற்றும் சரியாகக் கவனிக்காத வளர்ச்சியில் முடியுமானால் முன்னேற்றம் வீழ்ச்சியடையும்.

### பொருளாதார வளர்ச்சியும் அமைப்பு முறை மாற்றமும்

▶ கணிதவழிப் பொருளியலாளர்கள் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் அமைப்பு முறை மாற்றங்களை அளவிட முயல்கின்றனர். கீழ்வருவனவற்றை முக்கிய மாற்றங்களாகக் கொள்ளலாம்.

### மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களின் உறுப்புகள்

▶ மிகப் பொதுவாக விழுக்காட்டுப் பங்கின் வருமானம் கூடுகையில் சேமிப்பு விகிதமும் கூடுகிறது. அரசு வருவாயும் (மற்றும் செலவும்) கூடுகிறது. உணவு நுகர்ச்சி குறைகிறது. உணவில்லாத பொருட்கள் நுகர்ச்சி கூடுகிறது. பணி மற்றும் தொழிற்சாலை பிரிவுகளின் முன்னேற்றம் ஏற்பட வேளாண் பிரிவில் முன்னேற்றம் காணப்படுகிறது.

### வேலைவாய்ப்பு மாற்றங்கள்

▶ வேலை வாய்ப்பு மாற்றங்கள், உற்பத்தி மற்றும் ஆக்க வள மாற்றங்களில் பிரிக்கப்படுகிறது. உற்பத்தி குறையும் வேகத்தில் முதன்மை துறையில் உழைப்பும் உழைப்பாளரும் குறைவதில்லை. இதன் பின்னோக்கு நிலை தொழிற்சாலை வேலை இன்மை நிலையைக் காட்டுகிறது. தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் இதன் மூலம் எளிதாக பாதுகாக்கப்படுகிறது.

### ஏற்றுமதி ஒன்றிணைத்தலில் மாற்றம்

▶ வளர்ச்சி ஏற்படுகையில் பெரும் பகுதியான வருமானத்திற்கு ஏற்றுமதி பொறுப்பாவதுடன், ஏற்றுமதியின் ஒன்றிணைவால் குறிப்பிடும் படியான மாற்றம் நிகழும்.

▶ முக்கியப் பொருள் உற்பத்தியினைப் போலவே தொழில் உற்பத்தியும் இணையாகக் கூடும். இறக்குமதியும் பெருகுவதுடன், பெறுவதும் - கொடுப்பதும் சமநிலை அடையும்.

### மக்கட்தொகை விகித உயர்வு

▶ வருமானம் கூடும் போது, மக்கட்தொகை பெரும் விகிதம் குறையுமென எதிர்பார்க்கலாம். பிறப்பு விகிதம் குறை வதுடன் இறப்பு விகிதமும் குறையும். மக்கட்தொகை பெருகுவதால், முன்னேற்ற விகிதம் படிப்படியாகவே குறையும்.

### வருமானப் பகிர்வு

▶ ஆரம்பத்தில் வருமானம் சமமற்ற முறையில் பகிரப்பட்டாலும், நாளடைவில் பின்னோக்கி நகரும். இது பின்னோக்கு 'U' வடிவ ஆதாரக் கருத்தாகும். இதனை திரு. சைமன் கஸ்நட்ஸ் எடுத்துரைக்கிறார்.

| | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|
| செயற்பண்பு | பொருளியல் அமைப்பு முறை மாற்றங்கள் குறித்தது. | முன்னேற்றம் பொருளாதார உற்பத்தி உயர்வு சார்ந்தது. |
| முன்னேற்றம் | வளர்ச்சியானது மனித மூலதனக் குறியீடுகள் (உயர்வு) முன்னேற்ற நிலையில் தாழ்வு மற்றும் பொதுமக்களின் தரமான வாழ்க்கைக்கான அமைப்பு முறை மாற்றங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையது. | முன்னேற்றம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏதாவதொரு உட்கூறில் படிப்படியாக உயர்வு நுகர்வு, அரசுச் செலவு, முதலீடு, நிகர ஏற்றுமதி ஆகியவற்றோடு தொடர்புடையது. |
| சம்பந்தமானது | இது வருமானத்தில் காணப்படும் மாற்றங்களைக் குறித்துக் காட்டுவதுடன், சேமிப்பு மற்றும் முதலீட்டுடன் நாட்டின் சமூகப் பொருளாதார அமைப்பில் ஏற்படும் மாற்றங்களையும்காட்டுகிறது.(நிறுவன மற்றும் தொழில்நுட்ப மாற்றங்கள்) | சேமிப்பில் வருமானத்தை உயர்த்தி, மூலதன உயர்வு போன்று, நாட்டின் உண்மை ஆக்க ஆதாரம் மூலம் பொருட்கள் மற்றும் பணி உற்பத்தியை உயர்த்துவதை இது குறிக்கிறது. |
| அளவு | தர நிலை மனிதவளர்ச்சிக்கு குறியீடு பாலினம் தொடர்பான குறியீடு, மனித வறுமைக் குறியீடு, குழந்தைகள் இறப்பு, கற்றோர் விகிதம் போன்றவை ஆகும். | எண்ணிக்கை அளவிலான மாற்றங்களை இது கொண்டு வருகிறது. |
| விளைவு | தரம் மற்றும் எண்ணிக்கை அளவிலான மாற்றங்களைப் பொருளாதரத்தில் இது கொண்டு வருகிறது. | எண்ணிக்கை அளவிலான மாற்றங்களை இது கொண்டு வருகிறது. |
| கருத்து | நெறியுரை கருத்து | பொருளாதார முன்னேற்த்தைக் காட்டிலும் குறுகிய கருத்து |
| தொடர்பு | வளர்ந்து வரும் நாடுகளில் முன்னேற்றம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை அறிந்திட பொருளாதார வளர்ச்சி மிகவும் உயருகிறது. | குறைந்த நாடுகளில் பொருளாதாரம் வளர்ச்சிக்கும் தொடர்புடையதாகவும் உள்ளது. ஆனால் எல்லை நாடுகளிலும் இது பின்பற்றப்படுகிறது. ஏனெனில் முன்னேற்றமே வளர்ச்சியில் தேவை |

# தேசிய வருமானம்

- உலக நாடுகளில் சில நாடுகள் செல்வந்த நாடுகளாகவும் சில நாடுகள் ஏழை நாடுகளாகவும் பல நாடுகள் நடுத்தரமாகவும் உள்ளன. இவை அனைத்தும் நாட்டு வருமானத்தின் அடிப்படையிலேயே கணக்கிடப்படுகிறது.
- நாட்டு வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும். இது உற்பத்தியிலிருந்து கிடைக்கும் மொத்த வருமானம் அல்லது உற்பத்திக்காகச் செய்யப்படும் மொத்தச் செலவைக் குறிக்கும்.
- நாட்டு வருமானத்தையும் உற்பத்தியையும் அளவீடு செய்ய மொத்த நாட்டு உற்பத்தி (GNP), மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), மொத்த நாட்டு வருமானம் (GNI), நிகர நாட்டு உற்பத்தி (NNP), நிகர நாட்டு வருமானம் (NNI) ஆகியவற்றை பயன்படுத்துகிறோம். **மத்திய புள்ளியியல்** நிறுவனம் இந்தியாவில் நாட்டு வருமானத்தை கணக்கிடுகிறது.

### இந்திய தேசிய வருமானத்தின் வரலாறு:

- தேசிய வருமானக் கணக்கீடு சுதந்திரக் காலத்திற்கு முன்பிருந்தே மேற்கொள்ளப்படுகிறது. இதில் கால ஓட்டத்திற்கும் தேவைக்கும் ஏற்ப சிற்சில மாறுதல்கள் செய்யப்படுகிறது.

### சுதந்திரத்திற்கு முன்பு :

- இந்தியாவில் "வறுமை மற்றும் பிரிட்டிஷ் தன்மையல்லாத ஆட்சி" (Poverty & unbritish rule in india) என்னும் நூலை 1868-ல் தாதாபாய் நௌரோஜி எழுதினார். அந்நூலில் இந்தியர்களின் தலாவருமானம் ரூ.20 என்று கணக்கிட்டு கூறினார்.
- அதன் பிறகு கீழ்காணும் பொருளாதார அறிஞர்கள் தலா வருமானத்தைக் கணக்கீட்டனர்.

1. ஃபின்ட்லே சிராசு (1911) ரூ.49.00
2. வாடியா மற்றும் ஜோஷி (1913-14) ரூ.44.30
3. வி.கே.ஆர்.வி.ராவ் (1925-29) - ரூ.76.00

### சுதந்திரத்திற்குப் பின்பு:

- 1949-ல் தேசிய வருமானக் குழு பேராசிரியர் பி.சி.மஹலனோபிஸ் தலைமையில் அமைக்கப்பட்டது.
- 1951-ல் முதல் அறிக்கையையும், 1954-ல் இறுதி அறிக்கையையும் இக்குழு தாக்கல் செய்தது.
- 1950-51ல் இந்தியர்கள் தலா வருமானம் ரூ.246.90 என்று இக்குழு கணக்கிட்டது.
- பிறகு, மத்திய புள்ளியியல் அமைப்பு அமைக்கப்பட்டது.
- முதன் முதலில் 1948-49ல் தேசிய வருமான கணக்கீட்டை இவ்வமைப்பு மேற்கொண்டது.
- பின்பு அடிப்படை ஆண்டு 1960-61, 1970-71, 1993-94, 1999-2000, 2004-05, மற்றும் 2011-12 என ஏழு முறை மாற்றப்பட்டுள்ளது.
- 2011-12-ம் அடிப்படை ஆண்டு 2015 முதல் நடைமுறையில் உள்ளது.

### அடிப்படைக் கருத்துகள் (Basic Concepts)

**I. மொத்த நாட்டு உற்பத்தி (GNP)**

**(Gross National Product)**

- மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பை குறிக்கும். உள்நாட்டவரால் வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.
- மொத்த நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி + வெளி நாட்டிலிருந்து பெறப்படும் நிகர முதன்மை வருமானம்
- புற நாட்டிலிருந்து பெறப்படும் நிகர முதன்மை வருமானம் = நிகரத் தொழிலாளர் சன்மானம் + நிகரச் சொத்து வருமானம் மற்றும் நிகரத் தொழில் முனைவோர் வருமானம்.

**2. மொத்த உள்நாட்டு உற்பத்தி**

(GDP) (Gross Domestic Product)

- மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு வருடத்தில் அந்த நாட்டு எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பாகும். உற்பத்தி காரணிகள் அந்நாட்டு குடிமகனுக்கோ அல்லது அயல்நாட்டினருக்கோ சொந்தமாக இருக்கலாம். மொத்த உள்நாட்டு உற்பத்தி, உற்பத்திக் காரணிகள் யாருக்கு சொந்தம் என்பதைவிட வருமானம் எங்கிருந்து ஈட்டப்பட்டது என்பதைக் குறிக்கும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி = C + I + G + NX

C = நுகர்வு

I = முதலீடு

G = அரசாங்கத்தின் செலவு

Nx = நிகர ஏற்றுமதி இறக்குமதி

**3. நிகர நாட்டு உற்பத்தி (NNP)**

**(Net National Product)**

- மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானம் (Depreciation) போன்ற சிலவற்றை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும். ஒரு வருட காலத்தில் உற்பத்தி அமைப்பு மற்றும் இயந்திரங்கள் பழுதுபட்டிருக்கும். இவ்வாறு குறைவு பட்ட மூலதன சொத்துக்களின் (Capital Depreciation) மூலதனத்தின் தேய்மானம்

என்கிறோம். எனவே மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதனத் தேய்மானத்தை கழிப்பதன் மூலம் நிகர நாட்டு உற்பத்தி கிடைக்கும்.

- நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம்.

## நிகர தேசிய உற்பத்தி (NNP)

### காரணி விலை நிலையில் நிகர தேசிய உற்பத்தி (NNPfc)

தொழிற்சாலை உற்பத்தி நிலையில், பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பு கணக்கிடப்படுவதே நிகர தேசிய உற்பத்தியாகும்.

**NNPfc = NNPMP + மறைமுக வரிகள் - உதவித்தொகை**

## தலா வருமானம் (அ) தனி நபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP per head)

- தலா வருமானம் என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியை நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்கக் கிடைப்பது. தலா வருமானம் உயர்ந்தால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாகக் கருதப்படும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{நாட்டின் மொத்த மக்கள் தொகை}}$$

- மொத்த உள்நாட்டு உற்பத்தி ஒரு நாட்டின் உற்பத்தி திறனை குறிப்பதாகும். மொத்த நாட்டு உற்பத்தி (GNP) யானது ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை சுட்டிக்காட்டும்.

## அன்றாட விலை மற்றும் நிலையான விலையில் நாட்டு வருானம்

- வெளியீட்டு பண்டங்களின் மதிப்பை அன்றைய அங்காடி விலையில் கணக்கிடுவது அன்றாட விலையில் நாட்டு வருமானம் எனப்படும். அன்றாட விலையானது உண்மை மதிப்பை விட, வரி, பணவீக்கம் போன்றவற்றால் உயர்வாக இருக்க வாய்ப்பு உண்டு.
- மொத்த நாட்டு உற்பத்தி (அன்றாட விலையில்) (அ) பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி = நடப்பு ஆண்டின் மொத்த முடிவுற்ற பொருட்களின் எண்ணிக்கை × நடப்பு ஆண்டின் விலை
- ஓர் ஆண்டு காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அடிப்படை ஆண்டில் நிலவிய விலையைக் கொண்டு கணக்கீடு செய்தால் கிடைக்கப்பெறும் மதிப்பு நிலையான விலையில் கணக்கிடப்பட்ட நாட்டு வருமானம் எனப்படும். நிலையான விலை என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டில் நிலவும் விலையாகும்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி (நிலையான விலையில்) (அ) பொருளுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி
  = நடப்பு ஆண்டின் மொத்த முடிவுற்ற பொருட்களின் எண்ணிக்கை × அடிப்படை ஆண்டின் விலை

## மொத்த உள்நாட்டு உற்பத்திப் பணவாட்டி


- ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தியான மொத்த இறுதிப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை நிலவரத்தின் அளவு ஆகும்.
- இது ஒட்டுமொத்த உயர்வைக் கணக்கிட உதவுகிறது.

**மொத்த உள்நாட்டு உற்பத்தி =**

$$\frac{\text{பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{பொருளுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

## வருமான ஓட்டம் (Flow of Income)

- ▶ வருமான ஓட்டத்தை மிக எளிய முறையில் நிறுவனம் (அ) உற்பத்தியாளர் மற்றும் இல்லங்கள் (அ) நுகர்வோர் மூலம் விளக்கலாம். உற்பத்திச் சாதனங்களை (நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் தொழில் அமைப்பு) மக்கள் பெற்றிருக்கிறார்கள்.




- ▶ பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்கள் உற்பத்திக் காரணிகளை பயன்படுத்துகிறார்கள். அப்பண்டங்களும் பணிகளும் மக்களால் வாங்கப்படுகின்றன. **(உள் ஓட்டத்தை குறிக்கும்) (இது உண்மை வருமான ஓட்டம்)**

## காரணிப் பணிகளுக்கான செலவீனங்கள்

- ▶ உற்பத்திக் காரணிகளின் பணிகளைப் பயன்படுத்தியதற்காக மக்கள் காரணி வருமானத்தை வாடகை (நிலம்), உழைப்பு (கூலி), மற்றும் வட்டி (முதல்) என்ற வடிவத்தில் பெறுகின்றனர். இந்த வருமானம் மீண்டும் உற்பத்தியாளர் களுக்கு நுகர்வுச் செலவு மூலமாக போய் சேருகிறது. (வெளி ஓட்டத்தை குறிக்கும்) (இது பண வருமான ஓட்டம்)
- ▶ இவ்வாறு வருமானம் மக்களிடமிருந்து உற்பத்தியாளர்களுக்கும் உற்பத்தி யாளர்களிடமிருந்து மக்களுக்கும் சென்று கொண்டே இருப்பதற்கு வருமான ஓட்டம் என்று பெயர்.

## நாட்டு வருமான கணக்கீட்டு முறைகள் (Methods of Measuring National Income)

1. உற்பத்தி முறை (Product Method)
2. வருமான முறை (Income Method)
3. செலவினமுறை (Expenditure Method)

## நாட்டு வருமானத்தில் சில கருத்துக்கள்

- (Net National Product ) NNP = GNP- தேய்மானம்
- (Net National Income) NNI = NNP – மறைமுக வரிகள்
- PI = NNI - நிறுத்தி வைக்கப்பட்ட நிகர வருமானம், நிறுவனங்களின் வரி, பொதுக் கடனுக்கு செலுத்தப்படும் வட்டி.
- PDI = PI - தனி வரி

> - PDI-→ Personal Disposable Income – செலவிடத் தகுந்த சொந்த வருமானம்)
> - GNP-→ மொத்த நாட்டு உற்பத்தி
> - NNP -→ நிகர நாட்டு உற்பத்தி
> - NNI-→ நிகர நாட்டு வருமானம்
> - PI -→ தனி மனித வருமானம்
> - PDI-→செலவிட தகுதியான தனிமனித வருமானம்

**இந்தியாவில் நாட்டு வருமானத்தில் புள்ளி விவரங்கள் (National Income Statistics in India)**

- நாட்டு விடுதலைக்குப் பிறகு முறையான நாட்டு வருமானக் கணக்கீட்டு அமைப்பு 1960-களில் ஏற்படுத்தப்பட்டது. இந்திய நாட்டு வருமானக் கணக்கீட்டு புள்ளியியல் (NAS), அமெரிக்காவின் நாட்டு வருமான கணக்கீட்டு அமைப்பை (1968) பின்பற்றியது. நாட்டு வருமான கணக்கீட்டு குழுவின் பரிந்துரையின்படி (1954) மத்திய புள்ளியியல் அமைப்பு, புள்ளி விவரங்களின் தரத்தை உயர்த்த தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொண்டது. அடிப்படை ஆண்டை அண்மைக்கால வரிசைக்கு மாற்றியது அதன் முயற்சிகளில் ஒன்றாகும்.
- மத்திய புள்ளியியல் அமைப்பு 1970-71 அடிப்படை ஆண்டை மாற்றி நாட்டு வருமான கணக்கீட்டை மேற்கொண்டது. மேலும் உயர்த்தப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் விரிவாக்கம் மூலம் CSO அடிப்படை ஆண்டை 1980-81, 1993-94க்கும் மேலும் 1999-2000 க்கும் மாற்றியமைத்தது.

**இந்தியாவின் நாட்டு வருமான வளர்ச்சி சதவீதத்தில்**

| | நிலையான விலையில் (2011-12) | அன்றாட விலையில் |
|---|---|---|
| 2014-15 | 7.2 | 7.5 |
| 2015-16 | 7.9 | 8.0 |
| 2016-17 | 6.6 | 7.1 |
| 2017-18 | 6.1 | 6.5 |

வாய்மையே வெல்லும்

# ஊரக வளர்ச்சித் திட்டங்கள்

**1. சமூக வளர்ச்சித் திட்டம் (1952)**

- மக்கள் பங்களிப்புடன், ஊரகப் பகுதியில் அனைத்து விதமான வளர்ச்சிகளையும் ஊக்குவித்தல்.

**2. ஊரக வளர்ச்சிக்கான தேசிய நிதி (1984)**

- ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி உதவி வழங்கல்.

**3. CAPART (1986)**

- ஊரகப் பகுதிகளின் வளங்களை அதிகரிக்க உதவுதல்.

**4. பிரதம மந்திரி கிராம சதக் யோஜனா (2000)**

- குறைந்தது 500 பேர் மக்கள்தொகை கொண்ட கிராமங்களில் சாலைகள் அமைத்தல்.

**5. 20 அம்சத் திட்டம் (1975)**

- வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்.

**6. வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான திட்டம் (1973-74)**

- வறட்சியின் தாக்கத்தை குறைக்கும் பொருட்டு, பயிர் பாதுகாப்பு வழங்கல், நிலத்தின் உற்பத்திதிறனை அதிகரித்தல், போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

**7. அன்னபூர்ணா திட்டம் (2000)**

- அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்
- வயோதிகர்களுக்கு இலவச உணவு தானியங்கள் வழங்குதல்.
- பொது விநியோகத் திட்டத்தை சீரமைத்தல் மூலம், ஏழைகளுக்கு உணவு தானியங்கள் கிடைக்கச் செய்தல்.

**8. நிர்மல் கிராம புரஸ்கார் (2003 அக்டோபர்)**

- சுகாதார வசதிகளை நல்லமுறையில் செயல்படுத்தும் பஞ்சாயத்துகளை ஊக்குவிக்கும் பொருட்டு தரப்படும் விருது மற்றும் ஊக்கத் தொகையை குறிக்கிறது.

**9. வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா (2001, டிசம்பர்)**

- சேரிகளில் வாழும் மக்களுக்கு வீடுகட்டித் தருதல்.

**10. ராஜிவ் ஆவாஸ் யோஜனா (2010)**

- சேரிகள் இல்லா இந்தியாவை உருவாக்குதல்.

**11. தேசிய ஊரகக் குடிநீர் திட்டம் (2009)**

(National Rural Drinking water Programme)

- அனைவரும் "குடிநீர் பெறுவதை" நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப் படுகிறது.

## 12. இந்திரா ஆவாஸ் யோஜனா (1985)

- ஊரகப் பகுதிகளில், வறுமை ஒழிப்பில் ஒரு கட்டமாக வீடு கட்டித் தரும் திட்டம் தொடங்கப்பட்டது.
- மத்திய மாநில அரசுகளின் நிதி ஒருக்கீடுகள் முறையே 75 : 25

## 13. ராஜீவ் காந்தி கிராமின் வித்யுத்திகரன் யோஜனா (2005)

- ஊரகப் பகுதியாக கருதப்படும் அனைத்து கிராமங்களிலும், அனைத்து குடியிருப்பு பகுதிகளிலும் "மின்சார இணைப்பு" வழங்குதல்.
- மின் இணைப்பு இலவசமாக வழங்கப் படுகிறது.
- முன்னுரிமை
  1. SC, ST குடியிருப்பு பகுதிகள்.
  2. வசதியற்ற மக்களின் குடியிருப்புகள்.

## 14. பாரத் நிர்மான் யோஜனா (2005)

- ஊரக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்டது.

**முக்கியத்துவம் தரப்படும் துறைகள்**

1. பாசனம்
2. சாலைகள்
3. மின்சார இணைப்பு
4. குடிநீர்
5. வீடுகள்
6. தொலைத்தொடர்பு

## 15. Total Sanitation Campaign (2000)

- வீடுகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் சமூக வளாகங்கள் போன்ற இடங்களில் கழிப்பறை வசதி ஏற்படுத்தித் தருதல்.
- சுகாதார வசதியை மேம்படுத்துதல் இதன் நோக்கமாகும்.

## நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

**I. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (JNNURM) (டிசம்பர் 3. 2005)**

- தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் சீர்திருத்தம் மேற்கொள்வதற்கும். மிக விரைவாக வளர்ச்சி அடையும் பொருட்டும் கொண்டு வரப்பட்ட திட்டமாகும்.
- நகர்ப்புறக் கட்டமைப்பு வசதிகளை சிறு மற்றும் நடுத்தர நகரங்களிலும் கொண்டு வருதலையும் நோக்கமாக கொண்டுள்ளது.
- தற்போது 65 நகரங்களில் இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

## சமூக நலத் திட்டம்

**தேசிய சமூக உதவித் திட்டம் / நாட்டு சமூக உதவித் திட்டம் (1995, ஆகஸ்ட் 15)**

- ஏழைக் குடும்பத்தினர், வயது முதிர்ந்தோர், வருமானம் ஈட்டும் குடும்பத் தலைவனை இழந்த குடும்பத்தினர், ஊனமுற்றோர் போன்ற சமூகத்தில் நலிந்த நிலையிலுள்ள மக்களின் பாதுகாப்பை வலியுறுத்தும் பொருட்டு கொண்டு வரப்பட்டது.
- இத்திட்டத்தின் கீழ் பல ஓய்வூதியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

1. தேசிய குடும்ப நலத் திட்டம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்காக கொண்டு வரப்பட்டது.
2. இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டம்.
3. இந்திராகாந்தி தேசிய விதவை ஓய்வூதிய திட்டம்.
4. இந்திராகாந்தி தேசிய ஊன முற்றோர் ஓய்வூதிய திட்டம்.

## உடல் நலத் திட்டங்கள்

**1. தேசிய ஊரக உடல்நலத் திட்டம் (2005, ஏப்ரல் 12)**

- ஊரகப் பகுதியில் வாழும் ஏழை மக்களுக்கு, அவர்கள் அணுகக் கூடிய தரமான மருத்துவ சேவையினை வழங்குதல்.
- சிசு இறப்பு வீதம் (IMR) மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் இறப்பு வீதம் (MMR) போன்றவற்றை குறைப்பதும் இத்திட்ட நோக்கங்களில் ஒன்றாகும்.
- அனைத்து நிலைகளிலும், சமூக ஒத்துழைப்புடன் உடல்நல சேவைகள் மக்களை சரியான முறையில் சென்றடையும்படியான செயல்பாடு களைக் கொண்டதாக இத்திட்டம் திகழ்கிறது.

## பிரதம மந்திரி ஸ்வஸ்த்யா சுரக்ஷா யோஜனா (2010)

- உடல்நல சேவைகளில், பகுதிவாரியாக காணப்படும் சமமின்மையை சரி செய்யவும், தரமான மருத்துவக் கல்வி கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டும் கொண்டுவரப்பட்ட திட்டமாகும்.
- டெல்லியிலுள்ள எய்ம்ஸ் மருத்துவமனை போன்ற 6 கல்வி நிலையங்களை நாடு முழுவதும் உருவாக்கும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## வாழ்வாதார திட்டம்

**1. தேசிய ஊரக வாழ்வாதார திட்டம்** (National Rural livelihood Mission)

- ஊரகப் பகுதி வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் பொருட்டு தொடங்கப்பட்ட திட்டம்.
- தற்போது அஜீவிகா என்றும் வழங்கப்படுகிறது.

**2. பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா (2000-2001)**

**நோக்கம்**

- கிராமப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, சுகாதாரம், தொடக்கக்கல்வி, குடிநீர், குடியிருப்பு மற்றும் கிராமச் சாலைகள் ஆகிய ஐந்து துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

(i) **பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் (2000. டிசம்பர்)**

- ஒவ்வொரு கிராமத்தையும் நகர்ப்புற சாலைகளுடன் இணைத்தலை நோக்கமாகக் கொண்டது.

(ii) **கிராமின் ஆவாஸ் யோஜனா**

- கிராமப்புறத்தில் ஏழ்மையிலுள்ள மக்களுக்கு குடியிருப்புகளை ஏற்படுத்தித் தருவதையும், வளரும் தேவைக்கு ஏற்ப வீடுகளை அமைத்துத் தருவதலையும் நோக்கமாகக் கொண்டது.

**3. ஜன் ஸ்ரீ பீமா யோஜனா (2000)**

- வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்காக "காப்பீட்டு திட்டமாக" கொண்டுவரப்பட்டது.
- 18 முதல் 60 வயதிற்குட்பட்ட கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்கள் பயன்பெறும் வகையில் வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

**4. கிராமக் கைவினைஞர்களுக்கு உபகரணங்கள் அளிப்புத் திட்டம்** (SITRA) (1992)

- கிராமக் கைவினைஞர்களுக்கு புதிய கருவிகளை அளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டது.

- ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்தின் துணை திட்டமாகும்.
- 1999-ம் ஆண்டு சுவர்ண ஜெயந்தி பொன்விழா திட்டம் வேலைவாய்ப்பு திட்டத்துடன் இணைக்கப்பட்டது.

## பெண்கள் நலத்திட்டங்கள்

## (அ) பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

**1. ஸ்வயம் சித்தா (2001)**

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மத்திய அரசின் அமைச்சகத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.

- சுய உதவிக் குழுக்கள் மூலம் பெண்களுக் கான தொழில் தொடங்க வழி செய்கிறது.
  - முதல் கட்டத் திட்டம் → 2001 ம் வருடம்.
  - 2ம் கட்டத் திட்டம் → 2008 ம் வருடம்.
- இத்திட்டம் "இந்திரா மகிளா யோஜனா" எனவும் வழங்கப்படுகிறது.

**2. சுவசக்தி திட்டம் (1988)**

- வளங்களை மகளிர் எளிதாக பயன் படுத்தும் பொருட்டு அவர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்குகிறது.

**3. பெண்களுக்கான வேலைவாய்ப்புப் பயிற்சி உதவித்திட்டம் (STEP) (2003-2004)**

- எட்டுவிதமான முக்கியத் துறைகளில் பெண்களின் அறிவை வளர்க்கவும், திறமைகளை வெளிக்கொணரவும் தேவையான பயிற்சியை இத்திட்டம் வழங்குகிறது.

**4. ஸ்வலம்பான் (1982)**

- வேலைவாய்ப்பைப் பெறவும், சுய வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளவும் பயிற்சியளிக்கும் திட்டமாகும்.

**5. தன்லஷ்மி (2008)**

- எட்டாம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகளுக்கான நிதியுதவித் திட்டமாகும்.
- பெண் கல்வியை ஊக்குவிக்கவும், குழந்தைத் திருமணத்தை தடுக்கவும் தொடங்கப்பட்டது.

**6. கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தை களுக்கான முன்னேற்றத் திட்டம் (1982)**

- இத்திட்டம் 1982 ம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது.
- கிராமப்புறத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள குடும்பப் பெண்களுக்கு சுயதொழில் தொடங்குவதற்கு வாய்ப்பளித்தல், அவர்களின் சமுதாய மற்றும் பொருளாதார நிலையை முன்னேற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் மூலம் கிராமப்புறத்தி லுள்ள 10 முதல் 15 பெண்களை குழுவாக அமைத்து அவர்களுடைய திறமைக்குத் தகுந்தவாறு சுய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது.
- 1999 ம் ஆண்டிலிருந்து இந்த திட்டம் "சுவர்ண ஜெயந்தி பொன்விழா கிராம வேலைவாய்ப்புத் திட்டத்துடன்" இணைக்கப்பட்டுள்ளது.

## (ஆ) உடல்நல மேம்பாட்டு திட்டங்கள் (2005)

**1. ஜனனி சுரக்ஷா யோஜனா (2005)**

- பாதுகாப்பான பிரசவத்தை ஊக்குவிக்கும் பொருட்டு மருத்துவமனைகளில் பிரசவம் மேற்கொள்ளும் வறுமைக்

கோட்டிற்கு கீழே வாழும் பெண்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் இதன் நோக்கமாகும்.

- ASHA (Accredited Social Health Activist) எனப்படும் மருத்துவ நலப் பணியாளர்கள் இத்திட்டத்தை செயல்படுத்த உதவு கின்றனர்.
- IMR மற்றும் MMR விகிதத்தை குறைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**2. கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன்** (Reproductive and Child Health (RCH))

- இத்திட்டம் ஏப்ரல் 1, 2005ல் தொடங்கப் பட்டது.
- முழு செழுமைக் காலம்
- சிசு இறப்பு வீதம்
- பிரசவ நேரத்தில் கர்ப்பிணிகளின் இறப்பு வீதம்
- இம்மூன்றையும் குறைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.
- மில்லினியம் வளர்ச்சி இலக்கு (Millennium Development Goal), தேசிய மக்கள் தொகை கொள்கை போன்றவற்றை நிறைவேற்றும் பொருட்டு கொண்டு வரப்பட்டது.

**3. கிஷோரி சக்தி யோஜனா (2000)**

- இளம் பருவத்தினருக்கான ஊட்டச்சத்து மற்றும் உடல்நல மேம்பாட்டிற்காக தொடங்கப்பட்டது.
- அங்கன்வாடி மையங்கள் மூலம் இளம் பருவத்தினருக்கான ஊட்டச்சத்து கிடைக்க ஆவண செய்யப்படுகிறது.
- தற்போது ராஜீவ் காந்தி வளரிளம் பருவப் பெண்களுக்கான திட்டம் அல்லது "சப்லா" என்ற பெயரால் 2010ம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

**4. இளம் பருவத்தினருக்கான ஊட்டச்சத்து திட்டம் (2002-2003)** (Nutrition Programme for Adolescent Girls)

- ஊட்டச்சத்துக் குறைவான இளம் பெண்களுக்கு மாதந்தோறும் 6 கிலோ தானியங்கள் வழங்கப்படுகிறது.

**5. இந்திராகாந்தி மாத்ரிவ சஹ்யோக் யோஜனா (2010)** (Indira Gandhi Matritva Sahyog Yojana)

- கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான பணம் வழங்கும் திட்டம்.
- ரூபாய் 4000, 3 தவணைகளில் வழங்கப் படுகிறது.
- மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் இத்திட்டத்தை செயல்படுத்துகிறது.

**6. நவஜத் சிசு கார்யகிராம் (2009)**

- IMR & MMR விகிதத்தை குறைத்தல் நோக்கமாகும்.
- சுகாதார நிலையங்களில் பணிபுரி பவர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்குதல்.

## (இ) சமூக நலத் திட்டங்கள்

**1. ராஷ்ட்ரிய மகிளா கோஷ் (1993)**

- பெண்களுக்கான "தேசிய நிதி உதவித் திட்டம்" என்று அழைக்கப்படுகிறது.
- வருமானம் தரக்கூடிய தொழில்களில் பெண்கள் ஈடுபடும் பொருட்டு, அவர்களுக்கான நிதியுதவி வழங்கப் படுகிறது.
- இதனால் கடன் வழங்குவோரின் சுரண்டல்களிலிருந்து பெண்களை பாதுகாக்கிறது.

**2. ஸ்தீரி சக்தி புரஸ்கார்**

- சமூக முன்னேற்றத்தில் பெண்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் பொருட்டு இந்திய அரசு தேசிய விருதுகளை கீழ்க்கண்ட பெயர்களில் வழங்கி சிறப்பிக்கிறது.
  1. தேவி அகில்யா பாய் ஹோல்கர்
  2. கண்ணகி
  3. மாதா ஜீஜா பாய்
  4. ராணி ஜெயின்டென்லோ ஜெகாங்
  5. ராணி லட்சுமி பாய்

## (ஈ) கல்வி வளர்ச்சிக்கான திட்டங்கள்

**1. தொடக்க கல்வி அளவில் பெண் குழந்தைகளுக்கான தேசியத் திட்டம் (2003)**

- பெண் குழந்தைகளுக்கான "மாதிரிப் பள்ளிகள்" ஒவ்வொரு பகுதியிலும் அமைத்தல் மற்றும் பெண் குழந்தைகளின் பள்ளி வருகையை கண்காணித்தல்.

**2. மகிளா சமக்யா திட்டம் (1989)**

- தேசிய கல்விக் கொள்கையின் (1986) இலக்குகளை நிறைவேற்றும் பொருட்டு, ஊரகப் பகுதியில் உள்ள பெண்களின் கல்வி வளர்ச்சிக்காகக் கொண்டு வரப்பட்டது.

**3. சர்வ சிக்ஷ அபியான்**

- 6 முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குகட்டாயக்கல்விஎன்றஅடிப்படை உரிமை, புதிதாக 86 வது சட்டதிருத்தம் மூலம் 2002 ல் சேர்க்கப்பட்டது.
- அதன்படி அனைத்து குழந்தைகளும் கல்வி பயிலும் வகையில் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. 2007-ம் ஆண்டிற்குள் அனைவருக்கும் தொடக் கல்வி, 2010 க்குள் அனைவருக்கும் 8-ம் வகுப்பு கல்வி என்பன இதன் நோக்கமாகும்.

**4. ஸ்வதார் (1995)**

- பெண்கள் சுதந்திரமாகச் செயல்படுவதை ஊக்குவிக்கிறது.
- தங்களது வாழ்க்கையை தாங்களே சுயமாக நிர்ணயிக்கும் வாய்ப்பை அளிக்கிறது.

**5. உஜ்ஜவாலா (2007)**

- பெண்கள் கடத்தலை தடுக்கும் சிறப்பு காரணிகளை முன் வைக்கிறது.
  1. தடுத்தல்
  2. மீட்டல்
  3. மறுவாழ்வளித்தல்
  4. மீண்டும் குடும்பத்தினருடன் இணைத்தல்.

**6. பெண்களின் அதிகாரமளித்தலுக்கான தேசிய திட்டம் (2010)**

- தொடர்ந்த அரசின் திட்டங்களின் மூலம் சமூக, பொருளாதார மற்றும் கல்வி அளவிலான பெண்களின் அதிகாரமளித்தலுக்கு வழிவகுக்கிறது.

## (உ) சர்வ சிக்ஷ அபிமான் திட்டத்தில்

பெண் குழந்தைகளின் கல்விக்கென முக்கியத்துவம் தரப்பட்டு 3 பிரத்யேகத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1. பெண் குழந்தைகளின் தொடக்கக் கல்விக்கான தேசிய திட்டம்.
2. மகிளா சமக்யா திட்டம்.
3. கஸ்தூரிபா காந்தி பலிக்கா வித்யாலயா.

**7. கஸ்தூரி காந்தி பலிக்கா வித்யாலாயா (2004)**

- நடுநிலைக் கல்வி வரை பயிலும் பெண் குழந்தைகளுக்காக விடுதியுடன் கூடிய கல்வி நிலையங்களை அமைத்தல் இதன் நோக்கமாகும்.

- SC, ST மற்றும் OBC, சிறுபான்மை இனத்தைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

**8.ராஷ்டிரிய மத்யமிக் சிக்ஷ அபியான் (2009)**

**நோக்கம்**

- இடைநிலைக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- குடியிருப்புக்கு 5 கி.மீ அருகில் இடைநிலைக் கல்வி நிலையங்களை அமைத்தல்.
- 2017ம் ஆண்டிற்குள் "அனைவருக்கும் இடைநிலைக் கல்வி" என்ற நிலையை அடைதல்.

**9. சக்சார் பாரத் (செப்டம்பர் 8, 2009)**

- "தேசிய எழுத்தறிவு திட்டம்" என்ற திட்டமே "சக்சார் பாரத்" என்று பெயர் மாற்றப்பட்டது.
- 15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பெண்களின் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது.

**10. மதிய உணவுத் திட்டம் (1995)**

- இத்திட்டத்தில் 300 கலோரி சமைத்த உணவு, 8 முதல் 12 கி புரதம் தொடக்கக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு மதிய உணவாக வழங்கப்படுகிறது.

### நோக்கம்

1. தொடக்க கல்வியை பரவலாக்குதல்.
2. குழந்தைகளின் வருகையை அதிகரித்தல்.
3. இடைநிற்றலைக் குறைத்தல்.
4. உலக அளவில் மிகப்பெரிய உணவு வழங்கும் திட்டமாகும்.

## தேசிய உயிரியல் எரிவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம் (National Biogas and Manure Management Programme (NBMMP)

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிவாயுவின் திட்டமாகிய தேசிய உயிரியல் எரிவாயு மற்றும் உரமேலாண்மைத் திட்டத்திற்கு மத்திய அரசு 100 சதவீதம் நிதி வழங்குகிறது. இது ஊரகம் மற்றும் சிறு நகரங்களில் குடும்ப வகையாக எரிவாயு தளவாடத்தை வழங்குகிறது.

**இதன் நோக்கங்களாவன:**

1. ஊரக மற்றும் சிறு நகரங்களின் வீடுகளுக்கு வீட்டு வளாக எரிவாயு தளவாடங்களை வழங்கித் தூய்மையான எரிவாயுவை குறிப்பாக சமையல் செய்வதற்காக வழங்க வேண்டும்.
2. பெண்களின் சுமையை குறைப்பதற்காகவும் காட்டுப் பொருட்களை பயன்படுத்துவதைக் குறைக்கவும், சமூக வளத்தை அதிகரிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.
3. வேதியல் உரங்களின் தேவையை குறைப்பதும், செறிவு செய்யப்பட்ட உயிரியல் உரங்களை வழங்குவதும் இதன் நோக்கமாகும்.
4. ஒருங்கிணைந்த சக்திக் கொள்கை மூலமாக சமையலுக்கான வாழ்நாள் சக்தித் தேவையை தருவது முன்பு திட்டக் குழுவின் நோக்கமாகவும் தற்பொழுது இந்தியாவை மாற்றுவதற்கான தேசிய அமைப்பின் (நிதிஆயோக்) நோக்கமாகவும் உள்ளது.
5. கரியமிலவாயு மற்றும் மீத்தேன் போன்ற பசுமை வீடு வாயுக்களைத் (Green House Gases) தடுத்து காலநிலை மாற்றத்தைக் குறைக்க உதவுவது இதன் நோக்கமாகும்.

- எல் பி ஜி இன் பயன்பாட்டிற்கு துணைபுரிவதும், பாரம்பரிய எரிபொருட்கள்மற்றும்காட்டுபொருளான நிலக்கரி, கெரோசின் போன்றவற்றை குறைப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது. நாட்டில் 120 இலட்சத்திற்கும் மேலான குடும்பங்களில் LPG உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.
- உயர்ரக நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியத்தை (NPK) செறிவு செய்யப்பட்ட அங்கக உயரியல் உரமாக பயன்படுத்தலாம். உயிரியல் உரங்கள் நிலத்தின் வளத்தை தக்க வைப்பதுடன் உயர்ரக வளர்ச்சிக்கு சக்திகளையும் அளிக்கிறது. எனவே சமூகத்திற்கு இன்றியமையாத மற்றும் சுற்றுச்சூழலுக்கேற்ற திட்டமாக தூய்மையான சமையல் வாயுவை ஊரக மற்றும் சிறு நகரங்களுக்கு தருவதுடன் செறிவுட்டப்பட்ட அங்கக உரங்களை அளிக்கிறது.
- 1981-82 முதலாக குடும்ப வகை எரிவாயு தளவாடங்களின் வளர்ச்சிக்கு இது பயன்படுகிறது. 1.10 லட்சம் குடும்ப வகை எரிவாயு தடவாளத்தை வழங்கும் இலக்குடன் மாநிலத் துறைகள் மற்றும் மானியத் துறையின் முகமைகள் மற்றும் காதி கிராமத் தொழில் குழுவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 45,000 குடும்ப வகை உயிரி வாயு தளவாடங்களை 2014 டிசம்பருக்குள் அமைக்கப்பட்டு, 1.10 இலட்சம் குடும்ப வகை உயிரியல் கொள்கலன்களை ஏற்படுத்த இலக்கு நிர்ணயித்துள்ளது. தமிழ்நாட்டில் 158 குடும்ப வகை உயிரியல் வாயு மானியதளவாடங்கள் டிசம்பர் 2014க்குள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 500 தளவாடங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் மானியமும் இதர மத்திய நிதி உதவியும் 2015-16இல் அதிகரிக்கப்பட்டன.

▶ **சமூக பொருளாதார சாதிக் கணக்கெடுப்பு** (Socio Economic Census(SECC)

- ஜுன் 2011இல் நாடு முழுக்க வீடு வீடாக ஊரக மற்றும் நகர சமூக பொருளாதார சாதி கணக்கெடுப்பின் நோக்கங்களாவன

1. சமூக பொருளாதார அடிப்படையில் வீடுகளை தரப்படுத்துவது.
2. நாட்டின் சாதி ரீதியான மக்கள் கொள்கைப் பட்டியலை உருவாக்குவது.
3. பலசாதிகள் மற்றும் பிரிவினரின் சமூக பொருளாதார நிலை மற்றம் கல்வி தரத்தின் தகவல்களை ஏற்படுத்துகிறது.

- ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் பேரில் மாநில நிர்வாகமும் 2017ல் மேற்கொண்ட சமூக, பொருளாதார சாதிக் கணக்கெடுப்பு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது. பெங்களூ ரின் பாரத் எலக்ட்ரானிக் லிமிடெட்டின் கையடக்க செட் மூலமாக தாள்களை பயன்படுத்தாமல் செயல்படுத்தப்பட்டது. மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையம் பகுதி ரீதியாக (Block - Wise) இணைப்பற்ற வீடுகளின் பட்டியலை (A bridged House List (AHL)

கள வரைபடங்கள் (Layout Map) தந்து பயிற்சியளித்தனர். களப் பணியை பெல் நிறுவனத்தினரால் பயிற்றுவிக்கப்பட்ட மாநில அரசின் தகவல் உள்ளீடு பணியாளர்கள் செய்தார்கள். அனைத்து மேலாண்மை பணிகளையும் மாவட்ட ஆட்சியர் முதன்மை அதிகாரி (Principal Officer) ஆக செயல்பட்டார்.

- பின்வரும் தனிநபர் மற்றும் குடும்பங்கள் மட்டத்தில் தேவையான தகவல்களை சேகரித்தல். வேலை, கல்வி குறைபாடு, மதம், தாழ்த்தப்பட்ட மலை சாதி நிலை, சாதியின் பெயர், வேலை வருவாய் மற்றும் வருவாய் வழி, சொத்து வீடு நுகர்வோர் பொருட்கள் நிலம் போன்றவையாகும்.
- வீட்டின் தரம், வேலையின் தன்மை, கல்வியின் நிலை, வீட்டிலிலுள்ளவர்களின் குறைபாடுகள், நில அமைப்பு போன்ற தகவல்களாகும். மக்கள் தொகை கணக்கெடுப்பாளர் தகவல்களை பதிவு செய்வார். கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட இடம், கூறிய தகவல்களில் உள்ள குறைபாடுகள், பதிவு செய்த தகவல்களும் மற்றும் மேலாளர் அவர்களின் வீட்டிற்கு சென்று தகவல்களின் தன்மையை சரிபார்த்தாரா என்பது போன்றவை பதிவு செய்யப்படும். இதற்கான மறுப்பு, அதற்கான நெறிமுறை, தள்ளுபடி போன்றவற்றின் விரிவான முறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும். கிராமசபை இந்தத் தகவல்களைச் சரிபார்த்து அங்கீகரிக்கும்.

### 2014-இன் வைப்பாளரின் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிதித் திட்டம் (Depositer Education and Awarness (DEAF) Fund Scheme, 2014)

- 2012-ம் ஆண்டு வங்கி (திருத்த) சட்டத்தின் படி வைப்பாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிதிக்காக தனிப்பிரிவு 1949-ம் ஆண்டு வங்கி சீரமைப்பு சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இது வணிக வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு பொருந்தும். கடந்த பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக பராமரிக்கப்படாத அல்லது கோரப்படாத தொகை இந்த நிதியில் பற்று வைக்கப்படும். இந்த தொகை மற்றும் வட்டியினை இந்த நிதிக்கு மாற்ற வேண்டும்.
- இந்த வைப்பாளரின் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிதி திட்டத்தின் தொகையை வைப்பாளர் சிறப்பிற்கான வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படுகிறது. ரிசர்வ் வங்கி அவ்வப்போது குறிப்பிடும் வைப்பாளர் வளர்ச்சிக்கான தேவைக்கு இந்த நிதி பயன்படுத்த வேண்டும்.

**ஜன்தன் யோஜனா, ஆதார், மொபைல் எண் என்கிற மூன்று திட்டங்கள்**

- இந்தத் திட்டம் ஏழைகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பயனாக உள்ளது. வருவாயைப் பெருக்குவதன் மூலம் நேரடியாகவும், சமூக சேவை மற்றும் பாதுகாப்பு வழங்குவதன் மூலம் மறைமுகமாகவும் பயனளிக்கிறது.
- ஏழைகளின் பொருளாதார நிலை வளர்வதற்காக வளர்ச்சிக்குத்

தேவையானதை அரசு செய்ய வேண்டும். இந்த இலக்கிற்கு அரசு நிதியை சிறப்பாக பயன்படுத்த வேண்டும். வறுமை ஒழிப்பிற்கான திட்டங்கள் சிறந்த பலனை அளிக்கும்.

1. பரவலான மனநிலை அடிப்படையின்றி தகவல் அடிப்படையில் அமைய வேண்டும்.
2. கொள்கைகள் எப்படி வடிவமைக்கப்படுகின்றன என்கிற நிலையில் - அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களால் தனி மனிதன் மற்றும் அமைப்புகளுக்கு கிடைக்கும் ஊடகத்தின் படி,
3. ஏழைகளுக்கு சென்றடைய வேண்டிய பணிகளையும் வரையறுத்து அரசின் நடைமுறைபடுத்தும் தன்மையும் அறிய வேண்டும்.

- இந்திய அரசின் கொள்கைப்படி வறுமை ஒழிப்பு ஒரு முக்கிய உபகரணமாக அமைந்துள்ளது விலை ஒரு முக்கிய காரணியாகும். ஏழைகளுக்கேற்ற விலையில் கிடைப்பதற்காக பல்வேறு வகையிலான பொருட்களை மத்திய மற்றும் மாநில அரசு மானியமாகத் தருகிறது. அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, கெரோசின், எல்பிஜி, நாப்தா, நீர், மின்சாரம், டீசல், உரம், இரும்புதாது, இரயில்வே போன்றவை விலை மானியமுள்ள சில பொருட்கள் மற்றும் துறைகளாகும். இந்த மானியங்களின் மொத்த மதிப்பு சுமார் 3,78,000 கோடி ரூபாயாகும். உள்நாட்டு மொத்த உற்பத்தியில் இது 4.24 சதவீதமாகும். விலை மானியத்தில் பணக்காரர்களுக்கு கிடைக்கும் மானியத்தைவிட, ஏழைகளுக்கு கிடைக்கும் மானியத்தைவிட அதிகமாக உள்ளது.
- மின்சாரத்தை பொருத்தவரை பணக்காரர்கள் அதிக மின்சாரத்தை பயன்படுத்துகின்றனர். கீழ்நிலை மின்சார பயன்பாடு தனிநபருக்கு மாதத்திற்கு 45 கிலோ வாட் ஆகும். இது மானியத்தின் 10 சதவீதமாகும். மேல் நிலையிலுள்ள நுகர்வோர் 121 கிலோ வாட் பயன்படுத்துகின்றனர். இது மானியத்தின் 57 சதவீதமாகும். 56 சதவீதம் ஏழைகளாக உள்ளவர்கள். எல்.பி.ஜியின் 25 சதவீதத்தை மட்டுமே ஏழைகள் பயன்படுத்துகின்றனர்.
- அந்தியோதயா அன்ன யோஜனா அட்டை உள்ளவர்கள் அல்லது வறுமை கோட்டிற்கு கீழேயுள்ள மக்களின் கெரோசின் பயன்பாட்டில் 46 சதவீதம் மானியம் மட்டுமே உள்ளது. கீழ் நிலையிலுள்ள 80 சதவிதத்தினர் 28.1 சதவீத புறநகர் நீங்கலாக ரெயில்வே பயன்படுத்துபவர்களாக உள்ளனர். எனவே ரெயில்வே மானியம் ஏழைகளை விட பணக்கார்களுக்கு அதிகம் பயன்படுகிறது. மானியத்தை குறைக்காமல் மானியப் பலன் வீணாவது தடுக்கப்படும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

**தீர்வு**

- பொருளாதார நோக்கங்களை அடைந்த பிறகு, பல்வேறு வகையான உதவி வழங்கப்படாத வரை மானியத்தை நீக்குவதோ அல்லது படிப்படியாக

குறைப்பதோ சாத்தியமற்றதாகும். மூன்று திட்டங்களாக ஜன்தன் யோஜனா, ஆதார், மொபைல் எண் மூலமாக அரசாங்கம் இலக்கு வைத்த பரிவர்த்தனை செய்வதன் மூலம் உண்மையான மாற்றத்தை ஏழைகளுக்கு நேரடியான பண உதவியுடன் அளிப்பது சாத்தியமாகும்.

- அரசின் அதிகமான முதலீட்டினால் பொருளாதார வளர்ச்சி முன்னோக்கி செல்கின்றதால் ஏழைகள் பாதுகாக்கப் படுவார்கள். மேலும் ஒதுக்கப்பட்ட நிதி மூலங்களை சிறப்பாகப் பயன்படுத்தி விலைக் கட்டுப்பாட்டிலிருந்து பல பொருட்கள் விடுவிக்கப்படுவதனால் நீண்ட கால வளர்ச்சி ஏற்படும்.

**ரூபே அட்டை**

- 22 மார்ச் 2012 முதல் இந்தியாவின் உள்நாட்டு செலுத்துதலுக்காக கொண்டு வரப்பட்ட திட்டமாகும். துவக்கத்தில் மாஸ்டர் அட்டை (Master Card) மற்றும் விசா அட்டை திட்டங்களுக்கு மாற்றாக இந்திய தேசிய செலவு நிறுவனம் (National Payment Corporation of India) வெளியிட்டது. இந்தியா பே (Indian Pay) திட்டமாகும். இது இந்தியாவின் ஒருங்கிணைந்த ஒட்டு மொத்த பெறுவதலின் திட்டமாகும். வேறு நிறுவனங்கள் இதே பெயரை வைப்பதை தவிர்க்க இதற்கு (Rupay) ரூபே என்று பெயரிடப்பட்டது.

ரூபேயின் சிறப்பம்சங்களாவன:

- இந்தியாவின் செலுத்துதலின் உள்நாட்டில் திறந்த நிலை மற்றும் பன்முக அமைப்புக்கான தேவையை ரூபே பூர்த்தி செய்யும்.
- ரூபாய் மற்றும் அளித்தல் (Rupee and Payment) என்று இருவார்த்தைகள் இணைத்து ரூபே உருவாக்கப்பட்டது.
- நிதி அமைப்புகள் மற்றும் வங்கிகளின் மின் அமைப்பு மூலமாக ரூபே செயல்படுகிறது. டிஸ்கவர் நிதியத்துடன் இணைந்து செயல்படுவதால் சர்வதேச ஏற்புகளுக்கு வழிவகுத்துள்ளது.
- 24 மார்ச் 2015 முதல் இந்திய இரயில்வேக்கு சொந்தமான முன் செலுத்தப்பட்ட ரூபே அட்டையை வெளியிட்டுள்ளது. இதனை பயன்படுத்தும் போது ஒரு டிக்கெட்டிற்கு 10பைசா கட்டணம் வசூலிக்கப்படும் ஆறு மாதங்களுக்கு பரிவர்த்தனை கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை என்கிற துவக்க சலுகை தரப்பட்டுள்ளது. இந்த அட்டையின் துவக்க மதிப்பு ரூ.10,000 ஆகும். மேலும் இதனை புதுப்பித்துக் கொள்ளலாம்.

## வறுமை ஒழிப்பு மற்றும் வேலை வாய்ப்பு திட்டங்கள்

**I. கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சி மற்றும் சுய வேலைவாய்ப்புத் திட்டம் (1979) (TRYSEM)**

**நோக்கம்**

- கிராமப்புறத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள இளைஞர்களுக்கு தொழில் பயிற்சியும், வியாபாரப் பயிற்சியும் அளித்து சுயவேலை தொடங்குவதற்கு உதவி செய்வதாகும்.
- வயது 18-35 வயது வரை உள்ளவர்கள்.

**2. ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP)**

- 1980 ம் ஆண்டு அக்டோபர் 2ம் தேதி தொடங்கப்பட்டது.
- வறுமையை ஒழிப்பதற்கான முக்கியத் திட்டமாக செயல்படுகிறது.
- இதன் துணைத் திட்டங்களாவன
  1. TRYSEM
  2. DWACRA
  3. கங்கா கல்யாண் யோஜனா
  4. சித்ரா
  5. மில்லியன் கிணறுத் திட்டம்
- வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு சுய வேலை வாய்ப்பளித்து தன்னிறைவு பெறச் செய்தலாகும்.

**3. ஜவஹர் ரோஜ்கர் யோஜனா (JRY) (1989)**

- தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் கிராமப்புற நிலமற்றோருக்கான வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் இணைத்து தொடங்கப்பட்டது.
- கிராமப்புற மக்களுக்கு, வேலைவாய்ப்பு திட்டமாகச் செயல்படுகிறது.

**4. ஜவஹர் கிராம சம்ரிதி யோஜனா (1999)**

- கிராமப்புறக் கட்டமைப்புகளின் முன்னேற்றத்தையும் வேலையில்லாத ஏழைகளுக்கு கூலி வேலைகள் பெற்றுத் தருவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கிராம சபைகள் மூலம் திட்டங்களுக்கான பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

**5. நேரு ரோஜ்கர் யோஜனா (NRY) (1989)**

- நகர்ப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.
- 1997-ல் ஸ்வர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்துடன் (Swarna Jayanthi Sahari Rozgar Yogana) இணைக்கப்பட்டது.

**6. வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம் (1993) (EAS)**

- கிராமத்தில் 18 முதல் 60 வயதிற்குட்பட்டு உழைக்கும் தகுதியுள்ளவர்களுக்கு வேளாண்மைத் தொழில் இல்லாத நாட்களில் 100 நாட்களுக்குக் குறை வில்லாமல் வேலைவாய்ப்பு தருதலாகும்.
- கிராமப்புறக் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், மற்றும் சமூகத் திட்டங்களை செயல் படுத்தி போதுமான வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல்.

**7. ஸ்வர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கர் யோஜனா (பொன் விழா ஆண்டு தன் வேலைவாய்ப்பு திட்டம்)**

- இந்திய சுதந்திரமடைந்த 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதை கொண்டாடும் வகையில் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும்.
- 1997 டிசம்பர் 1-ம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டது.
- நகர்ப்புற வேலையற்ற மக்களுக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.
- கூலி வேலைவாய்ப்பு முறை மூலமாகவோ அல்லது தன் வேலைவாய்ப்பு மூலமோ நகர்ப்புற மக்கள் வேலை பெறுவதை உறுதி செய்கிறது.

(i) நகர்ப்புற சுய வேலைவாய்ப்பு திட்டம்
(ii) நகர்புற பெண்கள் சுய உதவித் திட்டம்
(iii) வேலைவாய்ப்புத் திட்டத்தின் திறன் மேம்பாட்டு பயிற்சி
(iv) ஊதிய வேலைவாய்ப்பு திட்டம்
(v) நகர்ப்புற சமூக மேம்பாட்டு நெட்வொர்க்

**8. ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்ஹர் யோஜனா (ஏப்ரல் 1, 1999)**

1. ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP)
2. கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சி மற்றும் சுய வேலைவாய்ப்பு திட்டம் (TRYSEM)
3. கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தை களுக்குக்கான முன்னேற்றத் திட்டம் (DWXCRA)
4. கிராமக் கைவினைஞர்களுக்கு உபகரணங்கள் அளிப்புத் திட்டம் (SITRA)
5. கங்கா கல்யாண் யோஜனா
6. மில்லியன் கிணறுகள் திட்டம் (MWS)

- முதலான திட்டங்களை ஒருங்கிணைத்து ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கர் யோஜனா கொண்டு வரப்பட்டது.
- வறுமை ஒழிப்பு, குழந்தைகளுக்கு பண உதவி செய்தல் போன்ற உதவிகளும் சுயவேலை வாய்ப்பிற்கான உதவிகளும் வழங்கப்படுகின்றன.

**9. சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா (2001)**

- வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம் (EAS) ஜவஹர் கிராம சம்திரி யோஜனா மற்றும் ஜவஹர் ரோஜ்கர் யோஜனா ஆகிய மூன்றும் இணைந்து இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

**நோக்கம்**

- கிராமப்புறங்களில் சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்
- ஏழை மக்களுக்கு உணவு கிடைக்கச் செய்தல்.
- இத்திட்டச் செலவுகளை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்கின்றன.

**10. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் (1973)**

- நாட்டிலுள்ள வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளை மேம்படுத்தும் பொருட்டு தொடங்கப்பட்டது.

**நோக்கம்**

- வறட்சிக்கு இலக்கான பகுதிகளில் வளர்ச்சியை ஏற்படுத்தி நிலம், நீர் மற்றும் இயற்கை வளங்களை சமநிலையில் கொண்டு வருவதாகும்.

**11. அந்தியோதய அன்ன யோஜனா (2000)**

- ஏழைகளுக்கு பொது விநியோகத் திட்டத்தின்படி 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, 3 ரூபாய்க்கு 1 கிலோ கோதுமையும் வழங்கப்படுகிறது.
- வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பத்திற்கு மாதம் 35 கிலோ உணவு தானியம் வழங்கப்படுகிறது.

**12. பிரதம மந்திரி ரோஜ்கர் யோஜனா (1993. அக்டோபர் 2)**

- இளைஞர்களுக்கு சுயமாக தொழில் தொடங்க ரூபாய் 1 லட்சம் முதல் 2 லட்சம் வரை கடன் உதவி வழங்கப்படுகிறது.

**13. வேலைக்கு உணவுத் திட்டம் (2001)**

- வறட்சியால் பாதிக்கப்பட்ட 8 மாநிலங்களில் (குஜராத், சத்தீஸ்கர், இமாச்சல பிரதேசம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ஒரிசா, ராஜஸ்தான், உத்ராஞ்சல்)உள்ள கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை அளித்து பசியை போக்குவதற்கான திட்டமாகும். வேலைக்கான கூலி பாதி உணவு, மீதி பணமாகவும் வழங்கப்படும்.

### 14. ஜெயப்பிரகாஷ் நாராயணன் ரோஜ்கர் உத்திரவாத திட்டம் (2002-2003)

- மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அங்குள்ள மக்களுக்கும், இளைஞர் களுக்கும் வேலைவாய்பிற்கான உத்தர வாதத்தை ஏற்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும்.
- இதன் மூலம் பின்தங்கிய மாவட்டத்திற்கு வேண்டிய நிதியுதவியையும், வேலை வாய்ப்பு பெறுவதற்கு வேண்டிய பயிற்சியையும் மக்கள் பெறுகிறார்கள்.
- இத்திட்ட நிதியை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் அளிக்கின்றன.

### கிராமப்புற பகுதியிலுள்ள நகர்ப்புற வசதிகள் (PURA திட்டம்)

- மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. அப்துல்கலாம் அவர்களின் கனவுத் திட்டம் ஆகும்
- நகர்ப்புற வசதிகளை ஊரகப் பகுதிகளுக்கு வழங்குதல்
- ஊரகப் பகுதிகளின் தரத்தை உயர்த்துவதன் மூலம் நகர்ப்புற ஊரகப் பகுதிகளுக்கிடையேயான வளர்ச்சியின் இடைவெளியைக் குறைத்தல், ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்றவை இதன் நோக்கங்களாகும். 2004-2005-ம் வருடம் இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- மத்திய அரசு இந்திய மக்களின் வளர்ச்சிக்காக பல நல திட்டங்களை கொண்டுவந்துள்ளது. இவை மாநில அரசால் நடைமுறைப்படுத்தப்படும். மாநில அரசின் பங்கிருந்தாலும் பெரும் நிதியை மத்திய அரசு வழங்குகிறது. சில மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

### மகாத்மா காந்தியின் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டம் (Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme (MGNREGS)

நாடாளுமன்றத்தில் செப்டம்பர் 2005இல் சட்டமுறை வடிவத்துவடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டம் சட்டமாக்கப்பட்டது. குறைந்தபட்சம் ஒரு நிதி ஆண்டில் 100 நாட்கள் ஊரகப் பகுதியில் வேலைவாய்ப்பு தருவதற்காக கொண்டு வரப்பட்டது. திறனற்ற உடல் உழைப்பு அளிக்க விரும்பும் அனைத்து குடும்பங்களுக்கும் வேலை வழங்கப்படும். இந்த திட்டத்தில் இரண்டு முக்கிய நோக்கங்களாவன.

1. வேலை வழங்குதல்.
2. தொடர் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவது முக்கிய நோக்கமாகும். பஞ்சம், வறட்சி, காடுகள் அழிவது, மண் அரிப்பு போன்றவற்றை கவனிப்பதன் மூலமாக தொடர் வறுமைக்கான காரணங்களை அணுக வேண்டும்.

### திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

1. கிராம பஞ்சாயத்திலுள்ள பதிவு செய்த அனைத்து குடியிருப்போருக்கும் 100 நாள் கூலி வேலை வழங்க உத்திரவாதம் அளிக்க வேண்டும்.
2. மத்திய அரசு இதற்கான கூலி மற்றும் பொருட்களுக்கான நிதியை வழங்கும். திறனற்ற உடல் உழைப்பிற்கு 100 சதவீதமும், திறனுள்ள மற்றும் பகுதி திறனுள்ளவர்களுக்கு 75 சதவீதமும் வழங்கப்படும்.

3. இடைத்தரகர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
4. கூலி மற்றும் பொருளின் விகிதம் 60-40 ஆகும். தமிழ்நாட்டில் 100 சதவீத உடல் உழைப்பு சார்ந்த வேலைகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுகிறது.
5. திட்டப்படி 50 சதவீத வேலையை கிராமசபை பரிந்துரைக்க வேண்டும். 50 சதவீத வேலையை கிராம பஞ்சாயத்து நடைமுறைப்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் கிராம பஞ்சாயத்து மட்டுமே அனைத்துப் பணிகளையும் செய்கிறது.
6. திறனற்ற வேலையைச் செய்ய விரும்பவர்கள் தங்கள் பெயர்களை கிராம பஞ்சாயத்தில் பதிவு செய்துக் கொள்ள வேண்டும். இப்பதிவு எழுத்துப் பூர்வமாகவோ அல்லது வாய் மொழியாகவும் இருக்கலாம்.
7. பதிவு செய்தவர்களுக்கு பதிவு எண்ணும் புகைப்படத்துடன் கூடிய வேலைக்கான அடையாள அட்டை இலவசமாக வழங்கப்படும்.
8. விண்ணப்பித்த அல்லது வாய்மொழியாக கூறிய 15 நாட்களுக்குள் வேலை அடையாள அட்டை வழங்க வேண்டும்.
9. வேலைக்கான அட்டையை வைத்திருப்பவர் வேலைக்கு எழுத்துப்பூர்வமாக விண்ணப்பிக்க வேண்டும். அப்பொழுது கிராம பஞ்சாயத்து தேதியிட்ட சீட்டை தருவார்கள். இது 15 நாட்களுக்குள் வேலைக்கான உத்திரவாதத்தை தருகிறது.
10. கிராம பஞ்சாயத்தின் 5கி.மீக்குள் உள் தான் இயல்பாக வேலைக்கான இடம் இருக்க வேண்டும். வேலைக்கான இடம் 5கி.மீ அதிகமாக இருந்தால் கூடுதல் கூலியான 10 சதவீதம் தர வேண்டும். இது கூடுதல் பயணச் செலவிற்கும், வாழ்வியல் செலவிற்காக வழங்கப்படுகிறது.
11. மாநிலத்தின் விவசாய தொழிலாளர்களுக்காக வழங்கப்படும் 1948-ம் ஆண்டுகளான குறைந்தபட்ச கூலிச் சட்டத்தின் படி கூலி அமைந்திருக்க வேண்டும்.
12. சமமான வேலைக்கு ஆண், பெண் இருவருக்கும் சமமான கூலி வழங்க வேண்டும்.
13. சாதாரணமாக வார அடிப்படையில் கூலி அமைந்திருக்க வேண்டும். 15 நாட்களுக்குள் கூலியினை வழங்கிவிட வேண்டும்.
14. மூன்றில் ஒரு பங்கு பயன் பெறுபவராக பெண்கள் இருக்க வேண்டும்.
15. அரசு அறிவித்த 2011-12 வரையிலான கூலி ரூ.119. 2012 - 13இல் இந்த கூலி ரூ.132 ஆக உயர்த்தப்பட்டது. 2013-14ல் இந்த கூலி ரூ.148ஆக உயர்த்தப்பட்டது.
16. குடிநீர் முதலுதவிப் பெட்டி, வெயிலிருந்து பாதுகாக்க தடுப்புகள் போன்ற வசதிகள் வேலையிடத்தில் செய்து தர வேண்டும்.
17. கிராம அளவிலான சமூகத் தணிக்கையாளர் (Village Level Social Auditor) மூலமாக மகாத்மா காந்தியின் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாதத்தைப் பொறுத்து கிராமசபை சமூக தணிக்கையை மேற்கொள்ள வேண்டும்.
18. குறைதீர்க்கும் அமைப்பின் மூலமாக விரைவான நேரத்துடன் குறைகள்

தீர்க்கும் அமைப்பு இருக்க வேண்டும். உதவிக்காக கட்டணமற்ற தொலைபேசி எண் (1299) அளிக்கப்பட்டுள்ளது.

19. பொதுக் கண்காணிப்பிற்கு ஏற்ப அனைத்து கணக்கு வழக்குகளும் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும்.
20. மாநில வேலைவாய்ப்பு உத்திரவாத குழுவை (State Employment Guarantee Council) தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரிவு மகாத்மா காந்தியின் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டப்படி உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆலோசனை வழங்கவும். மதிப்பீட்டு மேற்பார்வையை செலுத்தவும் இக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

**இந்திரா ஆவாஸ் யோஜனா** (Indira Awas Yogana (IAY))

ஜவஹர் ரோஜ்கர் யோஜனாவின் ஒரு பகுதியாக செயல்பட்ட இந்திரா ஆவாஸ் யோஜனா, 1998லிருந்து தனித் திட்டமாக மாறியது. இந்த திட்டத்தின் நோக்கம் இலவச வீடுகளை கட்டித் தருவதாகும். தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், ஊரக பகுதியில் விடுவிக்கப்பட்ட குடிமைகள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்களுக்கான இந்த திட்டம் செயல்படுகிறது. கிராம சபையால் அங்கீகரிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர் பயன் பெறுபவர்களாக தேர்வு செய்யப்படுகிறார்கள். நிதியாண்டில் 60 சதவீதம் தொகையாவது வறுமைக்கோட்டிற்கு கீழ் இருப்பவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கும் ஒதுக்கி கட்டுமானப் பணிக்கும் தரமுயர்த்தலுக்கும் பயன்படுத்த வேண்டும். 40 சதவீதத் தொகையை தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அல்லாத வறுமை கோட்டிற்கு கீழேயுள்ளவர்களுக்கு ஒதுக்க வேண்டும். உடல் மற்றும் மனரீதியான மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவீதத்தை ஒதுக்க வேண்டும். 15 சதவீத பயனாளிகள் சிறுபான்மைப் பிரிவினர்களாக இருக்க வேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசுகளை கோரியுள்ளது. மத்திய மற்றும் மாநில அரசு 75:25 என்கிற விகிதத்தில் நிதி வழங்க வேண்டும்.

**நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சித் திட்டம்** (MPLADS)

மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களின் மூலமாகக் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கத்தில் உள்ள இடைவெளியை நிரப்பும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. இதனால் நகர மற்றும் ஊரக வளர்ச்சி ஏற்படும். 2011இல் இத்திட்டத் தொகை ரூபாய் இரண்டு கோடியிலிருந்து ரூபாய் ஐந்து கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 2011-12இல் மேலாண்மைச் செலவுகளும் 0.5 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் பணிக்கான ஒதுக்கீட்டை மாவட்ட ஆட்சியாளர் வழங்குகிறார். ஒதுக்கீட்டிற்கு ஏற்ற பணிகளின் பட்டியிலிருந்தும் குறைபட்டியல் இருந்தும் வழிகாட்டுதலை பெறலாம். அனைத்து பாராமரிப்பு பணிகள் தூர்வாருதலை தடை செய்யப்பட்டுள்ளன. குளம், ஆறு, ஏரி, ஓடை தூர்வாருதலை போன்றவற்றை பராமாரிப்பு பணியாக கருதுவதால் அதனை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்ட பணியில் சேர்க்க இயலாது.

➤ **அடல் ஓய்வூதிய திட்டம்:**
- 2015
- ஓய்வூதியம் இல்லாப் பணியாளர்களுக் கானது
- 60 வயதிற்கு மேற்பட்டவர்
- திட்டத்தில் சேர வயது - 18
- மாத ஓய்வூதியம் - சுள. 2000 - 5000 வரை.
- ஸ்வயலம்பன் திட்டத்திற்கு பதிலாக தொடங்கப்பட்டது.
- தொடக்கம் - பிரதமர் மோடி.

➤ **பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா:**
- 2015
- ஆயுள் காப்பீட்டுத் திட்டம்.
- தகுதி - 18-50 வயது, வங்கி கணக்கு இருத்தல்.
- எந்த வகை மரணத்திற்கும் - Rs. 2 லட்சம்.
- சந்தா - ஆண்டுதோறும் Rs. 330/-
- திட்டச் செயலாக்கம் - ஆயுள் காப்பீட்டு நிறுவனம்.

➤ **பாரத் மாலா திட்டம்:**
- 2015
- 7000 km தேசிய நெடுஞ்சாலை மேம்படுத்த.
- நோக்கம் - கடற்கரையோர எல்லைப் பகுதி உட்பட்ட எல்லையோர பகுதிகளின் இணைப்பு வசதிகளை மேம்படுத்த.
- மதிப்பீடு - Rs. 80,000 கோடி
- திட்ட அறிக்கை - NHAI

➤ **HRIDAY:**
- 2015
- National Heritage city development & Augmentation Yojana.
- நாடு முழுவதும் உள்ள 12 பெரிய நகரங்களில் புராதன பாதுகாப்பு (ம) அபிவிருத்தி பணி.
- நிதி. 500 கோடி, மத்திய அரசு.
- TN - வேளாங்கண்ணி (ம) காஞ்சிபுரம் தேர்வு.

➤ **AMRUT**
- 2015
- Atal Mission for Rejuvenation and Urban Transformation.
- ஏழைகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்த
- TN-ல் 32 நகரம் தேர்வு.
- முதல் கட்டமாக - வேளாங்கண்ணி தேர்வு
- அடிப்படை வசதி (ம) கட்டமைப்பு வசதி ஏற்படுத்த.

➤ **சுகன்யா சம்ரிதி யோஜனா: (செல்வமகள் திட்டம்)**
- 2015, ஹரியானா.
- நாடு முழுவதும் உள்ள பெண் குழந்தைகளின் வலிமை (ம) பெருமையை மேம்படுத்த.
- 10 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வங்கி கணக்கு துவக்கம்.
- ஆண்டு வைப்பு தொகை - Rs. 1000 - 150000 வரை
- 18 வயதில் உயர் கல்வி பெற - 50%.

➤ **VAMBAY:**

- 2001
- Valmiki Ambedkar (Malin Basti) Awas Yojana
- போதிய வசிப்பிட வசதி இல்லாமல் நகர்ப்புற - சேரிகளில் வாழும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை மக்கள் துன்பம் போக்க.
- நிதி-மத்திய, மாநில அரசு - 50 : 50.
- சுகாதாரமான நகர்ப்புற சுற்றுப்புறச் சூழல் ஏற்படுத்த.

➤ **ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டம்:**

- 1986
- ஊரகப் பகுதிகளில் துப்புரவு வசதி ஏற்படுத்த
- தேவை அடிப்படையில் உருவாக்கம்.
- மக்களின் பொதுவான வாழ்க்கை தரத்தை மேம்படுத்தல்.
- திறந்த வெளிக் கழிப்பிடம் அகற்றல்.
- ஊரக பகுதிகளில் பாதுகாப்பு பணி விரிவு.
- விழிப்புணர்வு ஏற்படுத்தல்.

➤ **நிர்மல் கிராம் புரஸ்கார்:**

- Oct 2002.
- தூய்மைக்கான கிராம விருது
- 2005-ல் இருந்து விருது
- 2012 நிர்மல் பாரத் அபியான் திட்டத்திற்கு மாற்றம்.
- ஊரகப் பகுதி மக்களின் சுகாதார மேம்பாடு அடைய.

➤ **அன்ன பூர்ணா திட்டம்:**

- 2000
- மூத்த குடிமக்களுக்கு 10 kg உணவு தானியம் - மாதம் தோறும்.
- தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ்வராத மூத்த குடிமக்கள் உணவு பாதுகாப்பு சேவை நிறைவு செய்தல்.

➤ **ஸ்வர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கார் யோஜனா:**

- 2009-10
- நகர்ப்புற சுயஉதவி (ம) ஊதிய வேலை அளிப்பு திட்டம்.
- 4 கூறுகள்:

1. நகர்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம்.
2. நகர்புற சுயஉதவித் திட்டம்.
3. ஏழை மக்களிடையே வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கான திறன் பயிற்சி.
4. ஊதிய வேலைவாய்ப்பு திட்டம்.

➤ **SGSY:**

- 1999
- ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கர் யோஜனா.
- வறுமை ஒழிப்பு, சுயவேலைவாய்ப்பை ஏற்படுத்த.
- தற்போது நடப்பில் உள்ள ஒரே சுய வேலைவாய்ப்பு திட்டம்.
- நிதி-மத்திய, மாநில அரசு - 75:25.

➤ **SRGY:**

- 2001
- கிராம பகுதியில் நீடித்த சமூக அமைப்பு (ம) சமூக பொருளாதார கட்டமைப்பை உருவாக்க.
- கிராம பகுதியில் கூடுதல் வருவாய்க்கான வேலைவாய்ப்பை உருவாக்கல்.
- JGSY (ம) EAS ஒருங்கிணைப்பு.

➤ **MANAS:**

- Maulana Azad National Academy for Skills.
- பொருளாதாரத் துறையில் சிறுபான்மை யினருக்கு திறன் வழங்கல்.
- புதிய தொழில் தொடங்க தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு (ம) நிதிக் கழகம்.

➤ **நய் ரோஷ்னி:**

- 2012-13
- சிறுபான்மையினர் பெண்களிடத்துத் தலைமை பண்பை வளர்த்தல்.
- சிறுபான்மையின பெண்களுக்கு கல்வி அறிவு, தொழில்நுட்பம் வழங்கல்.
- அதிகாரம் மிக்கவராக மாற்றல்
- நம்பிக்கையை ஏற்படுத்தல்

➤ **PRASAD:**

- 2015
- HRIDAY-ல் உள்ள 12 நகரங்கள் யாத்திரை, புத்துணர்வு (ம) ஆன்மிகம் பெருக்க இயக்கம்.
- Pilgrimage Rejuvenation and spiritual Augumentation Drive.

➤ **சீர் மரபினர் நல வாரியம்:**

- இவர்கள் சமூக, கல்வியல் (ம) பொருளாதார ரீதியாக மேம்பாடு அடைய உதவுதல்.
- செயல்படுத்தப்படும் திட்டங்கள் அவர்களை சென்றடைய உதவுதல்.
- விபத்துக் காப்பீடு, கல்வி உதவி, திருமண உதவி , மகப்பேறு உதவி மற்றும் முதியோர் ஓய்வூதியம் போன்ற உதவிகள் வழங்கல்.

➤ **த்வானி (ம) உபநாயன்: (DHVANI & UPANAYAN)**

**DHVANI:**

- சென்னையில் உள்ள காதுகேளாத இளஞ்சிறார்களுக்கான பாடத்திட்டம்.
- பால வித்யாலயா பள்ளியாக தயாரிப்பு
- 2014-15 ஒருமையம் - சென்னை

UPANAYAN: தாமத வளர்ச்சி (ம) மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பயிற்சி, மதுரன் நாராயணன் மையத்தால் உருவாக்கம்.

➤ **தேசிய குடற்புழு நீக்க தினம்:**

- Feb 10 - 2015
- துடைப்பு தினம் - Feb 13 2015
- ஹெல்மின்திஸ் புழுக்கள் நோய் பாதித்த மண் வழியாக எளிதில் பரவும்.
- WHO – 1-14 வயது உடையவர். 241 மில்லியன் (68%) குழந்தைகள் பாதிப்பு.
- விளைவு: உடல் (ம) அறிவாற்றல் வளர்ச்சி பாதிப்பு.

➤ **"104" சுகாதார அவசர தொலைபேசி எண்:**

- 2013 Dec 30
- 24 × 7 மணி நேர சேவை.
- சுகாதாரம் தொடர்பான அவசர தொலைபேசி சேவை.

சேவைகள்:

- இரத்த வங்கி, இரத்த சேமிப்பு மையம் பற்றிய தகவல் அளித்தல்
- சுகாதாரத் தகவல், நோய் தடுப்பு, மக்கள் நலத்திட்டம் போன்றவை

➤ **சிவப்பு ரிப்பன் கிளப்:**

- கல்வி நிறுவனங்களில் இந்திய அரசால் நடத்தப்படும் ஓர் இயக்கம்.
- மாணவர்கள் AIDS பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துபவர்.
- இது பாலியல் நடத்தை, தன்னார்வ இரத்ததான வங்கி குறித்த விவரம் தரும்.
- இளைஞர் பாதுகாப்பு, சுகாதார வாழ்க்கை

➤ **தேசிய ஃபிலேரியல் கட்டுபாட்டு திட்டம்:**

- பைலேரியா - யானைக்கால் நோய்
- TN-ல் - 1957.

கட்டுப்பாடு:

- 43 நகர்ப்புற பகுதிகளில் உள்ளது.
- 25 கட்டுபாட்டு அலகுகள், 44 இரவு மருந்தகம்
- அனைவருக்கும் - டை ஈத்தைல் கார்பமசின் சிட்ரேட் மாத்திரை வழங்கல்.

➤ **முதியோருக்கான தேசிய நிறுவனம்:**

- மதிப்பீடு - 142 கோடி
- 1) AIIMS - 200 படுக்கை வசதி
  2) சென்னை - 10 ஏக்கர் நிலம்
  இது இந்தியாவில் உருவாக்கப்படும் 2வது நிலையம்
  நோக்கம்: 1) முதியோர் பாதுகாப்பை உறுதி செய்தல்.
  2) நிலையான திறன் வளர்ப்பு.

➤ **தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டம்:**

- 1981 - M.S. சுவாமிநாதன் குழு
- 1983 - தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டம்
- 1983 - பல சிகிச்சை
- 2005 - முற்றிலும் ஒழிப்பு
- 30 ஜனவரி - தேசிய தொழுநோய் ஒழிப்பு தினம்
- இது ஒரு சமூக நோய்.

➤ **TN மாநில அறிவியல் (ம) தொழில் நுட்ப கவுன்சில்:**

- 1948
- TN-ல் அறிவியல் (ம) தொழில்நுட்ப பிரிவை மேம்படுத்தல்
- ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் (ம) அடிப்படையிலான திட்டம்
- கடந்த 4 ஆண்டுகளில் செயல்பாடுகள் விரிவு செய்யப்பட்டுள்ளன.

➤ **மனித நேய வார விழா:**

- 26-30 ஜனவரி
- அனைத்து மாவட்டத்திலும் செயல்படுத்தப்படுகிறது.
- மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- தீண்டாமைக் கொடுமைகளை விளக்கு வதற்கு, வில்லுப்பாட்டு கலை நிகழ்ச்சிகள் மூலம் விளம்பரம்.

➤ **சன்சாத் ஆதர்ஷ் கிராம யோஜனா (SAGY):**

- பாராளுமன்ற உறுப்பினர் தன் தொகுதியில் ஒரு கிராமத்தை தத்தெடுத்து முன் மாதிரி கிராமமாக ஏற்படுத்துதல்.

➤ **இந்திர தனுஷ் திட்டம்:**
- 2014, 24 டிசம்பர் (மதன்மோகன் மாளவியா & வாஜ்பாய் பிறந்தநாள்)
- குழந்தைகளுக்கு 7 விதமான தடுப்பூசி டிப்திரியா, காசநோய், கக்குவான் இருமல், டெட்டனஸ், போலியோ, மஞ்சள்காமாலை.
- 201 மாவட்டத்தில் அறிமுகம்.

➤ **எரிவாயு மானிய திட்டம்:**
- உலகின் மிகப்பெரிய நேரடி மானிய திட்டம்
- எல்லா மாவட்டங்களிலும் 2014, 12 ஜனவரி முதல் தொடங்கப்பட்டது.
- 12 சிலிண்டர் / வருடம். Rs. 230 மானியம் / மாதம் கணக்கில் வைக்கப்படும்.

➤ **ஸ்டார்ட் அப் & ஸ்டேண்ட் ஆப் இந்தியா.**
- 2014, 14 ஆகஸ்ட்
- புதிய தொழில் முனைவோர் (ம) வேலை வாய்ப்பை ஊக்குவிக்க.
- 5100 ந-ரிக்ஷா தொடக்கம்
- Help Line வசதி.

➤ **பிரதம மந்திரி கிராமின் ஆவாஸ் யோஜனா**
- 2015, 24 ஜுன்
- 2022 க்குள் 3 கோடி வீடுகள்.
- பயனாளி: பொருளாதாரத்தில் நலிவடைந்தோர்
- PPP - பொது, தனியார் மக்கள் கூட்டமைப்பின் கீழ் வீடுகள் கட்டப்படும்.

➤ **பிரதம மந்திரி ஜீவன் பீமா யோஜனா:**
- 18-50 வயதுள்ள அனைத்து வங்கி கணக்குதாரர்களுக்குப் பலன்.

➤ **பிரதம மந்திரி உஜ்ஜவாலா யோஜனா:**
- 2016, 2 மே.
- 5 கோடி ஏழைகளுக்கு இலவச LPG இணைப்பு.
- 1.10 கோடி பேர் எரிவாயு மானியம் விட்டு கொடுத்தனர்.

➤ **Beta version of Digital Locker Launched:**
- 2015, 10 பிப்ரவரி.
- இந்திய குடிமகன் தனது அனைத்து சான்றிதழ்களையும் டிஜிட்டல் வடிவில் சேமிக்கலாம்.

# சமூகத்துறை பிரச்சினைகள்

## சமூகப் பிரச்சினைகள்

- சமூகத்தில் பெண்கள், குழந்தைகள், இளைஞர்களின் நலன் பாதிப்பு, சமூக பாதுகாப்பற்ற நிலை, சட்டங்களை மீறிய செயல்பாடுகள் சமூகப் பிரச்சினைகள் எனப்படும்.

### பிரச்சனைகள்

**சமூகப் பிரச்சினைகள்**

1. உணவு / குடிநீர் பற்றாக்குறை
2. குடியிருக்க இடவசதியின்மை
3. கல்வியறிவின்மை
4. வேலையின்மை
5. வறுமை

**பொருளாதார பிரச்சினைகள்**

1. வேலையின்மை அதிகரிப்பு
2. தலா வருமானம் மற்றும் நாட்டு வருமானம் குறைவு
3. பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும்.

**சுற்றுசூழல் பிரச்சினைகள்**

1. சுற்றுசூழல் மாசடைதல்
2. சுகாதாரக்கேடு ஏற்படுதல்
3. தொற்றுநோய்கள் எளிதில் பரவுதல்

**கட்டுப்படுத்த தீர்வுகள்**

1. மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த காண்ட்வார் & சீனா மாதிரிகளை பயன்படுத்த வேண்டும்.
2. திருமண வயதை உயர்த்த வேண்டும்.
3. கருத்தடை சாதனங்கள் பற்றிய விழிப்புணர்வு
4. மக்கள் தொகை வெடிப்பு பற்றிய விழிப்புணர்வு
5. அரசு ஊழியர், அரசியலில் பங்கேற்போர் (அ) 2 குழந்தைகள் மட்டுமே பெற்றிருக்க வேண்டும்.
6. சுகாதார வசதிகளை அதிகப்படுத்த வேண்டும்.
7. பொது நடைமுறைச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

### அரசியலமைப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள்:

இந்திய அரசியலமைப்பின் முடிவுரை, அடிப்படை உரிமைகள், அரசுக்கு வழிகாட்டும் கோட்பாடுகள் போன்றவற்றில் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**I. பெண்கள் நலம்**

- ஷரத்து - 14
  சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் சம சட்ட பாதுகாப்பு.
- ஷரத்து - 15(3)
  மகளிருக்கான சிறப்புச் சட்டங்கள்
- ஷரத்து - 16
  பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்
- ஷரத்து - 23
  மனித சுரண்டலைத் தடுத்தல்

- ஷரத்து - 39(a)
  இலவச சட்ட உதவி
- ஷரத்து - 42
  பெண்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் மகப்பேறு விடுப்பளித்தல்
- ஷரத்து - 51(A)(e)
  இந்திய மக்கள் எல்லோரிடத்திலும் பொதுவான சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டும். பெண்களுக்கு இழிவு உண்டாகும் செயல்களை அறவே கைவிட வேண்டும்.
- ஷரத்து - 326
  வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுதல்.
- வரதட்சணை தடுப்புச் சட்டம் - 1961
- பேறுகால ஓய்வூதிய சட்டம் - 1961
- குடும்ப வன்முறை தடைச் சட்டம் - 2005
- தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் - 1990

**II. குழந்தைகள் நலன்**

- ஷரத்து - 24
  14வயதிற்குட்ட சிறுவர்களை பணியில் அமர்த்தாமை
- ஷரத்து - 45
  6வயதிற்குட்ட குழந்தைகளின் நலனை பாதுகாத்தல் மற்றும் கல்வி அளித்தல்
- ஷரத்து - 51(A)(K)
  6-14 குழந்தைகள் யாவருக்கும் கல்விக்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தல்.
- குழந்தைத் தொழிலாளர் தடைச்சட்டம் - 1986
- குழந்தைகள் உரிமைகள் பாதுகாக்கும் சட்டம் - 2005

**III. இளைஞர்கள் நலன்**

- ஷரத்து - 14
  சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் சம சட்டப் பாதுகாப்பு.
- ஷரத்து - 15
  மதம், சாதி, இனம், பாலினம், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகளைத் தவிர்த்தல்.
- ஷரத்து - 16
  பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்
- ஷரத்து - 23
  மனித சுரண்டலைத் தடுத்தல்
- ஷரத்து - 47
  பொதுமக்களின் ஊட்டச்சத்து மற்றும் உயர்ந்த பட்ச வாழ்க்கை முறை மற்றும் பொது நலனை அதிகரிப்பது மாநில அரசின் கடமை.
- கொத்தடிமை தடைச்சட்டம் - 1976
- சிவில் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் - 1955

**IV. தொழிலாளர் நலன்**

- ஷரத்து - 39
  சமமான வேலைக்கு ஆண், பெண்ணுக்கு சமமான ஊதியம் மூல வளங்களை பகிர்ந்தளித்தல்.
- ஷரத்து - 41
  முதுமையில், நோயுற்ற நிலையில் அரசு உதவி செய்தல்.
- ஷரத்து - 42
  பெண்களுக்கு பேறுகால விடுப்பு மற்றும் சலுகைகளை அளிக்கிறது.
- ஷரத்து - 43(B)

கிராமப்புறங்களில் சுயதொழில், குடிசைத் தொழில் மற்றும் கூட்டுறவு முறையில் தொழிற் பயிற்சிகளை ஊக்குவிக்க வழிவகை செய்கிறது.

- ஷரத்து - 43(3)
  தொழிற்சாலையின் நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கெடுத்தல்
- தொழிற்சாலை சட்டம் - 1946
- குறைந்தபட்ச ஊதியச் சட்டம் - 1976

**V. சமூகப்பாதுகாப்பு சட்டங்கள்**

- தீண்டாமை தடைச்சட்டம் - 1955
- வன்கொடுமை தடைச்சட்டம் - 1986
- மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் - 1993

**VI. சிறுபான்மையினர் நலன்**

- தேசிய சிறுபான்மையினர் ஆணையம் - 1994

# மக்கள் தொகை வெடிப்பு

## மக்கள் தொகை வெடிப்பு

- ஒரு நாட்டில் (அ) ஒரு பகுதியில் வாழும் ஒட்டு மொத்த மக்களின் எண்ணிக்கை. மக்கள் தொகையை தீர்மானிக்கும் காரணிகள்

1. பிறப்பு விகிதம்
2. இறப்பு விகிதம்
3. இடப்பெயர்ச்சி

**வகைகள்**

அ) வெளிநாட்டில் குடியேறுதல் (வெளிக் குடிப்பெயர்ச்சி)

ஆ) நம்நாட்டில் குடிபுகுதல் (உள் குடிப்பெயர்ச்சி)

## பிறப்பு வீதம்

- மக்கள் தொகை பெருக்கத்தில் பிறப்பு வீதம் ஒரு நேரடியான மாறுதலை உண்டுபண்ணும்.
- மக்கள் தொகை பெருக்கத்திற்கு அதிகப் பிறப்பு வீதம் முக்கிய காரணம்.

## பிறப்பு வீதம் கீழ்க்காணும் காரணிகளும் தொடர்பு கொண்டுள்ளது

1. திருமண வயது
2. குழந்தை பிறப்பு அதிகரிப்பு
3. சமூக பழக்கங்கள் மற்றும் நம்பிக்கை
4. படிப்பறிவின்மை
5. பிறப்பு கட்டுப்பாடு முறைகள் பற்றி அறியாமை

## இறப்பு வீதம்

- மக்கள் தொகை பெருக்கத்திற்கு மற்றொரு காரணம் குறைவான இறப்பு வீதம் ஆகும்

## குடிப்பெயர்ச்சி

1. வெளிக் குடிப்பெயர்ச்சியானது மக்கள் தொகை பெருக்கத்தை குறைக்கிறது.
2. உள் குடிப் பெயர்ச்சியானது மக்கள் தொகை பெருக்கத்தை அதிகரிக்கின்றது.

## மக்கள் தொகை வெடிப்பு

- அச்சுறுத்தக் கூடிய, அதிவேகமான மக்கள் தொகையின் வளர்ச்சி வீதத்தையே மக்கள் தொகை வெடிப்பு என்கிறோம்.

## வெடிப்பிற்கான காரணங்கள்

**(i) அதிக பிறப்பு வீதம்**

| ஆண்டு | வீதம் |
|---|---|
| 1891-1900 | 45.8/1000 |
| 2001 | 25.8/1000 |

- இருப்பினும் மக்கள் தொகை 121 கோடியாக உயர்ந்துள்ளது.

**குறைக்கும் வழிமுறைகள்**

1. குடும்ப நலம் பற்றிய விளம்பரம்
2. குடும்ப நலவாழ்வு திட்டம்
3. கருத்தரங்கு

**(ii) குறைவான இறப்பு வீதம்**

| ஆண்டு | இறப்பு வீதம் |
|---|---|
| 2001 | 8.5/1000 |

**குறைக்கும் வழிமுறை**

1. சுத்தம் சுகாதார வசதிகள்
2. குழந்தைப் பிறப்பின்போது பராமரிப்புகள்

**(iii) இளவயது திருமணம்**

- ▶ இந்தியாவில் ஆண்களின் திருமண வயது 21, பெண்களின் திருமண வயது 18, மற்ற நாடுகளின் திருமண வயது 23 முதல் 25 இதனால் மகப்பேறு காலம் அதிகரிக்கிறது, பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது.

**(iv) சமுதாய மற்றும் சமயக் காரணங்கள்**

- ▶ திருமணம் ஒரு இன்றியமையாத சமூகக் கடமையாகும்.
- ▶ குடும்பத்திற்கு ஓர் ஆண் குழந்தை என்ற எதிர்பார்ப்பினால் மக்கள் தொகை அதிகரிக்கிறது.

**(v) வறுமை**

- ▶ குழந்தைகள், வருமானம் ஈட்டக் கூடிய நிலையில் திகழ்கின்றனர்.
- ▶ பள்ளிக்குச் செல்லாமல் தொழில்களில் ஈடுபடுகின்றனர்.
- ▶ எனவே வறுமையைச் சமாளிக்க, கூடுதலாக பிறக்கும் குழந்தைகளை வருமானம் ஈட்டித் தரும் சொத்தாக மக்கள் கருதுவதால், மக்கள்தொகை அதிகரிக்கிறது.

**(vi) கல்வியறிவின்மை**

- ▶ இந்திய மக்களில் 26% பேர் கல்வியறிவற்றோர்.
- ▶ மேலும் பெரும்பாலானோர் குறைவான கல்வியறிவு உடையோர்.
- ▶ கல்வியறிவின்மையால், சமூகப் பழக்க வழக்கம், வறுமை, வேலையின்மை, போன்ற காரணிகள் அதிகரித்து, மக்கள் தொகையை வளர்ச்சி அடைய செய்கிறது.

## பொருளாதார வளர்ச்சி பாதிப்பு

- ▶ பொருளாதார வளர்ச்சிக்கு உழைப்பின் பங்களிப்பு, அதிகமாக தேவைப்பட்டாலும் நமது மக்கள் தொகை தொடர்ந்து வளர்வதால் பொருளாதார வளர்ச்சி பாதிப்புக்குள்ளா கிறது.

**I. உணவுப் பற்றாக்குறை**

- ▶ இந்திய மக்கள் தொகை அதிகரிப்பதால் விவசாய உற்பத்தியில் சமவிகித வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இதனால் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது.

**2. உற்பத்தி செய்யாத நுகர்வோர் சுமை**

- ▶ மக்கள் தொகை அதிகரிக்கும் போது குழந்தைகள் மற்றும் முதியோரின் எண்ணிக்கையும் உயர்கிறது.
- ▶ குழந்தைகளும், முதியோர்களும் உற்பத்தியில் ஒரு பங்கினையும் வகிக்காமல் பொருள்களை மட்டுமே நுகர்கிறார்கள்.

**3. தலா வருமானம் மற்றும் நாட்டு வருமானம் குறைதல்**

- ▶ அதிவேகமாக வளரும் மக்கள் தொகை தலா வருமானம் மற்றும் நாட்டு வருமானத்தின் சராசரி வளர்ச்சி வீதத்தை தடை செய்கிறது.
- ▶ நாட்டு வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பை நிலையாக வளர்ந்து வரும் மக்கள்தொகை நுகர்ந்து விடுகிறது.

**4. சேமிப்பும், முதலீடும் குறைதல்**

- ▶ அதிவேக மக்கள்தொகை வளர்ச்சி சேமிப்பையும் மற்றும் முதலீட்டின் திறனையும் குறைக்கிறது.

- நாட்டு வருமானம், தலா வருமானம் குறைவாக உள்ளதால் சேமிப்பு பூஜ்ஜியம் ஆகிறது.
- இதனால் முதலீடு குறைவதுடன், உற்பத்தித் திறன் பாதிக்கப்படுகிறது.

**5. வேலையின்மை (அ) குறை வேலையுடைமை**

- வளரும் மக்கள் தொகை வேலையில்லா திண்டாட்டத்தை மேலும் அதிகரிக்கிறது.
- இதனால் நிறைய மக்கள் வேலையில் அமர்த்தப்படாமலும், தங்கள் திறனுக்கு குறைவான வேலையில் அமர்த்தப்பட்டும் இருக்கிறார்கள்.

**6. மகளிரின் உழைப்பு வீணாதல்**

- அடிக்கடி குழந்தை பெறுவதால், உற்பத்தி நடவடிக்கைகளில் பெருமளவு மகளிரால் நீண்ட காலம் வேலை செய்ய இயலவில்லை.
- இதனால் மனிதவளம் வீணாகிறது பொருளாதார வளர்ச்சி குன்றுகிறது.

**7. உழைப்பின் உற்பத்தித் திறன் குறைவு**

- மக்கள் தொகைப் பெருக்கமானது, நாட்டு வருமானம், மற்றும் தனி நபர் வருமானத்தைப் பாதிக்கின்றன.
- மக்களின் வாழ்க்கைத்தரம் குறைவதால் உற்பத்தி திறன் குறைகின்றது.

**8. சமூக நலத் திட்டத்தின் மீது அதிகச் செலவு**

- மக்கள்தொகை அதிகரிப்பானது, குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றது. இதன் காரணமாக மருத்துவப் பராமரிப்பு, பொது சுகாதாரம், குடும்ப நலன், கல்வி, வீட்டு வசதி போன்ற சமூகச் செலவுகளின் தேவையானது அதிகரிக்கின்றன.

**9. வேளாண்மையில் பின் தங்கிய நிலை**

- மக்கள் தொகை வளர்ச்சியினால் நிலம் துண்டாக்கப்படுகிறது.
- நிலங்கள் மிகச் சிறியதாக இருப்பதனால் இயந்திரமயமான நவீன உழவு முறையைக் கையாள முடியாது.

**10. அரசு மீது நிதிச் சுமை**

- அதிவேக மக்கள்தொகை அதிகரிப்பு நிதிச்சுமையாக அரசுக்கு அமைகின்றது.
- சமூக நலத்திட்டங்களுக்காகவும், வறுமையை அகற்றுவதற்காகவும், அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது.
- மக்கள் தொகை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டால் அரசு பெருமளவு நிதியை உற்பத்திக்காக செலவழிக்கக் கூடும்.

## மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் வழிகள்

**1) தம்பதிகளின் பாதுகாப்பு வீதம்**

- இவ்வீதத்தினை அதிகரிப்பதற்கு குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை கையாளும் தம்பதிகளின் விகிதம் அதிகரிக்க வேண்டும்.

**2) குழந்தைகளின் இறப்பு வீதம்**

- குழந்தைகள் குறைந்த எண்ணிக்கையில் இறக்கும்போது, பொது மக்கள் சிறு குடும்ப நெறியினை பின்பற்ற ஊக்கம் ஏற்படும். எனவே இவ்வீதம் குறைக்கப்பட வேண்டும்.

**3) நாடு தொழில்மயாதல்**

- நிலத்தை சார்ந்திருக்கும் மக்கள்தொகை அழுத்தத்தை குறைக்க வேண்டும்.
- கிராமப்புறங்களில் குடிசை மற்றும் சிறு தொழில்களை, அதிகபட்ச மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் வளரச் செய்தல் வேண்டும்.

- இதன் வாயிலாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் போது, மக்கள்தொகை கட்டுப்படுத்தப் படுகிறது.

**4) பெண்களின் எழுத்தறிவு வீதம் மற்றும் கல்வியை அதிகரித்தல்**

- கல்வி கற்ற பெண்கள், தங்களுடைய குடும்ப அளவினைப் பற்றி அதிகப் பொறுப்பு வாய்ந்த கண்ணோட்டத்தைப் பெற்றுள்ளனர்.
- சிறு குடும்பத்தின் நன்மைகள் குறித்தும், குடும்ப கட்டுப்பாட்டு முறைகள் பற்றியும் அறிவதுடன், அவற்றைச் செயல்படுத்தி குடும்ப அளவைக் குறைக்கின்றனர்.

**5) காலம் தாழ்த்தித் திருமணம் செய்தல்**

- காலம் தாழ்த்தித் திருமணம் செய்வதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.
- முன் கூட்டியே திருமணம் செய்வதை கட்டாயம் கட்டுப்படுத்த வேண்டும்.

**6) சட்ட ரீதியான நடவடிக்கை**

- குழந்தைத் திருமணத்தையும் ஒரே சமயத்தில் ஒருவர் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்ளுதலையும் தடை செய்ய கடும் சட்டங்களை இயற்றி அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

## மக்கள் தொகை பற்றிய கோட்பாடுகள்

மக்கள் தொகை பற்றி மூன்று வகையான கோட்பாடுகள் உள்ளன.

**(i) மால்தசின் மக்கள் தொகை கோட்பாடு**

- உணவு உற்பத்தி அதிகரிக்கும் போது மக்கள் தொகையும் அதிகரிக்கும்.
- மக்கட்தொகை பெருக்க வீதத்திலும் உணவு உற்பத்தி கூட்டல் வீதத்திலும் அதிகரிக்கிறது.
- கிடைக்கும் உணவுப் பொருள்களின் அளவிற்கேற்ப, இயற்கைத் தடைகள் மற்றும் செயற்கைத் தடைகள் மூலம் மக்கள் தொகையை நிலைப்படுத்தலாம்.

**இயற்கைத் தடைகள்**

- இவை இறப்பு வீதத்தை அதிகரித்து மக்கள்தொகை வளர்ச்சியை பாதிக்கிறது.
- (எ.கா)
  - வறுமை
  - வியாதிகள்
  - போர்கள்
  - பஞ்சங்கள்

**செயற்கைத் தடைகள்**

- மக்கள் தொகையைக் குறைக்க மனிதன் மேற்கொள்ளும் முயற்சிகள் செயற்கைத் தடைகள் எனப்படும்.

**(எ.கா)**

- காலந்தாழ்த்திய திருமணம்
- வாழ்க்கையில் கட்டுப்பாட்டுடன் இருத்தல்.

**(ii) உத்தம அளவுக் கோட்பாடு**

- மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங் களுக்கும் அதன் விளைவாக தலா வருமானத்தில் ஏற்படும் மாற்றங் களுக்கும் இடையே உள்ளத் தொடர்பினை உத்தம அளவுக் கோட்பாடு விளக்குகிறது.
- இயற்கை வளங்கள், மூலதனப் பொருள்களின் இருப்பு மற்றும் தொழில்நுட்ப நிலை ஆகியவற்றிற்கு ஏற்ற சிறந்த மக்கட்தொகை உத்தம அளவு மக்கள்தொகை எனலாம்.
- உத்தம அளவு மக்கட்தொகை அளவில் தலா உற்பத்தி உச்சத்தில் இருக்கும். (அல்லது) தலா உற்பத்தி உச்சத்தில் இருக்கும் நிலையில் உள்ள மக்கட் தொகையே உத்தம அளவு மக்கட்தொகை ஆகும்.

- உத்தம அளவை விட மக்கள்தொகை குறைவாக இருப்பின் அது குறைந்த மக்கள்தொகை கொண்ட நாடு.
- உத்தம அளவை விட மக்கள் தொகை அதிகமாக இருப்பின் அது அதிக மக்கள்தொகை கொண்ட நாடு.

**(iii) மக்கள் தொகை வளர்ச்சிக் கட்ட கோட்பாடு**

- இக்கோட்பாடு பிறப்பு வீதத்திற்கும், இறப்பு வீதத்திற்கும் உள்ள உறவை விளக்குகிறது.

**பிறப்பு வீதம்**

- ஒரு வருடத்தில் 1000 நபர்களுக்கு எத்தனை குழந்தைகள் பிறக்கின்றன என்ற வீதத்தை குறிக்கிறது.

**இறப்பு வீதம்**

- ஒரு வருடத்தில் 1000 நபர்களில் எத்தனை பேர் இறக்கின்றனர் என்ற வீதத்தை குறிக்கிறது.

## மக்கள் தொகை வளர்ச்சியில் 3 நிலைகள் உள்ளன

**முதல் நிலை**

**உயர்ந்த பிறப்பு வீதமும் உயர்ந்த இறப்பு வீதமும்**

- நாடு முன்னேற்றம் குறைந்து, பின்தங்கிய நிலையில் இருக்கும்.
- வேளாண்மை மக்களின் முக்கியத் தொழிலாக இருக்கும்.
- மக்களின் வாழ்க்கைத் தரம் குறைந்து காணப்படும்.
- இந்தக் கட்டத்தில் அதிகப் பிறப்பு வீதம், அதிக இறப்பு வீதத்தை சரிக்கட்டுவதால், மக்கள்தொகை வளர்ச்சி அதிகமாக இல்லை. அது தேக்கமுற்று காணப்படுகிறது.

**இரண்டாம் நிலை**

**உயர்ந்த பிறப்பு வீதமும், குறைந்த இறப்பு வீதமும்**

- நாடு முன்னேறும் போது, தொழில் நடவடிக்கைகள் அதிகரித்து, அதிக வேலைவாய்ப்புகள் உருவாகின்றன.
- நாட்டு வருமானம், தலா வருமானம் அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.
- உயர்ந்த அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக போதிய மருத்துவ வசதிகள் கிடைக்கப் பெறுகின்றன.
- இக்கட்டத்தில் உயர்ந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதத்திற்கிடையே வேறுபாடு ஏற்படும்.
- மக்கள் தொகை வளர்ச்சி வீதம் அதிகமாகிறது.

**மூன்றாம் நிலை**

**குறைந்த இறப்பு வீதமும். குறைந்த பிறப்பு வீதமும்**

- பொருளாதார முன்னேற்றம் காரணமாக சமுதாய அமைப்பில் மாற்றம் ஏற்படுகிறது.
- மக்களின் மனப்பான்மை மாற்றமடைகிறது. கல்வியறிவின் காரணமாக, சிறு குடும்ப முறைக்கு மாறுகின்றனர். எனவே பிறப்பு வீதம் குறைகிறது.
- நல்ல சுகாதார வசதிகள் செயல்படுவதால் இறப்பு வீதம் குறைகிறது.
- இக்கட்டத்தில் பிறப்பு, இறப்பு வீதங்கள் குறைவாக இருப்பதால் மக்கள்தொகை வளர்ச்சி நிலையாக இருக்கும்.
- உலக நாடுகள் அனைத்தும் மூன்று நிலைகளையும் கடக்க வேண்டும்.

## மக்கள் தொகை கணக்கெடுப்பு

- ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு நாட்டிலுள்ள அல்லது வரையறுக்கப்பட்ட ஒரு பகுதியிலுள்ள அனைத்து மக்களின் பொருளாதார சமூக மற்றும் மரபியல் தொடர்பான புள்ளி விவரங்களைத் திரட்டுவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆகும்.

## முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு

- 1872 ம் ஆண்டில் மேயோ பிரபு காலத்தில் எடுக்கப்பட்டது.

## முறையான கணக்கெடுப்பு

- 1881 ம் ஆண்டு முதல், ரிப்பன் பிரபு காலத்தில் முறையான கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது. பின்னர் பத்து வருடங்களுக்கு ஒரு முறை எடுக்கப்படுகிறது.
- தற்போது 2011ஆம் வருடம் மக்கள்தொகை கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது.
- இது 15 வது கணக்கெடுப்பு (1881 லிருந்து)
- சுதந்திரத்திற்குப் பிறகு 7 வது கணக்கெடுப்பு.
- இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு நாள் " பிப்ரவரி 9"

| மக்கள்தொகை கணக்கெடுப்பு | 2011 (இந்தியா) |
|---|---|
| மொத்த மக்கள் தொகை | 1210193422 |
| ஆண்கள் | 623724248 |
| பெண்கள் | 586469174 |
| மக்கள் அடர்த்தி | 382/ 1 ச.கி.மி |
| பாலின விகிதம் | 940 பெண்கள் /1000 ஆண்கள் |
| குழந்தை பாலின விகிதம் | 914 பெண் குழந்தைகள் / 1000 ஆண் குழந்தைகள் |
| வளர்ச்சி விகிதம் | 17.64% |
| உலக மக்கள் தொகை நாள் | "ஜீலை 11" |

## குறிக்கோள்

- "நமது மக்கள்தொகை கணக்கெடுப்பு நமது எதிர்காலம்"
- மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் 50

## கல்வியறிவு

- மொத்த கல்வியறிவு வீதம் - 74.04%
- ஆண் கல்வியறிவு வீதம் - 82.14%
- பெண் கல்வியறிவு வீதம் - 65.46%

## மாநிலங்களின் தரவரிசை

### கல்வியறிவு

- கல்வியறிவில் முதல் 2 மாநிலம்
  - கேரளா (93.91%)
  - லட்சத்தீவு (92.28%)
- கல்வியறிவில் கடைசி 2 மாநிலம்
  - பீகார் (63.82%)
  - அருணாச்சல பிரதேசம் (66.95%)

### மக்கள் தொகை அடர்த்தி

**முதல் 2 மாநிலங்கள் / யூனியன் பிரதேசம்**

| | |
|---|---|
| தேசிய தலைநகர் பகுதி டெல்லி | 11297 பேர் ச.கி.மீ |
| சண்டிகர் | 9252 பேர் / ச.கி.மீ |

**கடைசி 2 மாநிலங்கள் / யூனியன் பிரதேசம்**

| | |
|---|---|
| அருணாச்சல பிரதேசம் | 17 பேர் / ச.கி.மீ |
| அந்தமான் நிகோபர் தீவு | 46 பேர்/ச.கி.மீ |

### பாலின விகிதம்

**முதல் 2 மாநிலங்கள் / யூனியன் பிரதேசம்**

- கேரளா - 1084
- புதுச்சேரி - 1038

**கடைசி மாநிலங்கள் / யூனியன் பிரதேசம்**

- டாமன் டையூ - 618
- தாத்ரா நாகர் ஹவேலி - 775

### மக்கள்தொகை கணக்கெடுப்பின் பயன்கள்

**கீழ்காணும் விவரங்களை அறிய இயலும்**

- மொத்த மக்கள் தொகை
- ஆண் - பெண் வீதம்
- ஊரக நகர்ப்புற மக்கள்தொகை
- வயது பாகுபாடு
- மக்கள்தொகை அடர்த்தி
- கல்வியறிவு நிலை
- நகர்மயமாதல்
- தொழில்சார் வகைகள்

### இந்திய மக்கள் தொகை வளர்ச்சி

- இருபதாம் நூற்றாண்டின் இந்திய மக்கள்தொகை வளர்ச்சி வீதத்தை நான்கு நிலையாகப் பிரிக்கலாம்.

| மக்கள்தொகை கணக்கெடுப்பு வருடங்கள் | வளர்ச்சியின் தன்மை |
|---|---|
| 1901-1921 | மக்கள் தொகையின் தேக்கநிலை |
| 1921-1951 | சீரான வளர்ச்சி |
| 1951-1981 | விரைவான உயர்வளர்ச்சி |
| 1981-2011 | குறைவதற்கான அறிகுறி |

- 1921-ம் ஆண்டு வரை மக்கள்தொகை வளர்ச்சி குறைவான வீதத்தில் இருந்தது.
- அதன்பிறகு மக்கள்தொகை மிக வேகமாக அதிகரிக்கத் தொடங்கியது.
- எனவே “1921 - பெரும் பிரிவினை ஆண்டு” என வழங்கப்படுகிறது.

### மக்கள் தொகை கொள்கை

- உறுதியான முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றைக் கொண்ட ஒரு நிலையான மக்கள் தொகையை 2045 க்குள் அடைவதையே நீண்டகால நோக்கமாக கொண்டு, இந்திய அரசால் கி.பி 2000 பிப்ரவரி மாதத்தில் தேசிய மக்கள் தொகை கொள்கை (National Population Policy) வெளியிடப்பட்டது.
- வளரும் நாடுகளில் மக்கள்தொகைக் கொள்கையை செயல்படுத்திய முதல் நாடு “இந்தியா”
- 1952ல் நாடு தழுவிய குடும்பநலத் திட்டம் கொண்டுவரப்பட்டது.

## தேசிய மக்கள்தொகை கொள்கை (2000)

### குறுகிய கால நோக்கம்

- தேவையான கருத்தடை சாதனங்கள் வழங்கியும், சுகாதார கட்டமைப்பு வசதிகள், சுகாதார பணியாளர்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட பணிகள் மூலம் குழந்தை பராமரிப்பை மேம்படுத்துதல்.

### நீண்ட கால நோக்கம்

- 2045ம் ஆண்டிற்குள் மக்கள் தொகையை நிலைப்படுத்துதல்.
- மேலும், மொத்த செழுமை காலத்தை 2010-க்குள் மாற்றி அமைத்தலும் இதன் நோக்கமாகும்.

## மக்கள் தொகையை நிலைப்படுத்துவற்கான முறைகள்

- ஒரு நிலையான மக்கள்தொகையை 2045 க்குள் அடைய கீழ்க்கண்ட வழிகளை தேசிய மக்கள்தொகை கொள்கை கூறுகிறது.
- குழந்தைகள் இறப்பு வீதத்தை 100000 குழந்தைகளுக்கு 30க்கு கீழ் குறைத்தல்.
- மகப்பேறு காலத்தில் இறக்கும் தாய்மார்கள் வீதத்தை 100000 குழந்தைகளுக்கு 100 க்கும் கீழ் கொண்டு வருதல்.
- உலக அளவில் நோய் தடுப்பு முறை
- காலந்தாழ்த்தி திருமணத்தை ஊக்குவித்தல்
- 80% மகப்பேறானது, முறையான மருந்தகம், மருத்துவமனை, மருத்துவ நிறுவனங்கள் மற்றும் முறையான பயிற்சி உடைய பணியாளர்கள் மூலம் நடைபெறச் செய்தல்.
- இதனைச் செயல்படுத்த "தேசிய மக்கள்தொகைக் குழு" பிரதம மந்திரி தலைமையிலும், மாநிலக் குழு, முதலமைச்சர்கள் தலைமையிலும் தொடங்கப்பட்டு செயல்படுகிறது.

## மக்கள் தொகை கணக்கெடுப்பு - 2011 (தமிழ்நாடு)

| | |
|---|---|
| மொத்த மக்கள் தொகை | 7,21,38,958 |
| ஆண்கள் | 3,61,58,871 |
| பெண்கள் | 3,59,80,087 |
| மக்கள் அடர்த்தி | 555 |
| பாலின விகிதம் | 995 பெண்கள் /1000 ஆண்கள் |
| குழந்தைகள் பாலின விகிதம் | 946 பெண் / 1000 ஆண் |
| குழந்தைகள் வளர்ச்சி | 15.60% |

### கல்வியறிவு

| | |
|---|---|
| மொத்த கல்வியறிவு சதவீதம் | 80.33% |
| ஆண்கள் கல்வியறிவு | 86.81% |
| பெண்கள் கல்வியறிவு | 73.86% |

## தேசிய மக்கள் தொகை பதிவேடு

தேசிய மக்கள் தொகை பதிவேடு ((National Population Register (NPR) என்பது இந்திய அரசின், உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும், தலைமைப் பதிவாளர் மற்றும் இந்திய மக்கட்தொகை கணக்கிடும் தலைமை ஆணையாளர் (Registrar General and Census Commissioner of India), இந்தியாவில் குடியிருப்போர் தொடர்பான விவரங்களை பராமரிக்கும் பதிவேடாகும்.

மக்கள் தொகை பதிவேட்டை பராமரிக்கும் நோக்கம்

1. இந்திய அரசின் மற்றும் மாநில அரசுகளின் திட்டங்கள் மற்றும் சலுகைகள் அனைத்து பகுதி மக்களை சென்றடையச் செய்வது.
2. இந்திய அரசின் திட்டமிடலை மேம்படுத்துவது
3. இந்தியக் குடிமகன்களை கண்டறிவதுடன் ,இந்தியர் அல்லாதவரையும் கண்டறிவது.
4. நாட்டின் பாதுகாப்பை மேம்படுத்துவது

# கல்வியறிவு மற்றும் எழுத்தறிவு

- யுனெஸ்கோ நிறுவனத்தின் வரையறைப் படி, அன்றாட வாழ்வில் பயன்படும் சிறிய வாக்கியங்களை எழுதவும், வாசிக்கவும் தெரிந்த தன்மை எழுத்தறிவு எனப்படும்.
- கணக்கெடுப்பின் போதைய நடை முறையில் எழுத்தறிவின் வரையறை யானது, ”எந்த மொழியிலும் எழுத மற்றும் வாசிக்க தெரிந்த 7 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் எழுத்தறிவு பெற்றவர்கள் ஆவர்.”

## எழுத்தறிவின்மைக்கான காரணங்கள்

- பரவலாகியுள்ள வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை
- மிக விரைவான மக்கள்தொகைப் பெருக்கம் மற்றும் வளப் பற்றாக்குறையும்.
- கல்விக்காகும் அதிகபட்ச செலவு
- ஏற்கனவே படித்த மக்களுக்கு வேலையில்லா நிலை.
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவு.
- கல்வி உதவித் தொகை, ஊக்கத் தொகை போன்றவை கிராமப் பகுதிகளை சென்றடைவதில்லை.
- பெண் குழந்தைகளை படிக்க வைப்பதில் ஏற்படும் தடைகள்.

## கல்வி கற்பதை வலியுறுத்தும் அரசியலமைப்பில் விதிகள்

**விதி 21 A (அடிப்படை உரிமை)**

- 6 முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் கட்டாய மற்றும் இலவசக் கல்வியை பெற வேண்டும் என்பது அவர்களின் அடிப்படை உரிமை.
- இவ்விதி 86 வது அரசியலமைப்புச் சட்டதிருத்தம் 2002 ன் படி சேர்க்கப்பட்டது.

**விதி 45 (அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள்)**

- 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் கல்வி மற்றும், பாதுகாப்பினை உறுதி செய்தல் அரசின் கடமை.
- 86 வது சட்டத்திருத்தப்படி (2002) சேர்க்கப்பட்டது.

**விதி 51 A(K) (அடிப்படைக் கடமை)**

- 6 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு, கல்வி கற்பதற்கான வாய்ப்பினை வழங்குவது ஒவ்வொரு இந்தியக் குடிமகனான பெற்றோர் மற்றும் காப்பாளரின் கடமையாகும்.
- 86 வது சட்டத்திருத்தம் (2002) ன் படி சேர்க்கப்பட்டது.

### தேசிய கல்விக் கொள்கை (1986) (National Policy on Education)

- இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான கல்வி முறையைக் கொண்டு வருதல்.
- மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான பங்களிப்பின் மூலம், குறிக்கோளை நிறைவேற்றுதல்.
- கல்வியைப் பரவலாக்குவதும், அதிக முதலீடுகளை ஈர்ப்பதையும் குறித்து வலியுறுத்தல்.
- 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வியை கொண்டுவர தேசியத் திட்டத்தை ஏற்படுத்துதல்.
- இக்கொள்கைகளை செயல்படுத்தும் நோக்கில், கரும்பலகைத் திட்டம் (1992), மதிய உணவுத் திட்டம் (1995), சர்வ சிக்ஷ அபியான் (2002) போன்ற திட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

### தேசிய வயது வந்தோர் கல்வி திட்டம் (National Adult Education Programme)

- இத்திட்டம் அக்டோபர் 2, 1978 ல் தொடங்கப்பட்டது.
- கல்வி வழங்குதலும், எழுத்தறிவற்ற மக்களின் எழுத்தறிவை மேம்படுத்துவதும் (குறிப்பாக 15 முதல் 35 வயதிற்குட் பட்டோர்) இதன் நோக்கமாகும்.
- மக்களிடம், அரசின் திட்டங்கள், சட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து விளக்குவதும், அதனுடைய செயல்பாட்டுக்கும் உதவுதல்.
- இந்தியாவில் எழுத்தறிவற்றோர் விழுக்காட்டில் அதிக அளவு காணப்படும் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் போன்றோரின் கல்வி தரத்தை அதிகரித்தல்.

### ஊரக (கல்வி) எழுத்தறிவு செயல் திட்டம் (Rural Functional Literacy Programme)

- மே 1986 ல் தொடங்கப்பட்டது.
- நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் மூலம் திட்டம் செயல்படுத்தப்பட்டது.
- ஒவ்வொருவரும் ஒருவருக்கு கற்றுத் தருதல் (Each one teach one) என்ற நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டது
- மத்திய அரசு இதற்கான செலவை ஏற்றுக் கொண்டது, மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேசங்கள் திட்டத்தினை செயல் படுத்தின.

#### நோக்கங்கள்

- எழுதுவதற்கும், வாசிப்பதற்குமான திறமைகளை வளர்த்தல்.
- கற்போரிடம் அவர்களுக்கான உரிமைகள், கடமைகள், அரசின் பல்வேறு சமூக பொருளாதாரத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

#### இத்திட்டத்தின் தோல்விக்கான காரணம்

- தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஈடுபாடு குறைவு, கட்டமைப்புக் குறைபாடு, ஊழல், அரசின் நிதியை தவறாக பயன்படுத்தியமை, போன்றவற்றால் இத்திட்டம் தோல்வியடைந்து இறுதியில் 1995 ம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

#### மாதிரிப் பள்ளிகள்

- மத்திய அரசின் உதவியுடன் 6000 உயர்தர மாதிரிப் பள்ளிகளை நிறுவ 2008 ம் ஆண்டு முடிவு செய்யப்பட்டது.

### தேசிய எழுத்தறிவு திட்டம் (1988) (National Literacy Mission)

- எழுத்தறிவில் மிகப் பெரிய சாதனைகளை புரியும் பொருட்டு, தேசிய எழுத்தறிவு திட்டம் மே, 1988 ல் தொடங்கப்பட்டது.
- 15 முதல் 35 வயதிற்குட்பட்டவர்களுக்காக, எழுத்தறிவு செயல் திட்டத்தை கொண்டு வந்தது.

### தேசிய எழுத்தறிவு திட்டத்தின் இரு கூறுகள்

- மொத்த எழுத்தறிவு செயல்பாடு (Total Literacy Campaign)
- பின் எழுத்தறிவு செயல்பாடு (Post Literacy Campaign)

### ஜன் சிக்ஷன் சன்ஸ் தன் (JSS)

- இவை முறைசாரா தொழிற்கல்வி வழங்கும் கல்வி நிறுவனங்கள் ஆகும்.
- வயது வந்தோருக்குக் கல்வி மற்றும் தொழிற்கல்வியை தருவதே இதன் நோக்கமாகும்.

### சக்ஷார் பாரத் திட்டம் (SBM)

- மனிதவள மேம்பாட்டுத் துறை, மற்றும் இந்திய அரசு இணைந்து செப்டம்பர் 8, 2009 அன்று (உலக எழுத்தறிவு நாள்) தொடங்கப்பட்டது.
- வயது வந்தோர் கல்வியை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு, முறையான கல்வியைப் பெறாதவர்களின் எழுத்தறிவை மேம்படுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்டது.

### சர்வ சிக்ஷ அபியான் (SSA)

- தொடக்கக் கல்வியை அனைத்து மக்களுக்கும் கிடைக்கச் செய்யும் பொருட்டு கொண்டு வரப்பட்டது.
- நாடு முழுவதும், தர அடிப்படையிலான கல்வியின் தேவைக்காக இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- மத்திய, மாநில, மற்றும் பஞ்சாயத்து அரசுகளின் பங்களிப்பால் உருவாக்கப் பட்டது.

**நோக்கம்**

- 6 முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு பயனுள்ள தொடக்க கல்வியை 2010க்குள் கிடைக்கச் செய்வது.
- சமூக, பாலின, பகுதிவாரியான வேறுபாடுகளைக் களையவும், மக்கள் ஆர்வத்துடன் பள்ளி நிர்வாக அமைப்பில் பங்கேற்பதையும் நோக்கமாக கொண்டுள்ளது.
- வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்துதல்
- பயிற்சி மூலம், ஆளுமைகளை வளர்த்தல்.
- தேவையுடைய குழந்தைகள் மற்றும் பெண் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் தருதல்.

**குறிக்கோள்கள்**

- 2007-ம் ஆண்டிற்குள் அனைத்து குழந்தைகளும் "5" ஆம் வகுப்பு வரை கல்வி பயிலச் செய்தல்.
- 2010-ம் ஆண்டிற்குள் எட்டாம் வகுப்பு வரை கல்வி தருதல்.

### ராஷ்ட்ரிய மத்யமிக் சிக்ஷ அபியான் (RMSA)

- இடைநிலைக் கல்வியின் தரத்தை உயர்த்துதல் மற்றும் அனைவருக்கும் கிடைக்கும் படி செய்தல்.
- மார்ச் 2009 ல் தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்திற்கான, மத்திய மற்றும் மாநில அரசின் செலவு முறையே 75 : 25 (வடகிழக்கு மாநிலங்களில் 90 : 10)

- 10 ஆம் வகுப்பு வரையிலான கல்விக்கு உத்திரவாதம் அளிக்கிறது.
- சர்வ சிக்ஷ அபியான் திட்டத்தின் பயனாக பல லட்சம் குழந்தைகள் எட்டாம் வகுப்பு வரை பயின்றுள்ளதால், இடைநிலைக் கல்விக்கான தேவை மிக வேகமாக அதிகரித்துள்ளது.

**நோக்கம்**

- குடியிருப்புப் பகுதியிலிருந்து 5 கி.மீ தொலைவிற்குள் இடைநிலைக் கல்வி நிலையத்தையும், 7 முதல் 10 கி.மீ தொலைவிற்குள் மேல்நிலைக் கல்வி நிலையத்தையும் அமைத்தல்.
- இடைநிலைக் கல்வியானது, 2017ம் ஆண்டிற்குள் கிடைக்கும் படிச் செய்தல்.
- அனைவரும் (இடைநிலைக் கல்வி) கற்றறிந்த நிலையை 2020 க்குள் ஏற்படுத்துதல்.
- பொருளாதாரத்தில் பின் தங்கிய பிரிவினருக்கு அதிக முக்கியத்துவம் வழங்குதல்.
- குழந்தைகள், நலிவடைந்த சமூகத்தினர், கல்வியில் பின்தங்கிய மக்கள் போன்றோர் இடைநிலைக் கல்வி பெற வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.

## கல்வி கற்கும் உரிமை சட்டம் (Right to Education Act 2009)

- இந்தியக் கல்வி முறையை வலுவாக்க கொண்டு வரப்பட்ட இச்சட்டம் ஒரு மைல்கல் ஆகும்.
- இந்திய நிலப்பகுதியில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் தொடக்கக் கல்வி பெறுதல் இச்சட்டம் மூலம் அவசியமாகிறது.
- இதன்மூலம் கல்வி ஒவ்வொரு இந்தியனின் அடிப்படை உரிமையாகிறது.
- 6 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வியை அடிப்படை உரிமையாக்கிய சட்டத்திருத்தம் - 86 வது சட்டத் திருத்தம் 2002 ஆகும்.
- இதன்படி அனைத்து அரசுப் பள்ளிகளிலும் இலவசக் கல்வி வழங்கப் படுகிறது.
- தனியார் பள்ளிகளில், மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் 25 சதவீத பேருக்கு இலவசக் கல்வி வழங்க வேண்டும்.

**சிறப்பம்சம்**

- அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி
- தொடக்கக் கல்வியை (எட்டாம் வகுப்பு) முடிக்கும் வரை எந்தக் குழந்தையையும், பள்ளியை விட்டு வெளியே அனுப்புவதோ அல்லது தேர்வுகளில் தோல்வியடையச் செய்வதோ கூடாது.
- வயது சான்றிதழ் இல்லை என்ற காரணத்தால் குழந்தைகளின் கல்வி மறுக்கப்படக் கூடாது.
- தொடக்கக் கல்வி (எட்டாம் வகுப்பு) முடித்ததற்கான சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.
- ஆசிரியர் - மாணவர் விகிதம் சரியான அளவில் பின்பற்றப்பட வேண்டும்.
- அனைத்துத் தனியார் பள்ளிகளிலும், 25 சதவீத இடங்களை, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்காக ஒதுக்க வேண்டும்.

- ஐந்து வருடங்களுக்குள் கற்பிக்கத் தேவையான கல்வித் தகுதியை அனைத்து ஆசிரியர் களும் பெற்றிருத்தல் வேண்டும்.
- 3 வருடங்களுக்குள், அனைத்துப் பள்ளிகளும் நிர்ணயிக்கப்பட்ட கட்டமைப்பு வசதிகளை பெறுதல் வேண்டும்.

## தேசிய அறிவுசார் குழு அறிக்கை - 1 (National Knowledge Commission Report – 1)

- தேசிய அறிவுசார் குழு, ஜீன் 13, 2005ல் அமைக்கப்பட்டது.
- தலைவர் சாம் பிட்ரோடா
- அறிக்கை சமர்ப்பிக்கப்ட்டது ஜனவரி 12, 2007.

### செயல்பாடுகள்

- அனைத்து மக்களுக்கும் அறிவு கிடைக்கப்பெறச் செய்தல்.
- இளைஞர்களின் திறமைகள் மற்றும் உள்ளார்ந்த ஆற்றலை வெளிக் கொணர்தல்.
- அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையில் அறிவினை வளர்த்தல்.
- வேளாண்மை மற்றும் இயந்திரத்துறையில் அறிவினைப் பயன்படுத்துதல்.
- தொழில்நுட்ப உதவி கொண்டு, அரசின் சேவைகளை, வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும், திறமையானதாகவும் மாற்றுதல்.

### பரிந்துரைகள்

- 2015 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கையை 1500 ஆக உயர்த்துதல் வேண்டும் (தற்போதைய பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை 350)
- 50 தேசியப் பல்கலைக்கழகங்களை உருவாக்குதல் வேண்டும்.
- உயர்கல்வியை ஒழுங்குபடுத்த, ஒரு சுதந்திரமான அமைப்பை நிறுவுதல் வேண்டும்.
- ஒவ்வொரு 3 வருடங்களுக்கு ஒரு முறை பாட அமைப்பை (Syllabus) மாற்றுதல் வேண்டும்.
- கல்லூரிகளுக்கு தன்னாட்சி வழங்கப் படல் வேண்டும்.
- வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்கள், கல்வித்துறையில் பங்காற்ற வகை செய்ய வேண்டும்.
- அனைத்து அறிவுசார் மையங்களையும், இணைக்கும் அறிவு வலையம் (Knowledge Network) உருவாக்கப்பட வேண்டும்.
- ஒன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கில மொழியை கற்பிக்க வேண்டும்.
- மேற்கூறியவற்றை நடைமுறைப்படுத்த, தேசிய மொழிபெயர்ப்பு திட்டம் ஒன்றையும் (National Translation Mission) வலைத்தளத்தையும் உருவாக்குதல் வேண்டும்.

## தேசிய அறிவுசார் குழு அறிக்கை - II

- சாம் பிட்ரோடா தலைமையிலான தேசிய அறிவுசார் குழுவின் இரண்டாவது ஆண்டு ”தேசிய அறிக்கை ஜனவரி 21, 2008 ல் வெளியிடப்பட்டது.
- இரண்டு அறிக்கைகளிலும், மொத்தமாக 20 தலைப்புகளில், 160 செயல்பாட்டு பொருட்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- தேசிய அறிவுசார் குழுவின் பரிந்துரைகள் அனைத்தும், பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டத்தில் தொகுக்கப்பட்டு, தேவையான நிதி ஒதுக்கப்பட்டது.

- பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தருகிறது. விரைவான மற்றும் உள்ளடங்கிய வளர்ச்சிக்கும், திறமையான மற்றும் சமமான விரிவாக்கத்திற்கும் ஒரு கருவியாக கல்வியை பயன்படுத்த முன்னுரிமை அளிக்கிறது.
- உடல் நல அறிவியலில், அது தொடர்பான கல்வியில் கவனம் செலுத்த பரிந்துரை செய்கிறது.

**கல்விக் குழுக்கள்**

- பல்கலைக்கழக மானியக் குழு - 1948 (டாக்டர் ராதா கிருஷ்ணன் தலைமை)
- இடைநிலைக் கல்விக் குழு - 1953 (டாக்டர். இலட்சுமண முதலியார்)
- தேசிய கல்விக் குழு - 1968 (டி. எஸ் கோத்தாரி தலைமை)
- (10+2 பன்னிரெண்டாம் வகுப்பு கல்வி முறையை பரிந்துரைத்தது.)
- தேசிய கல்விக் கொள்கை -1986
- குறைந்தப் பட்ச கற்றல் திட்டம் - 1991
- கரும்பலகைத் திட்டம் - 1992

**தமிழ்நாட்டில் கல்வி நிறுவனங்கள் (விடுதலைக்கு முன்)**

- சென்னை மருத்துவப் பள்ளி -1835
- சென்னை மாநிலப் பள்ளி - 1836
- சென்னை கிறிஸ்துவ பள்ளி - 1840
- சென்னை பச்சையப்பன் பள்ளி- 1841
- இந்நான்கும் பின்னாளில் கல்லூரி அந்தஸ்தை பெற்றன.
- சென்னை ஓவியக் கல்லூரி - 1835
- சென்னை மாநிலக் கல்லூரி - 1851
- சென்னை மருத்துவக் கல்லூரி -1851
- (1835-ல் சென்னை மருத்துவப் பள்ளியாக தொடங்கப்பட்டது)
- பொறியியல் கல்லூரி கிண்டி -1857
- சட்டக் கல்லூரி சென்னை - 1891

**தமிழகப் பல்கலைக் கழகங்கள்**

- சென்னை பல்கலைக்கழகம் (சென்னை) -1857
- இந்திரா பல்கலைக் கழகம் - 1926
- அண்ணாமலை பல்கலைக்கழகம் - 1929

மேற்கண்ட 3 பல்கலைக்கழகங்களும், ஒருங்கிணைந்த மதராஸ் மாகாணமாக இருந்த போது தொடங்கப்பட்டன.

- மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் (மதுரை) - 1966
- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் (கோயம்புத்தூர்) -1971
- காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகம் (திண்டுக்கல்)- 1976
- அண்ணா பல்கலைக்கழகம் (சென்னை) - 1978
- தமிழ் பல்கலைக்கழகம் (தஞ்சாவூர்) - 1981

(ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் முடிவில் தொடங்கப்பட்டது)

- பாரதியார் பல்கலைக் கழகம் (கோயம்புத்தூர்) - 1982
- பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருச்சி) - 1982
- அன்னைதெரசா மகளிர் பல்கலைக் கழகம் (கொடைக்கானல்) - 1984
- அழகப்பா பல்கலைக்கழகம் (காரைக்குடி) - 1985
- தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம் (சென்னை)- 1987

- அவனாசிலிங்கம் பெண்கள் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனம் (கோயம்புத்தூர்) -1988
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (சென்னை) - 1989
- மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் (திருநெல்வேலி) - 1990
- தமிழ்நாடு டாக்டர். அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் (சென்னை) - 1997
- பெரியார் பல்கலைக்கழகம் (சேலம்) - 1997
- தமிழ் இணைய கல்விக் கழகம்- 2001
- திருவள்ளுவர் பல்கலைக் கழகம் (வேலூர்) - 2001
- தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகம் (சென்னை) - 2002
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் (சென்னை) - 2005
- பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் (தஞ்சாவூர்) - 2007
- தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் (சென்னை) - 2008
- மத்திய கடல்சார் பல்கலைக்கழகம் (சென்னை) - 2008
- மத்திய பல்கலைக் கழகம்(திருவாரூர்) - 2009

### மத்திய அரசு நிறுவனங்கள்

- தேசிய தொழில்நுட்பக் கழகம் (NIT) (திருச்சி) - 1964
- இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) (சென்னை) - 1959
- மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம் (CLRI) சென்னை - 1940
- தேசிய காச நோய் ஆராய்ச்சி நிலையம் (சென்னை) - 1956
- மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் (சென்னை) - 1947
- தேசிய கடல் தொழில்நுட்பக் கழகம் (சென்னை) - 1993
- மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிலையம் (CECRI) காரைக்குடி
- காடு ஆராய்ச்சி நிறுவனம்- கோயம்புத்தூர்
- சர்தார் வல்லபாய் பட்டேல் தேசிய ஜவுளி மேலாண்மை கல்வி நிறுவனம் - கோயம்புத்தூர்
- இந்திய மேலாண்மைக் கழகம் (திருச்சி) - 2011

### தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி

- 1953 → குலக்கல்வி திட்டம் (ராஜாஜி காலம்)
- 1956 → மதிய உணவுத் திட்டம் அறிமுகம் (காமராசர் கொண்டு வந்தது)
- 1960 → இலவசச் சீருடை
- 1964 → உயர்நிலைக் கல்வி (பத்தாம் வகுப்பு) வரை இலவச கல்வி
- 1965 → மும்மொழித் திட்டம் அறிமுகம்
- 1976 → முறைசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரகம்
- 1978 → மேல்நிலைப்பள்ளி கல்வி (10+2) முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஜீலை 1, 1982 → சத்துணவுத் திட்டம் அறிமுகம் (எம்.ஜி.ஆர் கொண்டு வந்தது)
- 1985 → எட்டாம் வகுப்பு வரை இலவச புத்தகம் மற்றும் சீருடை வழங்கப்பட்டது.
- 2001 → மெட்ரிக்குலேசன் இயக்குநரகம் தொடங்கப்பட்டது.
- 2010 → சமச்சீர் கல்வி முறை தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி அமைப்பு

### முத்துக்குமரன் கமிட்டி பரிந்துரை

- தொழில்நுட்பக் கல்விக்கான தனி இயக்குநரகம் தொடங்கப்பட்ட நாள் அக்டோபர் 14, 1957

## 2011 கணக்கெடுப்பு விவரம்

### இந்தியா

- இந்தியாவில் எழுத்தறிவு விகிதம் → 74.04%
- ஆண்கள் எழுத்தறிவு விகிதம் → 82.14%
- பெண்கள் எழுத்தறிவு விகிதம் → 65.64%
- அதிக எழுத்தறிவு பெற்ற மாநிலம் → கேரளா

### தமிழ்நாடு

- தமிழ்நாட்டில் எழுத்தறிவு விகிதம் → 80.33%
- ஆண்கள் எழுத்தறிவு விகிதம் → 86.81%
- பெண்கள் எழுத்தறிவு விகிதம் → 73.86%

### எழுத்தறிவு அதிகமுள்ள 5 மாவட்டங்கள்

- கன்னியாகுமரி → 92.1%
- சென்னை → 90.3%
- தூத்துக்குடி → 86.5%
- நீலகிரி → 85.7%
- காஞ்சிபுரம் → 85.2%

### எழுத்தறிவு குறைவான 5 மாவட்டங்கள்

- தர்மபுரி, அரியலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, ஈரோடு

# வேலைவாய்ப்பின்மை

## வேலையின்மை

- தொழிலாளர்கள் வேலை செய்யும் தகுதியும் விருப்பமும் இருந்தும், வேலை கிடைக்காமல் இருப்பது ஆகும்.

## வேலையின்மை அளவீடுகள்

- ஒரு நபர், ஒரு நாளைக்கு 8 மணி நேரங்கள் போன்று ஒரு வருடத்திற்கு 73 நாட்களுக்கு வேலையில் நியமனம் செய்யப்படுவதையே குறிக்கிறது.
- பகவதி கமிட்டி (1973) பரிந்துரையின்படி வேலையின்மையை 3 வகையாகப் பிரிக்கலாம்.

### பொதுவான முதன்மை நிலை வேலையின்மை

- வருடத்தில் பாதி நாட்களுக்கு மேல் அதிகமான நபர்கள் வேலையில்லாத நிலையில் இருப்பதைக் குறிக்கும்.
- இதற்கு வெளிப்படையான வேலையின்மை என்று பொருள்.

### வாராந்திர நிலை வேலையின்மை

- வாரத்திற்கு ஒரு மணி நேரம் கூட அதிகமான நபர்களுக்கு வேலை கிடைக்காமையைக் குறிக்கும்.

### தினமும் வேலையின்மை நிலை

- வாரத்தில் ஒரு நாள் அல்லது சில நாட்கள் அதிகமான நபர்களுக்கு வேலையில்லாமையைக் குறிக்கும்.

## வேலையின்மைக்கான காரணங்கள்

- அதிக மக்கள் தொகை வளர்ச்சி
- போதுமான பொருளாதார வளர்ச்சி வீதமின்மை
- வேளாண்மை தவிர பிற துறைகளில் வேலை வாய்ப்பு குறைவு.
- பருவ கால வேலைவாய்ப்பு
- கூட்டுக் குடும்ப அமைப்பு
- இந்தியப் பல்கலைக்கழகத்திலிருந்து பெருகி வரும் மாணவர்கள்
- குறைவான தொழில் வளர்ச்சி

## வேலையின்மையின் வகைகள்

### அமைப்பு வேலையின்மை

- நாட்டின் பொருளாதார அமைப்பு முறைகளின் காரணமாக ஏற்படுகிறது.
- (எ.கா) உற்பத்தி குறைவாக இருப்பதனால், அதிகபட்ச வேலைவாய்ப்பை உருவாக்க இயலவில்லை.

### குறை வேலையுடைமை

- தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறாத நிலையையே குறை வேலையுடைமை ஆகும்.
- வேலைகள் இருப்பினும், அதை செய்வதற்கு மக்கள் தயார் இல்லாத நிலையில் காணப்படுவர்.

- படித்த வேலையின்மை, இதற்குள் அடங்கும்.

**உராய்வு வேலையின்மை**

- சந்தை நிலையில் ஏற்படும் மாற்றங்களால், தேவை அளிப்பு இவற்றில் ஏற்படும் வேறுபாட்டால் ஏற்படுவது உராய்வு வேலையின்மை.

**பருவ கால வேலையின்மை**

- வேளாண்மையில் காணப்படும் வேலையின்மை, பருவகால வேலையின்மை ஆகும்.
- வருடத்தின் சில பருவங்களுக்கு மட்டுமே வேலை கிடைக்கும் நிலையாகும்.

**சுழற்சி வேலையின்மை**

- தொழிலாளர்கள் உபரியாக கிடைக்கும் காலங்களில் இவ்வகை வேலையின்மை ஏற்படுகிறது.

## இந்திய அளவில், கிராம - நகர்ப்புற வேலையின்மை

| வேலையின்மை | கிராம புறம் | நகர்ப் புறம் | மொத்தம் |
|---|---|---|---|
| முதன்மை நிலை | 1.6 | 3.4 | 2.0 |
| வாராந்திர நிலை | 3.3 | 4.2 | 3.6 |
| தினமும் நிலை | 6.8 | 5.6 | 6.6 |

## ஐந்தாண்டுத் திட்டங்களில் வேலை வாய்ப்புக் கொள்கை

**7வது ஐந்தாண்டுத் திட்டம்**

- பொதுவான நிலை அடிப்படையில் வேலைவாய்ப்புகளையும் வளர்ச்சி வீதத்தையும் அதிகரித்தல்.

**8வது ஐந்தாண்டு திட்டம்**

- கிபி 2000க்குள் ஆண்டுக்கு 3% வேலைவாய்ப்பை உருவாக்குதல்.
- இதன் பொருட்டு பல்வேறு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டன.

**9 வது ஐந்தாண்டு திட்டம்**

- வேளாண்மை, இந்தியாவின் பெரும் வேலைவாய்ப்பு களஞ்சியமாக விளங்குவதால், வேளாண்மையில் பொது முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் அதன்மூலம் அதிகப்படியான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்**

- ஆண்டிற்கு 10 மில்லியன் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் 8% உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை அடைதல், மற்றும் வேலைவாய்ப்பு திட்டங்கள் மூலம் மறைமுக வேலை வாய்ப்பை உருவாக்குதல் போன்றவை.

**பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம்**

- நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புகளை மேம்படுத்துதல்.
- வளர்ச்சிக் குறைவான பகுதிகள் மற்றும் துறைகளில் வேலைவாய்ப்பினை அதிகரித்தல்.
- நகர்ப்புற ஏழைகளுக்கும் வேலை காப்பீட்டை விரிவுபடுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## முறைசாரா தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புச் சட்டம் - 2008

- கூலித் தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்பவர்கள் அல்லது சுய வேலைவாய்ப்பு பெறுவோர் ஆகியோர் மொத்த மக்கள் தொகையில் பெரும்பான்மையாக உள்ளனர்.
- நாட்டு உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு இவர்களது பங்களிப்பு ஆகும்.

- இச்சட்டத்தின் கீழ் 2009 ம் வருடம் புதிய நெறிமுறைகள் உருவாக்கப்பட்டன.
- இதன்படி தேசிய சமூக பாதுகாப்பு ஆணையம் மற்றும் மாநில சமூக பாதுகாப்பு ஆணையம் போன்றவை ஆரம்பிக்கப்பட்டன.
- இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட திட்டங்கள்.
  - ஆம் ஆத்மி பீமா யோஜனா
  - தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டம்
  - உடல் நல காப்பீட்டு திட்டம்

**ஆம் ஆத்மி பீமா யோஜனா**

- கிராமப்புற நிலமற்ற, வீடுகளற்ற மக்களுக்கு உயிர் மற்றும் ஊனத்திற்கான காப்பீடு வழங்குகிறது.
- விபத்தினால் இறந்தவர் அல்லது நிரந்தர ஊனம் (விபத்தின் காரணமாக) → காப்பீட்டு தொகை 75,000/-
- பாதி ஊனம் (விபத்தினால்) → 37,500/-
- இத்திட்டத் தொகையை மத்திய மாநில அரசுகள் தங்களுக்குள் 50:50 விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.
- வேலைவாய்ப்பு உருவாக்கம் தொடர்பான மாண்டேக் சிங் அலுவாலியா தலைமையிலான குழு
- மத்திய திட்டக் குழு, மாண்டேக் சிங் அலுவாலியா தலைமையில், வேலை வாய்ப்பு, மற்றும் வேலையின்மை நிலை குறித்து அறிய ஒரு குழுவை நியமித்தது.
- இக்குழு 2001-ம் ஆண்டில் அறிக்கை சமர்ப்பித்தது.

## அறிக்கையின் எடுகோள்கள்

- தனியார்த்துறை முதலீட்டின் மூலம் வேளாண்மையை ஊக்குவித்தல்.
- உணவுத் தொழில் நுட்பத்தில் பெரிய நிறுவனங்களை ஈடுபட செய்தல்.
- சில்லறை வர்த்தகத் துறையில் பெரிய நிறுவனங்களையும், புதிய யுக்திகளையும் அறிமுகப்படுத்துதல்.
- போக்குவரத்து துறையை புதிய வரவு நிறுவனங்கள் மூலம் அதன் செயல்திறனை அதிகரித்தல்.
- தொழிலாளர் சட்டங்களை சீரமைத்தல்.
- ஒப்பந்தத் தொழிலாளர் (சீரமைப்பு மற்றும் தடை) சட்டத்தைத் திருத்தம் செய்தல்.

## எஸ்.பி.குப்தா சிறப்பு குழு 2001- ம் ஆண்டு மத்திய அரசால் நியமிக்கப் பட்டது

**நோக்கம்**

- 10 மில்லியன் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வழிமுறைகளை ஆராய்தல்.

## சுய வேலைவாய்ப்பு திட்டங்கள்

- வேலையில்லா மற்றும் குறைவேலை யுடைய கிராம வாழ் ஆண், பெண்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் திட்டங்கள் ஆகும்.

**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்**

(i) IRDP (Integrated Rural Development Program)

- 1980 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- கிராம மக்களுக்கு உதவி செய்யவும், பொருளாதார வளர்ச்சி நலன்களை, கிராமப்புற பகுதிகள் பெற்றுப் பயனடைவதை நோக்கமாகக் கொண்டது.

**கிராமப்புற இளைஞர்களுக் கான சுய வேலைவாய்ப்பு பயிற்சி (1979)**

(ii) TRYSEM (Training Rural Youth for Self-Employment)

**கிராம மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான வளர்ச்சித் திட்டம் (1982)**

(iii) DWCRA (Development of Women & Children in Rural Areas)

- பெண்கள் குழுக்கள் அமைத்து அதன் மூலம் வருமானம் ஈட்டும் செயல்களில் ஈடுபடுதல் மற்றும் சமூக பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைதல்.

(iv) MWS (million Wells Scheme) **மில்லியன்**

### கிணறுகள் திட்டம் (1988-1989)

- கிராமப்புற தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு இலவசமாக திறந்த வெளிக் கிணறுகளை அமைத்துக் கொடுத்தல்.

### ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கர் யோஜனா SGSY (1999, ஏப்ரல் 1)

- IRDP, DWCRA, Ganga Kalyan Yojana, MWS, SITRA மேற்கண்ட அனைத்து திட்டங்களும் இணைக்கப்பட்டு இத்திட்டம் கொண்டு வரப்பட்டது.
- சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.
- தற்போது 2009 முதல் இத்திட்டம் "தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் (NRLM) அல்லது அஜிவீகா என வழங்கப்படுகிறது.

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு (2006) (MNREGA)

- தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் (2005) என்பது MNREGA என பெயர் மாற்றப்பட்டது.

**சிறப்பம்சம்**

- 10 ஆண்டிற்குள் 100 நாட்கள் வேலைக்கு உத்திரவாதம் அளிப்பது.
- வேலைக்கு விண்ணப்பித்து 15 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நபருக்கு வேலை கிடைக்கப் பெற வேண்டும்.
- 15 நாட்களுக்குள் வேலை தரப்படவில்லை யெனில் தினக் கூலி (வேலையில்லாமல் கூலி) வழங்கப்பட வேண்டும்.
- இதற்கான பணிகளை ஒதுக்கித் தருவது கிராம சபையின் பணி
- திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்தலில் பஞ்சாயத்து அமைப்புகளின் பங்கு முக்கியமானது.

### தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (NREP (1980) (National Rural Employment Programme)

- இலாபகரமான வேலைவாய்ப்பு கிராம மக்களுக்கு வழங்குவது.

### ஜவஹர் ரோஜ்கர் யோஜனா (JRY) 1989

- கிராமங்களில் வேலைவாய்ப்பற்ற வர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குதல் தொடர்பான திட்டம்.

**I. நேரு ரோஜ்கர் யோஜனா** (NRY) 1989

- நகர்ப்புறங்களில் வேலையற்ற மக்களுக்கு வேலை அளிக்கும் திட்டம்.

### கூலி வேலைவாய்ப்புத் திட்டம்

- கிராமப்புற (அல்லது) நகர்ப்புற மக்களுக்கு, கூலி வேலைவாய்ப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**எ.கா**

1. வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (1993, அக்டோபர் 2)

- வேலையில்லா கிராமப்புற மக்களுக்கு வேலையினை உறுதி செய்யும் திட்டமாகத் திகழ்கிறது.

**2. ஜவஹர் கிராம சம்ரிதி யோஜனா (1999)**

- கிராமப்புற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டம். இதற்கான நிதியை 75:25 என்ற விகிதத்தில் மத்திய மாநில அரசுகள் வழங்குகின்றன.

**3. சம்பூர்ண கிராமின் ரோஸ்கர் யோஜனா (2001)**

- கிராமப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் கூலி வேலைவாய்ப்புத் திட்டம். உணவுப் பாதுகாப்பை இது உறுதி செய்கிறது. சமூக பொருளாதார கட்டமைப்புகளை பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- பின்னர் இத்திட்டம் "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துடன் சேர்க்கப்பட்டது.

**4. பிரதம மந்திரி கிராம திட்டம் 2000-2001**

- நிலையான மனித வளர்ச்சியை கிராம அளவில் எட்டுதல் இதன் நோக்கமாகும்.
- இது 6 முக்கிய துறைகளின் முன்னேற்றத்திற்கு உதவுகிறது.
- உடல்நலம், கல்வி, உறைவிடம், குடிநீர், ஊட்டச்சத்து, மின்னோட்டவசதி

## பொன் விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

**5. ஸ்வர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கர் யோஜனா (1997)**

- இத்திட்டம் 2 முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.
  - நகர்ப்புற சுய வேலைவாய்ப்பு திட்டம்
  - நகர்ப்புற கூலி வேலைவாய்ப்பு திட்டம்
  - நகர்ப்புறங்களில் வாழும் வேலையில்லா ஏழைகளுக்கு, சுய வேலைவாய்ப்பையோ அல்லது கூலி வேலைவாய்ப்பையோ ஏற்படுத்தித் தருகிறது.
- 30% → பெண்கள், 3% → ஊனமுற்றோர்

## திறன் வளர்த்தல்

- மத்திய அரசின் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திறன் வளர் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- இத்திட்டம் மூலம், 2022 ம் ஆண்டிற்குள் 500 மில்லியன் திறன் பெற்றவர்களை உருவாக்குதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# வறுமை மற்றும் வறுமை ஒழிப்பு

- உலக வங்கி (1990 ம் ஆண்டு) வரையறைப்படி, "வறுமை என்பது, குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தை அடைய முடியாத, திறனற்ற நிலையை குறிக்கிறது."

**தாண்டேகர் (1981) கூற்றுப்படி**

- எப்படியாயினும் வறுமை என்பது போதுமான வருமானத்தின் தேவையே ஆகும்.

**வகைகள்**

- முழு வறுமை
- ஒப்பீட்டு வறுமை
- தற்காலிக வறுமை
- முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை வறுமை
- கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழ்மை

**முழு வறுமை**

- மக்களுக்கு போதுமான உணவு, உடை உறைவிடம் இல்லாத நிலையை முழு வறுமை என்கிறோம்.

**ஒப்பீட்டு வறுமை**

- மக்களின் பல்வேறு குழுக்களிடையே (உயர்தர, நடுத்தர, குறைவான வருமானம் பெறுபவர்கள்)

**காணப்படும் வேறுபாடுகள்**

- ஒரே குழுவினரிடையே காணப்படும் வேறுபாடுகள்
- பல நாடுகளில் வாழும் மக்களிடையே காணப்படும் வேறுபாடுகள் இவற்றைக் குறிப்பதாகும்.
- மக்கள் தொகையைப் பல்வேறு பிரிவினராக பிரித்துப் பார்த்து, உயர் வருமானம் பெறும் 20 சதவீதத்தினரை ஒப்பு நோக்கலை ஒப்பீட்டு வறுமை எனலாம்.

**(எ,கா)**

- 1 லட்சம் சம்பளம் வாங்கும் நபர் முன், 10000 ரூபாய் சம்பளம் வாங்குபவர், ஏழையாக (அல்லது) வறுமையில் உள்ளவராகக் கருதப்படுகிறார்.

**I. தற்காலிக வறுமை (அ) முற்றிய வறுமை**

- இந்தியா போன்ற நாடுகளில் பருவமழை குறையும் போது, விவசாயம் பொய்த்து அதனால் உழவர்கள் தற்காலிகமான ஏழ்மை நிலையில் உழல்கிறார்கள்.
- இவ்வறுமை நிலையிலேயே அவர்கள் நீண்ட காலமாக வாழும் போது அந்நிலை முற்றிய வறுமை (அ) அமைப்பு சார்ந்த வறுமை எனப்படும்.

**2. முதல் நிலை வறுமை மற்றும் இரண்டாம் நிலை வறுமை**

- ரவுண்டிரி (1901) என்பவர் இவ்விரு வகை வறுமைகளுக்கிடையேயான வேறுபாட்டை விளக்கினார்.

**முதல் நிலை வறுமை**

- குடும்பங்களில் வாழ்க்கை நடத்த மொத்த சம்பாத்தியங்களைக் கொண்டு, குறைந்தபட்ச, அத்தியாவசிய பொருள் களைக் கூட வாங்க முடியாத பற்றாக் குறையான நிலையைக் குறிக்கும்.

**இரண்டாம் நிலை வறுமை**

- குடும்பங்களின் சம்பாத்தியம் வாழ்க்கை நடத்த போதுமானதாக இருக்கும். ஆனால் அதன் ஒரு பகுதியானது உபயோகமான (அ) உபயோகமற்ற செலவுகளுக்கான செலவிடப்படும் (வீணான செலவுகளால், வறுமை ஏற்படுகிறது) முதல் நிலை வறுமையைக் காட்டிலும், இரண்டாம் நிலை வறுமை மோசமானது. (எ.கா.) குடிப்பழக்கம்

**3. கிராமப்புற ஏழ்மை மற்றும் நகர்ப்புற ஏழ்மை**

**கிராமப்புற ஏழ்மை**

- கிராமங்களில் வாழும் பெரும்பான்மை யான ஏழை மக்கள் நிலங்களை சொந்தமாக வைத்திருப்பதில்லை எனவே கூலி வேலையே செய்கின்றனர் அதிலும் ஒரு சில மாதங்களே வேலை கிடைக்கும் இது கிராமப்புற ஏழ்மை எனப்படும்.

**நகர்ப்புற ஏழ்மை**

- நகர்ப்புறங்களில் வாழும் மக்கள், நீண்ட நேரம் உழைத்து மிகக்குறைவான வருமானத்தையே பெறுகின்றனர். ஒரு நாட்டின் ஏழ்மை நிலை இரண்டு காரணிகளைப் பொறுத்தது.
  - நாட்டு வருமானத்தின் சராசரி நிலை
  - நாட்டுப் வருமான பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வின் அளவு.

## வறுமைக்கோடு

- வறுமைக்கோடு என்பது, குறைந்தபட்ச வருமானம், நுகர்வு அல்லது பண்டங்கள் மற்றும் பணியினை ஒரு தனிநபர் பெறும் வழியினைக் குறிக்கும்.

## வறுமைக் கோட்டினை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட குழுக்கள்

- லக்டவாலா குழு - வறுமைக்கோடு பற்றிய முதல் வரையறை
- சுரேஷ் டெண்டுல்கர் குழு
  - இக்குழு தற்போதைய வறுமைக் கோட்டிற்கான புது வரையறையை வழங்கியுள்ளது.
  - இது தவிர ”சக்சேனா தலைமையில் ஒரு குழு திட்டக் குழுவால் அமைக்கப் பட்டது.
  - ரங்கராஜன் தலைமையிலான குழு, வறுமைக் கோட்டில் வாழும் மக்களின் நல்வாழ்விற்கான திட்டங்களை ஆய்வு செய்ய ஏற்படுத்தப்பட்டது.

## சுரேஷ் டெண்டுல்கரின் புதிய வரையறை (2009 டிசம்பர்)

- தற்போது வறுமைக் கோடானது கலோரி அடிப்படையில் அல்லாமல், மாதந்தோறும் மக்கள் செலவு செய்யும் பணத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

| Monthly Percapita Consumption Expenditure | |
|---|---|
| நகர்ப்புறம் | 1000 ரூபாய் / மாதம் |
| கிராமம் | 816 ரூபாய் / மாதம் |


## இந்தியாவில் வறுமைக்கான காரணங்கள்

- வேலையின்மை (அல்லது) குறைவேலை யுடைமை.
- மக்கள் தொகை அழுத்தம் அதிக மக்கள் தொகை காரணமாக ஊதியம் ஈட்டும்

ஒரு நபரைப் பொருளாதார ரீதியாக பலர் சார்ந்துள்ளளனர். இது வறுமைக்கு வழிகோலுகிறது.

- இந்திய வேளாண்மையைச் சார்ந்து அதிக மக்கள் உள்ளனர். மேலும் உற்பத்தித் திறனும் குறைவாகவே உள்ளது.
- மூலதனம் மிகக் குறைவாகவே உள்ளது
- கல்வியறிவின்மை
- கிராமப்புறங்களில் நிதி குறைவாகவே கிடைக்கிறது. மேலும் சந்தை வாய்ப்புகளும் குறைவு.
- பொது விநியோகத் திட்டம் சரியான முறையில் அனைத்து தரப்பினரையும் சென்று அடையவில்லை.

## வறுமை சுழற்சி




## வறுமைக்கெதிரான கொள்கைகள்

- மறைமுக நடவடிக்கை
- நேரடியான நடவடிக்கை

## மறைமுக நடவடிக்கைகள்

### நிலச் சீர்திருத்தம்

- அரசு, நிலச் சீர்திருத்த சட்டங்கள் மூலம், அனைத்து மக்களுக்கும் நிலங்கள் கிடைக்க வழி ஏற்படுகிறது. எனவே கிராமப்புற வறுமை குறையும்.

**(எ.கா)**

- ஜமீன்தார் முறை ஒழிப்பு
- நில உச்ச வரம்பு சட்டம்
- நில ஒருங்கிணைப்பு முதலான சட்டங்கள்
- குத்தகைக்காரர் சட்டம்

### உள்நாட்டு உற்பத்தியில் அதிக வளர்ச்சி

- வளர்ந்து வரும் இந்திய மக்கள் தொகையை ஈடுகட்ட அதிக அளவு வளர்ச்சி தேவைப்படுகிறது. அதன் மூலம் வறுமை ஒழிய வாய்ப்புக் கிடைக்கும்.

### மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தல்

- அதிக மக்கள் தொகை வளர்ச்சி காரணமாக, நாட்டின் சராசரி வருமானம், தலா வருமானம் குறைகிறது.
- எனவே மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடையும்.

## நேரடியான நடவடிக்கை

### வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

- சுய வேலைவாய்ப்புத் திட்டம்
- கூலி வேலைவாய்ப்புத் திட்டங்கள்
- சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்
- உணவு பாதுகாப்புத் திட்டங்கள்

### சுய வேலைவாய்ப்பு திட்டம்

- வேலையில்லா மற்றும் குறை வேலையுடைய கிராம மக்களுக்கு சுய தொழில் தொடங்கிட உதவும் திட்டங்கள் ஆகும்.

**(எ.கா)**

- கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் (1980) (IRDA)
- கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புப் பயிற்சி (1979) (TRYSEM)

- ▶ கிராமமகளிர் மற்றும் குழந்தைகளுக்கான வளர்ச்சித் திட்டம் (DWCRA) (1982)
- ▶ மில்லியன் கிணறுகள் திட்டம் (MWS)
- ▶ ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கர் யோஜனா (SGSY) (1999)
- ▶ தற்போது 2009 முதல் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் (National Rural Livelihood Mission) (NRLM) அல்லது அஜீவிகா (Ajveeka) என செயல்படுத்தப்படுகிறது.

**கூலி வேலைவாய்ப்புத் திட்டம்**

- ▶ கிராமப்புற மக்களுக்கு கூலி வேலை வாய்ப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எ.கா
  - வேலைவாயப்பு உறுதித் திட்டம் (1993, அக்டோபர் 2)
  - ஜவஹர் கிராம் சம்ரிதி யோஜனா
  - சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா (2001)
  - பிரதம மந்திரி (கிராமதோயா) வேலைவாய்ப்பு திட்டம் (200-2001)
  - பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (1997) (ஸ்வர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கர் யோஜனா)
  - மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (2005)
  - ஜவஹர் ரோஜ்கர் யோஜனா (1989) (கிராமப்புற மக்கள்)
  - நேரு ரோஜ்கர் யோஜன் (1989) (நகர்ப்புற மக்கள்)
  - ஜெய் பிரகாஷ் நாராயண் வேலைவாய்ப்பு உறுதி திட்டம் (2002-2003)

**சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்**

- ▶ நாட்டு சமூக உதவித் திட்டம் (1995)
  - இந்திரா காந்தி தேசிய முதியோர் ஒய்வூதிய திட்டம்.
  - இந்திரா காந்தி தேசிய விதவைகள் ஒய்வூதிய திட்டம்
  - இந்திரா காந்தி தேசிய ஊனமுற்றோர் ஒய்வூதிய திட்டம்
- ▶ இந்திரா ஆவாஸ் யோஜனா (1985)
- ▶ ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JNNURM) (2005)
- ▶ பாரத் நிர்மான் (2005)

**உணவு பாதுகாப்புத் திட்டம்**

- ▶ வேலைக்கு உணவு திட்டம் (2001)
- ▶ அந்த்யோதயா அன்ன யோஜனா (2000)
  - பொது விநியோகத் திட்டத்தின் கீழ் உணவு வழங்கல்
- ▶ அன்னபூர்ணா (1999-2000)
  - இலவச உணவு தானியங்கள் வழங்குதல்
- ▶ தேசிய மதிய உணவுத் திட்டம் (பள்ளி குழந்தைகள்) (1995)

# உடல் நலத்திற்கான அரசின் கொள்கைகள்

- உடல்நலம் (சுகாதாரம்) மற்றும் குடும்ப நலம் தொடர்புடைய பல்வேறு திட்டங்கள், பரவும் நோய்களின் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, இந்திய மருத்துவ முறைகள் தொடர்பாக கருத்தாக்கத்தை ஏற்படுத்துதல், இப்பணிகளை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் செயல்படுத்துகிறது.

## தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் (NRHM)

- தரமான மருத்துவ சேவை, ஊரகப் பகுதியிலுள்ள மக்கள் எளிதாக அடையும் வகையில் 2005-ம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- உடல்நலத்தை உறுதி செய்யும் பொருட்டு குடிநீர், சுகாதாரம், கல்வி, உணவூட்டம் பாலின சமநிலை என அனைத்தையும் உறுதி செய்கிறது.
- உடல்நலத்திற்காக செலவு செய்யும் நிதி மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2-3% இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

**நோக்கங்கள்**

- IMR → 30/1000
- MMR → 100/100000
- மலேரியா, டெங்கு, இவற்றால் இறப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
- பைலேரியா நோயை 2015-க்குள் ஒழித்தல்.
- காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மீட்பினை 85% ஆக அதிகரித்தல் வேண்டும்.
- அனைத்து சமூக உடல்நல மையங்களிலும் ஒரே மாதிரியான மருத்துவ தரத்தை தருதல்.
- இத்திட்டமானது மருத்துவ வசதிகளை பஞ்சாயத்துகள் மூலம் அனைத்து மக்களுக்கும் கிடைக்கச் செய்கிறது.
- ASHA (Accredited Social Health Activist) என்றழைக்கப்படும் புதிய கருத்துரு இத்திட்டத்தில் உருவாக்கப்பட்டது. இதன்படி கிராமப்பகுதிகளில் உள்ள பெண்களுக்கு உடல் நல மேம்பாடு குறித்த பயிற்சி வழங்கப்படுகிறது.
- வட்டாரப் பகுதிகளில் சுகாதாரம் மற்றும் சுத்தம் பேணுதல் மக்களிடையே உடல்நலம் மற்றும் தடுப்பு மருந்துகள் குறித்த விஷயங்களைப் பரப்புதல் போன்றவை அவர்களின் பணியாகும்.

**திட்ட வெற்றிகள்**

- போலியோ ஒழிப்பு
- ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கு எதிரான தடுப்பூசி (9 மில்லியன் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது)

- குழந்தைகளுக்குப் பரவும் தட்டம்மை ஒழிப்பு
- 2 மில்லியன் பிரசவங்கள் ஆரம்ப சுகாதார மையங்களிலோ (அ) மருத்துவ மனைகளிலோ நடைபெற்றன.
- மேற்கூறிய அனைத்தும் ஒரு வருடத்தில் நிறைவேற்றப்பட்டன.
- 1 மில்லியன் "கிராம உடல்நலம் மற்றும் சுகாதாரக் குழுக்கள்" மூலம் பள்ளிகளில் சுகாதாரத் திட்டங்கள் தொடங்கப் பட்டன.

## கர்ப்பிணிப் பெண்கள் நலத் திட்டம்

### கர்ப்பிணிப் பெண்கள் இறப்பு விதம் (MMR)

- 1 லட்சம் பேருக்கு, எத்தனை கர்ப்பிணிப் பெண்கள் பிரசவத்தின் போதோ, அல்லது பிரசவம் முடிந்த 42 நாட்களிலோ இறக்கின்றனர் என்பதே MMR ஆகும்.

### ஜனனி சுரக்ஷா யோஜனா

- தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தின் கீழ் 2005-ல் கொண்டு வரப்பட்ட திட்டமாகும்.
- ஏழை கர்ப்பிணிப் பெண்கள் முறையான மருத்துவ நிறுவனங்கள் மூலம் பிரசவம் மேற்கொள்ளுதலை ஊக்குவித்தல்.
- 100% மத்திய அரசின் திட்டமாகும்.
- குழந்தைகள் பிறப்பிற்குப் பின்னான மருத்துவ சேவையும் வழங்கப்படுகிறது.
- நிதியுதவி வழங்கப்படுகிறது.

### ஜனனி சிசு சுரக்ஷ கார்யக்ராம்

- 2011ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அரசு மருத்துமனைகள் மற்றும் பொது சுகாதார நிறுவனங்களில் நடைபெறும் அனைத்துப் பிரசவங்களுக்கும் இலவசமாகவே செய்யப்படுகின்றன.

### குழந்தை நலத் திட்டம் சிசு இறப்பு வீதம்

- பிறந்து ஒரு வருடத்திற்குள் இறக்கும் குழந்தைகளின் வீதம் ஆகும். 1000 பேருக்கு எத்தனை குழந்தைகள் இறக்கின்றனவோ அதுவே சிசு இறப்பு வீதம் எனப்படும்.

### நவ்ஜத் சிசு சுரக்ஷ கார்யக்ராம்

- பிறந்த குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்தும் பொருட்டு, உடல்நலப் பணியாளர்களுக்கு பயிற்சியளித்தலே இதன் நோக்கமாகும்.

## தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்

- தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் 1955-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- 1982 முதல் பல மருந்துகள் உபயோக முறையும் கொண்டுவரப்பட்டது.
- 1983-ம் ஆண்டு தொழுநோய் ஒழிப்புத் திட்டம் கொண்டுவரப்பட்டது.
- 1991 ம் ஆண்டு உலக சுகாதார அமைப்பு (WHO) 2000ம் ஆண்டிற்குள் தொழு நோயை ஒழிக்கத் தீர்மானம் கொண்டு வந்தது.

### இதன் சிறப்புகள்

- ஒருங்கிணைந்த பரவலாக்கப்பட்ட தொழு நோய் தொடர்பான சேவைகளை பொது சுகாதார மையங்கள் மூலம் வழங்குதல்.
- பொது சுகாதார சேவை மையங்களில் பணிபுரிவோருக்கு திறன் வளர் பயிற்சிகளை நடத்தல்.
- கல்வி மற்றும் தொலைத் தொடர்பு விதிகள் மூலம் குறித்த தகவல்களை விரைவில் பெறுதல்.
- ஊனத்தைத் தடுத்தல் மற்றும் மருத்துவ முறையில் மறுவாழ்வு அளித்தல்.

- திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடல்

**கண்பார்வையற்றோருக்கான கட்டுப்பாட்டு தேசியத்திட்டம்**

- பார்வையற்றவர்களின் எண்ணிக்கையை 0.3% ஆக 2001 ஆண்டிற்குள் குறைத்தல் இதன் நோக்கமாகும்.
- 1976 ம் ஆண்டு தொடங்கப்பட்டது. ரேபிஸ் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுத் தொடர்பான திட்டம்.
- 11வது ஐந்தாண்டுத் திட்டக் காலமான 2008 ம் ஆண்டு ரேபீஸ் நோயால் ஏற்படும் மனிதர்களின் இறப்பை கட்டுப்படுத்தும் புதிய திட்டம் தொடங்கப்பட்டது.
- நோய்க் கட்டுப்பாட்டிற்கான தேசிய மைய அமைப்பின் கீழ் செயல்பட்ட இத்திட்டம் மார்ச் 21 முடிவடைந்தது.

**நோக்கம்**

- உடல்நலப் பணியாளர்களுக்கு, ரேபீஸ், விலங்குகளின் கடி குறித்த பயிற்சி வழங்குதல்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை யளித்தல் குறித்த பயிற்சி தருதல்.
- சமூகத்திற்கு ரேபிஸ் மற்றும் விலங்குகளின் கடி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

**தேசிய புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டம்**

- ஒருங்கிணைந்த புகையிலை கட்டுப்பாட்டுச் சட்டம்.
- சிகரெட் மற்றும் ஏனைய புகையிலைப் பொருட்கள் (விளம்பரங்கள் தடை மற்றும் வியாபாரம் ஒழுங்குபடுத்துதல், உற்பத்தி அளிப்பு மற்றும் பகிர்வு) சட்டம் 2003 என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.
- மக்களிடையே புகையிலையின் தீய விளைவுகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

**தேசிய அயோடின் சத்து குறைபாட்டு நோய் கட்டுப்பாட்டுத் திட்டம்**

- மனித வளர்ச்சிக்குத் தினமும் 100-150 மைக்ரோ கிராம் அயோடின் தேவைப் படுகிறது.
- இச்சத்து குறைபாடு, உடல்நலம் மற்றும் மன நலபாதிப்பு, கிரிட்டினிசம், கருச்சிதைவு, காது கேளாமை, காய்டர் போன்றவற்றை ஏற்படுத்துகிறது.
- இத்திட்டம் முதலில் தேசிய காய்டர் கட்டுப்பாடு திட்டம் என்று 1962 முதல் வழங்கப்பட்டது.
- அரசாங்கமானது உணவுக் கலப்பட தடுப்புச்சட்டம் 1954-ன் படி அயோடைடு இல்லாத உப்பு விற்பனையை 2006 முதல் தடை செய்துள்ளது.

**தேசிய மனநலத் திட்டம் (1982)**

**குறிக்கோள்கள்**

- அனைவருக்கும் குறைந்தபட்ச மனநல வசதியை கிடைக்கச் செய்தல்.
- மனநலம் பற்றிய அறிவையும் பொதுநல சேவை குறித்த திறமையையும் ஊக்குவித்தல் சமூக வளர்ச்சிக்குப் பாடுபடல்.
- தற்போது நாடு முழுவதும் 123 மாவட்டங்களில் மனநல திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**தேசிய கொசு மூலம் பரவும் நோய்கள் கட்டுப்பாட்டு திட்டம் (National Vector Borne Diseases Control Programme)**

- கொசுக்கள் மூலம் பரவும் நோய்களான மலேரியா, பிலேரியா, கலா-அசார், ஜப்பானீய மூளைக்காய்ச்சல், டெங்கு மற்றும் சிக்குன்குன்யா

போன்ற நோய்களின் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கென கொண்டுவரப்பட்ட ஒன்றிணைந்த திட்டமாகும்.

### கினியா புழு ஒழிப்புத் திட்டம்

- 1983-84 ம் ஆண்டுகளில் தேசிய நோய் கட்டுப்பாட்டு மையத்தின் கீழ் இத்திட்டம் கொண்டுவரப்பட்டது.
- உலக சுகாதார மையத்தின் சான்றிதழ்படி பிப்ரவரி 15, 2000த்திலிருந்து இந்தியாவில் கினியா புழு நோய் முற்றிலும் ஒழிந்தது.

### தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுக்குத் திட்டம் (1975 - 76)

**நோக்கம்**

- தடுத்தல் (நோய் வராது தடுத்தல்)
- ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல்
- மருத்துவம் மற்றும் மறுவாழ்வு
- இந்தியாவில் 40% புற்றுநோய்க்கு காரணம் புகையிலைப் பொருட்களே: இவற்றின் காரணமாக நுரையீரல் மற்றும் வாய் புற்றுநோய் ஏற்படுகிறது.
- தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள் நவம்பர் 7.
- ராஷ்டிரிய ஆரோக்கிய நிதியின் கீழ் சுகாதார அமைச்சரின் புற்று நோயாளிகளுக்கான நிதி 2009-ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

### உணவுக் கலப்பட தடுப்புச் சட்டம் 1954

- நுகர்வோர்களுக்கு சுத்தமான மற்றும் முழுமையான உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்கிறது.
- இது ஒரு மத்திய அரசுச் சட்டமாகும்.
- இச்சட்டத்தின் கீழான விதிமுறைகள் மற்றும் தர நிர்ணயங்கள் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியாக இருக்கும்.
- இச்சட்டம் பொதுப்பட்டியலில் இடம் பெற்றிருப்பினும் இதனை நடை முறைப்படுத்தும் அதிகாரம் மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கே உண்டு.

### உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006

- உணவு கலப்பட தடுப்புச் சட்டம் 1954 ஐ நீக்கி இச்சட்டம் கொண்டு வரப்பட்டது.
- உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு உலக வங்கி உதவியுடன் 5 வருடத்திற்கான திறன் வளர் பயிற்சி உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து களுக்கான தரக்கட்டுப்பாடு என்ற பெயரில் 2003 ம் ஆண்டு மத்திய அரசால் தொடங்கப்பட்டது.

### இந்திய மருத்துவ குழு (Medical Council of India)

- இந்திய மருத்துவக் குழுச்சட்டம் 1956-ன் படி நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் சில திருத்தங்களுடன் 1958 ல் இவ்வமைப்பு நிறுவப்பட்டது.
- 1993 ல் கொண்டு வரப்பட்ட திருத்தம், புதிய மருத்துவ கல்லூரிகள் உருவாக்கம், புது பாடப்பிரிவுகள் தொடங்குதல் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரித்தல் போன்றவற்றிற்கு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்திடம் ஒப்புதல் பெற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

### மத்திய (உடல்நல) சுகாதாரக் கல்வி ஆணையம்

- சுகாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு 1956, டிசம்பர் 6-ல் தொடங்கப் பட்ட முதன்மை நிறுவனம் ஆகும்.

### ராஷ்ட்ரிய ஆரோக்ய நிதி

- 1997-ல் தொடங்கப்பட்ட இந்நிதி முதலில் தேசிய உடல்நலமற்றோர் உதவி நிதி என்ற பெயரில் செயல்பட்டது.
- வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும், தீவிர நோய்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு (அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோர்) நிதி உதவி வழங்குகிறது.
- இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசானது மாநில அளவில் இந்த நிதியை வழங்கும் பொருட்டு மாநிலங்களுக்கு மானியம் வழங்குகிறது.

### தேசிய மருத்துவ அறிவியல் கல்வியகம் 1961

- மருத்துவ அறிவியலின் நன்மைகளை ஊக்குவிக்கும் பொருட்டு 1961ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பானது 1982-ல் தொடாச்சியான மருத்துவக் கல்வித் திட்டத்தை தொடங்கியது.

### பார்மஸி கவுன்சில் ஆப் இந்தியா (இந்திய மருந்தகங்கள் குழு) (Pharmacy Council of India)

- நாடாளுமன்றச் சட்டத்தால், பார்மஸி சட்டம் 1948 -இன் கீழ் உருவாக்கப் பட்டது.
- மருந்தகம் தொடர்பான கல்வியை ஒழுங்குபடுத்துதல் இதன் கடமையாகும்.
- ஒருவர் தன்னை மருந்தாளுனராக இக்குழுவில் பதிவு செய்து கொண்ட பின்னரே அது தொடர்பான பணியினை மேற்கொள்ள இயலும். தற்போது 497 அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளன.

### ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டம்

- 2004ல் தொடங்கப்பட்டது.
- மாநில அளவில் செயல்படும் திட்டம்
- நோயின் ஆரம்பநிலை அறிகுறிகளை வைத்துத் திறமையான பதில் நடவடிக்கையை குறிப்பிட்ட காலத்திற்குள் எடுத்தல் இதன் நோக்கமாகும்.

### இந்தியப் பல் மருத்துவக் குழு (Dental Council of India)

- 1948-ம் ஆண்டு பல் மருத்துவ சட்டத்தின் கீழ் நாடாளுமன்ற சட்டம் மூலம் நிறுவப்பட்ட அமைப்பு ஆகும்.
- பல் மருத்துவக் கல்வி, பணி மற்றும் அதன் நெறிமுறைகளை ஒழுங்குபடுத்துதல் இதன் நோக்கமாகும்.

### தேசிய மக்கள்தொகைக் கொள்கை (பிப்ரவரி 2002)

- தேசிய சுகாதாரக் கொள்கை (2002), பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் தேசிய ஊரக சுகாதார திட்டம் போன்றவை குழந்தை நலனின் முன்னேற்றம் பொருட்டு கொள்கை களையும் திட்டங்களையும் செயல்படுத்தி உள்ளன.

### குடும்ப நலத் திட்டம் 1952

- இது உலக அளவில் நிறுவப்பட்ட முதல் குடும்ப நல திட்டமாகும்.
- பெண் சிசுக்கொலை, கருக்கலைப்பு போன்றவற்றை தடுக்கும் பொருட்டு குழந்தை பிறப்பிற்கு முன் பாலின நிர்ணயித்தல் சோதனையை அரசு 1994-ம் ஆண்டு சட்டப்படி தடை செய்துள்ளது.

**பெண் குழந்தைகளைக் காப்போம்**

- "Save the Girl child" இந்த கோஷத்துடன் தேசிய அளவிலான கூட்டம் ஒன்று ஏப்ரல் 28, 2008 ல் நடைபெற்றது.
- பெண் சிசுக்கொலையின் தீவிரத்தை வெளிக்கொணர்வதுடன், அதனால் ஏற்படும் குழந்தை பாலின விகிதக் குறைவு, சமூகத் தாக்கம் போன்றவை குறித்து வெளிப்படுத்துவதாய் அமைந்திருந்தது.
- தமிழக அரசின் தொட்டில் குழந்தைத் திட்டம்

**தடுப்பூசித் திட்டம்**

- உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் சூழ்நிலைகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் பொருட்டு 1978-ம் ஆண்டு நாடு முழுவதும் தொடங்கப்பட்டது.

**இந்திய செவிலியக் குழு**

- இந்திய செவிலியச் சட்டம் 1947-ன் படி, இக்குழு ஓர் நாடாளுமன்றச் சட்டத்தால் அமைக்கப்பட்டது.
- செவிலியப் பயிற்சியில் ஒரே அளவான தரத்தை பாதுகாத்தல் தொடர்பான ஒழுங்கு முறைகளை மேற்கொள்கிறது.

**போலியோ தடுப்பாற்றல் திட்டம் (1995 - 96)**

- முதலில் 3 வயதிற்குட்பட்ட குழந்தை களுக்கு மட்டும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.
- 1996-97-ம் ஆண்டுகளில் 5 வயதிற்குட் பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் என இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

**தேசிய புளூரோசிஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுத் திட்டம்**

- பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (2007-2012) 100 மாவட்டங்களில் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

**ராஜீவ் ஆரோக்ய நலக் காப்பீட்டுத் திட்டம் (ஆந்திரா) 2007**

- வறுமைகோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு ராஜீவ் ஆரோக்ய ஸ்ரீ அறக் கட்டளை மூலம் உடல் நலக் காப்பீடு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

**முக்கியத்துவம் வாய்ந்த மற்ற அம்சங்கள்**

- 2010, ஜனவரி 9ல் பைவேலண்ட் வாய்வழி போலியோ தடுப்பு மருந்து பீகார் மாநிலத்தில் (Bivalent Oral Polio Vaccine) தொடங்கப்பட்டது.
- ஆறாவது "உலக உறுப்புகள் தான தினம்" இந்தியாவில் முதன்முதலில் நவம்பர் 27, 2010 ல் அனுசரிக்கப்பட்டது.
- மத்திய அரசு நிதி - 240 கோடி (80%)
- மாநில அரசுகள் நிதி - 48 கோடி (20%)
- பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சகம் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புற்றுநோய் (டயாபட்டீஸ்) சர்க்கரை வியாதி, கார்டியோ வாஸ்குலார் வியாதி மற்றும் இதய அடைப்பு போன்றவற்றைத் தடுத்தல் மற்றும் கட்டுப்பாடு என்ற திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது. மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்கீடு முறையே 80:20 ஆகும்.

**பிரதம மந்திரி ஸ்வஸ்திய சுரக்ஷ யோஜனா நோக்கம்**

- நம்பத்தகுந்த மருத்துவ சேவைகளைப் பெறுவதில் ஏற்படும் வட்டார சமநிலை யின்மையை சரி செய்யும் பொருட்டு, நாட்டில் தரமான மருத்துவக் கல்வியை வழங்குவதை வலியுறுத்துகிறது. 2010-ம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது.

### திட்டத்தின் இரு முக்கிய கூறுகள்

- எய்ம்ஸ் (AIIMS) மருத்துவ நிறுவனம் போன்று 6 மருத்துவ நிறுவனங்களை சமூகப் பொருளாதார நிலையிலுள்ள பின்தங்கிய மாநிலங்களில் ஏற்படுத்துவது.
- பீகார் (பாட்னா)
- சத்தீஸ்கர் (ரெய்ப்பூர்)
- மத்தியப் பிரதேசம் (போபால்)
- ஒடிசா (புவனேஸ்வரம்)
- ராஜஸ்தான் (ஜோத்பூர்)
- உத்தரகாண்ட் (ரிஷிகேஷ்)
- ஏற்கனவே உள்ள மருத்துவக் கல்லூரிகள் / நிறுவனங்கள் புதுப்பித்தல் (வசதிகளை மேம்படுத்துதல்). இதற்கென 10 மாநிலங்களில் 13 கல்லூரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன

### ராஷ்ட்ரிய ஸ்வஸ்த்ய பீமா யோஜனா (அக்டோபர் 1, 2007)

- அமைப்பு சாரா தொழில்களில் ஈடுபடும் குடும்பத்தினருக்கு ரூ.30000 ஒரு வருடத்திற்குக் காப்பீடாக செலுத்தப்படும்.
- பயனாளிக்கு, ஸ்மார்ட் கார்டு Smart Card ஒன்று வழங்கப்படும்.
- அதன் மூலம் பணமில்லா மருத்துவ சிகிச்சையை பயனாளிகள் பெற இயலும்.

### திட்டச் செலவு மத்திய மாநில நிதி பங்கீடு

| மத்திய அரசு | ஜம்மு /வடகிழக்கு மாநிலம் |
|---|---|
| 90 | 10 |
| மாநில அரசு | மற்ற மாநிலங்கள் |
| 75 | 25 |

- ஏப்ரல் 1, 2008 முதல் திட்டம் நடைமுறைக்கு வந்தது.

### தேசிய உடல் நல ஆராய்ச்சிக் கொள்கை (National Health Research Policy)

- சுகாதார கட்டமைப்புகளுக்கு வழங்கப் படும் குறைவான நிதியின் காரணமாக இந்தியாவில் மருத்துவம், உடல்நலத் தொடர்பான ஆராய்ச்சிகள் குறைவு, எனவே அதனை ஊக்குவிக்கும் பொருட்டு ஏப்ரல் 3, 2011-ல் ஆராய்ச்சிக் கொள்கை இறுதி வரையறை செய்யப்பட்டது.
- உடல் நல மேம்பாட்டிற்கு செலவளிக்கும் தொகையில் குறைந்தது 2% ஐ ஆராய்ச்சிக்கு செலவிட இக்கொள்கை வலியுறுத்துகிறது.
- மேலும் தேசிய உடல்நல ஆராய்ச்சி மேலாண்மை ஆணையம் ஒன்று நிறுவப்படவும் இக்கொள்கை வழிவகுக்கிறது.

### தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் (1987)

- தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு கழகம் என்ற அமைப்பு நிறுவப்பட்டு, அதன் கீழ் இத்திட்டம் 1987 முதல் செயல்படுகிறது.
- நாடு தழுவிய மையம் நிறுவுதல்.
- தாக்கமடையக்கூடிய குழுக்களைக் கண்டறிதல்.
- வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குதல்
- பால்வினை நோய்களைக் கட்டுப் படுத்துதல்.

### தேசிய பைலேரியா யானைக்கால் நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் (1955)

- முதலில் 22 இழை ஒட்டுண்ணி ஆய்வுக் கூடங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட்டன.

**செயல்பாடு**

- கொசு எதிர்ப்பு, முட்டைப்புழு எதிர்ப்பு நடவடிக்கையை செயல்படுத்துதல்.
- பைலேரியா மையங்களை நிறுவி நுண்ணிய ஒட்டுண்ணி பாதிப்பு சிகிச்சை செய்தல்.

## தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்

**செயல்பாடு**

- ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து வீட்டிலேயே சிகிச்சை அளித்தல்.
- பி.சி.ஜ தடுப்பூசி செலுத்துதல் (குழந்தைகள் மற்றும் சிறார்களுக்கு)
- அறுவை சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சை.
- பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கம்.
- புனர் வாழ்வு
- ஆராய்ச்சி
- மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் 1962 ல் தொடங்கப்பட்டது.

**நோக்கம்**

- 85% பாதிப்புகளை சரி செய்தல்
- பரிசோதனை மூலம் 75% பாதிப்புகளை கண்டறிதல்.
- அரசு சாரா நிறுவனங்களை ஈடுபடுத்தல்

## இரத்த பாதுகாப்புத் திட்டம்

- 1998 ஜனவரி 1 முதல் தொழில் ரீதியாக இரத்த தானம் செய்வது நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது.
- உரிமம் பெற்ற இரத்த வங்கிகள் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளன.
- தன்னார்வ இரத்த தானம் ஊக்குவிக்கப் படுகிறது.
- இக்கொள்கைப்படி, இரத்தத்தின் ஒவ்வொரு அலகும் பரிசோதனைக்குட் படுத்தப்பட வேண்டும்.
- ஹெபடைடிஸ், மலேரியா மற்றும் கிரந்தி நோய் தொற்று கண்டுபிடிக்க இந்த சோதனை அவசியம்.

## தேசிய டிரக்கோமா தடுப்பு முகாம் (1963)

- தேசிய பார்வையற்றோர் கட்டுப்பாட்டு திட்டத்துடன் இணைக்கப்பட்டது.

## தேசிய குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டம்

- 1954 ம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் தேவையான கழிவுநீர் குழாய்கள் வழங்கவும் அனைத்து கிராமங்கள் மற்றும் குடிசை மாற்று வாரியங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 20 அம்ச திட்டங்கள் (1975)

- 1975 ம் ஆண்டு நலத்திட்டத்தோடு சமூக பொருளாதார வளர்ச்சியை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது.
- 20 திட்டங்களில் 8 திட்டங்கள் நலத்திட்டம் குறித்த நேரடி (அ) மறைமுகத் தொடர்பு கொண்டவை.

## தேசிய சுகாதாரக் கொள்கை

- சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் 1983 ல் தேசிய சுகாதாரக் கொள்கையை உருவாக்கியது.
- இதன்படி 2000 ஆம் ஆண்டிற்குள் எல்லோருக்கும் நலவாழ்வு என்ற இலக்கை அடைவது இதன் குறிக்கோளாகும்.
- இதற்கான சுகாதார உத்திகள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியது.
- அவையானவன சுகாதார கட்டமைப்பு, சுகாதார மனிதன் மேம்பாட்டு ஆராய்ச்சி மற்றும் சுகாதார முன்னேற்றம்.

## சுகாதாரக் கொள்கையின் பரவலான சிபாரிசுகள்

- ஒவ்வொரு 5000 பேர் கொண்ட கிராமத்திலும் ஒரு சுகாதாரத் துணை மையம் நிறுவுதல். (பழங்குடியினர் மற்றும் மலைப்பகுதியில் 3000 பேருக்கு ஒன்று வீதம்) மேற்படி மையத்தில் ஓர் ஆண்

மற்றும் பெண் சுகாதார பணியாளர் இருப்பர்.

- ஒவ்வொரு 30000 பேர் கொண்ட கிராம ஜனத் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார மையம் நிறுவுதல். (பழங்குடியினர் வசிக்கும் மலைப்பகுதியில் 20000 பேருக்கு ஒன்று என்ற விகிதம்)
- ஒரு லட்சம் பேருக்கு ஒன்று வீதம் சமுதாய சுகாதார மையம் அமைத்தல்.
- 1000 பேர் கொண்ட ஒவ்வொரு கிராம ஜனத் தொகைக்கு சமுதாயத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட சுகாதார வழிகாட்டிகளுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் மரபு வழிவந்த செவிலியரை

## தேசிய நலவாழ்வுக் கொள்கை - 2002
## அடையப்பட வேண்டிய இலக்குகள்

| | | |
|---|---|---|
| 1 | போலியோ மற்றும் ஆஸ்பிரின் ஒழிப்பு | 2005 |
| 2 | தொழுநோய் ஒழிப்பு | 2005 |
| 3 | கடுங்காய்ச்சல் ஒழிப்பு | 2010 |
| 4 | நிணநீர் மண்டல யானைக்கால் நோய் ஒழிப்பு | 2015 |
| 5 | எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் கிருமி நோய் வளர்ச்சி குறைத்தல் | 2007 |
| 6 | காசநோய் மலேரியா மற்றும் நீரால் பரவக்கூடிய நோய்களின் குறைப்பு விகிதத்தை 50% ஆக குறைத்தல் | 2010 |
| 7 | பார்வையின்மை 0.5% ஆக குறைத்தல் | 2010 |
| 8 | குழந்தை இறப்பு விகிதம் 20/100 மற்றும் தாய்மார் இறப்பு விகிதம் 100/1 லட்சம் | 2010 |
| 9 | பொது சுகாதார வசதிகளை தற்பொழுது பயன்படுத்தப்படும் 20%க்கும் குறைவான நிலையிலிருந்து 75%க்கு அதிகமாகப் பயன்படுத்த முயற்சிப்பது. | 2010 |
| 10 | ஓர் ஒருங்கிணைந்த கண்காணிப்பு முறையை நிறுவுதல், தேசிய நலவாழ்வு கணக்கு மற்றும் புள்ளி விவரங்களை நிறுவுதல். | 2005 |
| 11 | நலவாழ்வு சமபந்தமான செலவினத்தை அரசின் பொது வரவு செலவு கணக்கில் தற்போதைய 0.9% லிருந்து 2% ஆக உயர்த்துதல். | 2010 |
| 12 | மத்திய அரசின் மானியப் பங்கை மொத்த நலவாழ்வு செலவில் 25% ஆக அதிகரித்தல். | 2010 |
| 13 | மாநிலத்தின் நலவாழ்வு செலவு பட்ஜெட்டை 5.5% லிருந்து 7% ஆக அதிகரித்தல் | 2010 |
| 14 | அதை மேலும் உயர்த்தி 8% ஆக்குதல் | 2010 |

ஒவ்வொரு கிராமத்திலும் மகப்பேறு மருத்துவத்திற்கு உதவும் பணியாளர் பயிற்சியினை அளித்தல்.

- இது தவிர பல்வேறு வகையான பணியாளர்களை பயிற்றுவித்தல்.
- மேற்கண்ட திட்டங்கள் மூலமாகப் போதுமான கட்டமைப்பு, மருத்துவ, துணை மருத்துவ, மனித வள ஆற்றல்களுக்கு வாய்ப்பு பெருகுவதுடன் அதன் வாயிலாக சுகாதாரக் கொள்கைச் செயல் திட்டத்தில் கூறப்பட்டதைத் தழுவிய அடிப்படை சுகாதார வசதி என்னும் இலக்கு விரைவில் எட்ட வழி கோலுகிறது.
- 1985, 1990, 1995 மற்றும் 2000 ஆண்டுக்குள் அடைய வேண்டிய குறிப்பிட்ட இலக்குகள் தேசிய சுகாதாரக் கொள்கைச் செயல் திட்டத்தில் எடுத்துரைக்கப்படுகிறது.
- இக்கொள்கைச் செயல்திட்டத்தின் முதன்மை நலப்பராமரிப்பினை இந்திய சுகாதார முறையின் மையமாகவும் முக்கியப் பணியாகவும் ஆக்கியுள்ளது.
- 2000 வது ஆண்டுக்குள் அனைவருக்கும் சுகாதாரம் என்னும் இலக்கை அடைவதே இந்திய தேசிய சுகாதாரத் திட்டத்தின் இலக்காகும்.
- இதிலிருந்து சுகாதாரத் துறையை நிர்வகிக்கும் காரணிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு, அதன் வாயிலாக கொள்கை உருமாற்றம் பெற வழிவகுத்தல் மற்றும் புதியதாக தேசிய சுகாதாரக் கொள்கை செயல்திட்டம் உருவாக்கப்பட்டது.

| நோய்கள் | நோய் உருவாக்கும் காரணிகள் |
|---|---|
| காலரா | விப்ரியோ காலரா |
| டீப்தீரியா | கார்னி பாக்டீரியம் டிப்தீரியா |
| கொனேரியா | நைசீரியா கொனேரியா |
| காசநோய் | மைக்கோ பாக்டீரியம் டியூபர் குளே |
| நிமோனியா | டீப்ளோகாக்கஸ் நிமோனியா |
| சிபிலிஸ் | டிரபோனீமா பெலேடியம் |
| டெட்டனஸ் | கிளாஸ்டீரியம் டெட்டனி |
| டைபாய்டு | சால்மோனெல்லா டைபி |
| கக்குவான் இருமல் | போர்டிடெல்லா பெர்ட்டுசிஸ் |

| நோய்கள் | நோய் உருவாக்கும் காரணி | அரசின் நடவடிக்கை |
|---|---|---|
| மலேரியா | பிளாஸ்மோடியம் பால்சிபரம் பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் | மலேரியா கட்டுப்பாடு மற்றும் கலா - அசர் ஒழிப்பு (2008-2009) |
| பிலேரியாசிஸ் | ஊச்சரேரியா பாங்க்ராப்டி புரோட்டோசோவா | தேசிய நல்வாழ்வு கொள்கை 2002 ன் படி பிலேரியாசிஸ் 2015 க்குள் ஒழித்தல் |
| டெங்கு | வைரஸ் | |
| ஜப்பானீய என்செபலாட்டிஸ் (மூளைக்காய்ச்சல்) | வைரஸ் | தடுப்பூசித் திட்டம் 2006 |
| கலா-அசர் | லீஸ்மோனியா தோனாவானி | தேசிய நல்வாழ்வு கொள்கை 2002 ன் படி 2010 க்குள் கலா-அசர் ஐ ஒழித்தல் |
| காசநோய் | மைக்கோ பாக்டீரியம் டியூபர்குளி | தேசிய காசநோய் கட்டுபாட்டுத் திட்டம் 1997 |
| லெப்ரசி | மைக்கோ பாக்டீரியம் லெப்ரே | தேசிய நல்வாழ்வு கொள்கை 2002 ன் படி தொழுநோய் 2005 க்குள் ஒழிக்கப்பட வேண்டும். |

தமிழக அரசின் உடல் நலத் திட்டங்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

- 1975 ம் ஆண்டு அக்டோபர் 2 ம் நாள் தொடங்கப்பட்டது.
- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங் களிலும் செயல்படுத்தப்படுகிறது.
- மத்திய அரசு உதவியுடன் செயல் படுத்தப்படும் திட்டம்.

**நோக்கம்**

- தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குதல் மற்றும் வாழ்க்கை முழுமைக்குமான ஊட்டச்சத்து பாதுகாப்பினை வழங்குதல்.
- 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாட்டை போக்குதல்.
- 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, உடல்நலம் மற்றும் மனநல மேம்பாட்டை வலியுறுத்துதல்.
- கர்ப்பிணிப் பெண்கள், இளம் பெண்கள் போன்றோரின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்தினை உயர்த்த வழி செய்கிறது.

### அங்கன்வாடி மையங்கள்

- குழந்தைகள் மையம்

**சேவைகள்**

- குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணித்தல்.
- தொடக்கக் கல்விக்கு முந்தைய கல்வி
- எடை சரிபார்த்தல்
- மதிய உணவு

- குழந்தை பிறப்பிற்கு முன்னான மற்றும் பின்னான கவனிப்பு.
- கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசி போடுதல்.

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் (1982)

- பள்ளிக் குழந்தைகளுக்கு (5 முதல் 15 வயதிற்குட்பட்டோர்) சத்துணவு வழங்குதல்.
- குழந்தைகளின் உடல்நலம் மற்றும் மனநல மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் தருதல், ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குதல் மற்றும் எழுத்தறிவு விகிதத்தை அதிகரித்தல்.
- வாரம் 3 முறை முட்டை வழங்கப் படுகிறது.
- தடுப்பூசித் திட்டம்
- நடமாடும் மருத்துவமனைகள்
- மலேரியா, காசநோய், யானைக்கால், வியாதி, தொழுநோய் போன்றவை தடுக்கும் திட்டங்கள்.
- வருமுன் காப்போம் திட்டம்
- டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் என்பன போன்ற பல்வேறு வகையான திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

## பெண்கள் மகப்பேறு உதவித்திட்டம்

### டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்

- 1989 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களுக்கு (மகப்பேறு) உதவியாக ரூபாய் 12000 வழங்கப்படுகிறது.

# மனிதவள மேம்பாடு

- வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ”மனிதவள மேம்பாடு”என்றசொல்லானதுவெவ்வேறு பொருள்படுமாறு பயன்படுத்தப் படுகிறது. கு.ர். ஹர்பிசன் (F.H. Harbison) என்பவரின் கூற்றுப்படி "மனித வளங்கள் என்பது மக்களிடமுள்ள ஆற்றல்கள், திறன்கள், அறிவு ஆகிய மறைந்துள்ள சக்திகளை பண்டங்களின் உற்பத்தியிலும் அல்லது பயனுள்ள பணிகளை ஆற்றுவதிலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் அடங்கியுள்ளது" என்கிறார்.
- மனித வள மேலாண்மையில் (Human Resource Management), மனிதவள மேம்பாடு என்பது கற்றலின் செயல்களை ஒழுங்கு படுத்தி, ஒரு நிர்வாக அமைப்பில் அதை வரிசைப்படுத்துவதன் மூலம் செயல்பாடுகளை முன்னேற்றம் அடையச் செய்து ஒரு நபரின் அல்லது ஒரு நிறுவனத்தின் பணிகளை முன்னேற்று வதாகும்.
- மனித வள மேம்பாட்டினை சுட்டிக் காட்டும் பொதுவான காரணிகள் இரு பிரிவு களாகும். அவை

1. ஒரு நாட்டின் மனித முதலீட்டின் இருப்பை அளவிடுதல்.
2. இந்த இருப்போடு, இன்னும் அதிகரிக்கும் மனித மூலதன ஆக்கத்தின் அளவை அளவிடுதல்.
3. இதுவே ஒரு குறிப்பிட்ட காலத்தில் மனித மூலதன ஆக்கத்தின் அளவாகும். இந்த மனித மூலதன இருப்பானது அந்நாட்டின் மனிதவள மேம்பாட்டு நிலையை காட்டுவதாகும்.

- மனித மூலதனத்தை பற்றி குறிப்பிடும் போது ஒரு நபர் கீழ்கண்ட வகைகளில் தனது திறன்களை வளர்த்துக்கொள்ள முதலீடு செய்தலைக் குறிக்கின்றோம்.

**அவையாவன**

1. சுகாதார வசதிகள் மற்றும் பணிகள்
2. பணிக்கான பயிற்சி
3. முறையான கல்வி
4. முதியோர் கல்வி மற்றும் விவசாய விரிவாக்கத் திட்டங்கள் (எ.கா. முறைசாரா கல்வி)
5. தனிநபர் மற்றும் குடும்பங்கள் வேலைவாய்ப்பைத் தேடி இடம் பெயர்தல்.

- மனித மூலதனத்தை அதிகரிக்கும் அனைத்து காரணிகளுக்குள்ளும் கல்வி மிக முக்கியம் ஆனதாக கருதப்பட்டது. 1960 ஆம் ஆண்டு ஸ்கல்ட்ஸ் (Schultz) என்ற அறிஞர் தனது மனித மூலதன கோட்பாட்டில் இதை அறிவித்துள்ளார்.

- இன்றைய நாட்களில் கல்வி என்பது "நுகர்வும் முதலீடும்" என எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பொருளாதார நிபுணர்கள் அதிகபட்சம் கல்வியை மனிதவள முதலீடாகவே கருதுகின்றனர்.
- ஹர்பிசன் (Harbison) மற்றும் மேயர்ஸ் (Meyers) ஆகியோர் மனிதவள குறியீடுகளை பின்வருமாறு குறிப்பிடு கின்றனர்.

1. பத்தாயிரம் மக்களுக்கு உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை (முதல் மற்றும் 2 ஆம் நிலைகளில்).
2. 10000 மக்களுக்கு உள்ள பொறியாளர் மற்றும் விஞ்ஞானிகளின் எண்ணிக்கை.
3. 10000 மக்களுக்கு உள்ள மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவர்களின் எண்ணிக்கை.
4. 5 முதல் 14 வயது வரம்புக்குட்பட்ட தொடக்கக் கல்வி சேர்க்கப்பட்ட மாணவர்களின் சதவீதம்.
5. சமன் செய்யப்பட்ட தொடக்கக் கல்வி மற்றும் இடைநிலை கல்வி பள்ளியின் சேர்க்கை வீதம்.
6. 2-ம் நிலையாகிய 15 மற்றும் 19 வயதுக்குட்பட்ட மாணவர்களின் சேர்க்கை வீதம்.

- முதல் மூன்று குறியீடுகள் மனிதவள இருப்பினை கணக்கிடுபவைகளாவும், கடைசி மூன்று குறியீடுகள் கூடுதல் இருப்பினை காட்டும் கருவிகள் என்றும் அழைக்கப்படும்.
- கீழ்க்காணும் இரண்டு குறியீடுகள் உயர் கல்விக்கு அளிக்கக் கூடிய அறிமுகப் பயிற்சியைக் குறிக்கிறது. அவை.

1. குறிப்பிட்ட ஆண்டில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை.
2. அதே ஆண்டில் சட்டம், நுண்கலை, கலைப்பிரிவு ஆகிய பாடங்களில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை.

- ஹர்பிசன் & மேயர்ஸ் அவர்கள் மனிதவள மேம்பாட்டின் எளிய, கூட்டுக் குறியீட்டு எண்ணை (Composite Numbers) வடிவமைத்தார்கள். அதை கணக்கிட சதவீதத்தை கூட்டி அதை நிறை எண் ஐந்தால் பெருக்க வேண்டும்.
- கூட்டு குறியீட்டு எண்ணை அடிப்படை யாய் கொண்டு அவ்வறிஞர்கள் நாடுகளை

1. வளர்ச்சி குன்றிய நாடுகள்
2. பகுதி வளர்ச்சியடைந்த நாடுகள்
3. பாதி முன்னேறிய நாடுகள்
4. முன்னேறிய நாடுகள் என 4 வகையாக பிரித்துள்ளனர்.

## மனிதவள மேம்பாடு பொருளாதார வளர்ச்சியும் (HRD and Economic Development)

- மனிதவள மேம்பாட்டுக் குறியீடு களுக்கும் பொருளாதார வளர்ச்சி குறியீடுகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. பொருளாதார வளர்ச்சியை கணக்கிட கீழ்காணும் குறியீடுகள் உதவுகின்றன.

1. தலாவீத மொத்த நாட்டு உற்பத்தி (அமெரிக்க டாலரில்)
2. வேளாண்மை துறையைச் சார்ந்த தொழில்களில் பணிபுரியும் மக்களின் சதவீதம்.

3. நாட்டு வருமானத்தில் கல்விக்காக செலவிடப்படும் பொதுச் செலவுகளின் சதவீதம்.
4. மொத்த மக்கள் தொகையில் 5 முதல் 14 வயதுக்கு உட்பட்ட வயதினரின் சதவீதம்.

- பொதுவாக மனிதவள மேம்பாட்டு கோட்பாடுகளை கல்வித் திட்டங்கள் என குறிப்பிடலாம். இதனை மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவை

1. மனித சக்தி சார்ந்த அணுகு முறைகள் (Man power approach)
2. சமுதாயத் தேவை சார்ந்த அணுகு முறைகள் (Social Demand Approach).
3. விளைவு விகிதங்கள் சார்ந்த அணுகு முறைகள் (Rate of Returns Approach).

**1951 ஆம் ஆண்டு முதல் கல்வி வளர்ச்சி**

- ஆங்கிலேய ஆட்சி காலத்தில் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் தரப்பட வில்லை. காலனி ஆதிக்கம் நடுத்தர கல்வியறிவு பெற்ற சமுதாயத்தை எழுத்தறிவில்லாத சமுதாயமாக மாற்றிவிட்டது.
- சுதந்திரம் பெற்றது முதல் இந்தியாவில் கல்வி சம்பந்தமான ஒரு வெடிப்பு ஏற்பட்டது. JBG திலக் அவர்களின் கூற்றுப்படி ”இன்று இந்திய மாணவர்களின் எண்ணிக்கையானது இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ் மற்றும் நார்வே ஆகிய நாடுகளில் உள்ள மொத்த மக்கள் தொகையை விட அதிகமாக உள்ளது. உலக அளவில் ஆரம்ப நிலையில் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு 7 வது மாணவனும், பணி நிலையில் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு 8 வது மாணவனும் ஒரு இந்தியனே”. 5 ஆண்டு திட்டங்கள் துவங்கும் முன்னர் மொத்த நாட்டு உற்பத்தியில் 1.2% மட்டுமே கல்விக்கு முதலீடு செய்யப்பட்டது. ஆனால் இப்போது அது 3.5% ஆக அதிகரித்துள்ளது.
- இந்தியக் கல்வியமைப்பில் மிகப்பெரிய தோல்வி, அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற நோக்கத்தோடு தொடர்புடையது. 1960 ஆம் ஆண்டிற்கு உள்ளாகவே அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற நோக்கத்தை அடைந்திருக்க வேண்டும். (அதாவது அரசியல் சாசனம் தொடங்கப்பட்ட 10 வது ஆண்டுக் குள்ளாகவே). ஆனால் இன்று வரை யிலும் நம்மால் இதை அடைய முடியவே இல்லை.
- இடைநிலை மட்டத்தில் தொழிற் கல்வி மயமாதல் எதிர்பார்த்த முடிவுகளை விளைவிக்கவில்லை. மேல்நிலை மட்டத்தில் தொழிற்கல்வி பிரிவில் அறிமுகப்படுத்திய பாடப்பிரிவுகள் பெயரளவிலான தன்மை உடையதாக இருக்கிறது. அவைகள் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை போதிய அளவு கிடைக்கச் செய்ய உதவவில்லை. உயர்தர மற்றும் நடுத்தர மக்களுக்கு மட்டுமே இக்கல்வி முறை நன்மை பயக்கிறது. 70% இடங்கள் இடைநிலைப் பள்ளிகளிலும் 80% இடங்கள் உயர் கல்விகளிலும் 30% உயர்வருமானம் ஈட்டும் மக்களுக்கே கிடைக்கிறது.

- இந்தியக் கல்வி அமைப்பில் ஏற்றத் தாழ்வுகள் நிறைந்துள்ளன. இதில் உள்ள முக்கிய பிரச்சனை குறைவான முதலீடு ஆகும். குழந்தைத் தொழிலாளர் முறை அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற இலக்கை அடைய மிகப்பெரிய தடையாக உள்ளது.

## தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி (Educational Progress in India)

- இந்தியாவில் தமிழ்நாடு நல்ல கல்வி வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் மாநிலமாகும். தமிழகத்தின் ஆண், பெண் கல்வி அறிவு நிலையானது இந்தியாவின் ஆண், பெண் கல்வியறிவு நிலையை விட மேலாகவே உள்ளது.
- 1991-2001, முதல் இடைநிலைப் பள்ளி களின் சேர்க்கை அளவானது 13% லிருந்து 59% ஆக உயர்ந்துள்ளது. 1962-63 முதல் 2000-01 வரை கல்விக்கான செலவானது 26 கோடியிலிருந்து 4949 கோடியாக அதிகரித்தது. 1986 ஆம் ஆண்டு கல்விக் கொள்கையின் மூலம் இந்திய அரசு அனைவருக்கும் ஆரம்பக் கல்வி அளிப்பதற்கு (6-11 வயதுக்குட்பட்டவர்களுக்கு) முன்னுரிமை கொடுத்தது.
- தமிழகத்தில் 6-11 வயதுக்குட்பட்ட மாணவர் சேர்க்கையில் நிலையான வளர்ச்சி ஏற்பட முக்கிய காரணிகளாக இருப்பவை.

1. அருகிலேயே பள்ளி வசதி இருத்தல்.
2. பெற்றோர்கள் கல்வித்தரத்தைப் பற்றிய விழிப்புணர்வு பெற்றிருத்தல்.
3. உண்மை தனிநபர் வருமானம் அதிகரித்தல்.
4. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்.
5. அரசின் சலுகைகளை முறையாக வழங்குதல். (இலவசப் பாடப்புத்தகங்கள், இலவசப் பேருந்து அட்டைகள், கல்வி உபகரணங்கள் முதலியன)

- தமிழகத்தில் ஆரம்பப் பள்ளிகளானது மக்கள் வாழும் இடங்களுக்கு 1 கி.மீ தொலைவிற்குள்ளும் (99% பள்ளிகள்), உயர்தொடக்கப் பள்ளிகள் (81%) 8 கி.மீ தொலைவிற்குள்ளும், இடைநிலைப் பள்ளிகள் (78%) 5 கி.மீ தொலைவிற்குள்ளும், மேல்நிலைப்பள்ளிகள் (76%) 8 கி.மீ தொலைவிற்குள்ளும் அமைந்துள்ளன. சமீப காலமாக பள்ளிக்கு வராமல் தங்கிவிடும் (dropouts) குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

## மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் (District Primary Education Programme – DPEP)

- அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்பதை இலக்காக கொண்டு அறிமுகப்படுத்த இந்தத் திட்டத்தில் கல்வியறிவில் பாலின வேறுபாடுகளைக் குறைக்க முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது.

## பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி (Non – Formal Education & Adult Literacy)

- இத்திட்டத்தின் கீழ் தமிழக அரசானது கீழ்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அவை.

1. மொத்தக் கல்வியறிவுநடவடிக்கைகள் (TLC)
2. கல்வியறிவு பெற்ற பின்னர் நடவடிக்கைகள்
3. தொடர் கல்வி

- இவையனைத்தும் "அறிவொளி இயக்கத்தின்" கீழ் எடுக்கப்பட்டவை யாகும். இந்த இயக்கத்தில் வயது வந்தோர் எனப்படுபவர் 15 முதல் 35 வயதுக்கு உட்பட்டவர்கள் என வரை யறுக்கப்பட்டு உள்ளது.

**இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி**

- இந்நிலையில் பள்ளிகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. தொழிற் கல்விப் பாடப்பிரிவு செயல்பாடுகளில் தமிழகமே முதன்மையாக திகழ்கிறது.

**கலை, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கல்வி (Arts, Science & Technical Education)**

- தமிழகத்தில் பல நூறு கலை, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் லட்சக் கணக்கான மாணவர்கள் படிக்கின்றனர். 87%க்கும் அதிகமான மாணவர்கள் தொழில் நுட்பக் கல்லூரிகளில் கல்வி பயில்கின்றனர். இந்தக் கல்லூரிகள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

**இந்தியாவில் மழலைக் குழந்தைகள் பராமரிப்பும் கல்வியும் (Early Childhood Care and Education)**

- இத்தகைய திட்டத்தின் மூலம் நல்ல சத்துணவு, சுகாதார சேவைகள் குழந்தைகள் நல மையங்களான அங்கன் வாடிகள் மூலம் வழங்கப்படுகின்றன. இவைகள் மூலம் சத்துணவு அளித்தல், பள்ளி சாரா சுற்றுச் சூழல்களை அமைத்தல், உடல்பரிசோதனை செய்தல், தடுப்பூசி போடுதல் மற்றும் சுகாதாரக் கல்வி போன்றவை அளிக்கப்படுகிறது.

**சிறப்பு சுகாதாரத் திட்டங்கள் (Special Health Programmes)**

- 1999 ஆம் ஆண்டு "வாழ்வொளி" எனும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பள்ளி மாணவர்களுக்கு நல்ல சுகமான வாழ்வளிக்க தீர்மானிக்கப் பட்டது. இத்திட்டத்தில் கள அலுவலர் (Field Officer) ஒருவர் வாரமொருமுறை பள்ளிகளுக்கு சென்று குழந்தைகளை சோதித்து பின் தேவைப்பட்டால் குழந்தைகளை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்று சிகிச்சை பெறவும் உதவுவார். இதற்கான பயிற்சிகள் ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படும்.

**உடல்நலம் பற்றிய பொருளியல் (Economics of Health)**

- உடல் நலம் பற்றிய பொருளியல் என்பது பல வழிகளில் கல்வி பற்றிய பொருளாதாரம் போன்றதாகும். கல்வியைப் போன்றே உடலநலமும் நுகர்வும் முதலீடும் ஆகும். உயர்வான நலம் தனிநபரின் ஆயுளைக் கூட்டி அவர் மீதான முதலீட்டின் விளைவை அதிகரிக்கிறது. பொதுவாக உடல்நலம் (சுகாதாரம்) பேணுதல் அரசால் மக்களின் தேவைக்கேற்ப அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது.

(மக்களின் செலுத்து நிலைக்குத் தகுந்தார்போல் இல்லாமல்). இதுவே சமத்துவ "சுகாதாரப் பொதுவுடைமை" என்று அழைக்கப்படுகிறது.

### மனித மேம்பாட்டுக் குறியீடு (Human Development Index)

- மனித மேம்பாட்டுக் குறியீடு என்பது வாழ்க்கை மட்டத்தின் ஒரு முழு அளவாகும். 1977-ம் ஆண்டின் மனித வளர்ச்சி அறிக்கையில் மனித வளர்ச்சிக்கு விளக்கம் கொடுக்கப் பட்டது. "மனிதத் தெரிவுகளை விரிவாக்குதும், மனித நலன்களை உயர்த்துதலும் மனித வளர்ச்சியின் மைய பொருளாகும்".
- மனிதனுக்கு மூன்று அத்தியாவசிய தெரிவுகள் உள்ளன, அவைகள் முறையே

1. நீண்ட கால சுகவாழ்வு
2. அறிவுத் திறனைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும்
3. வாழ்க்கை தரத்தை பெற்றுக் கொள்ள அவசியமான வளங்களை அடைதல்.

- முதல் மனித மேம்பாடு அறிக்கையானது 1990 ஆம் ஆண்டு UNDP நிறுவனத் தால், பாகிஸ்தான் முகஹப்-உல்-ஹக் என்ற பொருளியலறிஞரின் வழி காட்டுதலின்படி வெளியிடப்பட்டது.
- மனித மேம்பாட்டு குறியீடு (HDI) அனைத்து நாடுகளையும் 6 முதல் 1 வரை மூன்று வளர்ச்சி இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு வரிசைப் படுத்துகிறது. மனித மேம்பாட்டு குறியீடு கீழ்காணும் மூன்று அளவுகோள்களைக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

1. பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பின் மூலமும்
2. கல்வி அடைவு நிலை - வயது வந்தோர் கல்வி (2/3 நிறை) தொடக்க, இடைநிலை, மேல் நிலைக் கல்வி ஆகிய நிலைகளில் மாணவர் சேர்க்கை வீதம் (1/3 நிறை) ஆகியவற்றின் மூலமும்.
3. வாழ்க்கைத் தரம் - உண்மையான தனி மனித வீத மொத்த உள்நாட்டு உற்பத்தி (Per Capita GDP) அளவிடப்படுகிறது. (வாங்கும் சக்தி சமநிலை டாலர்களில் - PPP)

- மனித மேம்பாட்டுக் குறியீடு அனைத்து நாடுகளையும் 3 பிரிவுகளாக பிரிக்கிறது.

**இந்தியத் தமிழ்நாடு எழுத்தறிவு வீதம் (சதவீதத்தில்)**

| | இந்தியா | | | தமிழ்நாடு | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1951 | 24.95 | 7.93 | 16.67 | 31.73 | 10.06 | 20.86 |
| 1971 | 39.52 | 18.70 | 29.48 | 51.78 | 26.56 | 39.46 |
| 1991 | 63.90 | 39.40 | 52.10 | 74.90 | 52.30 | 63.70 |
| 2001 | 75.85 | 54.16 | 65.38 | 82.33 | 64.55 | 73.47 |
| 2011 | 82.14 | 65.46 | 74.04 | 86.81 | 73.86 | 80.33 |

1. குறைந்த மனித மேம்பாடு (00.0 to 0.499)
2. நடுத்தர மனித மேம்பாடு (0.50 to 0.799)
3. உயர்தர மனித மேம்பாடு (0.80 to 1.00)

▶ 2004 ஆம் ஆண்டு மனித மேம்பாட்டு வீதத்தின்படி (HDR) இந்தியா நடுத்தர மனித மேம்பாடடுப் பிரிவின் கீழ் இடம் பெற்றுள்ளது. இக்குறியீட்டின் மிகப்பெரிய நன்மை யாதெனில் போதிய வருமானம் ஈட்டும் நாடுகளை விட குறைந்த வருமானம் ஈட்டும் நாடுகள் கூட மனித மேம்பாட்டை வளப்படுத்த முடியும் என்பதே ஆகும்.

**பாலின வளர்ச்சி குறியீடு (Gender Related Development Index)**

▶ இது மனித மேம்பாட்டை கொண்டு ஆண், பெண் இடையேயான ஏற்றத் தாழ்வுகளை பிரதிபலிக்கிறது. இதில் 3 அளவீடுகள் சம்பந்தப்படுகின்றன.

1. பெண்ணின் எதிர்பார்க்கப்பட்ட வாழ்வு காலம்
2. பெண்ணின் வயது வந்த கல்வி நிலை மற்றும் மொத்த சேர்க்கை சதவீதம்
3. பெண்ணின் தலா வருமானம்

**மனித ஏழ்மை குறியீடு (Human Poverty Index – HPI)**

▶ 1997 ம் ஆண்டு மனித வள மேம்பாட்டு குறியீடு மனித ஏழ்மைக் குறியீட்டை அறிமுகப்படுத்தியது. இது ஆயுட்காலத்தை இழக்கச் செய்தலையும், அறிவையும் மற்றும் நல்ல வாழ்க்கைத் தரத்தின் இழப்பினையும் அளவிடுகிறது. மனித ஏழ்மைக் குறியீடு (HPI) அதிகமாக இருக்கும் நாடு "ஏழை நாடு" என்ற இடத்தைப் பெறும். நாற்பது வயதுக்கு முன் இறத்தல், மோசமான சுகாதார சேவைகள், பாதுகாப்பற்ற தண்ணீர் வசதி, 5 வயதிற்கு கீழுள்ள குழுந்தைகளுக்கு குறைந்த சத்துள்ள உணவு முதலியன அதிகமான HPI க்கு காரணம்.

▶ இந்திய மாநிலங்களில் 1997 ல் UNFPA வால் HPI கணக்கிடப்பட்டது. UNFPA வால் நாட்டின் திட்டக்குழு HPI யை 2001 ல் கொண்டு வந்தது. இது மாநிலங்கள் வாரியாக HPI யை தயாரித்தளித்தது. தமிழ்நாடு போன்ற சில மாநிலங்கள் கூட HPI யை வெளியிட்டுள்ளன.

**இந்தியாவின் தரம்**

▶ 2014 ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி உலக அளவில் மனிதவள குறியீட்டில் இந்தியா 135 வது இடம் வகிக்கிறது 3.0.586 மதிப்பினை பெற்ற இந்தியா, நடுத்தர மனித மேம்பாடு என்ற பிரிவில் இடம் பெற்றுள்ளது. இந்த குறியீட்டில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த நாடுகளின் எண்ணிக்கை 187.

▶ 2018-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி உலக அளவில் மனிதவள குறியீட்டில் இந்தியா 130 வது இடத்தை வகிக்கிறது.

# தமிழக அரசின் திட்டங்கள்

## பெண்கள் நலத் திட்டங்கள்

- 1947-ம் ஆண்டு மகளிர் நலத் திட்டங்களை செயல்படுத்த மகளிர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டன.
- 1952-ல் சமூக நலத் திட்டங்களை செயல்படுத்த மத்திய சமூக நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது.
- 1954 ல் தமிழக அரசு, மாநில சமூக நல வாரியத்தை அமைத்தது.

## மாநில சமூக நல வாரியம் (1954)

- பெண்கள், குழந்தைகள், ஆதி திராவிடர் பழங்குடி மக்கள், அனாதைகள் போன்றோர் அனைவருக்கும் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.
- 1956 ம் ஆண்டு குடும்ப நல அறுவை சிகிச்சைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பெண்கள் உரிமைகளை பாதுகாக்க 1990-ம் ஆண்டு "தமிழக மகளிர் ஆணையம்" அமைக்கப்பட்டது.

## திருமண உதவித் திட்டம்

(i) மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

**நோக்கம்**

- ஏழை பெண்களின் கல்வி நிலையை உயர்த்தும் பொருட்டும்.
- ஏழைப் பெற்றோர்கள் தங்கள் பெண்களின் திருமணத்தை நடத்திடும் பொருட்டும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.
- தொடங்கப்பட்ட ஆண்டு : ஜீன் 1989

**உதவி**

- 10ம் வகுப்பு வரை முடித்த பெண்களுக்கு - ரூபாய் 25000 மற்றும் 4 கிராம் தங்க நாணயம்.
- பட்டயப்படிப்பு முதல் இளங்கலை பட்டம் வரை - ரூபாய் 50000 மற்றும்
- முடித்த பெண்களுக்கு 4 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.

**தகுதி**

- பெற்றோர் ஆண்டு வருமானம் 72000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- பெண்களின் வயது - 18 முதல் 30 வயது
- ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண்ணிற்கு மட்டுமே வழங்கப்படும்.

(ii) ஈ.வே. ரா மணியம்மை நினைவு ஏழை விதவைகளின் பெண்கள் திருமண உதவி திட்டம் (1981-82)

**நோக்கம்**

- ஏழை விதவைகளின் பெண்கள் திருமணம் நடைபெற உதவுதல்.

(iii) அன்னை தெரசா நினைவு அனாதைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் (1984-85)

**நோக்கம்**

- அனாதைப்பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி வழங்கும் திட்டமாகும்.

(iv) டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம்

**நோக்கம்**

- விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு, விதவை மறுமணத்தை ஊக்குவிக்கும் வகையில் நிதி வழங்கும் திட்டமாகும்.

(V) டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்பு திருமண உதவித் திட்டம்

- ஜாதி, மத பேதங்களை ஒழிக்கும் வகையில் நடைபெறும் கலப்பு திருமணங்களும் நிதியுதவி வழங்கும் திட்டமாகும்.

## மகளிர் திட்டம்

- சுய உதவிக் குழுக்கள் அமைப்பின் மூலம், சமூக பொருளாதார அதிகாரமளித்தலை பெண்களுக்கு கிடைக்கச் செய்தல்.
- 1997 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- இத்திட்டத்தை தமிழ்நாடு பெண்கள் முன்னேற்ற கழகம் செயல்படுத்துகிறது.

**நோக்கம்**

- சிறிய பொருளாதார நடவடிக்கைகள் மூலம் பெண்கள் தங்கள் பொருளாதார சமூக நிலையை உயர்த்த வழிசெய்து கொடுத்தல்.
- சுய உதவிக் குழுக்களை அமைத்து அதன் மூலம் பயிற்சி தருதல்.
- பயிற்சி முடிந்தபின், தொழில் தொடங்கும் பொருட்டு நிதியுதவி அளித்தல்

## பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்

- சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் தற்போது முதலமைச்சர் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்.

**நோக்கம்**

- குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஊக்குவித்தல்.
- பெண் சிசுக் கொலையை ஒழித்தல்.
- ஏழைக் குடும்பங்களில் உள்ள பெண் குழந்தைகளின் நல்வாழ்வை உறுதி செய்தல்.

**உதவித் தொகை**

- ஒரு பெண் குழந்தை எனில் ரூ. 50000, 2 பெண் குழந்தையெனில் தலா ரூ. 25000, ஆண் குழந்தை இருப்பின் இத்திட்டம் அக்குடும்பத்தில் பொருந்தாது.

## பெண் குழந்தைகளின் கல்விக்கான திட்டங்கள்

(i) "சத்யா அம்மையார் நினைவு அரசு அநாதைகள் திட்டம்"

**நோக்கம்**

- ஆதரவற்ற மற்றும் அனாதை குழந்தைகளுக்கு கல்வி வழங்குதல்.
- இலவச உணவு, உடை, உறைவிடம் மற்றும் மருத்துவ வசதி வழங்கல்.

**உதவி**

- உறைவிடம், கல்வி, சீருடை, இலவச புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், இலவச காலணிகள் மற்றும் மருத்துவ வசதிகள்.

## பயன் பெறுவோர்

- கைவிடப்பட்ட குழந்தைகள்
- பெற்றோரில்லாத குழந்தைகள்
- சிறைக் கைதிகளின் குழந்தைகள்
- பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகள்

### பெரியார் ஈ.வெ.ரா நாகம்மை திட்டம்

- சாதி, பிரிவு என்ற பாகுபாடின்றி அனைத்து பெண் குழந்தைகளுக்குமான இலவச கல்வி வழங்கும் திட்டமாகும்.
- 1989 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

**நோக்கம்**

- பெண் கல்வியை ஊக்குவித்தல்
- பள்ளி இடைநிற்றலை குறைத்தல்
- இளங்கலை பட்டபடிப்பு வரை பெண் களுக்கு இலவச கல்வி வழங்குதல்.

### பெண்கள் மகப்பேறு உதவித் திட்டம் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்

- 1989 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பெண் களுக்கு மகப்பேறு உதவியாக ரூ. 12000 வழங்கப்படுகிறது.

### பெண் (குழந்தை) சிசு பாதுகாப்புத் திட்டம் / தொட்டில் குழந்தை திட்டம் (1992)

- அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு அனாதை விடுதிகளில் "அரசுத் தொட்டில்கள்" ஏற்படுத்தப்பட்டன.
- சமூக பொருளாதார நிலை காரணமாக பெற்றோரால் கைவிடப்பட்ட பல பெண் குழந்தைகள் அரசுச் தொட்டிலில் சேர்க்கப்பட்டனர்.

### பெண்கள் மேம்பாட்டுத் திட்டம்:

- சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

**நோக்கம்**

- ஆதரவற்ற விதவைகள் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், சமூகத்தில் பின்தங்கிய பெண்கள், உடல் ஊனமுற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டும், சுய வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு தையல் இயந்திரம் இலவசமாக வழங்கப்படுகிறது.

### தமிழக அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டம்

- தாட்கோ → ஆதி திராவிடர் வீட்டு வசதிக் கழகம், 1974 ம் ஆண்டிலிருந்து செயல்படுகிறது.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.
- பழங்குடியினருக்கான தனி இயக்குன ரகம் 2000-ம் ஆண்டு தொடங்கப் பட்டது.
- "தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்" 2007 ம் ஆண்டு அமைக்கப்பட்டது.
- தீண்டாமையை ஒழிக்கவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான கொடுமைகளை அகற்றும் பொருட்டும் 1955-ம் ஆண்டு "உரிமைகள் பாதுகாப்பு சட்டம் மற்றும் 1989-ம் ஆண்டு "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான கொடுமைகள் தடைச் சட்டம்" ஆகியவை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

### மாற்றுத் திறனாளிகள் நலத் திட்டம்

- "1992-ம் ஆண்டு உடல் ஊன முற்றோருக்கான மறுவாழ்வு இயக்குன ரகத்தை" தமிழக அரசு அமைத்தது.
- உடல் ஊனமுற்ற குழந்தைகள் கல்வி பெற 25 சிறப்பு பள்ளிகள் மாநிலம் முழுவதும் உள்ளன. அக்குழந்தைகளுக்கு இலவச

கல்வி உணவு, உறைவிடம் உதவித் தொகை போன்றவை வழங்கப்படுகிறது.

- கல்வி நிறுவனங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் ஊனமுற்றோர்களுக்கு 4% இடஒதுக்கீடு செய்துள்ளது.

## ஆதரவற்றோர் நலத் திட்டம்

- தமிழக அரசு ஏழை விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்கள் அதாவது 18 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்களுக்கு, தாம்பரம், கடலூர், சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், காரைக்குடி போன்ற 6 இடங்களில் சேவை இல்லங்களை ஏற்படுத்தியுள்ளது.
- 1000-க்கும் மேற்பட்ட அனாதை குழந்தைகள் வசிக்கும் அனாதை இல்லங்களில் நூலகங்களை ஏற்படுத்தும் திட்டம் "ஆனந்தம்" என்ற பெயரில் செய்யப்படுகிறது. மற்றும் "சத்யா அம்மையார் நினைவு அரசு அனாதைகள் திட்டம்" போன்றவை செயல்படுத்தப் படுகின்றன.

## முதியோர்களுக்கான தமிழக அரசின் நலத் திட்டங்கள்:

### (i) முதியோர் ஓய்வூதிய திட்டம் 1962

- 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படுகிறது.

**பயனாளிகள்**

- மகனால் கைவிடப்பட்டவர்கள் அல்லது 20 வயதிற்குட்பட்ட மகன் உள்ள முதியோர்கள்.

**மற்ற பயன்கள்**

- வருடத்திற்கு இரு முறை இலவச உடை.
- இலவச சத்துணவு

### (ii) அன்னபூர்ணா திட்டம்

- வயதானவர்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

| ஓய்வூதியத் திட்டங்கள் | தொடங்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| முதியோர் ஓய்வூதியத் திட்டம் | 1962 |
| உடல் ஊனமுற்றோருக்கான ஓய்வூதியத் திட்டம் | 1974 |
| ஆதரவற்ற விதவைகளுக்கான ஓய்வூதியத் திட்டம் | 1975 |
| ஆதரவற்ற விவசாய தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் | 1981 |
| கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 1986 |

## தமிழக அரசின் நலத் திட்டங்கள்

### I) ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டம்

- 1975 ம் ஆண்டு அக்டோபர் 2 ம் நாள் தொடங்கப்பட்டது.
- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங் களிலும் செயல்படுத்தப்படுகிறது.
- மத்திய அரசு உதவியுடன் செயல் படுத்தப்படும் திட்டம்.

**நோக்கம்**

- தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குதல், மற்றும் வாழ்க்கை முழுமைக்கு மான ஊட்டச்சத்து பாதுகாப்பை வழங்குதல்.

1. 13 வயதிற்குட்டபட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாட்டை போக்குதல்.
2. 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உடல்நலம் மற்றும் மனநல மேம்பாட்டை வலியுறுத்தல்.
3. கர்ப்பிணிப் பெண்கள், இளம் பெண்கள் போன்றோரின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்தினை உயர்த்த வழிசெய்கிறது.

**2) அங்கன்வாடி மையங்கள் (குழந்தைகள் மையம்)**

**சேவைகள்**

- குழந்தைகளின் வளர்ச்சியை கண்காணித்தல்.
- தேவைப்படும் ஊட்டம் வழங்கல்.
- தொடக்க கல்விக்கு முந்தைய கல்வி
- எடை சரிபார்த்தல்
- மதிய உணவு
- குழந்தை பிறப்பிற்கு முன்னான மற்றும் பின்னான கவனிப்பு
- கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தை களுக்கான தடுப்பூசி போடுதல்.

**3) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் (1962)**

- பள்ளி குழந்தைகளுக்கு (5 முதல் 15 வயதிற்குட்பட்டோர்) சத்துணவு வழங்குதல்.
- குழந்தைகளின் உடல்நலம் மற்றும் மன நல மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் தருதல்.
- ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குதல் மற்றும் எழுத்தறிவு விகிதத்தை அதிகரித்தல்
- வாரம் 3 முறை முட்டை வழங்கப் படுகிறது.

1. தடுப்பூசித் திட்டம்
2. நடமாடும் மருத்துவமனைகள்
3. மலேரியா, காசநோய், யானைக்கால் வியாதி, தொழுநோய் போன்றவை தடுக்கும் திட்டங்கள்
4. வரும் முன் காப்போம் திட்டம்
5. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி
6. நினைவு மகப்பேறு உதவித் திட்டம் என்பன போன்ற பல்வேறு வகையான திட்டங்கள் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

## தமிழக அரசின் சமூக நலத் திட்டங்கள்

**உழவர் சந்தை திட்டம்**

- விளைகின்ற காய்கறிகளை இடைத் தரகர்கள் இல்லாமல் நேரடியாக விவசாயிகளிடமிருந்து மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்னும் நோக்கில் உருவாக்கப்பட்டது.
- முதல் உழவர் சந்தை 1999 ம் ஆண்டு மதுரையில் துவங்கப்பட்டது.

**பெரியார் நினைவு சமத்துவபுரம்**

- சமூக நீதியை வளர்க்கும் பொருட்டும், தந்தை பெரியாரின் கருத்துகளான சமதர்ம சமூகத்தை உருவாக்கும் பொருட்டும் மாதிரி வீடுகளை உருவாக்கி மக்களுக்கு அளித்தல் இதன் நோக்கமாகும்.
- 1997-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- முதல் சமத்துவபுரம் 1998-ம் ஆண்டு ஆகஸ்ட் 17-ம் நாள் மதுரையில் உள்ள மேலக்கோட்டை கிராமத்தில் அப்போதைய தமிழக முதல்வர் மு. கருணாநிதி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

▶ பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் குழுவில் கிராம, நிர்வாக அலுவலர் (VAO) தாசில்தார், பஞ்சாயத்து தலைவர் முதலியோர் இருப்பர். இதுவரை 145 சமத்துவபுரங்கள் உள்ளன.

▶ வீடுகள் ஒதுக்கப்படும் முறை SC → 40, MBC → 25, BC → 25, மற்றவர்கள் → 10, 3% வீடுகள் அனைத்து சமூகத்திலும் உள்ள பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது.

**வரும் முன் காப்போம் திட்டம்**

▶ 1996 ம் ஆண்டு, அந்நாளைய தமிழக முதல்வர் மு.கருணாநிதி அவர்களால் தொடங்கப்பட்டது.

▶ நோய்களை முன்னரே கண்டறிந்து தடுத்தல் என்னும் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

**கோயில்களில் அன்னதான திட்டம்**

கோயில்களுக்கு வரும் அனைத்து பக்தர்களுக்கும் மதிய உணவு அளிக்கும் பொருட்டு கடந்த 2002-ம் ஆண்டு அப்போதைய தமிழக முதல்வர், ஜெயலலிதா அவர்களால் தொடங்கப்பட்டது.

**இலவச சைக்கிள் திட்டம்**

▶ 2004-2005-ல் மாணவிகளுக்கு மட்டுமான திட்டமாக தொடங்கப்பட்டது.

▶ பின்னர் 2005-2006-ல் 11 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் BC, MBC, DNC மாண-வர், மாணவிகள் அனைவருக்கும் என விரிவுபடுத்தப்பட்டது.

**புது வாழ்வு திட்டம் நோக்கம்**

▶ வாழ்க்கைத் தரம் உயர்த்துதல்.

▶ பொருளாதார அதிகாரமளித்தல்

▶ வறுமையை அழித்தல்

▶ தமிழ்நாடு வறுமை குறைப்பு திட்டத்தின் ஒரு அங்கமாக நவம்பர் 2005-ல் தொடங்கப்பட்டது.

▶ உலக வங்கியின் நிதியுதவியோடு தமிழக அரசின் வறுமை ஒழிப்பு மற்றும் கிராமப்புற மேம்பாட்டு திட்டமாக செயல்படுகிறது.

▶ ஆகஸ்ட் 2006 முதல் செயல்படுத்தப் படுகிறது.

▶ ”வாழ்ந்து காட்டுவோம் திட்டம்” என்று பெயர் மாற்றப்பட்ட இத்திட்டம் தற்போது மீண்டும் ”புது வாழ்வு திட்டம்” என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**பயனாளிகள்**

▶ ஏழைகள், ஊனமுற்றோர், பாதிக்கப்பட்ட மக்கள்

**உதவிகள்**

1. திறன் வளர் பயிற்சி
2. பொருளாதார உதவிகள்
3. சுய உதவிக் குழுக்கள் அமைத்தல் மற்றும் திட்டங்களை செயல்படுத்துதல்

**இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்கும் திட்டம்**

▶ ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் ஜீன் 15, 2009 அன்று தொடங்கப்பட்டது.

**தன்னிறைவுத் திட்டம்**

▶ 1997-1998-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டது.

▶ சுய உதவி மற்றும் தற்சார்பு கருத்துகளை சமூகத்தில் வளர்ப்பதன் மூலம் ஊரக கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

**சிறப்பம்சம்**

- திட்டமிடுதல் மட்டுமின்றி வளங்களை ஒதுக்குதல், செயல்படுத்துதல் போன்ற அனைத்தையும் அச்சமூகத்தினரே செய்தல்.
- குறிப்பிட்ட பகுதியின் அனைத்து தேவை களையும் அம் மக்களே நிறைவேற்றிக் கொள்ள வழி வகுக்கிறது.

**நிதி**

- குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பங்கு மக்கள் பங்களிப்பாகவும் இரண்டு பங்கு தொகையை அரசு மானியமாகவும் கொண்டு ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- வெளிநாடுகளில் வாழும் தமிழக மக்களிடமும், அறக்கட்டளைகள் நிறுவி நிதி வசூலிக்கப்படுகிறது.
- நன்கொடையாளர்கள், தங்களது தொகையின்மூலம் தொடங்கப்பட்ட பணியின் வளர்ச்சிப் போக்கினைப் பற்றி தெரிந்து கொள்ளவும் முடியும்.

**பணிகள்**

- இத்திட்டப்படி, அவசியமான பணிகளை பொது மக்களே தேர்வு செய்து திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் படி செயல்படுத்தலாம்.

**திட்ட பெயர் மாற்றம்**

- 2001-2006 → தன்னிறைவுத் திட்டம்
- 2006-2011 → நமக்கு நாமே திட்டம்
- 2011 முதல் → தன்னிறைவுத் திட்டம்

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்**

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துத் துறையால் செப்டம்பர் 11, 2006 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

**நோக்கம்**

- கிராமங்களில், தேவைப்படும் நிதி வளங்களை சிறிது சிறிதாக மேம் படுத்துதல்.
- ஊரகப் பகுதிகளில் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல

**திட்டச் செயல்பாடு**

- ஒவ்வொரு வருடமும், கிராமத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி (1/5 பகுதி) தேர்ந்தெடுக்கப்பட்டு, வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- ஐந்து வருடத்தில் மொத்த கிராமமும் வளர்ச்சியுறும்.
- குளம், ஊரணி அமைத்தல்
- விளையாட்டு மையம் ஏற்படுத்தல்
- எரியூட்டு மையம் கட்டுதல்
- நூலகம்/ குடிநீர் வசதி ஏற்படுத்துதல் போன்றவை இத்திட்டத்தின் கீழ் செயல் படுத்தப்படுகின்றன.
- 2007-ம் ஆண்டு ஜனவரி 21-ம் நாள் வேலூர் மாவட்டத்தில் திருமாதலம் பாக்கம் ஊராட்சியில் அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

**கலைஞர் வீட்டு வசதித் திட்டம்**

- தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள குடிசைகள் அனைத்தையும் நிலையான கான்கிரீட் வீடுகளாக மாற்றுவதற்கு "கலைஞர் வீட்டு வசதித்திட்டம்" ஜனவரி 6, 2010-ம் அன்று தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது.
- இத்திட்டம் 2010-2011 முதல் 2015-2016 வரையிலான 6 ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள அனைத்து குடிசை வீடுகளையும் கான்கிரீட் வீடுகளாக மாற்ற வேண்டும் என்ற நோக்கம் கொண்டது.

- இதன் மூலம் 2016-ல் இந்தியாவிலேயே குடிசைகள் இல்லாத முதல் மாநிலம் என்னும் பெருமையை தமிழ்நாடு பெறும் எனத் திட்டமிடப்பட்டது.

**சட்டமன்ற உறுப்பனர் தெகுதி மேம்பாட்டுத் திட்டம்**

- ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேவையான கட்டமைப்பு வசதிகள் உருவாக்கவும், மேம்படுத்தவும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டம் "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்" ஆகும்.
- இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 1.75 கோடியிலிருந்து, 2 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**முதலமைச்சரின் சூரிய ஆற்றல் பசுமை வீடுகள் திட்டம்**

- ஜீன் 3, 2011-ம் ஆண்டு ஆளுநர் உரையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**நோக்கம்**

- ஊரகப் பகுதியில், வீடுகள் கட்டித் தருதல்.

**சிறப்பம்சம்**

- வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு கட்டி தரப்படுகிறது.
- படுக்கை அறை, குளியலறை, தாழ்வாரம், சமையலறை மற்றும் மழைநீர் சேகரிப்பு வசதி கொண்ட வீடுகள் கட்டித் தரப்படுகிறது.
- 5 சூரிய ஆற்றலால் இயங்கும் CFL விளக்குள் பொருத்தப்படுகின்றன.
- மின் இணைப்பு வழங்கப்படுகிறது.
- 1.5 லட்சம் வீடுகட்டுவதற்கும் 30 ஆயிரம் ரூபாய் சூரிய ஆற்றல் அமைப்பை நிறுவுதலுக்கும் ஒதுக்கப்படுகிறது.
- பயனாளி, தனது சொந்த நிலத்தில் 300 ச.மீட்டரை இத்திட்டத்திற்காக வழங்குதல் வேண்டும்.
- அந்நிலத்தில் அரசு, பசுமை வீடுகட்டித் தரும்.

**இலக்கு**

- 5 ஆண்டுகளில் 3 லட்சம் பசுமை வீடுகள் ரூ. 5400 கோடி மதிப்பில் கட்டப்படும். ஒரு வீட்டிற்கான நிதி →1.80 லட்சம்

**பயனாளிகள்**

- வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள்
- அநாதைகள், விதவைகள், ஊனமுற்றோர் கைவிடப்பட்டோர், திருநங்கைகள், இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்டோர்.

**ஒருங்கிணைந்த பள்ளி கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

- ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் கூடுதல் கட்டிடம், சமையல் கூடம், குடிநீர் வசதி கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் முழுமையாக இருப்பதை உறுதி செய்யவும். அவற்றைச் சீரமைத்திடவும், "ஒருங்கிணைந்த பள்ளிக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டம் 2011 முதல் செயல்படுத்தப்படுகிறது.

**பெண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மறுசீரமைப்பு**

- ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் பெண் களுக்கு சுகாதார வசதியை ஏற்படுத்தித் தருதல்.
- 385 ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன.

**பராமரித்தல்**

- கிராமப் பஞ்சாயத்துகள் மூலம் பராமரிக்கப்படுகிறது.

**ஊரகக் கட்டமைப்பு திட்டம்**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துகளை பராமரிக்க உதவுகிறது.

**ஊரக / கிராமப் புற சாலைகள்**

- நபார்டு வங்கியின் உதவியால் 1995-96 முதல் செயல்படுத்தப்படுகிறது.

**நபார்டு வங்கியின் முக்கிய முதலீடுகள்**

1. கிராமப்புற சாலைகள்
2. மேம்பாலங்கள்
3. பாசன வசதிகள்
4. பள்ளிகள்
5. மின் திட்டங்கள்

**சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டம்**

- பின்தங்கிய மாவட்டங்களான தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரியில், வளர்ந்து வரும் நக்சலைட்டுகளின் ஆதிக்கத்தை முறியடிக்கும் பொருட்டு 2003-2004 ம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

**தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் - தாய் திட்டம் Tamilnadu Village Habitations Improvement (THAI) Scheme**

- 2011-2012-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ஒழுங்கற்ற முறையில் வளங்களின் பகிர்வினால் ஏற்படும் தவறுகளை சீரமைக்கவும். குறைந்த பட்ச வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்யவும் கொண்டுவரப்பட்டது.
- மக்கள் தொகைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12524 கிராம ஊராட்சிகளில் 79394 குக்கிராமங்கள் உள்ளன.
- தமிழ்நாட்டில் அனைத்து கிராமங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்தும் வகையில் தமிழக அரசு தாய் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- இதற்காக 5 ஆண்டுகளில் 3400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

## மற்ற திட்டங்கள் (முதல்வர் ஜெயலலிதா ஆட்சி)

**I. இலவச அரிசி வழங்கும் திட்டம்**

- 20 கிலோ அரிசி (4 பேர் உள்ள குடும்பத்திற்கு) இலவசமாக வழங்கப் படுகிறது.
- வறுமைக்கோட்டிற்குகீழுள்ள மக்களுக்கு 35 கிலோ அரிசி (ஒரு குடும்பத்திற்கு இலவசமாக வழங்கப்படுகிறது)
- இலவச கால்நடைகள் வழங்கும் திட்டம்.
- இலவச மின்விசிறி, கிரைண்டர், மிக்ஸி வழங்கும் திட்டம்.

## மற்ற திட்டங்கள் (முதல்வர் கருணாநிதி ஆட்சி)

1. இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டம்.
2. ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசிஇலவச சமையல் எரிவாயு உருளை மற்றும் அடுப்பு
3. 2 ஏக்கர் இலவச நிலம் வழங்கும் திட்டம்.

# தமிழ்நாட்டின் பொருளாதார நிலை

## தமிழ்நாட்டின் முக்கியத் தொழிற் சாலைகளின் பரவல்

- நெசவாலைகள், சர்க்கரை ஆலைகள், காகித உற்பத்தி, தோல் பொருட்கள் உற்பத்தி, சிமெண்ட், மின் உபகரணங்கள், மோட்டார் வாகனம், தகவல் தொழில் நுட்பம் மற்றும் சுற்றுலா ஆகியவை தமிழ்நாட்டின் முக்கியத் தொழில் துறைகளாகும்.

## நெசவுத் தொழிற்சாலை

- இந்திய நெசவுத் தொழில் துறையில் பருத்தி இழை உற்பத்தி, நெசவுத் துணி, உள்ளாடை, மற்றும் ஆயத்த ஆடை உற்பத்தியில் தமிழ்நாடு பெரும்பங்கு வகிக்கின்றது.
- பருத்தி நூல் இழை மற்றும் துணி உற்பத்தியில் இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 25 விழுக்காடு தமிழகத்தின் பங்களிப்பாகும்.
- அயன மண்டல காலநிலை, எளிதாகக் கிடைக்கும் மூலப்பொருள், சந்தையில் பருத்திக்கான தேவை, கணக்கற்ற மின் திட்டங்களின் மூலம் கிடைக்கும் தடங்கலற்ற மின் விநியோகம், அதிக எண்ணிக்கையில் குறைந்த ஊதியத்தில் கிடைக்கும் தொழிலாளர்கள் ஆகியவை தமிழ்நாட்டில் பரவிக் காணப்படும் நெசவாலைகள் அமைவதற்கான காரணங்களாகும்.
- கோயம்புத்தூர், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை, திருப்பூர், காரமடை, ஈரோடு, பவானி, திண்டுக்கல், திருமங்கலம், மதுரை, பாளையங்கோட்டை, பாபநாசம் மற்றும் தேனி ஆகியவை நெசவுத் தொழிலின் மையப் பகுதிகளாகும்.
- கோயம்புத்தூர் மண்டலம் மிகப் பெரிய அளவில் நெவுத் தொழிலில் ஈடுப்பட்டுள்ளதால் இதனை தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கின்றனனர்.
- திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மூன்றுமாவட்டங்கள் நெசவுத்தொழிலின் மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிப்பதால் இப்பகுதி தமிழ்நாட்டின் ”நெசவுப் பள்ளத்தாக்கு” என்று அழைக்கப்படுகிறது.
- இவற்றுள் திருப்பூர் தமிழ்நாட்டின் 70 சதவிகித உள்ளாடைகளை ஏற்றுமதி செய்கிறது.
- ஆடை மற்றும் படுக்கை விரிப்புகளின் உற்பத்தியில் ஈரோடு மாவட்டம் முன்னிலை வகிக்கின்றது.

▶ தமிழ்நாட்டின் நெசவுத் தலைநகரம் என்று "கரூர்" அழைக்கப்படுகிறது.

## பட்டு நெசவுத் தொழில்

▶ நாட்டின் பட்டு நெசவுத் தொழில் உற்பத்தியில் தமிழ்நாடு நான்காம் இடத்தைப் பெற்றுள்ளது.

▶ தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் பாரம்பரியமிக்க தனித்த நெசவுத் தரத்திற்காக உலகமெங்கும் புகழ் பெற்றுள்ளது.

▶ இதைத் தவிர ஆரணி, இராசிபுரம் மற்றும் திருப்புவனம் ஆகியவை குறிப்பிடத்தக்க பட்டு நெசவு மையங்களாகும்.

▶ ஓசூரில் உள்ள பட்டுப் புழு வளர்ப்பு பயிற்சி மையம், விவசாயிகளுக்கு, விவசாயத்துடன் பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சி அளித்து ஊரக உற்பத்தி திறனை உயர்த்த வகை செய்கின்றது.

▶ செயற்கை இழை ஆடை உற்பத்தியில் மேட்டூர், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய பகுதிகள் சிறப்புடன் விளங்குகின்றன.

## சர்க்கரை ஆலைகள்

▶ இந்தியாவின் 10 சதவீத சர்க்கரை தமிழ்நாட்டில் உற்பத்தியாகிறது.

▶ காலநிலை, அதிக மகசூலைத் தரும் பொருத்தமான மண்வளம், பாசன வசதி, போக்குவரத்து. சந்தை மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் போன்ற ஆதாரமான காரணிகளால் தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் பல இடங்களிலும் பரவி இருக்கின்றன.

▶ பெரும்பாலான சர்க்கரை ஆலைகள் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படுகின்றன.

▶ தமிழ்நாட்டில் மொத்தம் 42 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 கூட்டுறவுசங்கங்களாலும் 3 அரசாலும் 23 தனியாராலும் நிர்வகிக்கப்படுகின்றன.

▶ விழுப்புரம், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்டங்கள்

### ஒருங்கிணைந்த சர்க்கரை ஆலைகள்

| பெயர் | தாலுக்கா | மாவட்டம் |
|---|---|---|
| கோத்தாரி- சத்யமங்கலம் | அரியலூர் | அரியலூர் |
| ராஜஸ்ரீ - செம்மேடு | செஞ்சி | விழுப்புரம் |
| தரணி-வாசுதேவ நல்லூர் | சங்கராபுரம் | விழுப்புரம் |
| எம்.ஈ. சுகர்-இடைக்கல் | அம்பாசமுத்திரம் | திருநெல்வேலி |
| ஸ்ரீ அம்பிகா - மன்ஜினி | ஆத்தூர் | சேலம் |
| தனலெட்சுமி ஸ்ரீனிவாசன்- உடும்பியம் | வேப்பந்தட்டை | பெரம்பலூர் |
| புண்ணாரி அம்மன்- கொலுந்தன்பட்டு | தண்டாரம்பட்டு | திருவண்ணாமலை |

சர்க்கரை ஆலைகள் அதிகமுள்ள மாவட்டங்களாகும்.

- வெல்லம், கற்கண்டு, சர்க்கரை ஆகியவை கரும்பிலிருந்து கிடைக்கும் உற்பத்தி பொருட்களாகும்.
- கரும்புச்சக்கை (Bagasse) காகித தொழிற்சாலைக்கு மூலப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது.
- தமிழக அரசின் முயற்சியால் ஒருங்கிணைந்த சர்க்கரை வளாகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.
- எரிசக்தி உற்பத்தி, எத்தனால் மற்றும் திசு வளர் ஆய்வகம், எரிசாராய உற்பத்தி, திசு வளர்ப்பு சோதனைக்கூடம், மண் பரிசோதனைக் கூடம், கூட்டு உரம் தயாரித்தல் போன்ற பணிகள் இவ்வொருங்கிணைந்த மையங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

## உணவு பதப்படுத்தும் முறை

- உணவு பதப்படுத்தும் தொழில் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக வளர்ந்திருக்கிறது.
- மாம்பழ இரசம் பதப்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது.
- விரைவில் சமைத்து உண்ணும் வகையில் பலவிதமான திடீர் உணவுப் பொட்டலங்கள் மற்றும் உணவிற்கு தேவையான மசாலா பொடிகள் தயாரிக்கப்பட்டு உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் விநியோகிக்கப்படுகின்றன.
- நொறுக்கு வகை பலகாரங்களும், பிஸ்கெட்டுகளும் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- இவையல்லாது கடல்சார் பொருட்களும் மிக அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டின் நீண்ட கடற்கரை இதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

## காகித தொழிற்சாலை

- இந்தியாவின் காகித உற்பத்தியில் ஆந்திராவிற்கு அடுத்த படியாக தமிழகம் இரண்டாம் நிலையில் உள்ளது.
- நாட்டின் 12 சதவிகித காகித உற்பத்தி தமிழ்நாட்டிற்கு உரியது.
- மூங்கில், புற்கள், கரும்புச் சக்கை ஆகியவற்றை மூலப் பொருள்களாகக் கொண்டு காகிதம் தயாரிக்கப்படுகிறது.
- சோடா, சோடா உப்பு, குளோரின், கந்தகம், மரக்கூழ் மற்றும் அதிக அளவில் தண்ணீர் ஆகியவை இதர தேவைகளாகும்.
- தமிழ்நாட்டில் புத்தாக்கத்துறை, (காஞ்சிபுரம்), பவானி சாகர், பள்ளிப்பாளையம், புகளூர், பரமத்தி வேலூர், கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, தொப்பம்பட்டி, நிலக்கோட்டை மற்றும் சேரன்மாதேவி ஆகிய இடங்களில் காகித தொழிற் சாலைகள் அமைந்துள்ளன.
- தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) உலக வங்கியின் உதவியுடன் 1979 ஆம் ஆண்டு கரூர் மாவட்டத்தில் புகளூருக்கு அருகில் நிறுவப்பட்டது.
- ஆண்டுக்கு ஒரு மில்லியன் டன் கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு காகிதமாகத் தயாரிப்பதில் உலகிலேயே மிகப்பெரிய ஆலையாக இவ்வாலை திகழ்கிறது.
- செய்தித்தாள் தவிர காகிதம், தொலை பேசி கையேடு, கணிணி அச்சுத்தாள், சுவரொட்டி தாள்கள் மற்றும் நகல் அச்சுத்தாள் உற்பத்தியிலும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

### தோல் பதனிடுதல் தொழில்

- இந்தியாவின் 70% தோல் பதனிடும் ஆலைகள் தமிழ்நாட்டில் உள்ளன.
- இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 60% தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி யாகின்றன.
- தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தமிழகம் எங்கும் பரவியிருக்கின்றன.
- மேலும் வேலை வாய்ப்பும் ஏற்றுமதிக்கான வாய்ப்பும் உள்ளதால் தமிழ்நாட்டின் முக்கியத் தொழிலாக உள்ளது.
- இத்தொழில் கால்நடை வளர்ப்பை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படுகிறது.
- உரித்தெடுக்கப்பட்ட விலங்குகளின் தோலினை பதப்படுத்தி பின்பு அதிலிருந்து பலவிதமான பொருட்கள் செய்யப்படுகின்றன.
- விலங்குகளின் தோலை டானின் என்ற அமிலப் பொருள் கொண்டு பதப்படுத்துதலை டானிங் என்று குறிப்பிடுவர்.
- தோலைப் பதப்படுத்துவதால் தோல் இலகுத் தன்மையுடனும் நீரில் கரையாமலும் பூஞ்சைத் தாக்குதலுக்கு ஆட்படாமலும் தரம் நிலைத்து நிற்கும்.
- தோலைப் பதனிட தாவரப் பொருளான மரப்பட்டைகளை பயன்படுத்தும் போது தோல் அதிக இலகு தன்மையுடன் இருக்கும். இம்முறைக்கு தாவரப் பதனிடுதல் என்று பெயர்.
- இவை மர இருக்கையில் அமர்வு இடத்தில் பொருத்தப்படுகிறது.
- அமிலப் பொருட்கள், குரோமியம் மற்றும் மிருக கொழுப்பு கொண்டு பதனிடும் முறையை ஈரநிலை முறை (அல்லது) இரசாயனப் பதனிடுதல் முறை என்பர்.
- இம்முறையில் பதனிடப்படும் தோல் அதிக இழுவைத் தன்மை உடையதால் இவை கைப்பைகள் மற்றும் தோல் ஆடைகள் செய்யப் பயன்படுகின்றன.
- சென்னை, வேலூர், காஞ்சிபுரம், திருவாரூர், திருச்சி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பரவிக் காணப்படுகின்றன.
- சென்னை, வேலூர், ஆம்பூர், இராணிப் பேட்டை, வாணியம்பாடி, திண்டுக்கல், திருச்சி ஆகிய நகரங்களில் குறிப்பிடத்தக்க அளவில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன.

> பெரிய விலங்குகள் மற்றும் மாடுகளின் தோலினை hide என்று ஆங்கிலத்தில கூறுவர். சிறிய விலங்குகளின் தோலினை skin என்று குறிப்பிடுவர்.

### சிமெண்ட் தொழிற்சாலை

- தேசிய அளவில் சிமெண்ட் உற்பத்தியில் 4 ஆம் இடத்தினைப் பெற்று தமிழ்நாடு 10% சிமெண்ட் உற்பத்தி செய்கிறது.
- தமிழ்நாடு சிமெண்ட் கூட்டுறவு நிறுவனம் (TANCEM) தமிழக அரசால் நிர்வகிக்கப்படும் பொதுத்துறையைச் சார்ந்ததாகும்.
- இங்கு இந்திய தர நிர்ணயத்தைக் காட்டிலும் மிக உயர்ந்த தரத்தில் இரு வகையான சிமெண்ட் தயாரிக்கப் படுகிறது.
- அவை சாதாரண போர்ட்லேண்ட் சிமெண்ட் (Ordinary Portland Cement) மற்றும் சூப்பர் ஸ்டார் சிமெண்ட் ஆகும்.

- சுண்ணாம்புக்கல், டாலமைட், ஜிப்சம், களிமண், நிலக்கரி ஆகியவை இத்தொழிற்சாலையின் மூலப்பொருட் களாகும்.
- அத்தனைப் பொருட்களும் தமிழ்நாட்டில் அகழ்ந்து எடுக்கப்படுகின்றன.
- சங்ககிரி, மதுகரை, புலியூர், குன்னம், செந்துறை, அரியலூர், டால்மியாபுரம், மானாமதுரை, துலுக்கப் பட்டி, ஆலங்குளம், தாழையூத்து போன்றவை தமிழ்நாட்டில் சிமெண்ட் உற்பத்தி செய்யும் மையங்களாகும்.

### மோட்டார் வாகனத் தொழிற்சாலை

- தமிழ்நாட்டின் பொதுவளர்ச்சி குறியீட்டில் 8% மோட்டார் வாகனத் தொழிலின் மூலம் கிடைக்கிறது.
- இந்தியாவின் 21% பயணிகள் கார் மற்றும் 33% வணிக வாகனங்கள் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன.
- இந்தியாவின் 30% தொழில்களுக்கும் 35% ஆட்டோ உபரிபாகங்கள் உற்பத்திக்கும் சென்னையில் தொழிற் கூடங்கள் அமைந்துள்ளன.
- இதன் காரணமாக சென்னை "தெற்காசியாவின் டெட்ராய்ட்" என்று அழைக்கப்படுகிறது.

### இரசாயனத் தொழிற்சாலைகள்

- இரசாயனம், மருந்து, உரம், பெட்ரோலியப் பொருட்கள், சோப்பு, அழகுப் பொருட்கள், செயற்கை இரப்பர், பிளாஸ்டிக் உற்பத்தி ஆகியவை இரசாயன தொழில்களில் உள்ளடங்கியவையாகும்.
- சென்னை அருகில் மணலி, கடலூர், பனங்குடி, நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடியில் இரசாயனத் தொழிற்சாலைகள் பரவலாக அமைந்துள்ளன.
- ஸ்பிக் (SPIC) தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியாவிலேயே மிக அதிக அளவில் உரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆகும்.
- இந்நிறுவனம் 12 மாநிலங்களுக்கு தன்னுடைய 4,000 மையங்கள் மூலம் உரம் விநியோகம் செய்கின்றது.
- ஒரு வருடத்திற்கு 2 மில்லியன் டன் உரத்தை இந்நிறுவனம் உற்பத்தி செய்கிறது.
- பிசர் பார்மாகியூட்டிகல்ஸ் மற்றும் டவ் கெமிக்கல் கம்பெனி ஆகியவை சென்னையில் ஆராய்ச்சி மையங்களை நிறுவியுள்ளன.

### மின்சார மற்றும் மின்னணு உபகரணத் தொழிற்சாலைகள்

- மின்னணு தொழில் தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் தொழிலாகும்.
- உலகளாவிய தொலைதொடர்பு சாதன நிறுவனங்களான நோக்கியா, பிளக்ஸ்ட்ரானிகஸ், மோட்டோரலா, சோனி எரிக்சன், பாக்ஸ்கான், சாம்சங், சிஸ்கோ, மோஸர் பேயர் மற்றும் டெல் ஆகிய நிறுவனங்கள் சென்னையை தமது உற்பத்தித் தளமாக கொண்டுள்ளன.
- மின்சுற்று பலகை தயாரிப்பும், கைப்பேசி தயாரிப்பும் இந்நிறுவனங்களின் உற்பத்தி யில் முக்கிய அங்கம் வகிக்கின்றன.
- பாரத உயர் மின் உற்பத்தி கழகம் (BHEL) தனது ஆறு பெரிய உற்பத்தி தலங்களுள் ஒன்றை திருச்சியில் நிறுவியுள்ளது.
- நீர் மின்சக்தி நிலையங்களுக்குத் தேவையான கொதி கலன்கள்,

ஜெனரேட்டர்கள், விசைச் சுற்று கலன்கள் ஆகியவற்றை இந்நிறுவனம் உற்பத்தி செய்கின்றது.

### மென்பொருள் தொழிலகம்

- இந்தியாவின் இரண்டாவது மென் பொருள் ஏற்றுமதியாளராக தமிழ்நாடு அமைந்துள்ளது.
- கர்நாடகத்தை தொடர்ந்து தமிழ்நாட்டில் தான் அதிக அளவிலான வெளி வர்த்தக செயல்பாடுகளை (BPO) கையாளுதல் நடைபெறுகிறது.

### சென்னையிலுள்ள முக்கிய தேசிய மற்றும் உலகளாவிய நிறுவனங்கள்:

- வெரிசோன், ஹுவிலட் பாக்கட்ர், ஐ.பி. எம், அசெஞ்சர், இராம்கோ சிஸ்டம், கம்ப்யூடர் சயின்ஸ் கார்ப்பரேஷன், காக்னிசன்ட், டாடா கன்சல்டன்ஸி, இன்போசிஸ், விப்ரோ, ஹெச். சி.எல். டெக் மகேந்திரா, போலாரிஸ், அரிசெண்ட், மோப்சிஸ் லிட் அக்மி டெக்னாலஜி, கோவன்சிஸ், போர்டு இன்பர்மேஷன் டெக்னாலஜி, ஐ.என்.ஸா, ஐசாப்ட், ஐ நெளட்ரிஸ், எலக்ட்ரானிக்ஸ், டெட்டா சிஸ்டம் மற்றும் பாலி.
- சிங்கப்பூரை தலைமையிடமாகக் கொண்ட அஸன்டாஸ் நிறுவனமும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும் இணைந்து இந்தியாவின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப வளாகத்தை சென்னை தரமணியில் அமைந்துள்ளன.

### உரத் தொழிற்சாலை

- தமிழகத்தில் மணலி, தூத்துக்குடி, நெய்வேலி, மேட்டூர், எண்ணூர் ஆகிய இடங்களில் உரத் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன.
- ஸ்பிக் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது இந்தியாவிலேயே மிக அதிக அளவில் உரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆகும்.

### பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைகள்

- தமிழகத்தில் மணலி (சென்னை), பனங்குடி (நாகப்பட்டினம்) ஆகிய இடங்களில் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைகள் அமைந்துள்ளன.

### தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழில்கள்

- தமிழகத்தில் சிவகாசி, விருதுநகர், மதுரை ஆகிய இடங்களில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிசாலைகள் அமைந்துள்ளன.
- திண்டுக்கல்லில் பூட்டுத் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது.
- தமிழகத்தின் குட்டி ஜப்பான் என்று நேரு அவர்களால் வர்ணிக்கப்பட்ட சிவகாசி விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இது தீப்பெட்டி தயாரிப்பு, பட்டாசு தயாரிப்பு மற்றும் ஆப்செட் பிரிண்டிங் தொழில் ஆகியவற்றில் இந்திய அளவில் முதலிடம் வகிக்கிறது.
- இந்தியாவின் மொத்த பட்டாசு உற்பத்தியில் 90% மொத்த தீப்பெட்டி உற்பத்தியில் 80% மொத்த ஆப்செட் பிரிண்டிங்கில் 60% சிவகாசியில் உற்பத்தி செய்யப்படுகின்றன.
- சிவகாசி, இந்தியாவில் அதிக வரி செலுத்தும் நகரங்கள் ஒன்றாகும்.
- சிவகாசி 100% வேலைவாய்ப்பு பெற்றுள்ள நகரமாகும்.

## பிற தொழிற்சாலைகள்

- நெய்வேலி, அனல் மின் உற்பத்தி மட்டும் அல்லாது உரம் மற்றும் பீங்கான் பொருட்கள் உற்பத்தியையும் தன்னகத்தே கொண்டுள்ளது.
- வெண்கலச் சிலை மற்றும் இசைக் கருவிகள் தயாரிப்பில் தஞ்சாவூர், கும்பகோணம் சிறந்து விளங்குகிறது.
- சிறந்த வரையறை செய்யப்பட்ட உயர் தொழில்நுட்பகோட்பாட்டைநிலைநிறுத்த அனைத்து மகளிர் உயர் தொழில் நுட்ப பூங்காவை அமைத்த முதல் மாநிலம் தமிழ்நாடு.
- வெள்ளித்திரை, சின்னத்திரை தயாரிப்பிலும் சென்னை, மும்பைக்கு அடுத்தப்படியாக இரண்டாவது இடத்தில் உள்ளது.
- கரூர் மற்றும் நாமக்கல் தமிழகத்தின் பேருந்து கட்டுமானத் தொழில் மையமாக விளங்குகிறது.
- உலகின் 6வது பெரிய வாட்ச் தயாரிக்கும் நிறுவனமான டைட்டன் ஓசூரில் அமைந்துள்ளது. இது தமிழக அரசின் TIDCO மற்றும் டாடா நிறுவனம் ஆகியவற்றின் கூட்டுத்துறை நிறுவனமாகும்.

## சிறப்பு பெருளாதார மண்டலம்

- ஏற்றுமதிக்கான தொழில் அடித்தளத்தை உருவாக்க தமிழக அரசு சிறப்பு சிறப்பு மண்டலங்களை உருவாக்கியுள்ளது.
- அவற்றுள் ஒன்று சிறப்பு பொருளாதார மண்டலமாகும்.
- உலகளாவிய வர்த்தகத்தை அந்நிய முதலீட்டாளர் மூலம் ஈர்க்க உற்பத்திக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசாங்கம் இம்மண்டலத்தில் ஏற்படுத்தி யுள்ளது.

## தமிழகத்தின் சிறப்பு பொருளாதார மண்டலங்கள்

- ஸ்ரீ பெரும்புதூர் தொழிற்பூங்கா
- இருங்காட்டுக் கோட்டை காலணிப் பூங்கா
- ஒரகடம் தொழில் வளர்ச்சி மையம் (காஞ்சிபுரம்)
- இராணிப்பேட்டை தோல்துறை சிறப்பு மண்டலம்
- பெருந்துறை பொறியியல் பொருட்கள் உற்பத்தி சிறப்பு மண்டலம்
- செய்யார் மோட்டார் வாகனம்/ தானியங்கி உபகரணங்கள் உற்பத்தி சிறப்பு மண்டலம்
- கங்கை கொண்டான் போக்குவரத்துப் பொறியியல் உபகரணங்கள்

# ஆற்றல் வளங்கள் மற்றும் மேம்பாடு

## ஆற்றல்

- பொருள் ஒன்று வேலையைச் செய்வதற்கான திறன், அதன் ஆற்றல் என வரையறுக்கப்படுகிறது.
- வெப்பம் ஒருவகை ஆற்றல் என்பதைக் கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் ஜூல். இதனால் தான் ஆற்றலின் அலகை ஜூல் என்கிறோம்.

## ஆற்றலின் பல்வேறு வகைகள்

- எந்திர ஆற்றல், நிலையாற்றல், இயக்க ஆற்றல், வேதி ஆற்றல், மின்னாற்றல், வெப்ப ஆற்றல், சூரிய ஆற்றல், காற்றாற்றல் போன்றவை ஆற்றலின் சில முக்கிய வகைகளாகும்.

## எந்திர ஆற்றல்

- பொருள் ஒன்றை நகர்த்த அல்லது இடப் பெயர்ச்சி செய்யப் பயன்படும் ஆற்றல் எந்திர ஆற்றல் எனப்படும். எந்திர ஆற்றலை இருவகையாகப் பிரிக்கலாம்.
  - நிலை ஆற்றல்
  - இயக்க ஆற்றல்

### நிலை ஆற்றல்

- பொருள் ஒன்று அதன் நிலையைப் பொருத்து அல்லது அதன் திரிபைப் பொருத்து பெற்றுள்ள ஆற்றல் நிலை ஆற்றல் எனப்படும்.

**(எ.கா)**

- தரையிலிருந்து பொருளை உயர்த்த செய்யப்படும் வேலை அதன் நிலை ஆற்றல் ஆகும். பளு தூக்குதல்.
- அணையில் தேக்கப்படும் நீரின் நிலையாற்றல் மிக அதிகம். அணையிலிருந்து வெளியேறும் போது அது சுழல் சக்கரங்களை இயங்கச் செய்து மின்னாற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது. இதுவே நீர்மின் உற்பத்தியின் தத்துவமாகும்.
- நிலையாற்றல் கோவை $Ep = mgh$

### இயக்க ஆற்றல்

- பொருள் ஒன்று அதன் இயக்கத்தினால் பெற்றுள்ள ஆற்றல் இயக்க ஆற்றல் எனப்படும்.
- பொருளின் இயக்க ஆற்றல் அதன் வேகத்தைப் பொருத்து அதிகரிக்கிறது.
- குறிப்பிட்ட திசைவேகத்தில் செல்லும் பொருளின் இயக்க ஆற்றலானது. பொருளானது அத்திசைவேகத்தைப் பெறுவதற்காகச் செய்யப்பட்ட வேலையின் அளவிற்குச் சமமாகும்.

**(எ.கா)**

- சுத்தியலின் இயக்க ஆற்றல், ஆணியினைச் சுவரினுள் ஊடுருவிச் செலுத்துதல்.

- துப்பாக்கியிலிருந்து வெளிப்படும் குண்டின் இயக்க ஆற்றல் காரணமாகக் குண்டானது இலக்குப் பொருளை ஊடுருவிச் செல்கிறது. Ek = ½ mv2

## வேதியாற்றல்

- வேதியாற்றல் என்பது வேதிவினையின் போது வெளிப்படும் ஆற்றல் ஆகும்.

**பயன்கள்**

- தாவரங்கள் மற்றும் விலங்குகளின் வளர்ச்சிக்கும் செயல்களுக்கும் அவற்றின் உணவிலுள்ள வேதியாற்றல் பயன்படுகிறது.
- மின்கலன்களில் உள்ள வேதி ஆற்றலி லிருந்து மின்னாற்றல் கிடைக்கிறது.
- எரிபொருள்களைப் பயன்படுத்தும் போது அதிலுள்ள வேதியாற்றல் வெப்ப ஆற்றலாகவும், ஒளி ஆற்றலாகவும் மாற்றமடைகிறது.

**(எ.கா)**

- மரம், நிலக்கரி, உண்ணும் உணவு, பெட்ரோல்.

## மின்னாற்றல்

- மின் விளக்கில் மின்னாற்றல் ஒளியாற்ற லாகவும் மின்விசிறியின் மின்னாற்றல் இயக்க ஆற்றலாகவும் மாற்றமடைகிறது. காற்றாலைகளில் காற்றின் இயக்க ஆற்றல் மூலம் மின்னாற்றல் பெறப்படுகிறது.

**பயன்கள்**

- தொழிற்சாலைகளில் இயந்திரங்களை இயக்கவும் தொலைத் தொடர்புத் துறையிலும் மின்னாற்றல் பயன்படுகிறது.
- பெரு நகரங்களிலும் மின்சாரத் தொடர் வண்டியை இயக்க மின்னாற்றல் பயன் படுகிறது.

## வெப்ப ஆற்றல்

- வேதிவினைகள் மற்றும் உராய்வின் மூலமாக வெப்ப ஆற்றல் கிடைக்கிறது.

**பயன்கள்**

- சூரியனிடமிருந்து வெளிப்படும் வெப்ப ஆற்றலினால் தான் மழை கிடைக்கிறது.
- அனல்மின் நிலையங்களில் நிலக்கரியை எரிப்பதால் கிடைக்கும் வெப்ப ஆற்றல் மின்சாரம் உற்பத்தி செய்யப் பயன்படுகிறது.
- மின்சார அடுப்பு, மின்சாரத் தேய்ப்பு பெட்டி முதலியவற்றில் மின்னாற்றல் வெப்ப ஆற்றலாக மாற்றமடைகிறது.

## சூரிய ஆற்றல்

- சூரியனிடம் இருந்து கிடைக்கும் ஆற்றல் சூரிய ஆற்றல் ஆகும்.
- கி.மு. 212 இல் ஆர்க்கிமிடிஸ் என்ற கிரேக்க நாட்டு அறிஞர் சூரிய ஆற்றலைப் பயன்படுத்தி உருப்பெருக்கி மூலம் ரோமானியப் போர்க்கப்பல்களை எரித்தார்.

**பயன்கள்**

- நீர் சூடேற்றும் கருவி, சூரிய அடுப்பு போன்றவற்றில் சூரிய ஆற்றல் நேரடியாகப் பயன்படுகிறது.
- செயற்கைக் கோள்களிலும், கணக்கீட்டுக் கருவிகளிலும் சூரிய மின்கலன்கள் பயன்படுகின்றன.
- சூரிய ஆற்றல் வாகனங்களை இயக்கவும் பயன்படுகிறது.

## ஆற்றல் அழிவின்மை விதி

- ஆற்றலை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது. ஒரு வகை ஆற்றலை மற்றொரு வகை ஆற்றலாக மாற்ற முடியும்.

இதனையே ஆற்றல் அழிவின்மை விதி என்கிறோம்.

▶ எந்த ஓர் ஆற்றல் மாற்றத்திலும் மொத்த ஆற்றலின் அளவு மாறாமல் இருக்கும்.

**(எ.கா)**

▶ நீர் இறைக்கப் பயன்படும் மின்மோட்டார் இயங்கும் பொழுது ஏற்படும் ஆற்றல் மாற்றம்.

▶ இங்கு மின் மோட்டாரை இயக்கச் செலவிடப்படும் மின்னாற்றலானது இயக்க ஆற்றலாகவும் ஒலி ஆற்றலாகவும் வெப்ப ஆற்றலாகவும் மாற்றம் அடைகிறது.

▶ மின்னாற்றல் (மின்மோட்டாரை இயக்கத் தேவைப்படுகிறது) → இயக்க ஆற்றல் (நீரை மேலேற்ற) + ஒலி ஆற்றல் (மின்மோட்டார் இயங்கும் போது வெளிப்படுவது) + வெப்ப ஆற்றல்

## அணுக்கரு உலை

▶ மின் ஆற்றல் உற்பத்திக்காக வடிவமைக்கப்பட்ட அணுக்கரு உலையில் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் நிலை நிறுத்தப்பட்ட அணுக்கரு பிளவு தொடர் விளைவு ஆற்றலை வெளிவிடுகிறது.

▶ வெளிப்படும் ஆற்றல் நீராவியை உருவாக்கி மின்னாற்றலை உற்பத்தி செய்கிறது.

## அணுக்கரு பிளவு

▶ ஜெர்மன் அறிவியலாளர்கள் ஆட்டோஹரன் மற்றும் ஸ்ட்ராஸ்மேன் 1939 - இல் யுரேனியம் அணுக்கரு நியூட்ரான் கொண்டு தாக்கப்படும் போது ஆற்றல் வெளியிடப்படுகிறது.

▶ மிகக் கனமான அணுக்கரு, பேரளவு ஆற்றல் வெளியீட்டுடன் இரு துண்டு

| ஆற்றல் மாற்றம் | (எ.கா) |
|---|---|
| வேதியாற்றல் வெப்ப ஆற்றலாக மாற்றமடைகிறது. மின்சாரம் கிடைக்கிறது | நிலக்கரி |
| மின்னாற்றல் ஒலி ஆற்றலாக மாறுகிறது. | ஒலி பெருக்கி |
| நிலை ஆற்றல் இயக்க ஆற்றலாக மாறுகிறது. | மின்னாக்கியின் சக்கரத்தை சுழலச் செய்வதால் மின் ஆற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது. |
| வேதியாற்றல் வெப்ப ஆற்றலாக மாற்றப் படுகிறது. | மரம், நிலக்கரி, பெட்ரோல், டீசல், எரிவாயு முதலியவற்றை எரிக்கும் போது |
| ஒளி ஆற்றல் வேதி ஆற்றலாக மாற்ற மடைகிறது. | ஒளிச்சேர்க்கையின் போது தாவரங்கள் சூரியனிடமிருந்து பெறும் ஆற்றல் |
| மின் ஆற்றல் ஒலி ஆற்றலாக மாற்ற மடைகிறது. | மின்சார அழைப்பு மணி, வாகனங்களில் உள்ள ஒலி எழுப்பிகள் |
| வேதியாற்றல் மின்னாற்றலாக மாறி அதிலிருந்து ஒளி ஆற்றல் மாற்றம். | டார்ச் விளக்கில் உள்ள மின்கலத் தொகுப்பில் ஏற்படும் ஆற்றல் மாற்றம். |

-களாக பிளக்கப்படும் செயல்முறை அணுக்கருப் பிளவு எனப்படும்.

- அணுக்கருப் பிளவு நியூட்ரான் வெளியீட்டோடு இணைந்ததாகும்.

(எ.கா)

- $_{92}U^{238}$ உடன் அணுக்கரு பிளவு
- $_{92}U^{235} + {}_{9}n^{1} \rightarrow {}_{56}Ba^{141} + {}_{36}Kr^{92} + 3{}_{9}n^{1}$ + 200MeV

## அணுக்கரு இணைவு

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட லேசான அணுக்கருக்கள் இணைந்து கனமான அணுக்கருக்கள் உருவாகும் செயல்முறை அணுக்கரு இணைவு ஆகும்.
- அணுக்கரு இணைவு செயல்முறை 107K என்ற உயர் வெப்பநிலையில் மட்டும் நிகழ்த்தப்படக் கூடியது. ஏனெனில் உயர் வெப்பநிலையில் மட்டுமே அணுக்கருக்கள் அவைகளின் பரஸ்பர எதிர்ப்பு விசையை வெற்றி கொள்ள இயலும்.
- எனவே அணுக்கரு இணைவுக்கு முன் லேசான அணுக்கருக்களின் வெப்பநிலை பல பில்லியன் டிகிரி உயர்ந்திருக்க வேண்டும்.

## ஹைட்ரஜன் குண்டு

- அணுக்கரு இணைவு வினை வெப்ப அணுக்கரு வினைகள் எனப்படுகிறது.
- அணுகுண்டு வெடித்த உடனே டியூட்ரான் மற்றும் டிரிட்டானின் பொருத்தமான சேர்ப்பு ஒன்றிணைக்கப்படுகிறது.
- கட்டுபாடற்ற முறையில் லேசான அணுக்கருக்களின் இணைவை சாதகமான வெப்பநிலையில் துவக்குகிறது.
- இது பேரளவு வெப்ப ஆற்றலை வெளிவிடுகிறது. (எ.கா.) ஹைட்ரஜன் குண்டு.
- $_{1}H^{2} + {}_{1}H^{3} \rightarrow {}_{2}He^{4} + {}_{0}n9^{1} + 3{}_{0}n^{1}$ ஆற்றல்
- கதிர்வீச்சின் அலகு ராண்ட்ஜன் ஆகும்.

## மரபுசார் ஆற்றல் மூலங்கள்

### படிம எரிபொருள்கள்

- படிம எரிபொருள்கள் புதுப்பிக்க இயலாத ஆற்றல் மூலங்கள் ஆகும்.
- இத்தகைய மூலங்களை அச்சமூட்டும் வேகத்தில் பயன்படுத்துவது தொடர்ந்தால், நமது ஆற்றல் தீர்ந்து போகும்.
- இதைத் தவிர்ப்பதற்கு மாற்று ஆற்றல் மூலங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

### அனல் ஆற்றல் கூடம்

- ஆற்றல் நிலையங்களில் ஒவ்வொரு நாளும் மின்னாற்றலை உற்பத்தி செய்ய நீரை வெப்பப்படுத்த பெரும் அளவிலான படிம எரிபொருள்கள் உருவாகின்றன.
- மின்னாற்றலாக மாற்றப்படுகின்ற வெப்ப ஆற்றலை உண்டாக்க எரிபொருள் எரிக்கப் படுகின்ற காரணத்தால் இது அனல் ஆற்றல் கூடம் என்று அழைக்கப் படுகிறது.

## மரபு சாரா ஆற்றல் மூலங்கள்

### சூரிய ஆற்றல்

- அனைத்துச் செயல்களுக்கும் சூரிய ஆற்றலே அடிப்படை இந்தியாவின் அனைத்துப்பகுதிகளும் சூரிய ஆற்றலைப் பெறுகின்றன.
- இதன் மூலம் 500 டிரில்லியன் கிலோ வாட் அளவிற்கு சூரிய ஆற்றலை உற்பத்தி செய்ய இயலும்.
- இத்தகு அளப்பரிய சூரிய ஆற்றலை இரு வழிகளில் நாம் பெற இயலும்.

- தெர்மல் (வெப்ப ஆற்றல்)
- போட்டா வோல்டாயிக் முறை (ஒளி யாற்றல்) (ஒளி மின் கலன்கள்)

**நன்மைகள்**

- இயங்கும் பகுதிகள் இல்லாதவை எனவே, குறைந்த பராமரிப்பு தேவைப் படுகின்றன.

## காற்று ஆற்றல்

- காற்றின் இயக்க ஆற்றல் வேலை செய்யப் பயன்படுத்தப்படக் கூடியது.
- மத்திய மரபுசாரா எரிசக்தித் துறையின் கணக்கீட்டின்படி, இந்தியாவில் 45600 MW காற்று ஆற்றலை உற்பத்தி செய்ய இயலும்.
- முதல் காற்றாலை 1986-ல் நிறுவப்பட்டது.
- காற்றாலைகளை நிறுவும் போது மட்டுமே அதிக செலவு ஏற்படும். பின்னர் மின் உற்பத்திக்கு ஆகும் செலவு மிக குறைவு.
- விசையாழிக்குத் தேவையான வேகத்தை நிலை நிறுத்தக் காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ ஐ விட மிக அதிகமாக இருக்க வேண்டும்.
- உலகின் மிகப் பெரிய காற்றாலை தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய் மொழி என்னுமிடத்தில் உள்ளது.

| மாநிலம் | காற்று ஆலை |
|---|---|
| தமிழ்நாடு | முப்பந்தல், பெருங்குடி |
| மகாராஷ்டிரா | சதாரா |
| கர்நாடகா | ஜோகிமதி |
| குஜராத் | லம்பா, மண்டவி |

**(எ.கா)**

- நீர் உயர்த்தும் பம்பு
- மின்னாற்றலை உற்பத்தி செய்யவும் காற்று ஆற்றல் பயன்படுகிறது.
- காற்றாற்றல் சுற்றுச்சூழல் நட்புடையது. மேலும் திறன் மிகுந்தப் புதுபிக்கக்கூடிய ஆற்றல் மூலம்.
- மின்னாற்றல் உற்பத்திக்குத் தொடர் செலவுகள் தேவைப்படாதது.

## உயிரி ஆற்றல்

- எரிபொருள்கள் தாவரம் மற்றும் விலங்குகளின் உற்பத்தி பொருள் களாதலால் இத்தகைய எரிபொருள் மூலங்கள் உயிரி ஆற்றல் மூலங்கள் எனப்படுகிறது.
- மாட்டுச்சாணம், தாவரப் பொருள்கள், பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய பொருள்கள், வீட்டு உபயோக கழிவுகள் இவை சிதைந்து உயிரி வாயுவை தருகின்றன.
- மாட்டுச் சாணத்திலிருந்து உயிரிவாயு பெறப்படுகிறது. கோபர் வாயு எனவும் அழைக்கலாம்.
- ஊரகப் பகுதிகளில் எரிபொருளாகப் பயன்படுகிறது.
- இதன் பகுதிப் பொருட்களாவன மீத்தேன் 55% கார்பன் டை ஆக்சைடு 45%.
- இதன் வெப்ப ஆற்றல், மண்ணெண் ணெய், எரி விறகு இவற்றை விட அதிகம்.
- உயிரி வாயு உற்பத்தித் திட்டம் 1982-1983 இல் தொடங்கப்பட்டது.

## புவி வெப்ப சக்தி

- நம் நாட்டில் புவி வெப்ப சக்தி அபரிமிதமாக உள்ளது.

- 340 இடங்கள், புவி வெப்ப சக்தி மையங்களாகத் திகழ்கின்றன.
- இதனை பயன்படுத்தி மின்னாற்றல் உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சி தொடங்கப்பட்டுள்ளது.

| மாநிலம் | மையங்கள் |
|---|---|
| இமாச்சலப் பிரதேசம் | மணிக்கரண் |
| ஜம்மு காஷ்மீர் (லடாக்) | புகா பள்ளத்தாக்கு |
| சட்டீஸ்கர் | தட்டபாணி |

## ஓத அலை ஆற்றல்

- இந்தியாவில் 8000-9000 MW ஒத அலை ஆற்றல் உற்பத்தி செய்யும் அளவு திறன் உள்ளது.
- குஜராத் - காம்பே வளைகுடா, கட்ச் வளைகுடா மேற்கு வங்காளம் - சுந்தரவனம்.

## அலை ஆற்றல்

- இந்தியாவில் 4000MW அளவு அலை ஆற்றல் உற்பத்தி செய்ய இயலும்.
- கேரளா மாநிலம் விழிஞ்சம் கடற்கரையில் அலை ஆற்றல் உற்பத்தி செய்யும் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.
- மற்றோர் அமைப்பு, அந்தமான் நிக்கோபர் தீவுகளில் அமைந்துள்ளது.

### நீராற்றல் கூடம்

- நீர் ஆற்றல் கூடங்கள் விழுகின்ற நீரின் ஆற்றலை மின் ஆற்றலாக மாற்று கின்றன.
- நீர் மின்னாற்றலை உற்பத்தி செய்வ தற்காகப் பெரிய நீர்த் தேக்கங்களில் நீரை சேகரிப்பதால் நீரோட்டத்தைத் தடை செய்யவும் ஆற்றின் மீது மிக உயரமான இதனால் அணைகள் கட்டப்படுகின்றன.
- நீர் மட்டம் உயர்கிறது. மேலும் இச்செயல் முறையில் பாயும் நீரின் இயக்க ஆற்றல் நிலை ஆற்றலாக மாற்றப்படுகிறது.

## கழிவுகளிலிருந்து ஆற்றல்

- முதல் தர நகரங்களிலிருந்து 30 மில்லியன் டன் நகரத் திடக் கழிவுகள் வெளியாகின்றன. இது தவிர தொழிற்சாலைகள் மூலமும் (சர்க்கரை ஆலை, காகித ஆலை) கழிவுகள் வெளியேறுகின்றன. இதிலிருந்து பெறப்படும் மொத்த ஆற்றல் 2700 MW ஆக இருக்கும் என கணக்கிடப் படுகிறது.

## பெருங்கடல் வெப்ப ஆற்றல் (Ocean thermal Energy Conversion)

- கடல் அல்லது பெருங்கடலின் ஆழ்பகுதியில் நீர் குளிர்ச்சியாய் இருக்கின்ற பொழுது மேற்பரப்பில் உள்ள நீர் சூரியனால் வெப்பப்படுத்தப்படுகிறது. வெப்பநிலையில் உள்ள இவ்வேறுபாடு பெருங்கடல் வெப்ப ஆற்றல் மாற்றக் கலனில் ஆற்றலைப் பெறப் பயன்படுத்தப் படுகிறது.
- 2 கி.மீ ஆழத்தில் உள்ள நீருக்கும் மேற்பரப்பில் உள்ள நீருக்கும் இடை யிலான வெப்பநிலை வேறுபாடு 293 K (20°C) அல்லது அதிகமாக இருந்தால், இத்தகைய திட்டம் செயல்பட முடியும்.
- மேற்பரப்பில் வெப்பமான நீர் அம்மோனியா போன்ற ஆவியாகும் திரவங்களை கொதிக்க வைக்க உபயோகிக்கப்படுகிறது.

- திரவத்தின் ஆவி மின்னியற்றியின் விசையாழியை இயக்க உபயோகிக்கப் படுகிறது.
- மாக்கடலின் ஆழத்தில் உள்ள குளிர்ந்த நீர் மேலே கொண்டு வரப்பட்டு ஆவி மீண்டும் திரவமாக குளிர்விக்கப்படுகிறது. கடலில் இருந்து கிடைக்கின்ற ஆற்றல் மிக அதிகமாக இருக்கிறது. ஆனால் திறன்மிகு வர்த்தக பயன்பாட்டில் கடினமாக இருக்கிறது.
- 5000 MW அளவிற்கு இந்தியாவில் OTEC மூலம் ஆற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது.
- இந்தியாவின் முதல் OTEC உலை தமிழ்நாடு கடற்கரையோரத்தில் நிறுவு வதற்காக திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதன் திறன் 100 MW ஆக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

## ஆற்றல் மேம்பாடு

- இந்தியா மிக வேகமாக வளர்ந்து வரும் நாடாகும். எனவே ஆற்றலுக்கான தேவைகளும் நாள்தோறும் வளர்ந்து வருகிறது.
- இந்தியாவின் மின் உற்பத்தி என்பது 1887 ஆம் ஆண்டிற்கு பின்னர்தான் தொடங்கியது.
- 1887 ஆம் ஆண்டில் டார்ஜிலிங்கில் நீர் மின்சக்தி நிலையம் ஒன்று துவங்கப்பட்டது.
- பின்னர் 1902 ஆம் ஆண்டு சிவசமுத்திரம் (கர்நாடக மாநிலம்) நீர்வீழ்ச்சியில் நீர் மின்சக்தி நிலையம் தொடங்கப்பட்டது.
- தேசிய நீர்மின்நிலையம் (NHPC) (மினிரத்னா நிறுவனம்) 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- தேசிய அனல் மின் கழகம் (NTPC) அனல் மின் சக்தியை உருவாக்கும் பொருட்டு 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- தற்போது NTPC ன் கீழ் நிலக்கரி சார்ந்த சூப்பர் அனல் மின் திட்டங்கள் 15-ம் வாயு /நீர்ம அடிப்படை கொண்ட கூட்டு சுழற்சி திட்டங்கள் 7 ம் செயல்படுகின்றன.
- அணு ஆற்றல் நிறுவனம் 1954 ஆம் ஆண்டு டிராம்பேயில் துவங்கப்பட்டது. பின்னர் 1967-ல் பாபா அணு ஆராய்ச்சி மையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- முதல் கனநீர் அணு உலை நங்கல் எனுமிடத்தில் 1962 ல் துவங்கப்பட்டது. மற்ற கனநீர் அணு உலைகள் இருக்கும் இடங்களாவன வதோரா, தூத்துக்குடி, கோடா, தால், ஹாசிரா, மங்களூர்.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டம் 1982 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.
- மரபுசாரா ஆற்றல் துறை 1982 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- இந்திய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேம்பாட்டு ஆணையம் 1987-இல் ஆரம்பமானது.
- 1992-ஆம் ஆண்டு இவ்வாணையம் மரபு சாரா ஆற்றல் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

## பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட இலக்கு

- 11 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின் உற்பத்திக்கான இலக்கு 78,700 MW (Mega Watt) என நிர்ணயிக்கப்பட்டது.
- எனினும் திட்ட முடிவில் 54,964 MW என்ற இலக்கே எட்டப்பட்டது.

- இந்த உற்பத்தி, 10 வது ஐந்தாவது திட்டத்தின் போதான உற்பத்தியை விட இரண்டரை மடங்கு அதிகம்.
- மத்திய மின்சார ஆணையம் (CEA) 1948 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- மின்சாரச் சட்டம் 2003
- மின்சார உற்பத்தி, மற்றும் பகிர்வு போன்றவற்றில் 100% அந்நிய முதலீட்டிற்கு (Automatic Approval) அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

**12 வது ஐந்தாண்டுத் திட்டத்தில்**

- 9 தீவிர மெகா சக்தி திட்டம் (Ultra Mega Power Project) திட்டங் களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

அவையானவன.

- தீவிர மெகா சக்தி திட்டம் (Ultra Mega Power Projects)

1. சாசன் (மத்தியப் பிரதேசம்)
2. முந்த்ரா (குஜராத்)
3. கிருஷ்ணாம்பட்டினம் (ஆந்திரப் பிரதேசம்)
4. தில்லையா (ஜார்கண்ட்)
5. சட்டீஸ்கர்
6. ஒடிஸா
7. தமிழ்நாடு
8. மகாராஷ்டிரா
9. கர்நாடகா

**மின்சார நிதிக் கழகம்**

(Power Grid Corporation)

- அட்டவணை “A” ன் கீழ் வரும் மத்திய பொதுத்துறை நிறுவனம் ஆகும்.
- ஜீலை 16, 1986 ம் ஆண்டு தொடங்கப் பட்டது.
- வங்கி சாரா நிதியுதவி அளிக்கும் நிறுவனமாகும்.
- நவரத்னா அந்தஸ்து பெற்றது.
- இந்தியமின்சக்திதுறையைமேம்படுத்தும் பொருட்டு நிதி சார்ந்த மற்றும் நிதி சாரா உதவியை இக்கழகம் வழங்குகிறது.

**பவர் கிரிட் கழகம்**

- இந்திய அரசு நிறுவனமாக அக்டோபர் 23, 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- 2008 ஆம் ஆண்டு நவரத்னா அந்தஸ்து வங்கப்பட்டது.
- பகுதிகள் / மாநிலங்களுக்கிடையே மின்சாரத்தை, பாதுகாப்பாகவும், குறைவான செலவிலும், நம்பகத்தன்மை உடையதாகவும் கொண்டு செல்ல பவர் கிரிட் கழகம் தேவையான வழித் தடங்களைக் கட்டமைப்பு செய்கிறது.

**ராஜீவ் காந்தி கிராமின் வித்யூதிகரன் திட்டம்**

(Rajiv Gandhi Grameen Vidyutikaran Yojana)

- கிராமப் பகுதியில் உள்ள குடியிருப்பு களுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டமாகும். இது மார்ச் 2005 இன் தொடங்கப்பட்டது.
- ஊரக மின்சார கழகம் (நவரத்னா நிறுவனம்) மூலம் இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

# நிதிக்குழு

- இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 280வது ஷரத்து நிதிக்குழு பற்றிக் குறிப்பிடுகிறது. நிதிக்குழு பகுதியளவு அதிகாரம் கொண்ட நீதி அமைப்பு போன்று செயல் படுகிறது. குடியரசுத் தலைவரால் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நிதிக்குழு அமைக்கப்படுகிறது.

## அமைப்பு

- ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள். இவர்கள் அனைவரும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப் படுகிறார்கள். குடியரசுத் தலைவரால் பரிந்துரைக்கப்படும் காலம் வரையிலும் அவர்கள் பதவியில் இருக்கலாம். மேலும் இவர்கள் மறுமுறை தேர்ந்தெடுக்கப்பட தகுதி உடையவர்களாவர்.

## தலைவர் மற்றும் உறுப்பினராவதற் குரிய தகுதிகள்

- தலைவர் மற்றும் உறுப்பினர் பொறுப்பிற் கான தகுதிகள் அரசியலமைப்பில் கூறப்படவில்லை. எனினும் தகுதி குறித்து, பாராளுமன்றம் முடிவு செய்து கொள்ளலாம் என்ற அதிகாரத்தை அரசியலமைப்பு அளித்துள்ளது. அதன்படி கீழ்காணும் வரையறைகள் அளிக்கப்பட்டுள்ளன.

## பாராளுமன்றம் உருவாகியுள்ள வரையறைகள்

**தலைவர்**

பொதுவான விஷயங்களில் அனுபவம் உடையராய் இருத்தல் வேண்டும்.

**உறுப்பினர் 1**

உயர்நீதி மன்ற நீதிபதியாக இருத்தல் வேண்டும்.

**உறுப்பினர் 2**

நிதி மற்றும் அரசாங்க கணக்குகள் தொடர்பானவற்றில் சிறப்பு அறிவு கொண்டிருத்தல் வேண்டும்.

**உறுப்பினர் 3**

நிதி விவகாரங்கள் மற்றும் அது தொடர்பான நிர்வாகத்தில் அகன்ற அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

**உறுப்பினர் 4**

பொருளாதாரத்தில் சிறந்த அறிவு பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

**பணிகள்**

- கீழ்க்கண்ட விஷயங்களில், குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைகள் வழங்குவது நிதிக்குழுவின் தலையாய பணியாகும். மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே வரியினை பகிர்ந்தளித்தல் மற்றும் மாநிலங்களுக்கிடையே வரியினை ஒதுக்குதல். மத்திய அரசால்

மாநில அரசிற்கு வழங்கப்படும் மானியங்களுக்கான கொள்கைகளை வகுத்தல். மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில், மாநில தொகுப்பு நிதியிலிருந்து, பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளுக்கு தேவையான வளங்களை பகிர்ந்தளிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். நிதி தொடர்பாக குடியரசுத் தலைவரால் வினவப்படும் விஷயங்களுக்கு பதிலளித்தல்.

### அறிக்கை சமர்ப்பித்தல்

- ▶ நிதிக்குழு, ஒவ்வொரு வருடமும் தனது செயல்பாடுகள் குறித்த அறிக்கையை குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்கும். குடியரசுத் தலைவர், அவ்வறிக்கையினை நாடாளுமன்ற இரு அவைகள் முன்பும் சமர்பிப்பார்.

### உருவாக்கம்

- ▶ இந்திய அரசாங்கத்தின் ஒரு நிர்வாகத் தீர்மானம் மூலமாக, 1950-ம் ஆண்டு மார்ச் 15-ம் நாள் திட்டக்குழு உருவாக்கப் பட்டது.
- ▶ 1946-ம் ஆண்டு K.C. நியோகி தலைமையில் அமைக்கப்பட்ட திட்ட வாரியத்தின் (Advisory Planning Board) பரிந்துரையின் பேரில் திட்டக் குழு அமைக்கப்பட்டது.

### தன்மைகள்

- ▶ திட்டக்குழு என்பது அரசியலமைப்பு அந்தஸ்து பெறாத அமைப்பு (Non-Constitutional)
- ▶ பாராளுமன்ற தீர்மானம் மூலம் கொண்டு வரப்படாத அமைப்பு (Non-Statutory)
- ▶ இந்தியாவின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான திட்டமிடலில் முதன்மையான அமைப்பு.

### திட்டக்குழுவின் பணிகள்

- ▶ நாட்டின், வளங்கள், மூலதனம், மற்றும் மனிதவளம் குறித்த மதிப்பீடு செய்தல் மேலும் அவற்றை சரியாக பயன்படுத்த தேவையான வழிமுறைகளை ஆராய்தல்.
- ▶ நாட்டின் வளங்களை மிகச் சிறந்த முறையிலும், சரியான அளவிலும் உபயோகப்படுத்தும் வகையில் திட்டத்தினை உருவாக்குதல்.
- ▶ திட்டங்களை நடைமுறைப்படுத்து வதில் முன்னுரிமைகளையும், திட்டத்தின் பல்வேறு நிலைகளையும் தீர்மானித்தல்.
- ▶ பொருளாதார வளர்ச்சிக்கு தடை செய்யும் காரணிகளை கண்டறிதல்.
- ▶ திட்டத்தின் ஒவ்வொரு படிநிலைகளையும் வெற்றிகரமாக செயல்படுத்த வேண்டிய நடவடிக்கைகளின் தன்மையினை முன்கூட்டியே தீர்மானித்தல்.
- ▶ திட்ட செயல்பாட்டின் போதான வளர்ச்சியினை கண்காணித்தல், மேலும் தேவையான மாறுதல்களை பரிந்துரைத்தல்.
- ▶ மத்திய மற்றும் மாநில அரசுகள் தங்கள் பணிகளை சரிவர செய்யும் பொருட்டு வினவும் கேள்விகளுக்கும் (அல்லது) அறிவுரைகளுக்கும், மற்றும் திட்டக்குழு தனது பணியினை மேற்கொள்ளும் பொருட்டும் வேண்டிய பரிந்துரைகளை வழங்குதல்.
- ▶ இத்தகைய செயல்பாடுகள் மூலம், இந்தியாவின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படையாய் விளங்கும், ஐந்தாண்டுதிட்டங்களை வடிவமைப்பதில் திட்டக்குழு முக்கிய பங்காற்றுகிறது.

- மேற்கண்ட பணிகளுடன், மற்ற சில பொறுப்புகளும் திட்டக் குழுவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**அவையாவன**

1. தேசிய முன்னேற்றத்தில் மக்களின் ஒத்துழைப்பை நல்குதல்.
2. ஒவ்வொரு காலங்களிலும் சில குறிப்பிட்ட பகுதிகளின் வளர்ச்சிக்கான திட்டங்கள்.
3. தொலைநோக்குத் திட்டமிடல்.
4. மனிதவளத்தின் பயன்பாட்டை அறியும் வகையில் ஆராய்தல்.
5. இந்திய தனிப்பட்ட அடையாள அமைப்பு ஆணையம் (UIDAI)
6. தேசிய மானாவாரி பகுதி ஆணையம்

- இவைதவிர தேசிய தகவலியல் மையமும், திட்டக்குழுவின் கீழ் செயல்பட்டு வந்தது, பின்னர் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் மாற்றப்பட்டது.
- இந்திய தனிப்பட்ட அடையாள அமைப்பு ஆணையம் ஜனவரி 2009-ல் திட்டக்குழுவின் கீழ் இணைக்கப்பட்ட ஆணையமாக துவங்கப்பட்டது.
- தேசிய மானாவாரி பகுதி ஆணையம் முதலில் வேளாண்மை அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வந்தது. தற்போது இவ்வாணையத்தின் அனைத்து விவகாரங்களும் திட்டக்குழுவால் கவனிக்கப்படுகிறது.
- திட்டக்குழுவானது அறிவுரை வழங்கும் அமைப்பு மட்டுமே. இதற்கு எத்தகைய நிர்வாகப் பொறுப்பும் கிடையாது.
- முடிவுகளை எடுத்தல் மற்றும் செயல் படுத்துதல் போன்ற பொறுப்புகள் திட்டக்குழுவிற்கு இல்லை, அத்தகைய பொறுப்புகள் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கே உண்டு.

## திட்டக்குழுவின் அமைப்பு

- தலைவர் → இந்திய பிரதமர்
- துணைத் தலைவர் → இவர்தான் திட்டக் குழுவின் செயலதிகாரம் கொண்ட தலைவராவார் (De Facto Exective Head)
- மத்திய கேபினட் அமைச்சரவையிடம் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான வரைவினை தயாரித்து, சமர்ப்பிக்கும் பொறுப்பு துணைத் தலைவர் வசமே உள்ளது.
- இவர் மத்திய கேபினட் அமைச் சரவையால் குறிப்பிட்ட காலத்திற்கு நியமிக்கப்படுகிறார்.
- கேபினட் அமைச்சருக்கான அந்தஸ்தை இவர் பெறுகிறார்.
- கேபினட் உறுப்பினராய் இவர் இல்லாத போதும், அனைத்து கேபினட் கூட்டங் களிலும் கலந்து கொள்ளும் உரிமை பெறுகிறார் எனினும் வாக்களிக்கும் உரிமை இவருக்கு இல்லை.

## உறுப்பினர்கள்

- சில மத்திய அமைச்சர்கள், திட்டக் குழுவின் பகுதி நேர உறுப்பினர்களாய் திகழ்வர். எனினும் நிதி அமைச்சர் மற்றும் திட்ட அமைச்சர் ஆகியோர் இக்குழுவில் கட்டாயம் இடம் பெற்றிருப்பர். (Ex Official Members)
- நான்கு முதல் ஏழு நிபுணர்கள் திட்டக்குழுவின் முழு நேர உறுப்பினர் களாய் இருப்பர். மாநிலங்களுக்கான அமைச்சருடைய அந்தஸ்தை இவர்கள் பெறுவர்.

▶ இத்திட்டக்குழுவில் ஒரு உறுப்பினர், செயலாளர் இருப்பார். மூத்த குடிமைப் பணி அதிகாரி (IAS) செயலாளராக நியமிக்கப்படுவார்.

**திட்டக்குழுவின் உட்பிரிவு அமைப்புகள்:**

1. தொழில்நுட்ப பிரிவு
2. ஹவுஸ் கீப்பிங் பிரிவு (House Keeping Branch)
3. திட்ட அறிவுரையாளர்கள்

**I. தொழில்நுட்பப் பிரிவு**

▶ முக்கிய செயல்பாட்டு பிரிவு

▶ திட்ட உருவாக்கம், திட்டம் கண்காணிப்பு திட்ட மதிப்பீடு இவற்றுடன் தொடர்பு டையது.

**2. ஹவுஸ் கீப்பிங் பிரிவு**

▶ பொது நிர்வாகக் கிளை

▶ நிறுவுதல் கிளை

▶ கண்காணிப்புக் கிளை

▶ கணக்குப் பிரிவு

▶ தனிநபர் பயிற்சிப் பிரிவு

**3. திட்ட அறிவுரையாளர்கள்**

▶ திட்டமிடுதல் தொடர்பான விஷயங்களில் திட்டக்குழுவிற்கும், இந்திய மாநிலங்களுக்கும் இடையே இணைப்பாகச் செயல்படும் பொருட்டு இந்த பதவி 1952-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

**இதன் பணிகளாவன**

▶ மாநிலங்களில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

▶ மத்திய அரசு உதவியுடன் மற்றும் மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து திட்டக்குழு மற்றும் மத்திய அமைச்சகங் களுக்கு தெரியப் படுத்துதல்.

▶ ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் குறித்து மாநிலங்களிடம் இருந்து பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் திட்டக் குழுவிற்கு அறிவுரை வழங்குதல்.

**திட்ட மதிப்பீட்டு அமைப்பு (Programme Evaluation Organisation)**

▶ திட்ட மதிப்பீட்டு அமைப்பானது, 1952 ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

▶ இது திட்டக்குழுவினை சாராத சுதந்திர அமைப்பு.

▶ எனினும் திட்டக்குழுவின் வழிகாட்டு தலின் பேரிலேயே இவ்வமைப்பு செயல் படுகிறது.

**நிர்வாக அமைப்பு**

▶ அலுவலர்கள் → உதவி இயக்குநர்கள் → துணை இயக்குநர்கள் → இணை இயக்குநர்கள் → இயக்குநர்.

**திட்ட மதிப்பீட்டு அமைப்பிற்கு 7 வட்டார அலுவலகங்கள் உள்ளன. அவை**

1. சென்னை
2. ஹைதராபாத்
3. மும்பை
4. லக்னோ

5. சண்டிகர்
6. ஜெய்பூர்
7. கொல்கத்தா

இவ்வலுவலகங்களின் தலைவர் துணை இயக்குநர் ஆவார்.

**பணிகள்:**

- ஐந்தாண்டுத் திட்டங்களில் கூறப் பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகளை குறிப்பிட்ட காலத்திற்கு மதிப்பீடு செய்து, அது தொடர்பான அறிக்கையை திட்டக்குழு மற்றும் ஏனை நிர்வாக ஆணையங்களுக்கு அளித்தல்.
- மாநிலங்களைச் சார்ந்த மதிப்பீடு அமைப்புகளுக்கு (Evaluation Organisations)தேவையான தொழில்நுட்ப அறிவுரைகளை வழங்குதல்.

**திட்டக்குழு பற்றி அறிஞர்கள் கருத்து**

- அசோக் சாண்டா → பொருளாதார கேபினட்
- நிர்வாக சீர்திருத்தகுழு → சூப்பர் கேபினட்
- கே.சந்தானம் → திட்டமிடல், நம் நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்தை பல விஷயங்களில் ஒருமுகத் தன்மை கொண்டதாய் மாற்றி விடுகிறது.

# திட்டக்குழு (ம) நிதி ஆயோக்

## திட்டக்குழு

- 1950 மார்ச் 15 ஆம் நாள் திட்டக்குழு அமைக்கப்பட்டது. இந்தக்குழு இந்தியாவின் எதிர்கால குறிக்கோள் களை ஐந்தாண்டுக்கு ஒருமுறை தீர்மானிக்கும் வகையில் விரிவான திட்டத்தை உருவாக்கும்.இந்தியப் பிரதமர் திட்டக்குழுவின் தலைவராவார்.
- துணைத் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார். இவரே குழுவின் உண்மையான நிர்வாகத் தலைவராவார்.
- அவரே ஐந்தாண்டு திட்ட வரைவு அறிக்கையை உருவாக்குவதற்கும் அதை அமைச்சரவையில் சமர்ப்பிப் பதற்கும் பொறுப்புடையராவார்.
- இவர் கேபினேட்டால் நியமிக்கப் படுகிறார். ஆனால் இவர் கேபினேட்டில் உறுப்பினர் இல்லை. அதன் கூட்டங்களில் வாக்குரிமை ஏதுமின்றி இவர் கலந்து கொள்ளலாம்.
- திட்ட அமைச்சரும், நிதி அமைச்சரும் தம் பதவி வழி உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.
- மற்ற சில அமைச்சர்கள் பகுதிநேர உறுப்பினர்களாக நியமிக்கப்படு கின்றனர்.

## நிதி ஆயோக்

1. கொள்கைக்குழு
2. மத்திய அரசு 64 ஆண்டுகளாக செயல் பாட்டில் இருந்து வந்த திட்டக்குழுவிற்கு நிதி ஆயோக் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளது.
3. NITI என்பதன் பொருள் National Institute of Transforming India. இவ்வமைப்பு செயல்பாட்டில் இருந்து வரும் திட்டக்குழுவினை மறுசீரமைப்பதற்கான முதற்படி ஆகும்.

## அமைப்பு

1. தலைவர் - பிரதமர்
2. ஆட்சி மன்றம் - அனைத்து மாநிலங்களின் முதல்வர்கள்/ யூனியன் பிரதேச ஆளுநர்கள்
3. பிராந்திய சபை - அனைத்து மாநிலங்களின் முதல்வர்கள்/ யூனியன் பிரதேச ஆளுநர்கள்
4. முழுநேர உறுப்பினர்கள்
5. பகுதி நேர உறுப்பினர்கள்
6. செயலகம் - தேவைப்பட்டால் அமைத்துக் கொள்ளலாம்.

- முதல் துணை தலைவர் - ராஜீவ் குமார்

**நோக்கம்**

- தேசிய மேம்பாட்டிற்கான முன்னுரிமை அளித்தலில் ஒன்றுபட்ட தொலை நோக்கினை உருவாக்குதல்.
- ஒருங்கிணைந்த கூட்டாட்சித் தத்துவத்தினை ஊக்குவித்தல்.
- கிராமப்புறங்கள் வரை அரசாங்கத் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் சென்றடையும் அளவில் செயல்பாட்டு வழிமுறைகளை வகுத்தல்.
- தொழில்நுட்ப மேம்பாட்டின் மீது அதிக கவனம் செலுத்துதல்.

**முக்கியச் செயல்பாடுகள்**

- இந்த அமைப்பு அரசினுடைய "சிந்தனைக் களஞ்சியமாக" செயல்படும். அரசாங்கக் கொள்கைகளை வகுப்பதிலும் மற்றும் அக்கொள்கைகளின் சிறப்பான செயற்பாட்டிற்காகவும் வழிவகை செய்யப்படும்.
- மத்திய மற்றும் மாநில அரசுகள் தங்களது கொள்கைகளை வடிவமைப்பதற்கு தேவைப்படும் அறிவுசார்ந்த மற்றும் தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்கும் நிறுவனமாகும்.
- புதிய கொள்கை முடிவுகளை செயலாக்கத்திற்கு கொண்டு வருவது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருளாதார வர்த்தகத் திட்டங்கள் அமைப்பது இதன் செயல்பாடாகும்.
- உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ செயல்பட்டுக் கொண்டிருக்கும் சிறந்த ஆட்சி முறைகளை நாடு முழுவதும் செயல்படுத்துவது. குறிப்பிட்ட பிரச்சினை சார்ந்த விஷயங்களுக்கு தீர்வளிப்பது இவ்வமைப்பின் முக்கிய அம்சமாகும்.

# தேசிய வளர்ச்சி குழு

## உருவாக்கம்

- தேசிய வளர்ச்சிக் குழுவானது, 1952-ம் ஆண்டு, ஆகஸ்ட் 6-ம் நாள், இந்திய அரசாங்கத்தால் ஒரு நிர்வாக ஆணையின் மூலம் கொண்டு வரப்பட்டது.
- தேசிய வளர்ச்சிக் குழுவின் அவசிய மானது, முதல் ஐந்தாண்டு திட்ட வரைவில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.
- திட்டக் குழுவினைப் போலவே, தேசிய வளர்ச்சிக் குழுவானது.
  1. அரசியலமைப்பு அந்தஸ்து பெறாத அமைப்பு (Non Constitutional)
  2. பாராளுமன்ற சட்டம் மூலம் கொண்டுவரப்பட்டது அமைப்பு (Non-Statutory)

## அமைப்பு:

தலைவர் : பிரதமர்

## உறுப்பினர்கள்

1. அனைத்து மத்திய கேபினட் அமைச்சர்கள்
2. அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்கள்
3. அனைத்து யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகள் / முதலமைச்சர்கள்
4. திட்டக்குழு உறுப்பினர்கள்
5. திட்டக்குழுவின் செயலாளரே, தேசிய வளர்ச்சிக் குழுவின் செயலாளராகவும் செயல்படுகிறார்.
6. தேசிய வளர்ச்சிக் குழு தன்னுடைய நிர்வாகம் மற்றும் மற்ற உதவிகளுக்காக திட்டக்குழுவையே சார்ந்துள்ளது.

## குறிக்கோள்

- திட்டங்களை செயல்படுத்துவதில், மாநிலங்களின் ஒத்துழைப்பை பெறுதல்.
- திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் நாட்டின் வளங்களையும், முயற்சி களையும் ஒன்றுபடுத்துதல்.
- பொதுவான பொருளாதாரக் கொள்கைகளை ஊக்குவித்தல்.
- நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சமமான, விரைவான வளர்ச்சியை உறுதிப்படுத்துதல்

## பணிகள்

1. தேசிய திட்டத்தை உருவாக்குவதற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.
2. திட்டக்குழுவால் உருவாக்கப்படும், தேசிய திட்டத்தை கவனித்து கொண்டு ஆராய்தல்.
3. திட்டங்களை செயல்படுத்த தேவையான வளங்கள் குறித்து ஆராய்தல் மற்றும் அவ்வளங்களை சரியாகப் பயன்படுத்த அறிவுரைகளை வழங்குதல்.

4. தேசிய முன்னேற்றத்தைப் பாதிக்கும் சமூக மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை கருத்தில் கொள்ளுதல்.
5. ஒவ்வொரு காலகட்டத்திலும், திட்ட செயல்பாட்டினை கண்காணித்தல்.
6. தேசிய திட்டத்தில் கூறப்பட்ட நோக்கங்களையும், இலக்குகளையும் அடைய, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்.

### திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் முறை

1. உருவாக்கப்பட்ட ஐந்தாண்டு திட்டமானது முதலில் மத்திய கேபினட் முன் சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பிறகு தேசிய வளர்ச்சிக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது.
3. இறுதியாக பாராளுமன்றத்தில் வைக்கப் பட்ட ஐந்தாண்டு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட பின், அரசாங்க பட்ஜெட்டில், அதிகாரப் பூர்வமான ஐந்தாண்டு திட்டம் வெளியிடப்படுகிறது.

### தேசிய வளர்ச்சிக் குழுவின் சிறப்பு தன்மைகள்

- ஐந்தாண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவதில் பாராளுமன்றத்திற்கு அடுத்த நிலையில் தேசிய வளர்ச்சிக் குழு அதிகாரம் பெற்றுள்ளது.
- எனினும் இது, திட்டக்குழுவிற்கு அறிவுரைகளை மட்டுமே வழங்க இயலும்.
- மேலும் இதன் பரிந்துரைகள், திட்டக் குழுவின் முடிவுகளை கட்டுப்படுத்தாது.
- தேசிய வளர்ச்சிக் குழுவானது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கும் தனது பரிந்துரைகளை வழங்குகிறது.
- வருடத்திற்கு குறைந்தது இருமுறையேனும் தேசிய வளர்ச்சிக் குழு கூடுகிறது.

வாய்மையே வெல்லும்